உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசிரோமணியாகிய

அதிவீரராமபாண்டிய மஹாராஜன்

அருளிச்செய்த

# மாகபுராணம்.

இஃது,

கயிலாசபரம்பரை

திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்ட சந்தானம்

திருமங்கலம் தெய்வராயதேசிகசுவாமிகளாதீனம்

விருதுபட்டி,

பொன்னம்பலக்குருக்களவர்கள் குமாரர்

பாலய்யாவென்றும், இராமலிங்கசுவாமிகளென்றும்

வழங்குகின்ற

இராமலிங்கக்குருக்களால்

பற்பல ஏட்டுப்பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து,

ஆனூர்-எதிராஜமுதலியாரது

சென்னை சூளை:

“பிரின்ஸ் ஆவ் வேல்ஸ்” அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கலானது.

1904.

Registered, Copy-right.

இதன் விலை ரூபா-1.

23 வது [illegible] [illegible] 887 பாடல்

24 - 28 [illegible], - - 525 [illegible]

1412 [illegible]

பாயிரம்; [illegible] - - 19 [illegible]

# மாகபுராணம்.


| நெம்பர். | அத்தியாயத்தின் பெயர்கள். | பக்கம். | |
|---|---|---|---|
| | பாயிரம் ... | VI–VIII | 19 |
| ௧-வது | முனிவர் சூதனைவினவிய அத்தியாயம் | ௧ | 20 |
| ௨-வது | திலீபன் வேட்டையாடிய அத்தியாயம் | ௩ | 36 |
| ௩-வது | விஞ்சையன் சாபந்தீர்த்த அத்தியாயம் | ௮ | 31 |
| ௪-வது | மிருகசிருங்கன் பிறப்புரைத்த அத்தியாயம் | ௧௨ | 23 |
| ௫-வது | மிருகசிருங்கன்றவஞ்செய்துமீண்ட அத்தியாயம் | ௧௫ | 20 |
| ௬-வது | சுவிர்த்தை காதையுரைத்த அத்தியாயம் | ௧௮ | 50 |
| ௭-வது | மிருகசிருங்கன் யமனைவணங்கிய அத்தியாயம் | ௨௫ | 30 |
| ௮-வது | தருமசாரமுரைத்த அத்தியாயம் | ௨௬ | 20 |
| ௯-வது | நரகசாரமுரைத்த அத்தியாயம் | ௩௩ | 82 |
| ௧0-வது | புட்கரன் காதையுரைத்த அத்தியாயம் | ௪௫ | 57 |
| ௧௧-வது | சம்புவதையுண்ட அத்தியாயம் | ௫௩ | 35 |
| ௧௨-வது | சாந்தீபினி புதல்வனுய்ந்த அத்தியாயம் | ௫௮ | 43 |
| ௧௩-வது | மிருகசிருங்கன் மணஞ்செய்த அத்தியாயம் | ௬௩ | 48 |
| ௧௪-வது | மிருகசிருங்கன் இல்வாழ்க்கையுரைத்த அத்தியா | ௭௨ | 24 |
| ௧௫-வது | கற்புநெறியுரைத்த அத்தியாயம் | ௭௮ | 29 |
| ௧௬-வது | மிருகசிருங்கன் மகப்பேறுரைத்த அத்தியாயம் | ௮௨ | 35 |
| ௧௭-வது | மார்க்கண்டன் பிறப்புரைத்த அத்தியாயம் | ௮௮ | 66 |
| ௧௮-வது | தீர்த்தவிசேடமுரைத்த அத்தியாயம் | ௯௯ | 26 |
| ௧௯-வது | சுவிர்தன் முத்திபெற்ற அத்தியாயம் | ௧0௩ | 44 |
| ௨0-வது | வீமனேகாதசிவிரதமகிமையுரைத்த அத்தியாயம் | ௧௧0 | 25 |
| ௨௧-வது | சிவராத்திரிமகிமையுரைத்த அத்தியாயம் | ௧௧௩ | 48 |
| ௨௨-வது | இயமன் சிவனிடத்துச்சென்ற அத்தியாயம் | ௧௨0 | 64 |
| ௨௩-வது | சிவராத்திரி விரதமுறையுரைத்த அத்தியாயம் | ௧௨௮ | 25 |
| ௨௪-வது | சுந்தோபசுந்தர் வதையுண்ட அத்தியாயம் | ௧௩௨ | 109 |
| ௨௫-வது | குண்டலவிகுண்டலர் காதையுரைத்த அத்தியா | ௧௪௬ | 104 |
| ௨௬-வது | காஞ்சனமாலை காதையுரைத்த அத்தியாயம் | ௧௬0 | 109 |
| ௨௭-வது | அக்கினீபன் காதையுரைத்த அத்தியாயம் | ௧௭௪ | 110 |
| ௨௮-வது | சித்திரசேனன் காதையுரைத்த அத்தியாயம் | ௧௮௮ | 93 |


19+1412

சிவமயம்.

# முகவுரை.

புண்ணிய பூமியாகிய இப்பரதகண்டத்தின்கண் வழங்கிவரும் பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பௌடிகம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மச்சியம், காருடம், பிரமாண்டம் என்னும் புராணங்கள் பதினெட்டனுள் இரண்டாவது புராணமாகிய பாத்மபுராணம் மிகச் சிறந்ததாயும், சகல வேதசாரமாயும், சிருட்டிகாண்டம், பூமிகாண்டம், சுவர்க்ககாண்டம், பாதலகாண்டம், உத்தரகாண்டம் என ஐந்து காண்டங்களையும் ஐம்பத்தையாயிரஞ் சுலோகங்களையுமுடையதாய் விளங்குகின்றது. இதில் உலகசிருட்டியின்பொருட்டு பிரமதேவர் ஓர் பத்மத்திலே தோன்றியதையும் எல்லோருஞ்சென்று ஸ்நானஞ்செய்தற்குரிய தீர்த்தங்களையும் தரிசனஞ்செய்தற்குரிய ஆலயங்களையும் மனைவியாகவும் தாய்தந்தையர்களாகவும் குருவாகவும் உவமித்துக்கூறுவதையும் பூமிக்குமேலுள்ள வண்டங்களையும் நாகலோகங்களையும் திலீபச்சக்கரவர்த்திக்கு வசிட்டமுனிவரருளிய மாகமாசத்தீர்த்தமாடற்புண்ணியபலமும் விவரித்திருக்கிறது.

அவற்றுள் திலீபச்சக்கரவர்த்திக்கு வசிட்டமுனிவரருளிய மாகமாசத்தீர்த்தமாடற் புண்ணியபலத்தை சிவபெருமானனுக்கிரகத்தால் சைவசிரோமணியாகிய அதிவீரராமபாண்டியன் தமிழில் கசகஉ - திருவிருத்தப்பாவாக அருளிச்செய்து மாகபுராணமெனப் பெயர்கொடுத்துத் தமிழ்நாடெங்கும் பரவச்செய்தனர் என்று பெரும்பான்மையோர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டாலும் வரதுங்கபாண்டியனால் இயற்றப்பட்டதென்றும் சிலருடைய அபிப்பிராயம் தோற்றப்படுகிறது. மேற்படி நூலானது அநேகமடாலயங்களிலும் அநேகம் சிவனடியார்களிடத்தும் மாகதீர்த்தமாடுங் காலங்களிலும் மற்றைப் புண்ணியகாலங்களிலும் பாராயணஞ் செய்துவரப்படுகின்றது.

அதேபிரகாரம் எமது பிதா ஸ்ரீமான்-பொன்னம்பலக்குருக்கஎவர்கள் வருடந்தோறும் மாகஸ்நானகாலத்தில் நூற்றுக்கணக்கான சிஷியவர்க்கங்கள் புடைசூழ்ந்து சிரகரங்கூப்பிக் கேட்கப் பாராயணஞ்செய்வார்கள் அக்காலங்களில் யாம் கையேடு வாசித்திருக்கின்றேம் அதுமுதல் இநத நூலை அச்சிடவேண்டுமென்று எமக்கு முக்கிய நோக்கமிருநதது. அதுகருதி எமது பிதாவின் அனுமதிப்பிரகாரம் மேற்படி ஓலைச்சுவடியை காகிததநில் சுத்தப் பிரதி செய்துவைத்திருநதனம். அதில் அனேகம் பாடல்கள் சந்தேகத்துக்கிடமாயிருந்தது. இன்னுஞ் சில சுவடிகளை வைத்துச் சோதிக்கவேண்டுமென்று விருவிகொண்டிருபபதைத் தெரிந்து எமது முக்கிய நண்பர்களாகிய பால்வனம் வித்வான் ம-ள-ள-ஸ்ரீ, சுப்பாரெட்டியா ரவர்களும, பேறையூர் சமஸ்தான வித்வான் ம-ள-ள-ஸ்ரீ, சோடசாவதானம் மீனுட்சி சுந்தரஞ்செட்டியாரவர்களும் தங்கள் தங்களிடத்திலிருந்த ஏட்டுசசுவடியை யனுப்பிவைத்தார்கள். ஆக இநத மூன்று பிரதிகளையும் உதவியாகக்கொண்டு ஒருவாறு சுத்தபாடமாகப பரிசோதனைசெய்து அச்சிட்டனம்.

புத்திமான்கள் இதில் ஆங்காங்கு புலப்படும் பிழைகளையேனும் சொன்னயம் பொருட்பொலிவு குறைநதுள்ள பாடபேதங்களையேனும் அறிவிப்பாராயின் அவரது பேருதவியை நன்குமதித்து இரண்டாம்பதிப்பில் அத்திருத்தங்களை அவர் பெயரோடு விளக்கக் கருதியிருக்கின்றனம். இந்த நூலைச் சுத்தபாடம் செய்ய ஏட்டுசசுவடி யனுப்பிவைத்த புண்ணியசீலர்களுக்கு நன்றிசெலுத்தக் கடமைபபட்டிருக்கின்றனம்.

குரோதி௵ வைகாசி௴ } இராமலிங்கக்குருக்கள்,
விருதுபட்டி.

## விளம்பரம்

இப்புத்தகம் வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

இதன் விலை வி. பி. சார்சு உள்பட ரூபா—1

இப்படிக்கு.
இராமலிங்கக்குருக்கள்
விருதுபட்டி.

# பாயிரம்.

சீருலவுசெழுங்கமலப் பூந்தவிசிற்பயிலுமறைச் செல்வனீன்ற
பாருலகின்மிசைபரவி யிசைவிரிக்கும்பரிவினர்பாற் பதமேநல்கும்
ஆருலவுசடிலதர னுதைலம்பற்பலவுளவாங் கவற்றினோங்கு
பேருலவுமான்மியஞ்சேர்பொன்னகரினன்னகராய்ப்பிறங்குமூதூர்

வளம்பெறுமத்தமிழ்மதுரைப் பதியாண்டமீனவர்தம் மரபிற்
சார்ந்தோன், இளம்பருவ மடவியர்தம் படிவமதனெனத்திகழு
மிறையொன்னாரைக், களம்புகுந்தபினர்மீளா வணம்புரிவெஞ்சிலை
க்கரத்தன் கற்றோர்யாரும், விளம்புதனிப் பெரும்புகழான் சைவ
நெறிமுறையொழுக்கின் மேவுநல்லோன். (2)

அளப்பரியபல்கலைநூற் பெருவெள்ளங்கடந்துநிறை யறிவி
னோங்கி, வளப்பரிமுன்விலைபகர்ந்த திருக்கடவுட்பெருமானை வழி
பட்டேத்தி, யுளப்பரிவின்மிகச்சிறந்து பணித்தலைவன்மணித்தலை
தாங் குலகோரன்பு, கொளப்பரிபாலனம்புரிநல் லதிவீரராமனெ
னக் குலவுமேலோன். (3)

பெரும்புவனத்திடைவதிவோர் மகப்பேறுஞ்சுகப்பேறும்பெ
ருகக்காய்த்த, இரும்புவனத்திருமேனி யிறையருளுங்கனவாழ்வு
மினிதினோங்கி, விரும்புவனயாவையுமீண் டெய்தியுயர்விண்ணாடு
மேவிமுல்லை, யரும்புவனத் திளநகையார் தருமின்பநலனெளிதி
னடைவானெண்ணி. (4)

விற்புருவமடவாரி னுயர்பொருளின்வசுந்தரையின் மீக்கூர்கா
தல், அற்பமெனத்தணந்தபெருந தவச்சூதன்முனிவர்குழா மமை
விற்கேட்பச், சொற்பயனுலனயரக நனிதெருட்டச்சிறந்துளது
துகடீர்தொன்மைப், பற்பபுராணத்திருந்து வெளிப்பாடுற்றிலங்கி
யதோர் பரமகாதை. (5)

அத்தகவாம் பெருங்காதை மாகநீர்மூழ்குபல னமைந்ததத்
தை, வித்தகவான்றமிழ்ப்புலமைத் தலைவர்குழாங்கொண்டாடி விய
ப்புற்றேவா, சித்தகமாமகிழ்வோங்கப் பொருட்சுவைகூட்டின்சொ
லினார் தென்சொலாலே, யொத்தகவின்விருத்தமதால் மாகபுரா
ணப்பெயரி னுரைத்தான்மன்னோ. (6)

தருமந்திரமாயெந்நாளுஞ் சலிப்பொன்றிலதாய்ச்செய்துவருந்
திருமந்திரமாநகர்க்காரைப் பேட்டைச்செழியன்மரபிலுள்ளார்
தருமந்திரவியத்துதவி தன்னான்மாகபுராணமதே
வருமந்திரமாமெனக்கொள்ள வழுவையகற்றிப்பதித்தனரால்.

## விநாயகர் துதி.

மஞ்சரிசெருகிய கோதைமாமதன்
வெஞ்சரமெனமிளிர் விழிகொள்வேதநூற்
பஞ்சரமுறைகிளி பயந்தமும்மதக்
குஞ்சரமுகனடி கும்பிட்டேத்துவாம்.

## சிவபெருமான் துதி.

ஏடவிழ்தழிமாலை யிந்தணிந்தயன்மால்வானோ
தேடரிதாகித்தொண்டன் றந்தசேய்க்கரியுங்கான
வேடனுண்டுமிழ்ந்துதந்த மிச்சிலுமுண்டுபொய்யா
வீடருள்பரமன்பொற்றாள் வேண்டிநின்றிறைஞ்சிவாழ்வாம். 2

## சுப்பிரமணியக்கடவுள் துதி.

வெஞ்சூருடனேதாருகனை வீட்டிக்கிரவுஞ்சந்தகர்த்து
மஞ்சூரரிக்கிப்பொன்னுலகை மகுடம்புனைந்துகுடியேற்றிக்
கஞ்சாசனத்தோன்றனைப்பனிரு கரத்தாற்குட்டிச்சிறைசெய்து
பஞ்சானனனுக்குபதேசம் பகர்ந்தகுமரன்பதம்பணிவாம். 3

## மகாவிஷ்ணு துதி.

பங்கயத்தயனைப் பூத்துலகனைத்தும் படைத்திட வருளிமால் வரையைச், செங்கையாலெடுத்து முகின்மழைதடுத்துத் தேவர்கட் காரமுதீந்து, மங்கையினுருவாய்க் கருங்கலைக்கண்டு மண்ணினை யுண்டுமிழ் மாயோன், கங்கையந்துளவங் கமழ்பதாம்புயத்தைக் 4
கருத்தினிலிருத்தியே தொழுவாம்.

## உமையவள் துதி.

தக்கன்மகளாயவதரித்துத் தாதையியற்றுங்கொடுவேள்வி
புக்கங்கவனுமழிகவெனப் புகன்றுவரையன்மகளாகி
முக்கணுடையசிவனைமண முடித்துமுருகன்றனைப்பயந்த
மைக்கணுமையாளுபயபத மலரைப்பரவிவழிபடுவாம். 5

## சரஸ்வதி துதி.

வெள்ளைநிறத்தஞ்சுகத்தை வெண்டரளப்பூண்மயிலைவிரிஞ்சனாவி
னுள்ளிருந்தரத்தினத்தை யும்பரொலாந்தொழற்கரியவொருத்திதன்
கள்ளமிலாவடியருளக் கமலமதையகலாதகலையினுளைத் [னைக்
தெள்ளுதமிழுதவுமெந்தன் றிருத்தாயையனுதினமுஞ்சிந்தைசெய்வாம். 6

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் துதி.

பந்தமுறுஞ்சமண்மதமாங் களைநீங்கச்சைவநெறிப் பயிர்க ளோங்க, செந்தமிழ்ப்பாண்டியன்சுரமுந் தீரமங்கையருக்கரசி செ

ழிப்புற்றோங்க, மந்திரியாங்குலச்சிறைதன் மனங்களிப்பவுலகமெ லா மகிழ்ச்சிபொங்க, வந்ததிருச்சீர்காழி வளர்ஞானசம்பந்தன் மலர்த்தாள்போற்றி.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் துதி.

செங்கலைமாழையாகச் செய்துதந்திடவும்பொல்லாக்
கங்குல்வாய்ப்பரவைதன்பாற் கால்சிவந்திடவுந்தூதா
யெங்கணுயகனையேவி யிருந்தமிழ்ப்பதிகம்பாடுந்
துங்கவாரூரன்செய்ய துணைமலர்ப்பதங்கள்போற்றி.

## திருநாவுக்கரசுசுவாமிகள் துதி.

பொல்லாதபொய்ச்சமையச்சமண்மூகர்வரவிட்டபுழைக்கையானை
கொல்லாதுவலம்புரிந்து பணிந்தேகநீற்றறையுங் குளிர்நீராகக்
கல்லாழிதனின்மிதந்து கரையேறத்திருப்பதிகங் கசிந்துபாடுஞ்
சொல்லார்மெய்த்திருநாவுக் கரையனிருகழலிணையைத் துதித்துவாழ்வாம்.

## மாணிக்கவாசகசுவாமிகள் துதி.

குருந்துநீழலி லீசன்குருவென
விருந்துமோன மிசையாதிசைத்திடப்
பொருந்திச்சோதியிற் சென்றுபுனிதமே
திருந்துவாதவூர்ச் செம்மலைப்போற்றுவாம்.

## வேதவியாசர் துதி.

பராசரமாமுனிமகவைப் பரமபுருடனைநாற் பழமறையின்பிறப்பிடத்தைப் பலவிஞ்சைக்கிருப்பை, விராவுபுகழ்நிலையமதை வேதாந்தப்பொருளை வெகுளியில்லாப்பொறையோனை விடையமறுத்தோனைச், சுராதிபர்தங்குருவனைய தூயமனத்தோனைத் துகளறுமெக்கலைமுழுதுந் தோய்ந்திடம்பட்டோனைத், தராதலமெண்புனிதவியா தனைப்போற்றியவன்றன் றண்ணளியெனிலையாகச் சரணவரண்புகுவாம்.

மாதுளமாமல ரன்னசெம்மேனியும் வாண்முகமுங்
காதெழுகண்ணுங் கனதனபாரமுங் கச்சும்பொன்னின்
றாதெழுதாமரைத் தாளுஞ்சதுர்மறைத் தோளும்பிச்சிப்
போதெழுகூளியும் வாழிநல்வாழி புராதனியே.

திருச்சிற்றம்பலம்.

# மாகபுராணம்.

முதலாவது

## முனிவர் சூதனைவினாய அத்தியாயம்.

சீர்பெறுமீரறு பருவஞ்சென்றிடும்
பேர்பெறுவேள்வியைப் பெரிதியற்றுவான்
வார்பெறுபழுமர வனங்கள்சுற்றிய
வேர்பெறுநைமிசா ரணியத்தெல்லைவாய். (௧)

காசிபனத்திரி பிருகுகண்ணுவன்
வாசவன்மேற்பழி வைத்தகோதம
னூசறுபுலத்தியன் வசிட்டனங்கிரன்
கோசிகன்முற்கலன் கும்பயோனியே. (௨)

மாதவப்பராசரன் மார்க்கண்டன்சுக
னேதமில்விபாண்டகன் மரீசியெண்ணில்சீர்.
வேதமாமுனிவரர் வெருளினீக்கினோர்
தீதறுகுணத்தினர் திருந்துமுள்ளத்தோர் (௩)

அங்கமோராறுட னனந்தவேதமுந்
தங்கியபுராணமுந் தழைத்தநாவினர்
மங்குலினின்னருள் பொழியுமாண்பினர்
பொங்கியதருமத்தின் வடிவம்போலுவார். (௪)

ஐம்புலவிடயங்க ளனைத்துமாற்றினோர்
பம்பியமும்மலப் பகையைச் செற்றுளோர்
வெம்பியகாமத்தை வெறுத்தமேலவ
ரிம்பரின்மன்பதைக் கிரங்குநெஞ்சினோர். (௫)

அடைந்தனர்பெருமக மாற்றுங்காலையின்
மிடைந்தலற்கலையினன் விரிந்தவேணிய
னுடைந்ததீவினையின னுவகையுள்ளத்த
னிடைந்தவர்க்கருள்பொழி யெழின்முகத்தினன். (௬)

கண்டிகைமாலையன் பூதிக்காப்பினன்
புண்டரமூன்றினிற் பொலிந்தநெற்றியன்
றண்டவிலவேதநூற் றருமஞ்சார்ந்தவன்
மண்டலத்தறநெறி வரம்புகாட்டினோன். (௭)

எக்கலைத்தொகுதியு மியல்வியாதனு
லக்கலைமுடிவுற வளர்ந்தசீரியோன்
முக்கணன்றிருவருள் பெறறுமுத்தியிற்
றொக்கநன்னிலையினன் சூதனெய்தினான். (௮)

எய்தினன்முனிவர னிருந்தமாதவர்
துய்யதாமரையடி தொழுதுநிற்றலும்
பொய்தவிருள்ளத்தா னிருக்கப்பொன்னினாற்
செய்தமெல்லாசனஞ் சிறககநல்கினார். (௯)

இட்டபூந்தவிசிடை யினிதினேறியே
கட்டுவார்சடைமுனி யிருந்தகாலையின்
மட்டுலாம்பங்கய வதனநோக்கமுச
சிட்டமாமுனிவர ரினையசெப்பினார். (௰)

வேறு.

அருந்தவச்சூதநின்னா லாதியாம்புராணமாய
விரிந்தநூற்பிரமம்பாற்பம் வைணவம்விளங்குசைவந்
திருந்துபாகவதமிக்க பவ்டிகநாரதீயம்
பொருந்துமார்க்கண்டமாக்கி னேயமாம்புராணத்தோடும். (௰௧)

பிரமகைவத்தஞானம் பேசியவிலிங்கம்பின்னுந்
திரமுறுவராகத்தோடுங் காந்தம்வாமனஞ்செறிந்த
தரமுறுகூர்மமச்சந் தாழ்வில்காருடமுற்று
மூரமுறும்பிரமாண்டத்தோ டொன்பதிற்றிரண்டுங்கேட்டோம். (௧௧)

மற்றுளவிதிகாசத்தி லளப்பிலாவளனுங்கேட்கச்
சொற்றனையவற்றிரண்டாம் புராணமாய்ச்சொன்னபாற்பத்
துற்றதோர்செய்யுளைம்பத் தைந்தொடாயிரமுந்துய்யோ
யிற்றெனவிரித்துச்சொன்னா யவற்றினுளின்னுங்கேட்போம். (௧௨)

சிறந்ததோர்மாகமாதப் பலனெலாந்தெரித்தசிந்தை
மறந்ததக்காலந்தானு மடுத்ததுவழுவாவண்ண
முறைந்திடுமெங்கட்கின்னு முரைத்திடவேண்டுமென்னா
வனறந்தவர்கேட்கச்சூத னகமகிழ்ந்துரைப்பதானான் (௧௩)

நன்றுமாமுனிவரியாரு நவையறக்கேட்டமாற்ற
மின்றிது நுங்கட்கோது மருத்தியாலிங்குவந்தோ
மன்றியுமாகமாத மடுத்துளததனைநீவி
ரொன்றியேகேட்டவெல்லாமுறைப்பனென்றெடுத்துச்சொன்னான்.

தவமுனிவியாதனன்பிற் றண்ணளியுடைமையானு
மவனுலகளித்துநின்ற வாறியானுறலானும்
புவனியோரெம்மைரோம புளகிதனென்பதானுஞ்
சிவனடித்தொண்டினானுஞ் செப்புவனறிந்ததென்னா. (௰௬)

அ[illegible]யுருவுமீறு மன்றிமற்றமலனாகிச்
சோதியாய்நின்றவீசன் றாளையடிக்கமலம்போற்றிச்
சிரன்றிகிரியேந்துஞ் செங்கண்மால்சரணம்போற்றிப்
போதினான்முகத்துப்புத்தேள் பொலன்கழல்வணக்கஞ்செய்தே. ()

வெண்ணிறக்கமலத்தாங்கண் வீற்றினிதிருந்தசெல்வி
புண்ணியமலர்த்தாள்வாழ்த்திப் பொழிமதத்தருவிதூங்கு
திண்ணியபணைக்கையொற்றைத் திரணமருப்புயர்ந்தகும்பக்
கண்ணகனால்வாய்வெற்றிக் கரிமுகன்கழல்பணிந்தே (௰௮)

சென்னிமீதுயர்த்தகையன் றீதிலாமுனிவீர்கேண்மின்
மன்னியமாகமாத வளத்தினைக்கேட்போர்சொல்வோ
ரின்னிலத்தியாருமில்லை யானதையியம்பவேண்டும்
பின்னைநீர்கேட்கவேண்டுமென்றவன்பேசலுற்றான். (௰௯)

பண்டைநாட்டிலீபனென்போன் பரிதியங்குலத்துவேந்தன்
வண்டிலாமாலைமார்பன் வசிட்டனைவணங்கிக்கேட்பத்
தண்டவிறவத்தோன்முன்னஞ்சாற்றியகாதைதன்னைக்
குண்டிகைக்கரத்தீர்கேண்மினென்றவன்கூறலுற்றான். (௨௰)

முனிவர் சூதனைவினாய அத்தியாயமுற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௨௰.

## இரண்டாவது திலீபன்வேட்டையாடிய அத்தியாயம்.

மாலைவெண்கவிகையொன்றால் வையகமுழுதுங்காக்கும்
வேலுயர்தடக்கைமன்னன் றிலீபன்செய்வேள்விமுற்றி
வாலியபுனலின்மூழ்கி மறையவராசிகூறக்
கோலியசிலையான்வேட்ட மாடுவான்குறிக்கொண்டானே. (௧)

காழகக்கச்சையார்த்த மருங்கினிற் சுரிகைகட்டிச்
சூழிருங்கவசந்தாங்கித் தொடுகழலவீக்கிப்
போழிளமதியின்வள்வாய்ப் பொருகணைப்புட்டில்சோத்துப்
பாழியம்புயத்தாண்வேட்டப் பதாதியோடெழுந்துசென்றான் (௨)

தொண்டகமதிரக்கோடு மிரலையுந்துவைப்பவீண்டி
மண்டுநீர்க்கானவாற்றின் மருங்குளவனங்கடோறும்
விண்டுவாரடவிதோறும் வெற்பினிற்றடங்கடோறுங
கணாடகநெறிகடோறுங் கண்ணியும்வலையுங்கட்டி (௩)

வால்வளைத்தெழுந்துதாவி வலித்தநீள்பாசநூறிக்
கால்வளைத்தொல்லையோடுங் கனைதரான்ஞமலியேவி
வேல்வலத்தேந்துமள்ளர் வெயில்விரிபடைகள்வீசிப்
பால்வளைத்திரியல்போகும் விலங்கெலாம்பறழிமாய்த்தார (௪)

குறுமுயலீறாய்வெற்றிக் கோளரிமுதலவாய
வுறுவலிமாககளெல்லா மொன்றறவளைந்துகொன்று
மறுவறுகொறறவேந்தன் மறப்படைவெள்ளநதோடும்
பிறிதொருகானில்வேட்ட மாடுவான்பெயர்ந்துபோனான் (௫)

வேறு.

தோகைமஞ்ஞைநடமாடச் சுரும்பார்மரினிசைபாடக்
கூகைகுழறிப்பாராட்டக் குயிலின்றொகுதிமுறைகூவ
வோகையோடுமெருவை நிறைசேணினிகலியொலியெழுப்பக்
காகங்காணுமெனவூமன்கடம்பின் பிடறிகாத்துறைய (௬)

பெருங்கைவேழம்பிடிதேடிப் பிளிறுங்சாலும்வயப்புலிக
ளொருங்கவோடிமானினங்கள கதறவெறியநெடுங்குரலும்
பருங்கோடழுந்தவுழுங்கேழல் பல்லதிகலியுடற்றொலியு
மொருங்கோரொலியாயெமமருங்குமுவர்நீர்க்கடலினொலியெழுப்ப

முழைகடோறுங்கோளரிகண முகிலோடிகலியெதிர்முழங்கப்
புழைகடோறுநெடும்பாந்தள் புதுநீர்த்துறையிற்றேறூரிப்பக்
கழைகடோறுமுத்துதிரக் கையாற்கொய்துகிலத்தமைத்த
தழைகடோறுங்கிளைஞரர்தம மகளிர்கலவிநலந்தழைய (௮)

தண்ணார்செழும்பூமுகையுடைந்துதாதார்நறவமழைபிலிற்றும்
விண்ணார்வெயிலின்கதிர்நுழையா வெறியார்கானத்திடையெய்திக்
கண்ணார்மணியுங்குளிர்ப்பெய்தக் காவற்கிறைவனனியார்த்துப்
பண்ணார்கனிவாய்மலர்திறந்து படர்கான்புகுந்துசெல்லுங்கால் ( )

இரும்புமுறிந்ததெனுநெடுங் கோட்டிரலையொன்றுவெளிப்பட்டுத்
திரும்புமுகத்தாற்பார்த்தோடிச் செல்லுஞ்செலவைக்கண்டரச
னரும்புங்கரும்புங்கைபுகுந்த வடல்வேளென்னவடுகணையும்
விரும்புஞ்சிலையுங்கடிதேந்தி விரைவிற்றுடர்ந்துபற்றினான் (௰)

பற்றிவிரைவிற்செலச்செல்லப்பதறியோடுங்கருங்கலையுஞ்
சற்றுந்தாழாதறக்கடுகித்தாவி நெடுங்கானிடையகலக்
கொற்றவிறையுங்கிராதர்படைக் குழுவுமிகவேகாறளர்ந்து
முற்றுமுலர்ந்தநாவினராய் நீர்வேட்டயர்ந்துமுகங்கருத்தார் (௰௧)

செல்லச்செலவங்கூறரிய பசியால்வருந்திமிகத்தேம்பி
யெல்விற்கதிரோனண்பகலில்வெயிலின்றுறைப்பவிடைந்துடலங்
கொல்விற்சுடுதீயுலைமுகத்திற்றழையுமெழுகொத்தகங்குழைந்திட்
டல்லற்படுவார்தமமுன்னரணித்தேதோரோடைதோன்றிற்றால் (௰௨)

தூயமனமபோலறத்தெளிந்து தண்ணென்றினிதாய்த்துகணீங்கித்
தீயருளம்போலறவாழ்ந்து தெரிதற்கரிதாயிருளசெறிந்து
பேயர்மனம்போன்மீனினங்க ணறவநெதவிட்டிப்பெரிதுகழ்
நேயர்மனம்போனீரொழுக்கிற் பஞ்சாயொழுகிநிறைந்ததுவே ()

காவிமலரும்பங்கயமுங்கண்ணுமுகமுந்தனிகாட்டத்
தூவியன்னநடைகாட்டச சுரிவெண்சயங்களங்காட்ட
மேவித்துகிர்கள்வாய்காட்டவிரைப்பூபுகைதண்முலைகாட்டும்
வாவிதிருவின்சாயலைக்கண் டரசன்மதனவிழாநினைந்தான் (௰௪

சுழியாரோடையகத்திறங்கித் துளைநதுமூழ்கிவிடாயகற்றிக்
கழியாவுரைவேற்கையினனு முச்சிக்காலைகடன்கழித்துப்
பொழியாநறவமாந்திகிணைப் புழுக்கல் பொதிசோறுடனருந்தி
யொழியாவருத்தமொத்தினிதா யொருதனணிழலுறைந்திருந்தான் ()

வேலைக்குடபான்மலைப்பிடரின் வெய்யோன்றுரகத்தேரொழிப்ப
மாலைப்பருவமெய்துதலும் வண்டாமரையினிதழ்குவியக்
காலைக்கழுரிடைமணந்த கரியவறுகாற்சிறுதும்பி
சோலைக்கொடிமல்லிகைப்போதினை வெண்டோடுழக்கித்துயின்றனவால்

ஆயகாலமெதிராந்திடலு மரசனந்திக்கடன்கழித்து
மேயசிலைவேட்டுவக்குழுவை விளித்திப்படுவினள்ளிருள்வாய்ப்
பாயத்தண்ணீரருந்தியிடப் பன்மாவடையுஞ்செகுத்திரென
வேயவழியின்மிகவொழியிட் டிருநதாரிருந்தவிருட்போதில் (௧௭)

தேய்ந்தபிறையோரிரண்டென்னத் திரழுமபுரிவெண்மருப்பிணையாற்
பாய்ந்துநிலங்கீண்டுழுதோடைப் பஞ்சாயமூலமுழுதருந்த
வாய்ந்துகிரையாய்வருகேழ லீனத்தும்பிழையாதயிலமபாற்
சாய்ந்துமடியக்கொலைபுரிந்தார் கங்குற்பொழுதுந்தணிந்தனவால் (கஅ)

கானப்பொறிவாரணமிறைத்துக் கதிரோன்வரவைக்கடிதுணர்த்த
மானச்சுடர்வேன்மன்னவனு மடிந்தகேழற்குவையினைத்து
மீனத்தொழில்வேட்டுவர் சுமப்பான் பணித்ததங்கிரவியெழுமுன்னர்
தானப்பதிக்குவழிக்கொண்டு தடந்தேர்கடாவிவருகாலை (கசு)

பன்னாட்காறிந்தவுண்டியினன் படர்செஞ்சடையன்பரவுரிய
னன்னாகவிற்றும்பமறைய னயாகதாஉடையன் ண்டிகையன்
மன்னுமொருவுந்தீவினையன் வைகானகத்தின்மயமபிடித்தோன்
பொன்னார்முடிவேந்தெதிரெய்தப் பொருக்கெ ன்றவனையடிதொழுதான்

தொழுதவேந்தன்றனக்காசி சொல்லி மகிழ்ந்ச யகநோக்கிப்
பழுதில்லாதவிராவிகுலப் படைவேலரசேபாநிருபனே
யெழுதுபுகழாயிக்காலம் வேட்டத்தெழுந்தவியல்பசனன்
முழுதுமுணர்ந்துமாகமதி முறை ரீயுணராய்போலுமால் (உக)

என்றுமொழிந்தமுனிவரனை யெறிலார்திலீபன்மனியரசே
யொன்றுமுணரேன்மாகதிங்கட் பெருமையெனக்கிங்கரைத்தியென
நன்றுமொழிந்தாய்பின்னுரைக்கே ஞமவேலோய்வருகவென்று
துன்றுபுனலின்மூழ்குளித்துத்தானுமூழ்கியிவைசொன்னான் (உஉ)

மாகமாதமென்பதொன்று மாயப்பிறவிக்கடல்வீழ்ந்து
சோகமானமானிடரை முத்தித்தீரத்திடுந்தோணி
வேகமானபாவவிருள் சிக் ரம் விளக்க புழ்கினர்கரு
நாகநாடர்பெரும்பதவி நறுகவழங்குலத்ததால் (உங)

இற்றைப்புலரிமாகதிங்கட் புனலாட்டயர்ந்தாரிதன்பலத்தைச்
சொற்றற்கெளிதோகாலமிலைச் சொல்லவெனிஉன்பதிக்கேகிக்
கற்றைச்சடையானுங்கள் குலக கடவுட்குரவன்வசிட்டனிடைக்
கொற்றச்சிலையாய்கேட்டியெனக் கூறிமுனிவன்கடிதகன்றான் (உச)

விருத்தகாலமுனியகல விறல்வேந்தயோத்திநகரடைந்து
பரித்தவுரிமைமனைவியர்க்குப் பகவனுரைத்தபடிகூறித்
திருத்தப்புனலின்மூழ்குளித்துத் திறல்வெண்பரியின்மீதேறி
யருத்தியுடனேவசிட்டமுனி யமருஞ்சாலையடைந்தானே (உரு)

அடைந்தமன்னன்சுரர்முனியை யமரர்க்கிறைவன்வணங்குதல்போன்
மிடைந்தகதிர்மாமணிமவுலி கழலீற்றேயவிழுந்தெழுந்து
கடைந்தவடிவாளுநன்றிசிறப்பக் கடவுண்முனிவனினிதியம்பி
யுடைந்தபகைவேந்தரைப்புரப்பா யொளிர்பொற்றவிசினுறைகென்றான்

இட்டதவிசினடல்வேந்த னிருந்தபின்னரருந்தவத்தோன்
மட்டுவிரியுப்பசுந்தாரோய் வந்தவரவேதெனவோடுங்
கட்டுஞ்சடிலத்தேசிகனின் கருணையதனாற்கலைஞானம்
வட்டக்கவிகையரசியல்பு தருமந்தண்டமாவிரதம் (௨௭)

மற்றுமுள்ளதருமநெறி முழுதுமவழங்கவுணர்ந்தோனே
யிற்றைப்புலரிக்காலத்தி லெநிராந்தோர்மறைஞன்மாகமதி
யுற்றதெனவேயுரைத்தடவியோடைப் புனலின்மூழ்குவித்துச்
சொற்றவிரதப்பெருமைநின்பாற் கேட்கப்பணித்தான்றாயோனே ()

இந்தவிரதத்தியல்பனைத்து மியற்றுங்காலமுறையடைவு
முந்தவியற்றினோர்திறனுங் கேட்குங்காதன்முயற்சியுளேன்
சிந்தைகுளிர்ப்பவடியேற்குச் செப்புகென்னவிறைவினவக்
கந்தமலர்நான்முகனனைய கடவுண்முனிவன்கட்டுரைத்தான் (௨௯)

வேறு.

நன்றரசநீமொழி நவிற்றியதுநான்மற்
றொன்றுமொழியாதுநின துட்கொளவுரைக்கேன்
றுன்றியவனத்திினிடை தோமறுதவத்தோ
னின்றுனையளித்தன னிதற்குநிகருண்டோ (௩௰)

ஏவுபரிவேள்விக ளியற்றினர்கண்முக்கட்
டேவுறையுமாலய மெடுத்தவர்கள்செம்பொற்
பூவுறையும்வாவிக ளகழ்ந்தவர்கள்பூம
னாவினெழுதாமறை நவிர்றுணர்வினின்றோர் (௩௧)

வாயுவைநுகர்ந்துவிர தங்களின்வதிந்தோர்
சேயவழலின்கிினிடை நின்றுவினைசெறறோர்
பாயுவைநிருக்கிநடு நாட்டியொளிபார்த்தோ
ராயிரநதித்தொகையு மாடிமலமறறோர் (௩௨)

இத்தகையநல்வினை யியற்றினர்களெய்து
மத்தகையபேறுகளி லாயிரமனிகருஞ்
சுத்தமுறுமாகமதி மூழ்கல்சுடர்வேலோய்
முத்திபெறவேயவிர தங்கண்முயல்வாரோ (௩௩)

வேறு.

பேசுபுகழ்மாகமதி னீர்முழுகுபேற்றல்
வாசவனைமுன்சசி யணைந்தினிதுவாழ்ந்தா
டேசுறவிளங்கதிதிதேவர்தமையீன்றாண்
மாசனகர்கோன்மக ளிராமனைமணந்தாள். (௫௪)

வேறுதவமெய்தினர்கண் மேவுமுலகத்திற்
பேறுதொலையும்பொழுது மீளநிலைபேர்வார்
கூறுமதென்மாகமதி யிற்குலவுதெண்ணீ
ராறதனின்முழுகின ரடைந்தபதமீளார். (௫௫)

முன்பிருகுமாமுனி முழுத்தவவிருத்த
னன்பினொடுவிஞ்சைய னகந்தெளிவுகொண்டே
துன்பமறவன்றுமணி கூடவுரைதொக்காங்
கின்புறவுரைத்தகதை யாமினிதிசைப்பாம். (௫௬)

திலீபன் வேட்டையாடிய அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் 2-க்குத் திருவிருத்தம் ௫௬.

---

மூன்றாவது

## விஞ்சையன் சாபந்தீர்த்த அத்தியாயம்.

செல்வமிக்கயோத்திநகர்த் தேர்வேந்தர்போரேறே
பல்குடைமழைமுற்காலம் பன்னீராண்டின்மையினு
லல்லலுறுபசியுடற்ற வவனியின்மன்னுயிரெல்லாங்
கல்வியகூவலினீரும் வறந்தொழியக்கலங்கினவே. (௧)

இரவிகொடுங்கதிர்வெதுப்புங் கோடையினாலிருநிலத்துப்
பரவைமுதனீர்குறையப் பல்யாறும்புனல்வறப்ப
விரவுபசும்புற் றலமுந் தாபரமும்வெந்தொழிய
நார்முதலாய்விலங்கினமு நாவறள்வுற்றுலர்ந்தனவே.. (௨)

தென்பொதிகைவடாதிமைய மிடைநிகழுந்தேயமெல்லாம்
புன்புதலேமுதலாய வுயிரனைத்தும்புக்கவிய
மன்பதைகளறவொழிந்த காலத்தின்மாதவத்தி
லன்புருகும்பிருகுமுனி நருமறையாற்றயலுறைவான். (௩)

காலத்தில்வறுமையாயினு லந்தகிச்சரைநீங்கிச்
சீலத்தினையாளுக்கா திராநடனைகடிதெழுந்தாய
காலத்திலிருண்டகணத் தரன்கயிலைக்கயலாக
மேலைத்திகதுறையுமலை பணிக்கூடமேவினுல் (௪)

சங்கனமுங்காரகிலுஞ் சண்பகமுந்தலைமயங்கிக்
கொந்துலவுநறுமபோதும் பசுந்தழையுங்கொழுமுறியுஞ்
சுந்தரமார்செழுங்களியுந துவன்றவிருள்பொதுளியதா
லந்தவரைவளமையினை யறிந்துரைத்தற்கரிதம்மா (௫)

இய்க்கர்தருங்குல மகளிர்வானவர்தம்மெழின்மடவார்
கயற்கயலாமவரிநெடுங்கட் கந்திருவர்வரமாதர்
முயற்குலவாமதிவதன முனிவர்தருங்கன்னியர்கள்
புயற்குழல்சோர்ந்திடவாடும் பொழிற்பணையணந்தமால் (௬)

யோகத்தினிலைசேர்க்கும் யோகியர்வாழிடனொருபால்
யாகத்தினிலைபரிக்கு மிருர்தவத்தோரிடனொருபாற்
போகத்தையிகழ்ந்தொருவிப புலனவித்தாரிடனொருபாற்
சோகத்தைத்தவிர்ந்துதவந் துடங்கினாரிடனொருபால் (௭)

வானவர்கற்பககாவும் பொன்னுலகு மகனிருமித
தானமதிலமர்ந்தமைனப் பொலிவுதருதகைமைத்தா
யூனமறப்பொழியுமழைச் சோலையுமலாமெதாழுக
வேலையர்கான்யாறுகளின் முழுக்கமிசைவதுவே (௮)

அன்னதடங்கிரியுயர்வா றுறியோசனையுயர
முன்னதமால்வரைபெருமை யோசனையீரெட்டளவாம்
பன்னரியநெடுஞ்சிமையம பத்தியோசனைப்பரப்பா
மென்னிலதன்பெருமையினை யாரேமற்றெடுத்துரைப்பார் (௯)

[illegible] ந்தவருந்தவத்தோன்
வெய்யமைதருமபெருந்கேடை தனிஇழுன்றமெலிவகற்றிச்
செம்மைதருமுளமகிழ்ந்து செழுஞ்சாலையவணமைத்துச
சும்மைதருமுனிக்கணத்தோர் சூழவினிதிருந்தனனால் (௰)

அங்குறையுங்காலத்தி லருவரையினின்றிழிந்து
கொங்குமலர்க்கருங்கூந்தற் கோவையிதழ்வரிநெடுங்கட்
டிங்கண்முகத்தெரிவையொடுந் திறலுடைவிஞ்சையனெய்தத்
துங்கமுறுதவமுனியைத் தொழுதுநயரொடுநின்றனன (௰௧)

நின்றவன்றன்னிலைகண்டு நெடுந்தவத்தோனிகழ்த்துவான்
குன்றுறைவிஞ்சையநீயிக் குலமடவாளொடுமெய்தி
யின்றுபடருழந்துநிற்றற் கேதுவென்னேயெனவினவத்
துன்றுமலர்த்தாரவனுந் தன்னிலைமைசொன்னானே (௧௨)

சொலலரியமாதவத்துத் தூயமுனிவரனேகேண்
மெல்லியலென்குலக்கிழத்தி வீணைபயில்விஞ்சையினாற்
புல்லியபேதைப்பருவம் புகுநாளிற்புரமெரித்த
வில்லிதனைநாரதனை விதிக்கோனைவியப்பித்தாள் (௧௩)

மாதிவடன்பேரெழிலாற் கற்பினான்மடமையினா
லோதியுணர்கலைத்திறனா லொழுக்கத்தின்சீலத்தாற்
பேதமுறாநடனவிதப் பெற்றியினாற்பெருநிறையான்
மேதினியிற்பொன்னுலகில் விஞ்சையராட்டிணையில்லாள் (௧௪)

இத்தகையாடனைப்பெற்று மிமையவர்காட்டிருக்கைபெற்று
முத்தமமாய்நவையகன்ற வொளிதிகழ்மேனியைப்பெற்றும்
வித்தகமாமுனியரசே விறற்புலியின்முகம்பெறலாற்
சித்தமுறுதுயரடியேன் செப்புதற்குத்தரத்ததோ (௧௫)

மறப்புலியின்முகம்பெற்று வருந்திடமுற்பவந்தன்னி
லறப்பிழையென்செய்தேன்மற நற்கமலனதுதிருந்
திறத்தினையுரைத்தென்னைப் புரந்திடனின்செயலென்று
குறைத்திறத்தாவிரந்துரைப்ப முனியீதுகூறினான் (௧௬)

வாழ்விடத்துமகிழ்வதுவும் வளம்படுநல்வாழ்விழந்து
தாழ்விடத்திலயர்வதுவுந் தகுதியில்லார்தரத்ததே
வாழ்விடத்துந்தாழ்விடத்து மகிழ்வொடயர்வில்லாமை
யூழ்வினையின்பான்மையென வுரைத்திடுவருணர்ந்தோரே (௧௭)

சிறியதெனப்பாவங்கள் சிந்தையிற்கொண்டிடலாமோ
பொறியரவம்விடஞ்சிறிதே யானாலும்பொன்றுவிக்கு
மறிவிலிறைதானுமெண்ணா தாற்றியவெந்தீவினையாற்
கறைமுகிலினீட்டம்போற் காலத்திற்கதித்திடுமால் (௧௮)

வேறு.

இறந்தபிறப்பின்மாக திங்களேகாதசியின்விரதமுற்றிச்
சிறந்தமறுநாட்டுவாதசியிற் சென்னிக்கெண்ணைத்தொழிலியற்றி
யுறைந்தபுனல்புக்காடினையன் னோராதியற்றுந்தீவினையா
னிறைந்தகுணத்தோயிப் பிறப்பிற் புலியின்முகநீயெய்தியதே (௧௯)

முன்னாட்புரூமவாவென்ன மொழியுநிருபனரிதினைத்திற்
பொன்னார்மார்பனினைப்போல வெண்ணைமுழுகிப்புனலாடி
மின்னாமேனியழகழிந்து விரூபமாகமெலிந்துருகிப்
பன்னாள்வருந்தியரசிழந்தே யிமயவரையின்பாங்கடைந்தான் (௨௰)

அடைந்தவரையின்சாரலிடத் தழகார்கமலவாவியெய்திக்
குடைந்துபுனிதநீராடித் தவத்தோராகோலங்கொண்டுமிக
மிடைந்ததருப்பைவிரித்ததன்மேல் விளங்கும்பதுமாசனத்திருந்தாங்
குடைந்தமலர்த்தேன்றுழாயலங்க லுரவோன்றன்னையுணணினைந்தான்

பாவித்திருந்துதுயிலுணவிற் பற்றுமின்றியொருதிங்கள்
வாவிக்கரையிலிருந்திடலு மாயோன்முன்னேயெழுபிறப்புஞ்
சேவித்தவனென்றுளமுருகித் திறலவேலிறைமுனடிதெய்தி
நீவித்தனதுதிருக்கரத்தா னெடியோன்பின்னுமிதுசெய்தான் (௨௨)

எண்ணுமகரஞாயிற்றி லெதிர்முற்பிறையிலீராறில்
வண்ணத்திருக்கைவலம்புரியின் வாய்ந்தபுனன்மஞ்சனமாட்டிப்
பண்ணப்படுமத்தீவினையும பகர்ந்துநீக்கியுருவசியின்
கண்ணுக்கினிதாகியவடிவு மளித்துத்திருமால்கரந்தானே (௨௩)

மாரவேளுங்காதலிக்க வடிவாலுயர்ந்த மன்னவனு
மாரமாலையமைச்சரொடு மவனிமுழுதுந்தனிபுரந்து
வீரவேற்கண்ணுருவசிதன் விழையுங்காமக்கடறிளைத்தான்
பாரிலொனறுமிருவினையு மெவரேகடக்கும்பான்மையரே (௨௪)

நீயுமிந்தவினைநீங்க வெம்மோடிசைந்துநிலைகொண்டா
லேயுந்தினமோரைந்ததன்மேன் மாகமாதமெதிர்ந்ததுகாண்
டோயும்புனலிற்பதினொருநாட் டோய்ந்தாலர்தவரிவாரத்
தாயுந்திருமந்திரசலத்தா லாட்டித்துன்பமகற்றிடுவோம் (௨௫)

அலைபாருவரிமாமணிக ளனைத்துமுதவுமதுபோலத்
தொலையாவளமைமகப்பேறு துய்க்கும்போகமிருநிதியு
நிலையாயளிக்குந்துயரகற்று நினைந்தயாவுமுடனுதவு
மலையாயெழுந்தபிணியகற்று மாகமாதப்புனல்வளமே (௨௬)

ஐந்துபெரும்பாதகமியற்று மவர்களேனுமகரமதி
வந்துபுனலின்மூழ்கினரேன் மாயுமபிறைபோல்வினைமாயு
மிந்துவளருங்காலமென நன்மைநாளுமெழுந்தோங்கும்
பந்தமறுநன்முத்திக்கு மிதுவேவழியாம்பார்க்குங்கால் (௨௭

சிந்தித்ததனைப்பெரிது தவுஞ் சிந்தாமணிபோற்றேனுவைப்போற்
கந்தமலர்ப்பூங்கற்பகம்போற கருதும்பொருளியாவையுமளிக்கு
மிந்தவிரதமகாமதியதனிற் புறம்போயிராமபுனலிற்
சந்திதொருநாணமூழ்கியன்பு தழையுமாந்தரமக்கமா (உஅ)

என்றுமுனிவன்மாகமதி யியல்பையியம்பிவிஞ்சையனைத்
துன்றுபுனலினமூழ்குவித்துச் சுரிவெண்சங்கப்புனலாட்டிக்
கன்றுவெருளிப்புலிமுகந்தைக் காமன்முகம்போறகவினமைத்து
மன்றலோதிதன்னேடும் விடுத்தானவனுமவரையடைந்தான் (உகூ)

மண்டுதவத்துப்பிருகுமுனி வானஞ்சுரர்துமழைபொழியக்
கண்டுகலிகாலொழிந்ததெனக் கருதியந்தவரைநீங்கிப்
பண்டுதான்மற்றினிதுறையும் பரந்ததெண்ணீர்ருமதையாந்
தண்டலில்லாநதித்தீரந் தன்னையடைந்து மகிழ்ந்திருந்தான (௩0)

விஞ்சைத்தலைவன்றுயர்தீர வேதமுனிவனளித்தெருட்டி
வஞ்சக்கயவாய்ப்புலிவதன மாற்றியுரைத்த மான்மியமாஞ்
செஞ்சொற்றெரிந்துபடித்திடுவோர் செவிகொடுபோர்கள் யாவரெல்லாம்
ரஞ்சொற்குதலையரம்பையரோ டமரர்பதத்தையடைவாரே (௩௧)

விஞ்சையன்சாபந்தீர்த்த அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௩-க்குத் திருவிருத்தம் அஎ.

---

நான்காவது

## மிருகசிருங்கன் பிறப்புரைத்த அத்தியாயம்.

இரவிகுலத்தினிகல்வேந்தே யின்னுமாகத்தியல்கேட்டீ
பருகுமமிர்தந்தானெனப் பகருங்கற்பமுதனுகத்திற்
பிரமனளித்ததிருப்புதல்வன் குச்சனெனப்பெயர்படைத்தோன்
விரவுபுகழான்கருத்தமன்றன் மகளைவிதியின்வேட்டானே (க)

வேட்டமடவாடிருவயிற்றில் வேதமரபுதழைத்தோங்க
வாட்டமில்லாவச்சனென்னு மைந்தன்பிறந்துவளர்பிறைபோ
னாட்டுவயதோரைந்துசெல்ல நலங்கூர்தாதைபுதல்வனுக்குப்
பூட்டுமுந்நூல்புனைவித்து மறைமந்திரமும்போதித்தான் (உ)

அந்தமைந்தனென்ஞான்று மாசாரியனைவழிபட்டுச்
சிந்தைபுனிதநிலைநிறுவித் தெண்ணீர்முப்போதினுமூழ்கிப்
பந்தமானபுன்முஞ்சி கலைத்தோறண்டமபாணியஞ்
சிந்துகரகமுதற்றாங்கியையமேற்றுத்தினமருந்தி (௩)

அங்கிக்கருமமுற்றியநீற்றழகாதிரிபுண்டரமணிந்து
தங்குகழற்றோற்செருப்பின்றி யானத்தேறறவிர்த்திட்டு
பங்கமானகலவைமுதன் மெய்ப்பூச்சொழிந்துபலகறியிற்
பொங்குபுளிபபாகியசுவைக ளருந்தாதொழிந்துபுலனடக்கி (௪)

ஆடிபார்த்தல்பலவிளக்க லாதியொழிந்து சயனமிசை
நாடித்துயிறலலஞ்சரிதத னருந்துறந்துதாய்தந்தை
பீடிற்பொலிந்தவடிதொழுது பின்னுமேதவிதிபலவாய்த்
தேடித்தெரிந்தபடியெலலாந் திறம்பாதியற்றுந்தீதில்லான் (௫)

செல்லுங்காலைமகரமதி தோறுமூன்றுதிருப்பருவம்
பல்குதரங்கக்காவேரித் தெண்ணீர்படிந்துபவித்திரனா
யல்லலறுத்தோமெனபசிழ்வுற் றான்றோர்தங்களடிக்கமலஞ் [றான் (௬)
சொல்லுநெறியாறபணிந்துவிடை கொண்டேயெழுந்துத ணிர்துசென்

பம்புந்தமரக்கடலைகட்டிற் பாய்ந்துகிழியவொழுகுபொன்னி
யம்பொறறீரவடகரையி லகல்வான்மறையவுயர்தோங்குஞ்
செம்பொற்குடுமிவயினெல்லாஞ் செழும்பூஞ்சோலையிருள்பரப்ப
நம்புஞ்சுரும்பரிசைபாடு நாராயணவெற்பினையடைந்தான் (௭)

வெற்பினயலேகவியாண தீர்த்தமென்னும்வியன்மடுவிற்
யொற்பிலிசைந்தமகரமதிப் புனிதநீரோர்மதியாடி
யற்பமேனுமன்னமென்ப தறவேயகற்றிமேற்கரைபோய்
வற்பிலியன்றமாதவத்தோன் பதுமாசனத்தில்வைகினான் (௮)

உள்ளும்புறம்புஞ்சராசரமு முலோகாலோகங்களுமெங்கு
மெள்ளுங்கலந்தவெண்ணெயும்போல் யாவுமாயவொருபொருளைத்
தெள்ளுமுளத்தினீக்கமறத் தானாய்த்தெளிந்துநியாணித்துங்
கொள்ளுமனத்திற்கம்பமறச்சலி யாதிருந்தான்கோதில்லான் (௯)

பொருந்தியானத்தினிதிருப்பப் போதார்மடுவிற்றெண்ணீரை
யருந்தப்புசந்தவிலங்கினங்க ளவனைநரனென்றெண்ணாது
பரிந்தவுடலிற்றினவகலப் பருங்காழ்மரமென்றுடலுரிஞ்சி
நெருங்குமருப்பாலடித்திடவு முணரான்றவத்துநிலைபெற்றான் (௰)

இனையதவத்தாற்பிருவுள்ளத் திரக்கந்தோன்றவிளநிலவு
வனையுமவுலிப்பரஞ்சோதி வந்துமுன்னரவன்மனத்தி
னினைவின்படியேவெளிப்பட்டுத் திருக்கைமலரான்முடிநீவித்
தனையொவ்வாததவமிருக சிருங்காதாழாதெழுகென்றான் (கக)

வேய்ந்தசடிலமாதவத்தோன் விரைவின்விழித்துப்பார்த்திடலுந்
தேய்ந்தபிறையுந்திருநதியுஞ் செய்யபவளசசடைக்காடும்
பாய்ந்தபிணையுமழுப்படையும் பரித்தகரமும்பலகோடி
காய்ந்தசுடராதவரென்ன வொளிரும்வடிவுங்கண்டெழுந்தான் (௰௨)

பரமனடியின்விதிமுறையே பலகாற்சென்னிதாழ்ந்திறைஞ்சி
விரவுமனத்திலுவகையென்றுந் தாழ்வென்றிரண்டும்வேறிலனாய்
வரதன்வடிவைநோக்குதொறு மின்பவிழிநீர்வார்ந்தொழுக
விரவிலுழந்தானிதிபெற்றா னென்னக்களிப்பாலேத்தெடுத்தான் (கங)

வேறு

காராழிதந்த விடமுண்டிருண்ட களனேபுரங்கள் பொடியக்
கூராழியங்கை முகிலம்புகொண்ட குழகாவிளங்கு மழகா
போரராடல்கொண்டு வருகாலனஞ்ச வொருகாணி மிர்த்த புகழோ
யாராலறிந்து கொளலாகுமின்னை யமலாகினன்ப னடியேன். (கச)

விடவாயனந்தன் முதலாமனந்தம் விறனாகர் துன்றுபணியோய்
வடவானலங்கள் பொழிலேழுமுண்டு வருநாளிலங்கு பெரியோய்
கடைநாண்முடிந்த விதியார்சிரங்கள் களியோடுதுன்று தொடையோ
யடன்மேவுதந்தி யுரிபோர்வைகொண்ட வமலாகினன் பனடியேன். ()

மையார்வரிக்க ணுமையாள்கலங்க வரையுங்குலுங்க வரைசைய
கையாலுயர்த்த நிருதன்புயங்க ணெரியக்கடிந்தகழலோய்
செய்யாண்மணந்த நரசிங்கமான வொருசிம்புளாகவிமையோ
ரையாபுரத்தி யெனவன்றடர்ந்த வமலாகினன்பனடியேன். (கரு)

செம்பாகமுற்று முமையாள்கலந்த திருமேனிசெம்பொன்வரையில்
வெம்பாதசோதி மணியிந்திரநீல வரையொன்றிலென்னமிளிர்வோய்
பம்பார்கலிக்குள் விடநாகராச பரியங்கசாகியுடனே
யம்போருகத்தின் முனிதேடநின்ற வமலாகினன்பனடியேன். (களா)

வேதாதிநீதி பலவாகமங்கள் வியனுப்மொழிந்த துறையின்
பேதாதிபேத மவைதோறுநின்று பெறுபேரியற்று பெரியோய்
பூதாதியாகி யறிவாகிமூன்று குணமாகியைந்துபுலனு
யாதாரமாறின் முடிவாயிருந்த வமலாகினன்பனடியேன். (கஅ)

காணரலங்கவிமவான்மடந்தை முலையானைகனறியடையக்
தேனுறுடைந்து வழிகொன்றைமாலை திருமார்பலங்குமிழையோய்
வானுகியந்தவெளிதானடங்கு மனமாகியந்தமனனத்
தானுதஞானவுருவாகிநின்ற வமலாநினன்பனடியேன். (௧௯)

விரிமாதவத்தர்கனல்வேள்விமுற்றி விறலாடகந்தையொழியப்
பரிவோடுமாதர்நிரைநாணமென்ற பலிகொண்டுவீதிவருவோ
யெரியாடுமேனிபொடியாடலூழி யிருதிக்கண்வேத விதியோ
டரியாதிதேவர்தலைமாலைசூடு மமலாநினன்பனடியேன். (௨௰)

சமராய்வசந்தனொடுமைந்துவாளி தருசம்பராரியெரிய
விமையாதநெற்றிவிழியங்கிதூவி யிகல்வென்றயோகமுதல்வா
வுமையாள்வழுத்திவழிபாடுசெய்யு முறுதித்தவத்தினுருகா
வமையாடுதோள்கடழுவக்குழைந்த வமலாநினன்பனடியேன். (௨௧)

மாலாகியாதியயனுகிவெள்ளை மதவாரணத்திறையாய்ப்
பாலாழிமேருமுடிசெம்பொனோடு பதியாகமன்னுபழையோய்
வேலாடல்கொண்டுபொருதானவர்க்கும் விறல்வானவர்க்கும்விதியா
யாலாலமாகியமுதாகிநிற்கு மமலாநினன்பனடியேன். (௨௨)

தேவாதிதேவ சிவஞானரூப திருமால்விரிஞ்சனறியா
மூவாமுகுந்தன் மகனுகநீற முனியாவிறித்த முதல்வா
நாவால்வழுத்த முடியாதகேண்மை நானோவழுத்தவுரியேன்
காவாயெனக்கை குவிசெய்துவேறு கழறுதுநின்ற பொழுதே. (௨௩)

மிருகசிருங்கன் பிறப்புரைத்த அத்தியாய முற்றிற்று.

---

ஆக அத்தியாயம் ௪. க்குத் திருவிருத்தம் ௱௰.

ஐந்தாவது.

## மிருகசிருங்கன் தவஞ்செய்துமீண்ட அத்தியாயம்.

---

வருகமிருகசிருங்கரீ வருந்தியியற்றுந்தவத்தானும்
பிரமசரியமுறையனைத்தும் பிறழாதியற்றுந்தகுதியினும்
பருகுமமிர்தங்கைத்திடநீ வழுத்திப்புகன்றபாடலினும்
விரிகாவிரியில்லைகறையில் விரியும்புனலாடியதானும். (௧)

## ௰௬ மிருகசிருங்கன்றவஞ்செய்துமீண்ட அத்தியாயம்.

உள்ளமகிழ்ந்தோம்வரந்தருவோ முனதுவிழைவுமுத்தியின்மேற்
கொள்ளுஞ்சிந்தைமிகவுடையை கொடுக்கவினிதுகாலமன்று
லெள்ளவரியபிரமசரி யத்தாற்பிழையாவிருடியர்தம்
வுள்ளற்சிந்தைமகிழ்வித்தா யினிவேள்விகளான்மாசில்லாய் (௨)

தேவர்கடனுமூற்றுவித்துச் செல்வப்பு தல்வர்தமையீன்றே
யேவரானுமியற்றரிய பிதிர்க்கள்கடனுமினிதாற்றிப்
பூவினுறையுமவிரிஞ்சனுக்குப் பிருகுவென்னுப் புதல்வனாய்
மேவியினிமேல்வருபிறப்பில் வேதாந்தத்தினிலையுணர்ந்தே. (௩)

மாண்டதவத்துநிதானுக்குமுத்திஞானவழிகாட்டிப்
பூண்டதவத்தோய்நீபின்னெம புனிதநிலைபிற்புகுதியெனக்
கூண்டசடிலமுக்கணிறைகூறப்பின்னுமுனிகுமரன்
காண்டற்கரியாயெமதுமொழி கேட்டியெனறாகட்டுரைப்பான். (௪)

தோட்டுமலர்கணெருங்குமிந்தச் சூதிக்கரையிற்றவமடியே
னீட்டியதுவுநீவெளிப்பட் டென்னைப்புரந்துகாத்ததுவு
நாட்டிலெவருமறிவதற்கு நம்பாவிந்தத்தலத்தென்றும்
வாட்டமறவேயுறைய வேண்டுமென்றான்வரத்துயர்ந்தோன். (௫)

முக்கணிறைவனப்பரிசே முழுதுமுறைவோமெனவுரைத்தான்
றக்கமறையோன்றாயதந்தை தருபோர்வச்சனதுநிற்கச்
செக்கர்ப்பவளத்திருவாயான் மிருகசிருங்கனெனச்செப்பப்
புக்கபரிசெயதி யானறியப் புரடன்றெரித்தோய்புகறியென்றான் (௬)

கோலச்சடிலமுடிதுளக்கிக் கேட்டவரதன்கூறுவான்
ஞாலத்தொருவர்முனஞ்செய்யா நவைதீர்தவத்தினீயிருக்குங்
காலத்தடைந்தவிலங்கனைத்துங் கண்டேநியின் மெய்யுரிஞ்சுதலாற்
சீலத்தவத்தோய்பெயர்மிருகசிருங்கனெனவேசெப்பினமால். (௭)

ஆதலாலிப்பெயருனக்கே யமைவிமுழுதுமுரைக்கவெனக்
காதலாலேவிடைகொடுத்துக் கண்மூன்றுடையகாமாரி
போதுலாவும்வியன்கிரிமே லெவருந்தொழுதுபுகழ்ந்தேத்த
மாதிஞெடுமிளிதமர்ந்தான் மறையோன்மீண்டுநகரடைந்தான். (௮)

ஈசனுரைத்தபெயரிவனூ ரெய்துமுன்னமுலகனைத்தும்
பேசமுனிவன்மனைபுகுந்து பெற்றோர்தம்மையடிவணங்கி
யாசிறவந்தானியறமியது மரனும்வெளிப்பட்டுரைத்ததுவு
மாசிலாவிலலறம்பூண வகுத்தபடியும்வகுத்துரைத்தான். (௯)

இனியவாய்மைதனைக்கேட்ட வீன்றோருவகைமிகப்பெருகிப்
புனிதமகவேசிணைப்பெறலாற் பெற்றோருமுத்திப்புரமென்னக்
கனியுமுவகையோடுளைப்பக் காளைமுனிவனதுகேளா தான்.
வினையமனத்திற்றன்னுளத்தில் வேண்டும்விழைவையெடுத்துரைத்

ஈன்றுவளர்த்ததாய்தந்தைக் கெவரேகைமாறியற்றிடுவா
ரான்றமதலைநூறுவய தளவுமடிமைத்தொழில்புரிந்து
மூன்றுபுவனத்துள்ளபொருண் முற்றுமளித்துமுறைமுறையே
யூன்றிவழிபாடியற்றுகினு மொருநாள்வளர்த்தற்கொவ்வாதே. (கக)

மன்றுதாயரொடுதந்தை மயதீர்குரவரிவர்தமமைத்
துன்னிவழிபாடியற்றியவர் தொண்டிற்பணிந்துதொழும்புசெய்ய
பன்னும்பொழுதிலிவைபோலப் பாலர்க்கேதுதவமுண்டாம்
பின்னையிவர்தமருளிலதேற் றவஞ்செய்தாலும்பேறிலனே. (கஉ)

பேறுமுமதுதிருவருளே யென்றுபெற்றோர்தமைமகிழ்வித்
தாறுபுனையுங்கோடீரத் தண்ணல்பணித்தமொழிப்படியே
நாறுமலர்ப்பூங்குழலாளை மணந்தில்லறத்தைநடாத்தவிடை
யூறுசிலவுண்டவையொழியி விலவாழ்வதனுக்கொப்புளதோ. (கந)

அன்பிற்கணவனேவல்வழி யடையுமவளைப்பெறுமவனே
யின்பப்புவனத்தமரர்பத மெய்திவாழுமியல்புடையான்
வன்பிற்கணவன்மொழியிகழ்ந்தாண் மனையாளூகின்மற்றவனே
துன்பநரகக்குழிவீழ்ந்து துயரம்புவியிற்றுய்ப்பவனே. (கச)

தெண்ணீர்வாழுமட்டையுடன் றீயமகளிர்நிகரென்றுற்
புண்ணீரளவேயட்டையுணும் புகன்றமகளிர்புந்தியுட
னுண்ணீர்மையினீட்டருந்தனமு முலவாவலியுமுளமகிழ்வும்
பெண்ணீர்மையினுலறப்பரித்துப் பீழைமிகவுந்தருகுவரால். (கரு)

ஆதலாலித்தகையோளை யறவுநீத்தேயருங்கற்பின்
மாதராகிநற்குலத்தில் வந்தாளாகிமதியினளாய்த்
தீதிலாதமகப்பேற்றிற் சென்னமுடையாடானுகி
யோதும்வாய்மைநன்மையினின் றொளிருமுகத்தாடானுகி. (கசு)

செய்யநிறத்திற்பொலிபவளா யங்கத்தொன்றுஞ்சிதைவிலளாய்
வெய்யபிணிகளில்லாளாய் விளங்குமொழுக்கமுடையளுமாய்த்
துய்யதாயர்தந்தைவழித் துகளொன்றில்லாத்தொடர்பினளாய்ச்
சையமரவநதிபறவை தாருவுறுபேரிலாதவளாய். (கஎ)

குறியவுருவமில்லாளாய்க் கூந்தற்செம்மையிலலாளா
யறவுநெடியளல்லாளா யங்கநோயிராதவளாய்
மறுவின்மாதர்க்கெடுத்துரைக்கு மியல்பிலொன்றும்வழுவிலளா
யுறையுமவளேயுண்டாகிற கோடியென்றுனுறுதவத்தோன். (கஅ)

மைந்தனுரைத்தநீதிமொழி யனைத்துங்கேட்டுமகிழ்வோங்கத்
தந்தையுரைக்குமகரமதி தன்னிறறெண்ணீராடியுள்ளாய்ச்
சிந்தைதூயாய்தருமநிலை நின்றுய்சிவனுக்கடிமையுறுய்
முந்தவுரைத்தவிதிப்படியே வதுவையுனககுமுறறிமோல். (கசு)

விண்ணோர்புகழுமாகமதி விரும்பிப்புனலாட்டயர்ந்ததனாற்
கண்ணோருடலிலாயிரமாங் கடவுள்பதநீகருதுகினு
மண்ணோர்புகழுநினைந்தவுடன் வந்தேயெய்துமாசில்லாப்
பெண்ணேவரிதுநினகெகென்னப் பேசித்தாதைபெரிதுவந்தான். ()

மிருகசிருங்கன் தவஞ்செய்து மீண்டவத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் ரு-க்குத் திருவிருததம் ௬௦.

---

ஆறவது,

## சுவிர்த்தை காதையுரைத்த அத்தியாயம்.

இவ்வாறிவன் மாமகிழ்வோங்கி யிருக்குநாளிற்
றெவ்வார்வணங்கும் புகழ்போசன் செழும்பொன்மூதா
ரொவ்வாதநிமை கடிவேத வுசத்தியன்ற
னவ்வாழ்வில்வந்த சுவிர்த்தைப்பெய ரன்னமன்னாள். (க)

சீரார்வடிவிற் றிருவொப்பவண் மாகதிங்கள்
வாரார்முலைப் பாங்கியர்சூழ்வர வந்துதெண்ணீ
ரேரார்குடகா விரியெய்தி யினிதுடனே
யாராவமு தன்னவள்பூம்புன லாடுமன்றே. (உ)

வேறு.

ஊனமில்லாப்பதிகற்போ டுரியபுதல்வர்நல்கமதி
யீனமிலலாப்பெருஞ்செல்வ மெல்லாமெளிதிற்றரவேண்டி
யானகுடகிற்பிறந்தாயே யரங்கர்க்கியல்பாமாரணங்கே
கானமலர்சேர்காவிரியே கையாற்றொழுவோங்கண்டாயே. (௩)

இந்தமுறையிலெடுத்தோதி யிருமூன்றுண்டினெல்லைமட்டுஞ்
சந்தமுலையாண்மகரமதி தன்னிற்புனலாட்டயர்காலை
யந்தமடவாள்வடிவிளமை யனைத்துநோக்கியுசத்தியன்றன்
சிந்தையெண்ணியிவள்கணவ னெவனேயென்றுதிகைத்துநின்றான்.

இருந்தவேலைக்குச்சனெனு மிணையிறவத்தோனவணெய்தி
வருந்துதவத்தினுசத்தியன்றன் வதனநோக்கிநின்புதல்வி
திருந்துங்கமலைபோல்வாளென் சிறுவன்மணக்கவளித்தியெனப்
பொருந்தியவனுமளிப்பனென விசைந்தான்மறுகாட்புலரியின்வாய்.

பாங்கிமார்கண்மூவரொடுஞ் சுவிர்த்தைபரிதியெழுமுன்னர்த்
தேங்குபுனற்காவிரிபடியச் செல்லுங்காலத்திடைநெறியிற்
றுங்குபிறைக்கோடொழுகுமதத் தறுகட்பனைக்கைப்புகர்முகத்தோ
ரோங்கலுறுமிற்குரலெழுப்பி யுயர்கானிடைநின்றெதிர்ந்ததுவே. ()

கண்டுவெருவிக்கைநெரித்துக் கண்ணீர்வாரக்காறளரக்
கொண்டலளகம்புறந்தாழக் கோதைசரியத்துகில்சோரத்
துண்டமதிபோனுதல்வியர்ப்பத் தொடருங்கரியைப்பின்பார்த்து
வண்டுமுரலுங்கானகத்து மறுகிமடவாரோடினரால். (எ)

பசியபுதலான்மிகமூடித் தெரியாதுறையும்பாழ்ங்கூவ
லொசியுமிடையாரஃதறியா தொருங்குவீழ்ந்துமடிந்திடலும்
பொசியுங்கலுழிமால்யானை போயம்மகளீர்தமைக்காணு
திசையுநெடுவான்மலைச்சார லகன்றுகானத்தெய்தியதே. (அ)

கூண்டுமகரமதித்தெண்ணீர் குடையப்போனமடமாதர்
மீண்டுமனையிலவரக்காணு மென்னேயென்றேயிரங்குமனம்
பூண்டதாயர்தந்தையர்கள் பொள்ளென்றீண்டிப்பொன்னிநதி
யாண்டுசென்றேயறிதுமெனச் சென்றார்நெறியினடிக்கண்டார் (கூ)

கண்டவடியேசுவடாக வொருசார்செல்லக்கரியினடி
விண்டுநிலம்போற்சுவடுகண்டா ரழுதார்தளர்ந்தார்வெய்துயிர்த்தார்
தண்டவில்லாமற்றொருசார் செல்லவிளிந்ததளிரியலார்
கொண்டகலனுங்குழற்றுரும் குழைந்தசிறுதூறிடைக்கண்டார். ()

பின்னுமவர்நெட்டிடைசெல்லப் பிறங்கும்பசும்புற்சிறுதூறு
துன்னும்பாழ்ங்கூவலைக்கண்டார் தோகைமடவாரக்கிணற்றின்
மன்னிவிழுந்துகிடத்தல்கண்டார் மாண்டாரந்தோவெனமாழ்கி
மின்னியிடிவீழ்ந்திடவெருவும் விடவாளரவின்வெய்துயிர்த்தார். ()

தாங்கியெடுத்துநால்வரையுந் தத்தங்குறங்கின்மிசைவைத்து
வீங்குநெடுமூச்சினராகி விம்மியிரங்கிவெய்துயிர்த்து
வாங்கிமார்பிலெடுத்தணைத்து வதனத்தறைந்துவயிறலைத்தே
யேங்கிவிழிநீராறலைப்ப வெருவுற்றிவவாறெடுத்துரைத்தார். (கஉ)

வேறு.

அந்தோவிதியே யழகிதரோமாகமதி
நந்தோவிடுபுனலி னூடோறுநீர்மூழ்க
வந்தோரிதுநாள் வறுங்கூவல்வீழ்ந்தழியக்
கந்தோடிகல்வேழங் காலனாய்த்தோன்றிற்றே. (கங)
எள்ளுமயலோ ரிரங்கியழுதேங்கி
யுள்ளமுருகீ ரொருசிறிதும்வாய்திறவீர்
மெள்ளவிழித்தருட்கண் பாரீர்மெலிவகற்றீர்
பள்ளவருங்கூவல் வீழ்ந்துபரிசற்றீரோ. (கச)

என்றினியாங்காண்போ மெழிலார்திருமுகமுந்
துன்றுமலர்ப்பூங்குழலுந் தொண்டைக்கனிவாயும்
வென்றிவடிவேல்விழியும் வெண்ணகையும்வார்காதும்
பொன்றிகழுமேனியும்பொற் பூஞ்சிலம்பும்பாதமுமே. (கரு)

சிற்றிலிழைத்துஞ் செழும்பூமலர்கள் கொய்தும்
பற்றிக்கழங்கெறிந்தும் பந்தறைந்துமெய்வருந்தி
யிற்றைப்பொழுதளவு மெம்மையுங்கண்பாராமற்
கற்றைக்கருங்குழலீர் கண்டுயினீர்கொண்டீரோ. (கசா)

பாடுங்கிளியார் பசித்துமிகவருந்த
வாடுஞ்சிறுபூவை வாய்விட்டினிதழைப்ப
வோடும்பிணைவிழியீ ரொன்றுமுரையாடல்செய்யீர்
தேடும்பறவையுமற் றேதுபிழைசெய்தனவோ. (கஎ)

இத்திறத்திற்றாய்மா ரெடுத்துநினைந்தேங்கிச்
சித்தந்துயர்கான்று தேடியழுங்காலை
முத்தனுசத்தியனு மோகத்துயர்மூழ்கிக்
கொத்துமலர்ப்பூங்குழலை நோக்கியிதுகூறினான். (கஅ)

அன்னமேமீதனே யமுதேயென்கண்மணியே
முன்னநான்செய்த தவத்தின்முழுப்பயனே
சொன்னமேதோளா மணியேயுனையிழந்து
மின்னமேதெண்ணி யிருந்தேனிருந்தேனே. (ககூ)

கோதிலாக்குச்சமுனி னென்னலெனக்குறுகித்
தீதிலாவச்சனுக்கே நின்னைமணஞ்சேர்த்த
வோதினன்யானு மிசைந்தேனவ்வுத்தமனிப்
போதுதாம்வந்தாறு னேதுபுகல்வேனே. (உ0)

ஞானமுனிவ னிவையுரைத்துநன்மகடன்
மேனிதழுவி விழிகளுழுங்காலத்தின்
மோனவிரதன் முறைதெரிநற்குச்சன்மகன்
கானிலிருந்தழுவார் முன்னங்கடிதுசென்றான். (உக)

சென்றகருணைமுனி சேயிழையார்மாண்டதுவு
மொன்றுகிளைஞ ருருகியழுதேங்குவதுந்
துன்றுதவநீதி யுசத்தியனுர்சொற்றதுவு
நின்றுநனிகேட்டு நெடுந்தவத்தோன்கூறுவான். (உஉ)

அருந்துயரமேற்கொண் டனைவோருந்தாங்கூடி
யிருந்தழுதல்வேண்டா மிறந்தாருமுய்வார்கண்
முடிந்தனையதூய்முறுவன் மொய்குழலார்மேனிதனைக்
கருந்தயிலத்தோணியிட்டுக் காத்திடுமின்கண்டீரே. (உங)

என்னவுரைத்தா னெழுந்தான்குடகிழிந்த
பொன்னிப்புனலிற் கழுத்தளவாய்ப்போயிறங்கி
மின்னுகிரணத்தின் விளங்கும்வெயிற்கடவு
டன்னைமுகநோக்கி நின்றேதவம்புரிந்தான். (உச)

வேறு.

அன்னிலையின்கணமர்ந்திடுபோழ்திற்
கன்னியரஞ்ச வெதிர்த்திடுகைமாப்
பொன்னியில்வந்து புகுந்துதவத்தோன்
முன்னமணைந்து முழங்கியதன்றே. (உரு)

வேழமடர்ந்து வெருண்டமைகண்டு
மாழுறுநெஞ்ச னறிந்தறியான்போ
லாழிலுறுந்தவ முற்றிவணிற்ப
வேழுயர்வேழ மெடுத்ததுகையால். (உசு)

கையிலெடுத்த கடாக்களியானை
மையறுமாதவனைப் பிடர்வைப்பப்
பையவிருந்தருள் பாவமிலாதான்
வெய்யகரிக்கருள் செய்யநினைந்தான். (உஎ)

வாலியமாக மதிப்புனலாட்டி
நாலிருநாளையி னற்பலன்முற்றுஞ்
சாலமதக்களி றேதனிகொள்கென்
றோலநறும்புன லோடுகொடுத்தான் (உஅ)

மத்தகமீதினில் வன்புனல்வார்த்தே
வித்தகனங்கையின் மெய்யினைநீவக்
கத்துருமுக்குரல் விட்டுயர்கைம்மா
மூத்தெயிறூன்றி முடிந்ததையன்றே. (உகூ)

வெஞ்சினவேழம் விளிந்துருமாறு
வஞ்சியர்சூழ்வர வானவனாகித்
தஞ்சமெனுந்தவ தாபதகேளென்
றஞ்சலிசெய்தங் கறைந்திடுமன்றே. (ங0)

வேறு.

நீதியோங்கு நிடதநகரிடைச்
சாதியானவணிகர்தரத்துளோன்
காதுவேள்விச்சிவ குத்தன்காதலன்
கோதிலாத்தன்ம குத்தனென்பேரையா. (ஙக)

வேள்விசெயதனன் வேதங்களோதினே
னாளுமந்தணர் தானங்கணல்கினேன்
காளைசூழ்நிரை காத்தினிதோம்பினேன்
வாளைதாவுபுனல் வயனல்கினேன். (ஙஉ)

வணிகர்தங்குல வண்மைக்கிசைந்திட
வணிபசும்பொ னவிரொளிமாமணிப்
பணிகள்வெண்டுகி லாதியபல்பொருள்
கணிதமின்றிக் கடிதுகொண்டீட்டினேன். (ஙங)

ஈதலாது மலையினியன்றவுஞ்
சீதநீர்க்கடற் றீவகத்துள்ளவு
மோதுங்காட்டகத் துற்றவுநாட்டக
மீதிற்பட்ட வியன்பொருளியாவையும். (ஙச)

மற்றுமின்னன வெண்ணறுவான்பொருண்
முற்றுமீட்டிமுயன்றிடு காலத்திற்
குற்றமின்றிக் குலந்தழைத்தோங்கிடப்
பெற்றனனொரு செம்மலைப்பேதையேன். (ஙரு)

போதமுற்ற புதல்வற்பெறுகென
வூதியத்தியா னோம்புவெறுக்கையிற்
பாதிநல்கினேன் மற்றவப்பாதியால்
வேதியர்க்கெலாம் வேண்டுவநல்கினேன். (௩௬)

சக்கரக்கைத் தலைவற்குந்தண்ணிலாச்
செக்கர்வேணியஞ் செல்வர்க்குந்தேவர்க்கு
மொக்கவாலய மூரிலியற்றினேன்
மக்கணீர்நுகர் வாவிகடொட்டினேன். (௩௭)

முப்பழங்கண் முதற்பலநல்கிடு
மொப்பறுந்தடஞ் சோலையுண்டாக்கினேன்
கொப்பிருந்துணர்ப் பூமலர்க்கொலலைக
ளொப்பவேயிவை யொன்றலவோம்பினேன். (௩௮)

யாதையாதை யெடுத்தின்றியம்புகேன்
பேதையேனதன் பின்பட்டபீழையை
மாதுபாகனு மாலும்விரிஞ்சனு
மோதுமூழை விலக்கற்குரியரோ. (௩௯)

ஆயகாலையி னார்த்தசடையினன்
மேயபூதியன் வேத்திரக்கையினன்
றாயசித்த ருருக்கொடுதோன்றியோர்
மாயவேடத்தன் வந்தெனைநண்ணினன். (௪0)

கண்டபோதென் கருத்தவன்பாற்செலத்
தொண்டுசெய்தலுந் தோமறுவிஞ்சைபோய்
விண்டுகாட்டினன் மெய்யெனவுன்னியே
பண்டையுள்ள பசும்பொனனைத்துமே. (௪௧)

வாதிதன்கை யளித்தனன்மற்றவ
னாதுவான்போ லுறுபொருள்வஞ்சித்துப்
போதன்மேயினன் போதலும்பொள்ளென
வேதனைப்பட்டு வெந்துயர்மூழ்கினேன். (௪௨)

மனைவிகண்டத்து மங்கலநாண்முத
லினியவான்பொரு ளியாவுமிழத்தலாற்
புனையவுந்துகி லின்றிவறுமைபூண்
டினையுங்காலையின் மூப்புவந்தெய்திற்றால. (௪௩)

## ௨௪ மிருகசிருங்கன் யமனைவணங்கிய அத்தியாயம்.

ஈன்றமைந்தனு மின்பக்கணிகைய
ரான்றமாயக் கலவியவாவினாற்
றோன்றுசெம்பொ னடங்கலுந்தோற்றுவந்
தேன்றுகாய விரும்பதிநீங்கினான். (௪௪)

மாகமாதம் வருதலுநீர்த்துறை
யேகியீரைந்து நாளினிதாடினே
னாகமூப்பிற் பிணியிலழுந்தலாற்
சோகமாகநீர் தோய்வதொழிந்திட்டேன். (௪௫)

முன்புசெய்த முழுத்தருமங்களிற்
பின்புசெய்தவிம் மாகத்தினபேறன்றி
வன்பிலேன்கிளை யோர்கண்மனைதொறு
மன்புவிற்றுண் டகல்வயிறுற்றினேன். (௪௬)

வேறுமோர்மனை யெய்திவிலாவுறச்
சோறுதுய்த்துத் துறந்துயிர்நீங்கினேன்
கூறுமாகத்தின் கோட்பினிற்பொன்னகர்
மாறுறுதோர் மனுப்பகல்வைகினேன். (௪௭)

விண்ணவர்குள் வியப்புறக்கற்பகத்
தண்ணிழற்கீ ழரம்பையர்தம்மொடு
மெண்ணிலாவின்ப முண்டொழிந்திற்றபின்
மண்ணின்மேவிந்த மால்கரியாயினேன். (௪௮)

நின்னருட்கொடு நீப்பரும்வாரணந்
தன்னுருக்கரந் தும்பரிற்சார்ந்துமே.
வின்னும்வாழ்வ னெழுவனென்றேகினான்
சொன்னமாக மதியைத்துதித்தரோ. (௪௯)

செம்பொனாட்டினத் தேவனகன்றபின்
பம்புநீரிற் பரமமுனியிழிந்
தும்பர்நோக்கு முகத்தினனோகையா
லிம்பரெய்த நமன்றனையேத்தினான். (௫௦)

குவிர்த்தை காதையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௬-க்குத் திருவிருத்தம் ௱௮௰.

ஏழாவது,

## மிருகசிருங்கன் யமனைவணங்கிய அத்தியாயம்.

நீதினமனேபுகழ்த்தரும தேவேமிருத்தேயந்தகனே
யாதிதருமவச்சுதனே யழியாக்காலனுனவனே
பூதமொறுக்கும்புராதனனே புறத்துமகத்துந்தோத்திரனே
சோதிநீலனென்பவனே பரமேட்டிப்பேர்த்தொல்லோனே. (க)

சொல்லுந்திறல்சேரிருணிகராய்த் துலங்குவதனச்சித்திரனே
மல்லார்தோட்சித்திரகுத்தா வரனேயுன்னைத்தொழுகின்றேன்
புல்லாரிடத்திலதிகோர வுருவாய்ப்புணர்ந்துபுனிதமுள
நல்லாரிடத்துவிழிக்கினிதாய் நண்ணியருளுநம்பரனே. (உ)

வேறு.

பிறைவெள்ளெயிறும் பெருத்தகன்ற
பேழ்வாய்முகமும்பெருவயிறும்
பொறியுமழலும் புகைக்கொழுந்து
பொங்குவிழியும் புருவமுறி
நெறியும்வடவைச் சிகைபோல
நிமிருங்குஞ்சித் திருமுடியும்
வறியகடல்போ லுள்ளெக்கிக்
கிடந்தவயிறும் வரைமார்பும். (ங)

நீலவரைபோ லறக்கருகி
நீண்டவுருவு நிலங்கொள்ளுங்
காலவுததிமு ழக்கமெனக்
கதித்தமொழியு மளவிறந்த
தாலமனைய நெடுங்கரமுஞ்
சாத்துமிரத்த மாலிகையு
மாலகாலமெ னுந்தகைத்தா
யழன்றசீற்றத் தரவுயிர்ப்பும். (ச)

கண்டைதமரித் தசைகழுத்துங்
கவைத்தவடிவுங் கரியநெடுந்
துண்டமதிபோற் படர்மருப்புஞ்
சோரியொழுக்குஞ் சுழற்கண்ணும்

விண்டவசனி யுறழ்கணைப்பு
  மிடையுமேதிக் கருவரையிற்
கொண்டல்படிந்த தெனவிருக்குங்
  கோலமுடைய கோட்பாடும். (௫)

எரியுந்தாரை நாராச
  மிலையாரயில்வே லிருப்புலக்கை
முரியாத்தண்ட நெடுஞ்சூல
  முறுகுபாசாங் குசந்தாங்கிப்
பிரியாக்கரங்க ளிருநான்கும்
  பெற்றபெம்மான் புரமெரித்த
வரியார்சிலையோ னயனெடுமான்
  மகிழும்பெரியோய் வணங்கினேன். (௬)

உலகையொறுக்குமடன்மிருத்து மொழிக்குங்காலனுடனிருப்பக்
குலவுபிணிகளுருக்கொண்டு குறித்தவேவற்பணிகேட்ப
விலகுமாரிமாமாரி முதலோர்சேவித்திறைஞ்சிநிற்ப
நிலவுகொழிக்கும்படைதாங்கி நிற்குஞ்சமனேதொழுகின்றேன். (௭)

நெடியகோலநிணம்பூசித் தடியைநிமிரவெடுத்தோங்கிக்
கொடியதீயபாதகரைக் கொடுபோதெம்முன்னெனவுரப்பி
யிடியின்முழங்கிப்பற்கறித்திட் டிருந்தோர்நடுங்கவெழுகோப
முடையசமனே தருமத்தி னுருவேநின்னைத்தொழுகின்றேன். (௮)

வேறு.

செந்தாமரைபோலுந்திரு முகமுங்கனிவாயுஞ்
சந்தார்வரைமார்புமரு டங்குந் துணைவிழியு
நந்தாவொளிதிகழுஞ்சிறு நகைவெண்மதிநிலவுங்
கந்தாரிருபுயமேலொளிர் கதிர்மாமணிவளையும் (௯)

வால்வெண்டுகி லரைநூலொடு வரையுந்திருவரையுங்
கால்கொண்டொளிர் மணிநூபுர வயினின்றொளிர்கழலும்
பால்விண்டெழு முழுவெண்குடை மேனின்றொளிர்பரவும்
வேலொன்றிடு விழியாரசை வெண்சாமரைநிரையும். (௧௦)

செம்பொற்கிரி யெனவேயவிர் திருமேனியுமுடையோய்
வெம்புங்கிர ணத்தா திபன் விழையுந்திருமகவே
பம்புந்தம ரச்சாகர முடிதென்றிசைபடரு
மம்பொற்சிக ரக்கோபுர மணிமாநகரரசே. (௧௧)

தருமத்தினதளவுஞ்செறி தருதீவினையளவுங்
கருமத்துளபகுதித்திற னிருமித்திடுகணிதப்
பெருமைத்தகுதியரேழுள பெரியோர்புடைதழுவ
வரிமுற்றியதவிசிற்பொலி யமலாநினதடியேன். (கஉ)

ஒருநாளெனவுளநாண்முத லுயர்மாதவமுயலும்
பெருமாதவர்வருபோதுள மகிழ்வோடவரொதிர்போ
யிருமாதவமுடையீரென வெழிலாசனமுதவிப்
பரிவோடினிதுரையேபுகல் பழையோயுனதடியேன். (கங)

நடுவாசரணம்பாசர ணமமனசரணரகத்
திடுவாசரணல்லார்தமை யிமையோருலகிடையே
விடுவாசரணமலாசரண் வெந்தீவினையொழியச்
சுடுவாசரணென்றேமுனி புவிவீழ்ந்தடிதொழுதான். (கச)

வேறு.

அந்தவேலையி லன்னவன்முன்னமே
விந்தைசேர்திரு மேனிவியப்பினன்
சுந்தரப்புயன றாய்மலர்மாலையன்
கந்தரஞ்சேர் கதிர்மணிப்பூணினன். (கரு)

வெண்ணிலாநகை விட்டுவிளங்கிடத்
தண்ணிலாவிற் றழைக்குமுகத்தின
னுண்ணிலாத வுவகையுளத்தினன்
கண்ணிலார வருட்பொழிகாட்சியான். (கசு)

நால்வகைப்பெருந் தானைநடுவணே
பால்வளத்திற் பழுத்தசொல்வாய்ச்சியர்
கோல்பிடித்தெறி சாமரைக்கூட்டத்துண்
மேல்விரித்தவிசு வெண்குடையினன். (கஎ)

எண்டிசாமுக மேழ்கடல்வைப்பெலாந்
தண்டலின்றித் தனிக்கோனடாத்திய
மண்டலாதிபர் சூழ்வரமாணிக்கக்
குண்டலத்தென் றிசைக்கோன்குறுகினன். (கஅ)

வீழ்ந்தமாதவன் மென்கையைத்தன்கையாற்
றாழ்ந்துபற்றி யெடுத்துத்தழீஇக்கொளா
வாழ்ந்தவேதிய னீயெமையன்பினாற்
சூழ்ந்துபோற்றுந் துதியின்மகிழ்ந்துளோம். (கக)

# ௨௮ மிருகசிருங்கன் யமனை வணங்கிய அத்தியாயம்.

வேட்டயாவையு மீகுவம்வேண்டெனக்
கேட்டமாமுனி கீழ்நீர்க்கிணற்றிடை
வாட்டமெய்தி மடிந்தமடந்தையர்க்
கீட்டுமாருயி ரீகெனவேத்தினன். (௨௦)

அன்னநல்வர மந்தணநல்கினே
மென்னவோதி யெதிர்நின்றதூதனைப்
பொன்னின்வாழைப் பொழிலினம்மூர்வைகுங்
கன்னிமாரைக் கொணர்கெனக்கற்பித்தான். (௨௧)

சொல்லுமாற்றந் தலைக்கொடுதூதுவர்
வல்லையேகியம் மாதர்தமைக்கொடு
நல்லநீதி நடுவன்முன்காட்டலு
மொல்லைமாதரை நோக்கியுரைசெய்வான் (௨௨)

காணலாவுடல் கொண்டுநுங்காயத்தின்
மாணிழைத்திரு மங்கையர்போய்ப்புக
வேணுமென்று விடுத்தனனக்கணம்
பூணுலாமுலை யாருடல்போய்ப்புக்கார் (௨௩)

பிறங்குமைக்கண் விழித்துப்புடைபெயர்ந்
துறங்கினார்விழித் தென்னவுடனெழா
வறங்கொள்சிந்தைய ரன்னையர்வெந்துய
ரிறங்கநெஞ்ச மினிதுவந்தாரரோ (௨௪)

ஓங்குமுள்ளத் துவகையிற்புல்லிமே
யீங்குவைகுவ தென்கொனம்மில்லையின்
பூங்குழற்றிருப் பூவையர்வம்மினென்
றாங்குடன்கொண் டவர்மனைபெய்தினார். (௨௫)

எய்திமங்கையர் வைகலுமிந்தலை
வைதிகத்தொழின் மாதவமென்வயிற்
செய்தவித்துதி செபமிவழுத்துவார்
கைதவத்தி னிளையத்தைக்காண்டிடார். (௨௬)

அன்றியுங்கே ளவமிருத்தாலவர்
பொன்றல்செய்யார் பொருந்துசெவ்வாயொடு
சென்றபிற்பக்கத் தீரேழ்தினமெதிர்ந்
தொன்றுகாலம் புனிதமுடையதால். (௨௭)

அந்தவேலை யரும்புனலாடியே
சிந்தையெண்ணித் திலதர்ப்பணஞ்செய்வா
ரிந்தவையத்து வேட்டவையாவையு
நந்திடாது பெறுவர்நவையிலாய். (உஅ)

அன்பினாலுனக் கீதுரையாடினே
மென்பதோதி யெழிலியன்மின்னெனத்
தென்புலாதிபன் சேணிற்கரந்தனு
மின்பமுற்று முனிவனுமேகினான். (உகூ)

தருமராசனும் வந்துவரந்தரற்
கரியநற்றுதி யாற்றுமுணர்வினோர்
வருமிருத்து வசத்திலகப்படா
திருமையின்பமு மெய்திடவாழ்வரால். (௩௦)

**மிருகசிருங்கன் யமனைவணங்கிய அத்தியாயம் முற்றிற்று.**

ஆக அத்தியாயம் எ-க்கு திருவிருத்தம் உ௱க௦.

---

எட்டாவது,

## தருமசாரமுரைத்த அத்தியாயம்.

மனையில்வைகியினிதிருந்த மங்கைசுவிர்த்தைமாசில்லா
வினையவொழுக்கமுறுகமலை விமலைசுரசைநால்வரையுந்
தனையொவ்வாததாயரொடுந் தந்தையோருமுகநோக்கிக்
கனைவண்டறையுங்கருங்குழலீர் கண்டபுதுமைகழறுமென்றார். (க)

வரிக்கண்மடவாரதுகேட்டு மகிழ்ந்துகண்டபடியுரைப்பார்
தெரிக்குமகரமதிதன்னிற் றெண்ணீர்படிந்ததிறத்ததனான்
மரித்தவளவில்யமபுரத்தை மருவிக்கதலிவனமடைந்து
பரித்தவிருமைத்திரத்தினரும் புகுந்தகமைபார்த்திருந்தோம் (உ)

ஒருநால்வகையதோற்றத்தி னுயிரிற்கருப்பத்துடைந்தனவும்
பெருகுகிழமாய்விளிந்தனவு முதலாய்த்தோன்றிப்பிறந்தவெலாம்
பரிதிகுமரன்றிருப்பதியிற் பரந்தெள்ளிடவுமிடமின்றி
யரியகரிமுன்னெறும்புகடை யனந்தயோனிநெருங்குமால். (௩)

அடைந்தயோனியத்தனைக்கு மரிதாய்ப்பகருமைம்பூத
மிடைந்தசுடர்களிரவுபகல் காலைமாலைமிகுதரும
முடைந்தமனமோடுதையமுத லிரவீறாகவுரைப்பவெலாங்
கடைந்தவேற்சித்திரகுத்தன் முதலோரத்தைக்கணித்திடுவார். (௪)

யாவரேனுமெக்கரும மியற்றினுலுமிறந்தொழிந்தாற்
காவணுவென்மூதூரை யடைவரென்னுங்கற்பிதத்தான்
மேவுமுலவாவுலகத்தும் விரிந்தயோனிவெகுவிதமாஞ்
சீவகோடியத்தனையு மொருங்கேகூடிச்செறிந்திடுமால். (௫)

புனிதமாகமதியதனிற் புதுநீராடன்முதலாக
வினிதினியன்றதருமங்க ளியற்றினோர்நல்வழிச்செல்வார்
பனிதீர்புலரிக்காலத்தின் மூழ்கிச்சிவனைப்பாவித்து
நனிதீங்கனிவேதியர்க்களித்தோர் நவைதீர்நெறிபோய்நண்ணுவரால்

நறியவிலந்தைப்பழமதனை நயந்துமறையோர்தமக்களித்தோர்
நெறியிற்றுன்பமுளவாது நிமிடத்தியமபதியடைவார்
வறியர்க்கினிதாய்நெட்டிலையின் வாழைக்கனியையளித்தோர்கள்
செறியச்சமனூர்செல்வழியிற் சிற்றாணுண்டுசெல்குவரால். (௭)

காரெட்டானநல்கினவர் களிகூர்சிந்தையினராகி
வாரெட்டாதவனமுலையார் மருவநமனூர்பதியடைவார்
தூரெட்டாதபெருநெல்லிக் கனியைத்துகளற்றவர்க்களித்தோர்
பாருட்டானையொளிபரப்பும் பரிதியொளிபெற்றெய்துவரால் (௮)

இடுதோற்கழற்பாதுகைமறையோர்க் கீந்தோர்தாவுமிவுளிமிசைப்
படுதோற்கலணைமிசையிருந்து பரிதிமகனாலயமடைவார்
சுடுவெங்கதிருமழைத்துளியுந் துன்றாக்குடைபூசுரர்க்களித்தோர்
விடுநுண்டுளிமஞ்சனநீழ லிட்டுச்செல்லவிரைந்துசெல்வார். (௯)

தூசுமகிழ்ந்துதானமிடுந் தூயோர்பீதாம்பரமசைத்து
வாசங்கமழும்பொழில்வழியாய் வைவச்சுதமாநகரடைவார்
ஆசில்லாதசிவிகையொடு தண்டுமளிப்பாரவிர்சோதிக்
காசுசேர்ந்தபொற்றேரி லேறிவழிபோய்க்கடந்திடுவார். (௧௦)

உறையுந்தவிசாசனங்கட்டி லுவந்துகொடுத்தோரிருந்திருந்து
நிறையும்வருத்தமறவெளிதிற் செல்வர்நமனூர்நெடும்பதிக்கு
நறைவிண்டொழுகுநந்தவனம் வைப்போர்நாட்பூவிமானத்துக்
குறைவொன்றின்றிமறலிபதிக் கெய்தும்வழியைக்குறுகுவரால். ()

மரங்கணிரையுமாமரங்கள் வைத்தோர்குளிர்ந்தமரநீழ
லிரங்கியளிகளிசைபாட வியமன்பதிபோயெய்திடுவார்
புரங்கணுவெட்பதிகருறை பொதுமன்றியற்றும்பொற்பினர்க
ளரங்குசுழலாவரமியத்தி லேறிவழியிலமர்ந்திடுவார். (௧௨)

கடவுட்டேவராலயங்கள் கண்டோர்வழியிற்செய்தோரு
மடரிட்டிழைத்தமணிமாட மமர்ந்துநமனாலயமடைவார்
சுடர்விட்டொளிருமங்கியொடுமீன்றோர்குரவர்தமைத்தொழுவோர்
படரொத்திசையுமனத்தின்முந்திப் படரும்விமானத்திடைசெல்வார்.

தீபமதனைச்சினகரத்துக் கியற்றினோரொண்டிசைமுழுதுஞ்
சோபையொளியேமிகவிரித்துத் துளங்காமறலிபதியடைவார்
தாபமறுதீம்பாலடிசி றவத்தோர்க்களித்தோர்தனிச்செங்கோற்
பூபரொனவேவேட்டவெல்லாந் துய்த்துத்தருமபுரியடைவார். (கச)

அன்னநறுநீரினிதளித்த வறத்தினுருவாயினர்க்கெதிர்வ
தின்னதென்னச்சொலத்தகுமோ விமையஞ்சேதுவிடையாகச்
சொன்னதேயமுழுதுமெலாஞ் சுருதிமறையோர்தமக்கீந்தோர்
மன்னுபோகத்தெண்மடங்கு மருவிநமனூர்வழிக்கொள்வார். (கரு)

செம்பொன்வெள்ளிநவமணிக டிருந்துமறையோர்தமக்கீந்தோர்
பைம்பொனொளிசேர்மணித்திண்டே ரேறிநமனூர்பதிசெல்வார்
வெம்புபிணியால்வருந்தினரை விரும்பியழைத்துமருந்தளிப்போ
ரும்பருலகத்தவரொன்னப் பிணிநீங்குடலத்தொடுசெல்வார். (கசு)

தீயாதென்றுஞ்செங்நெல்வளஞ் சிறந்தகழனிதனையளித்தோர்
வாயால்வழுத்தற்கரியவளன் மருவிமறலி பதியடைவார்
தோயாவிளங்குவெள்ளிலைநீ றடைக்காயுதவுந்துகளற்றோ
ரோயாதிசைந்தமுகவாசங் கமழவுயர்தேர்மிசைச்செல்வார். (களஎ)

உருக்குநறுநெய்பூசணிக்கா யுறுதண்டுலமாடகம்பயறு
பெருக்கும்பனசக்கனிதேங்காய் பிறங்குகன்னற்பாகுமது
மருக்கொள்கந்தம்பலமூல மாகமதியில்வழங்கினோர்
வெருக்கொண்மறலியாலயத்தில் வெருவாதுவந்துவழிச்செல்வார். ()

வேறு.

இத்தகையநற்கரும மீந்தவர்கடாமுஞ்
சுத்தமுறுமாகமதி தோய்ந்தவர்கடாமுஞ்
சத்திரநிழற்றவுறை யுந்தருமன்மூதா
ரத்தனையும்வெற்றிடமி லாதமர்வரம்மா. (கக)

நல்லதருமத்தினவை யற்றவர்களுற்றூர்
செல்லுமுனெழுந்தெதிர் நடந்திரவிசெம்மல்
வல்லபுனிதத்தவர்கள் வம்மினெனவாழ்த்திப்
புல்லியினிதாயமொழி யும்புகறல்செய்தே. (உ0)

விண்டுவுலகிற்சிலர் விளங்குகலைமன்னுந்
துண்டமதிவேணியுல கிற்சிலர் துளங்கும்
புண்டரிகவேதனுல கிற்சிலர்பொலிந்தா
ரண்டருலகிற்சில ரமர்ந்தினிதுசெல்வார். (உக)

அன்னவர்கள்செய்ததரு மத்தளவறிந்தே
யின்னவர்களின்னபத மெய்திடுதிரென்ன
மன்னுபவளத்தைநிகர் வாய்மலர்திறந்தே
பன்னிருடுவன்கதி பணிக்கவவர்போவார். (உஉ)

ஓதுபிரயாகையினின் மாகமதியுற்றே
மோதுபுனன்மூழ்கிய முழுத்தகைமையோரை
வேதமுறைகூறிய விரிஞ்சனுலகத்தே
போதிரெனமற்றவன் விடுப்பவவர்போவார். (உஙு)

சுத்தமுறுமாகமதி தோறுமினிதேகிப்
பத்தியொடுகாவிரி படிந்திடுபலத்தா
லத்தலையிலெய்திய மடங்கலுமறிநது
மித்தலையிலெய்தின மியம்பலெளிதாமோ. (உச)

வெவ்வழிமுனிந்துதவ நின்றுவினைநீங்கித
திவ்வியவிமானமொடு சேர்ந்தவர்கடம்மை
யிவ்விடைகணித்தினி தியம்புமவர்தாமே
பவ்வமுறுநுண்மணல் கணித்தனர்பகுப்பார். (உரு)

புண்ணியமியற்றினர்க டம்மியல்புகன்றே
மெண்ணரியதீவினை யியற்றினர்களெய்து
நண்ணருநெறிக்கொடு மையுநரகுசாரப்
பண்ணியிடுதண்டமும் வியந்துபகர்வாமே. (உசா)

தருமசாரமுரைத்த வத்தியாயம் முற்றிற்று.

ஆக அத்தியாயம் அ-க்குத் திருவிருத்தம் உஙசா.

ஒன்பதாவது,

## நரகசாரமுரைத்த அத்தியாயம்.

பாவியர்களெய்துகிற பான்மையதுகூறி
லாவிதளர்வுற்றுட லறப்பதறுமங்தோ
நீவிரவைவிட்டினிது கேண்மினெனநீலக்
காவிநிகர்கண்ணியர்கள் கட்டுரைசெய்கின்றார். (௧)

வேறு.

வானமோங்கு மரமியம்வைகிய
தானமோங்கிய வீதிச்சமனகர்க்
கூனமில்வழித் தெக்கணத்தியோசனை
யானவெண்பத்தா றாயிரமென்பவே. (௨)

நல்லவர்க்கணித் தாகியுநன்னெறி
யல்லவர்க்கதி தூரமதாகியுஞ்
செல்லும்பாதகர் துன்பத்தைச்சேர்ந்திடுங்
கல்லதர்த்திற மியாவர்கழறுவார். (௩)

வைக்குங்காலின் மறுபுறம்போழ்ந்திடப்
பைக்கொடும்பணிப் பல்லினுஞ்கூள்ளெனத்
தைக்குமுள்ளு முனைக்கல்லுஞ்சல்லியுஞ்
சுக்கம்பாறையுந் துன்னியதோரிடம். (௪)

காரிருப்புச் சலாகையிற்கம்பியிற்
சாருந்தாளறத் தைக்குந்தருப்பையு
மீரச்சேறு மிடுமுனைச்சூலமுஞ்
சூரைமுள்ளுந் துவன்றியதோரிடம். (௫)

ஏறினார்தா ளிழுக்கிவிழுந்திடு
மூறுதேன்வரை யுச்சியினேற்றமுஞ்
சேறிருட்கட் செறியும்பிலங்களு
மாறுவிட்டு மலிவனவோரிடம். (௬)

முள்ளிஞர்ந்த பிலமுமுடுக்கரு
முள்ளங்காலுற வூன்றடியொட்டியும்
வெள்ளிக்கோவில் விளங்குடைமுட்களும்
பள்ளந்தாழ்வும் பரந்ததோர்பாலெலாம். (௭)

அறுக்குமோடு மடர்முட்செடிகளும்
வறுத்துக்கொட்டிய வார்மணற்குன்றமுங்
கறுக்கக்காய்ந்த கரியகற்பாறையு
மொறுக்கும்பாம்பு நெருங்கியதோரிடம். (அ)

காயுங்காட்டிற் கனன்றுவளைந்தெழுந்
தீயுமாவி செகுத்துணுந்தீவிழிப்
பேயுமட்டையுங் கொட்டும்பெரியதே
ளீயுமாக விருபதங்கோரிடம் (௯)

செங்கட்சீயமுஞ் செந்நாய்க்கணங்களுந்
துங்கமாமத யானைத்தொகுதியுங்
கங்கமும்புலி யுங்கடமான்களு
மெங்குமாக விருப்பதங்கோரிடம். (௧0)

கொன்றுதின்னு மரக்கர்தங்கூட்டமு
மென்றுதின்ன விரையுங்கரடியும்
பன்றியுமுடல் போழ்ந்திடப்பாய்மருப்
பொன்றுசேவு முடற்றுமோர்பாலெலாம். (௧௧)

கோரவேட விடாகினிக்கூட்டமும்
பாரிடங்களும் பற்றுவெஞ்சாபமு
மூருமாமலைப் பாந்தளுமூன்றினச்
சேருமட்டையுஞ் சேருவசில்விடம். (௧௨)

கொட்டுந்தேளும் பணிபொழிகூதிருஞ்
சுட்டநீருஞ் சுழன்றெழுசூறையும்
வெட்டுமின்னும் வெடிக்குமசனியுந்
துட்டமாக்களுந் துன்றுமோர்பாலெலாம். (௧௩)

சண்டவாயுவுந் தாக்குகன்மாரியு
மண்டெள்ளிருளும்மண்மழைகளும்
பண்டைநோயின் பகுதியும்பாய்புனல்
கொண்டவாறுங் குழுமியதோரிடம். (௧௪)

வெம்பிவீழ்வெயிற் கற்றையின்வெப்பமுஞ்
செம்புருக்கிற் றெறுகனற்செம்மணு
மம்புபோற்றைக்கு மானைநெரிஞ்சியும்
பம்பியெங்கும் பரந்திடுமோரிடம். (௧௫)

இன்னதீய வழியிலிடர்மிகத்
துன்னும்பாதகர் யாருந் துணையன்றிச்
சொன்னயாவு மிருந்துதுயர்செய
மன்னுமின்னன் மலிந்தழுதேங்குமால். (கசு)

கரியமேனியர் காரழற்கண்ணினர்
பரியதண்டினர் பற்பலவாயின
ரெரியுநெஞ்சின ரெண்ணருந்தன்மையர்
வரிகழற்கான் மறலிதன்றூதுவர். (கஎ)

நில்லுநில்லென வந்துநெருக்கியே
வெல்லுமாயுத மாறிவிசிறுவார்
சல்லியம்படுபுண் டொறுந்தாரைவாய்
வல்லையுப்புக் கரைத்ததில்வார்ப்பரால். (கஅ)

அழுதுமாழ்குஞ் சிலரையடர்த்திடா
முழுதுமார்பும் புயமுமுரிந்திடப்
பழுதிலாதவர் பாதத்திலார்த்துடல்
புழுதியாட விழுத்தனர்போகுவார். (ககூ)

ஆர்வமுற்றி யறங்கருதாச்சிலர்
பாரினிற்கிடந் தல்லற்படப்படக்
காரிருப்புக் கருமுளைச்சங்கிலி
மார்பிற்கோர்த்து வலித்துக்கொண்டேகுவார். (உ0)

செற்றுந்தீயவர் தம்மிற்சிலவரைப்
பற்றிச்செந்தழற் பாறையின்முட்பல
துற்றப்போட்டதில் வீழ்த்தெறிதூண்டிலை
நெற்றிகோர்த்து நெடிதுகொண்டேகுவார். (உக)

நேசமற்ற சிலரைநெருக்கியே
பாசமிட்டுப் பிணித்துப்பருங்கதை
வீசியென்பற மோதவெரீஇயவர்
பூசலிட்டாற் றக்கொடுபோகுவார். (உஉ)

வெய்யதீவினை வெந்தொழிலாளரைக்
கையிலேமுளைநாடிக் கயிற்றி
னையவேபிணித் தீர்த்திடநாவுலர்க்
தையகோவென் றரற்றக்கொண்டேகுவார். (உங)

வாக்கிற்றீமை யுரைத்திடும்வம்பர்த
நாக்கிற்றூண்டிலிட் டீர்த்திடநண்ணுவார்
காக்கையுண்ணக் கருவியினாற்சில
ராக்கைமுற்று மரிந்துகொண்டேகுவார். (௨௪)

அறிவிலாதியல் பல்லவைசெய்திடுஞ்
சிறியர்தம்மைச் சிலறைக்கயிற்றிலாண்
குறியுமண்டமுங் கூட்டுறக்கட்டியே
யெறிவரெற்றுவ ரீர்த்துக்கொண்டேகுவார். (௨௫)

தெரிந்தபாதகர் தம்மிற்சிலவரை
வரிந்துகட்டிக் கபோலத்தும்வாயினும்
விரிந்தவோட்டத்து மீனெறிதூண்டிலிட்
டரிந்துகாய மழியக்கொண்டேகுவார் (௨௬)

ஆய்ந்தபாதக ரிற்சிலரஞ்சவே
காய்ந்தசங்கிலிக் கண்ணேவயிற்றகந
தீந்துபோகச் செலுத்தலுமாங்கவ
ரோய்ந்துவாய்விட் டுழறக்கொண்டேகுவார். (௨௭)

ஓதுபாதக ரிற்சிலருட்கவே
மோதியங்குசத் தாலவர்மூக்கினுங்
காதினூடுந் துடக்கிக்கருத்தினைப்
பேதுசெய்கடித் தீர்த்துப்பெயர்குவார். (௨௮)

கணங்கொள்பாதக ரிற்சிலர்காயத்தி
னிணங்தெறித்திட நெய்த்தோலொழுகிட
வணங்குமீர்வாளின் வாயிலரிந்தரிந்
துணங்கிமாழ்க வுறுத்துக்கொண்டேகுவார். (௨௯)

துட்டரானவ ரிற்சிலர்தோள்கவிற்
கட்டுபாசத்தி ரத்தங்கள்கான்றிட
வெட்டுவாரயில் வாள்கொடும்வேல்கொடு
முட்டுமார்ப்பினர் முன்கொண்டுபோகுவார். (௩௦)

மிடர்செய்பாதக ரிற்சிலர்வீழ்ந்தழத்
தடமுநீக்கு மயிற்படைதன்னினு
னுடலேயேயரிந் திட்டதையுண்டியென்
றிடர்விழைத்துக் கடிதுகொண்டேகுவார். (௩௧)

அன்னகாலையி லத்துயரெய்துவார்
பின்னர்மற்றோர் பெருந்துணைதானுமற்
றின்னலாய்மு னியற்றியபாவத்தைப்
பன்னிவாயுலர்ந் தாவிபதைக்கவே. (கூஉ)

பார்த்தபார்த்த விடந்தொறும்பாங்கருஞ்
சூர்த்தநோக்கி னமன்றரு தூதுவ
ரார்த்தசீற்றத் தவர்முகங்கண்டுமெய்
வேர்த்துவிம்மி வெதும்பிமெலிந்துமே. (கூகூ)

உடுக்கச்சீலையு மன்றியுலைந்துட
னடுக்கவாடிப் பசியானலனழிந்
திடுக்கணெய்தி யெயிற்றகல்வாய்ப்புலி
முடுக்கச்செல்லு முயலெனமுந்தியே. (கூச)

அஞ்சியோடி யலக்கணுற்றாரினித்
தஞ்சமென்றிறை தாங்குனரென்றழு
துஞ்சுபோத வுதகமுண்டோவென
வெஞ்சியேயெரி யும்பசியோடெழா. (கூரு)

வெய்யதீவெயி லாணிழல்வேண்டியுந்
துய்யவெம்பனி தோய்ந்துசுருங்கினோர்
செய்யசெந்தழ னேடியுஞ்செல்வராற்
பொய்யில்வாய்மைத் தருமன்புரத்திலே. (கூசு)

வேறு.

சென்றபொழுதினிலுயருந் தென்றிசைக்கோன்
றனியேவற் றிரத்துநிற்குந்
தன்றனியாண்மைப்படைக்கைக் கிங்கரரோ
ரிறைப்பொழுதுந் தாழாதெய்தி
வென்றிகொளுநெடுங்கதைக்கைத் தண்டத்தான்
றிருமுன்னர் விடுத்தலோடுங்
கன்றியநெஞ்சினராகிக் கண்கலுழும்
பாதகருங் கலக்கமுற்றே. (கூஎ)

வெள்ளைநெடும்பிறையிரண்டுங் கிளைத்தனைய
நெட்டெயிறும் விரித்தவாயுங்

கொள்ளையனற்பொறிசொரியுஞ் செங்கண்ணு
  முறிபுருவக் குனிப்புங்கோபந்
துள்ளுமிதழ்த்துடிப்புநின்ற முகத்தானைப்
  பாதகராய்த் தொழுதகியோர்
கள்ளமனநிலையழியக் காரிடியின்
  முழங்கியுரை கழறுவானை. (௩அ)

குரைகடலைப்பருகுசிகை வடவையெனச்
  சிவந்தெழுந்த குஞ்சியானைக்
கரியவரைக்கதிர்வளைந்த தெனவுடுத்த
  பொற்றிகழ்செங் கலையினானை
விரியுநெடுஞ்செம்மாலை மிலைந்தானைச்
  செங்கலவை மேனியானைப்
பரியநெடும்பாந்தளென மூவாறு
  புயப்பகுதி படைத்துளானை. (௩௯)

தாலங்களிரண்டென்ன வளைந்துயருந்
  தனிமருப்பிற் சலதியுண்ணுங்
காலங்கொள்புயன்முழக்க மெனக்கனைக்கு
  மயிடமிசைக் காட்சியானைச்
சூலங்கைவேல்குலிசஞ் சாபமழுக்
  கதைதோட்டித் தனுக்கோல்பிண்டி
பாலங்கண்முசலமசிக் கோல்கணைய
  முதலாய படையினானை. (௪0)

மூவுலகுமோரடியின் முடியுமெனப்
  பிரமதண்ட முறையிற்சுற்றிப்
பாவகனிற்சினமுதிர்ந்து கடகடெனப்
  பற்கறிக்கும் பரிதிசேயை
வாவுதிரைக்கடலேழு மண்ணேழும்
  பொருப்பேழும் வானமேழு
நாவில்வளைத்துண்டுமென வொருப்பாடு
  திருத்துமன நலத்தினானை. (௪௧)

ஓங்குதிறலவமிருத்து வுலகொறுக்குங்
  காலனுட லொழிக்குமாரி
தாங்கரியபெருவெகுளி மாரினிசி
  முதலாயதணவாநோய்கள்

பாங்கரினின்றுருவெடுத்துப் பணிகேட்ப
வீற்றிருக்கும் பண்பினானை
வீங்கியபேருயிர்ப்பினொடும் விழித்திடு
கண்ணீர்பெருக விளைவிற்காண்பார். (௪௨)

கண்டவனைமுகநோக்கி யெயிறுதின்று
வாய்மடித்துக் கனன்றுசீறிக்
கொண்டலுறுமெனமுழங்கிப் பிரமதண்டந்
தனையசைத்துக் கொழிக்குஞ்செந்தீத்
துண்டமழிதரச்சிவந்த கண்சுழல
முடிதுளக்கி யதரந்துள்ள
மண்டுபுருவத்துநடு நெளித்தேற
வுறுத்தினைய மாற்றஞ்சொல்வான். (௪௩)

புண்ணியத்துநிலைசிறிது மெண்ணாமன்
மறத்தொழிலே புரிந்துதீமை
பண்ணியபாவத்தொழிலர் வந்தாரோ
வருகவென்று பகரும்வேறு
நண்ணினைமுகம்பார்த்து நரபதியா
யிருந்துலகை நடுக்கங்கண்ட
கண்ணறையர்வந்தாரோ வருகவிங்கே
வருகவெனக் கனன்றுகூறும். (௪௪)

நல்லெழிலாவிளமையினாற் செல்வத்தா
னமைத்தடுப்பார் யாரோவென்று
பல்வளையாரில்லிருக்கப் பலதார
மணைந்திருந்த பதகர்வாரீர்
வெல்வழிசேர்புயச்செருக்கா லெளியோரை
மிகநலிந்து வெறுக்கைவாங்கி
யல்லலுறுத்தினார்வருக வருகவென்று
சிலர்முகம்பார்த் தழன்றுகூறும். (௪௫)

சிலகாலமவனிதனி லினிதிருந்தீ
ரதனிடையே தீமைசெய்து
பலகாலநரகிடையே துயருளப்ப
வோடிவந்த பதகர்வாரு

மலையாழிசூழுலகத் தஞ்ஞான
மனத்தினரா யரனைமாலைத்
தலையாரவணங்காதீர் வருகவெனவெகுண்டுரை
த்துப் பின்னுஞ்சாற்றும். (சு௬)

முன்னர்நீரினிதிழைத்த தீவினையின்
பேரனைத்து முறையிலாதீர்
பின்னர்நீர்நரகினிடைப் பிறழாதுபுகுந்து
துய்ப்பீர் பேர்க்கலாமோ
வென்னைநீரெண்ணுவதங் கத்தலையிலுடன்
பட்டாரிவணெய்தாரேற்
றுன்னிநீரெமதுபெருந் தூதர்கையிலினி
யேதுசொல்லவல்லீர். (சு௭)

அத்தலையிலுமக்கிதமா யநீதிகளைக்
கற்பனைசெ யமைச்சர்தாமுஞ்
சுத்தமறைவேதியர்க்குந் தேவருக்கு
மிடர்விழைத்த துணைவர்தாமுந்
தத்துதிரைசூழுலகி லறமகல
மறம்வளர்த்த தானையோரு
மித்தலையிலடைந்திலரே தனியடைந்த
வரசரினி யென்செய்வீரே. (சு௮)

எனவுரைத்தங் கருகிருந்தசண்டன்மா
சண்டனெனு மிவரைநோக்கிப்
புனிதநெடுந்தவமியற்றுப் பாவியரை
யெழுநரகும் புகுத்திரென்ன
நினையுமுனங்கடிதெழுந்தாங் கன்னவர்தாட்
டுணைப்பிடித்து நிமிர்ந்துசுற்றிப்
பணையினெடுந் துணைக்கரத்தாற் பாறைமிசை
யுடல்சிதறப் பதறமோதி. (சு௯)

தலையுடலங்கால்கரங்க டனித்தனியே
சிதறிவிழச் சோரித்தாரை
நிலையறவேபெருகியிட மூர்ச்சையுடன்
கிடந்தோரை நெறியிற்பின்னு

மலைவறவேநீர்தெளித்திட் டுணர்வுசிறி
  துதவியுட னவரையாங்கே
கொலைபுரிதீநரகமெனு மிருபத்தெண்
  கோடியினுங் குளிப்பிப்பீரால. (௫0)

பூநிலந்தான்றென்றிசையே போய்முடிந்த
  விடமியம புரிக்குந்தெற்காய்
மாநரகக்குழாமனைத்து மெழுபுவிக்கீழ்ப்
  பாதலத்தே மருவிவைகு
மானநரகப்பெயர்க ளனைத்தினுக்கும்
  பெயருரைக்கி னளவையின்று
வூனமுறுமொருகோடி நரகத்துக்
  கொருபெயரா யுரைத்துமன்றே. (௫௧)

வேறு.

கோரைசுகோரையதிகோரை கூறுகின்றமகாகோரை
யோராரலகோரரூபைபிணி யியன்றதாளதாரையுடன்
பாரிலுரைக்கும்பயானகைபின் பகருங்காழுவிராத்திரியு
மூரியானபயோற்கடையின் கண்டையுரைக்குமகாகண்டை. (௫௨)

சண்டைகோலாகலையுடன்பிற் சண்டைதாழுப்பதுமையுடன்
கொண்டபதுமாவிதிவீதி கூறும்வீமவீசனைபின்
விண்டாரனவிகாரமையும் விரிவச்சிரைபின்றிரிகோணை
பண்டைபஞ்சகோணையுடன் சுதீற்கைபரிவத்துணையுடனே. (௫௩)

சத்தபுமைபின்னட்டபுமை தகுசீர்சீர்த்தைமாயையென
வைத்தவிருபத்தெண்கோடி நிரையந்தனக்கும்வருபெயரா
மத்திற்கோடியொவ்வொன்றுக் கையைந்தேநாயகமாகுங்
கொத்துநிரையமொருநூற்று நாற்பானதன்பேர்கூறுங்கால். (௫௪)

ஆதியானரவுரவமு மழுகைதருமாரவுரவமும்
பீதிசெய்யும்பெருந்தமமும் பெருகுசீதமுட்டனமும்
வாதைசெய்யுஞ்சுரோகமுடன் சுகமம்வாழ்தீக்கணமதன்பின்
றீதுதருவாத்தியைசஞ்சீ வனமுமதன்கீழ்செறிசடமும். (௫௫)

சொல்லற்கரியமகாமாயை தொடுத்தவதிலோபம்மதற்பின்
கொல்லுஞ்சுயீபங்கடங்கடம்பின் குலையுமதிதீவிரவேகம்
வெல்லுங்கராளம்விகராளம் விரியும்விரகம்பன்மிடையே
சொல்லுங்கொடியமகாபதுமந் தீயோர்புகுதுஞ்சுவத்திரமும். (௫௬)

பெரியகாலசூத்திரமும் பிறதாச்சனவேசூரிமுக
முரியசுனேமிசாதகம்பின் ஞெழிசுப்பிரதீபத்துடனே
விரியுங்கும்பிபாகமுடன் வீழுஞ்சுபாகமிகுரூபங்
கரியநிறத்தாருணமங்கி ராசிபவனங்கருதிடிலே. (ருஎ)

கூறுமரத்தச்சீக்குண்டங் கூர்மையிருப்புத்துண்டப்புண்
மாறியெழுமாசமவைத்த மகிரமலிந்ததத்தசெந்து
ஆறுபங்கலேபமுட னுயிரும்பூதிமாங்கியமுஞ்
சீறுந்திரவத்திரமதன்பின் செருச்சுவாசமென்றுரைப்பார். (ருஅ)

கூருநிருச்சுவாதமுடன் சுதீர்க்கங்கூடசனமலியே
சேருந்துரிட்டமகாநாதஞ் சிறந்தபிறவாகம்பின்னர்
சாருந்துயர்ச்சுப்பிரவாக மிருசமேடம்விறலிடபங்
கூருந்திறற்சல்லியஞ்சிங்கங் கொடியபகுவாய்வியாக்கிரமம் (ருகூ)

கயஞ்சூகரம்பின்சுவானம்விறற் கரியமயிடந்திறல்விருட
மியங்குமேடங்கரானனம்பி னியலுங்கிராகங்கும்பீரம்
புயங்கும்புன்னக்கிரங்கூர்மம் பொருவாயசம்பின்கிருத்திரமுந்
தயங்குமுலூகஞ்சார்த்தூலஞ் சஞகங்கபிதறகடந்தானும். (சா0)

ஆன்றகொடியகண்டகமு மழல்வாய்ப்பூதிவத்திரமுந்
தோன்றுமிரத்தாக்கம்பின்னே சொல்லும்பூதிமிரித்திகையே
கான்றகண்மேதத்துடனே கஞலுங்கொடியதுடாக்கினியு
மேன்றகிருமிக்குழியதன்பி னிழிவுகூறுமமேத்தியமும். (சாக)

அழியும்புழையப்பிதிர்திட்ட மயருமுடலத்துதிர்வன்னங்
கழியுஞ்சுவாப்போசனமதற்பின் கான்றவாய்நீருண்டிபின்ன
ரிழிவாற்றன்னை நுகருண்டி யெல்லாநுகருஞ்சருவவுண்டி
பொழியுங்கோரச்சுதாருணமே பொல்லாங்கியற்றுஞ்சங்கடமும். ()

எண்ணும்விசாலம்பின்விகட மெரிவாய்கொழிக்குங்கங்கடமே
வண்ணப்புரிடங்கடாகந்தி வருவைதரணியழல்காய்ந்த
திண்ணெணிருப்புமுழைப்படுக்கை செழுந்தாரணம்பிற்பூரணமும்
பண்ணுங்கொடுமைபசிதால வனமுமத்திபங்கமுமே. (சாங)

எரிபீடகமுந்திலச்செக்கு மெறியெந்திரமும்பேரிக்குப்
பரியாலையும்வெம்பாதகர்கள் பதைக்குங்கூடபாசமும்பின்
னரியவுடலின்மருத்தனமு மாணசுண்ணநுண்சுண்ண
மெரியிற்றத்தலோகசிலை யிகலும்படைவாய்ப்பருப்பதமும். (சாச)

இகலிப்பொருமியாமளப்பொருப்பு மிழிமூத்திரமும்பெருமலமு
மிகவுநிறைத்தபெருங்கூப மிடைந்தவிருளேமலிகூபம்
புகலும்பூயகூபமும்பின் புகலற்கரிதாஞ்சாதனமும்
விகலமில்லாமுசலமுரல் விரியுந்திரிகையெந்திரமும். (௬௫)

கொடியசிலையின்சகடமும்பின் கொளுவார்நெடியவிலாங்கலமு
மடியாத்தாலவத்திரம்வாழ் வனமுஞ்சகடாமண்டபமுன்
னெடியசம்மோகனத்துடனே நீடுமெதிபங்கதமதன்பின்
கடியுந்தத்தசூலமுடன் கனலிற்காய்ந்தவிருப்புருளும். (௬௬)

பரிந்தவெகுதுக்கத்துடனே பகரற்கரியமகாதுக்கம்
விரிந்துவிளங்குகச்சுமலஞ் சமலமலமேவிளம்பவொண்ணுக்
கரிந்தவாலாகாலம்பின் கருதாவிரூபம்பயரூபந்
தெரிந்ததீயமானுக மேகபாதந்திரிபாதம். (௬௭)

செறிந்தவெகுதீவிரத்தோடு சேறும்வீசியீருக
வறைந்தவிருபத்தெண்கோடி யளவைநிரையநாயகமாய்ப்
பிறிந்தபகுதியொருநூற்று நாற்பான்முற்றும்பிறழாமன்
மறிந்துவிழவேபுகவிடுவர் பாவமலிவின்வசங்கண்டே. (௬௮)

செம்பொன்கழிந்தகழிம்பறவே தீவாயுருக்குமதுபோல
வெம்புந்தீமையறுமளவு நரகவழலின்வெதுப்பிடுவர்
பம்பும்பாவசேடத்தாற் பாரிற்புல்லாய்ப்புழுவாகி
நம்புசிறைப்புள்ளாய்விலங்காய்ப் பசுவாய்ப்பின்னைநரராவார் (௬௯)

யாங்களொருசாரிருந்துகண்ட திவ்வாறின்னுநமபுரத்தி
னோங்குபெருவண்மையின்றகுதி யாவராளவிட்டுரைப்பரெனத்
தாங்குமணிமேகலைமடவார் சாற்றுந்தகுதிமுழுவதுங்கேட்
டேங்கியிடிவீழரவென்ன விருந்ததாயரீதுரைத்தார். (௭௦)

அமையுமமையுங்கேட்டபரி சந்தோவந்தோவறக்கொடிதே
கமையொன்றில்லாக்காலனகர்ச் செல்லும்வழியிற்கண்டகராற்
சமையுந்துயரும்வழிச்செலவுந் தழல்வாய்நிரையத்தகுதிகளு
மெமையின்றுள்ளங்கவற்றுமென்னே யென்னேயெனவீழ்ந்தின்னு
[லுற்றார், (௭௧)

வீழ்ந்துவருந்துமவர்தம்மை விழிநீர்துடைத்துமெலிவகற்றி
யாழ்ந்ததுயரால்வருந்தனுங்கட் கடைவோமாகமதிதோறுஞ்
சூழ்ந்துபுனலிற்றோய்ந்துநின்றீர் கனவிரேவற்றொழினின்றீ
ரூழ்ந்தமலரிலவ்வினைபோ யொழியுமுண்டோவொருகுறையே. (௭௨)

வேறு.

ஈனமிலாத நற்றருமத்தி னியல்வார்க்கு
மானதவத்தி லைந்தமுனிற்கு மறிஞர்க்கு
மூனமிலாநல் வேள்விமுடிக்கு முறவோர்க்கு
நானிலமல்லால் வேறிடமுண்டோ நமரங்காள். (எங)

பற்றிவிரிஞ்சன் றன்னிலைசேரும் பழையோரு
மற்றைமுராரி வாசவன்வாழ்வில் வதிவோருங்
கற்றைகொள்வேணிக் கண்ணுதலுலகங்காண்போரு
நற்றவமிங்கே முற்றினர்கண்டீர் நமரங்காள் (எச)

இன்னிலமீதே வந்துபிறந்து மியல்பாக
மன்னியநீதி சேர்தருமத்தின் வழிநின்று
பின்னுயிர்வாழும் பேறுநினைத்துப் பெறநில்லார்
நன்னிலமீதிற் பாதகரன்றோ நமரங்காள். (எரு)

ஆதலின்முற்று நல்வழிசேரு மறனெண்ணி
மாதருமத்தி னிசரித்தே வழுவாமற்
பாதிமதித்தண் சோதிகொழிக்கும் படர்வேணி
காதனடிக்கே யன்புபடைப்பீர் நமரங்காள். (எசா)

எண்ணியதீமைக் கேண்மையர்நட்பி னியல்தீர்வீர்
புண்ணியமுற்றோர் தம்முடைநட்பே புரிகிற்பீர்
மண்ணினியற்கைக் கேய்வனசெய்தே வாழ்கிற்பீர்
நண்ணியபாவப் பீழையொறுப்பீர் நமரங்காள். (எஎ)

கேளிரும்வாழ்வுஞ் செல்வமுநாடுங் கிளர்மாலைத்
தோளுறுபொற்பு மைந்தரும்வீடுந் துணையோருங்
கோளுறுதெண்ணீ ராறெனமேகக் குழுவென்ன
நாளிடனில்லா மின்னினொழிக்கு நமரங்காள். (எஅ)

கூடியதிங்கட் சேரிருபக்கங் குறையாமற்
பீடியரோகா தசிவிரதத்தைப் பிழையாம
னேடியியற்றித் தீவினைநீங்கி நெறிவீட்டை
நாடிமுகுந்த னன்னிலைசேர்வீர் நமரங்காள். (எகூ)

பங்கமறுக்கும் பான்மையவாகப் பலமெண்ணிப்
பொங்கியதெண்ணீர் வைகறைதோறும் போய்மூழ்கிக்

கொங்குடைவாசக் கற்பகநீழற் குடியேறி
நங்குலமுற்று மூய்யவிடுப்பீர் நமரங்காள். (௮௦)

வேறு.

என்றுதாயரையினிதி னினிதமூறத்தேற்றிக்
குன்றுபோல்வளர் குவிமுலைக்கோற்றொடியவரு
துன்றுதாயருஞ் சுற்றமுந் துரிசறநோற்றுக்
கன்றுதீவினை யகன்றிடப்பற்பகல்கழித்தார். (௮௧)

மாகமாமதி மருவிநீராடினர்மகிழ்வாற்
போகமேவிய வரம்பையர்புணர்முலைதழுவி
யாகமேமுற்று மாந்தளிர்நறுமலரணிந்து
பாகசாதன னந்தனவனத்திடைபடர்வார். (௮௨)

நரகசாரமுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் ௯-க்குத் திருவிருத்தம் ௩௧௮.

பத்தாவது,

## புட்கரன்காதையுரைத்த அத்தியாயம்.

என்றுமாதவ வசிட்டனீ துரைத்தனனிருப்ப
நன்றுநன்றெனக் கேட்டனர் நரபதிதிலீபன்
வென்றதீவினை முனிவநீ விளம்பியகதையு
ளொன்றுகேட்டிட விருப்பமுண் டுரைத்தியென்றுரைத்தான். (௧)

அடுத்ததென்றிசை யந்தகனகர்வழி யளவை
யெடுத்தியோசனை யெண்பத்தாறுயிர மென்றாய்
படுத்தகன்னிய ரத்தலைப்படர்ந்துமீண் டெய்தத்
தொடுத்தநற்றின மெத்துணையென்பதுந் தூயோய் (௨)

மீண்டுமற்றவ ரெய்திடுநாண்மட்டு மேனி
யாண்டுநக்கிடா திருப்பதற்கடுத்தது மறைய
வேண்டுமென்றிவை வேந்தர்வேந்துரைத்திட விரும்பி
நீண்டசெஞ்சடை நெடுந்தவனினையன நிகழ்த்தும். (௩)

வெய்யதீயவர் யமபுரத்தெல்லையை மேவ
வையிரண்டெ னிரண்டுநாட் சென்றிடுமரசே

துய்யநன்னிலை யாளரோர்கிமிடத்திற் றொலைப்பர்
தையலாருமோர் திங்களச் சமன்பதியுறைந்தே. (ச)

விரித்தசெஞ்சடை வேதியன்றவத்தினை விரும்பி
யருத்தியோடும்வந் தந்தகனுயிரளித் திடவு
மரித்தகன்னிய ரொல்லையிலெழுந்தனர் மன்னு
தெரித்தமாதவத் தெய்திடாச்சிறப்பு மொன்றுளதோ. (ரு)

மூற்றுமாதியா முகத்திலோர்மண்டல முழுது
மிற்றநல்லுடற் பெற்றிடலழிவுறு திருக்குங்
குற்றமின்றியே பத்துநாளுகந்தொறுங் குறைய
மற்றைமூன்றிற்கு மிருக்குமா மாண்டவருடலம். (சா)

அந்தமங்கையர் மாய்ந்தது பூதலுகத்ததனு
னந்தலின்றியே யவருடன்மூப்பது நாண்மட்
டிந்தமானிலத் திருந்தனசவமவ ணிருப்ப
மூந்தும்வேதியர் கருமங்கண்முடிந்தவை மொழியில். (எ)

மாய்ந்தமாந்தர்த முடலினைமண்ணிணு லன்றி
யாய்ந்தநீதிநூல் புலையிலையென்றெடுத் தறையும்
வீய்ந்தமங்கையர் மேனியும்விரிபுன லிடையே
தோய்ந்துநற்பணி யணிந்திலா துடக்கிலையறிநீ. (அ)

இருநிலத்தினின் மாந்தருக்கியம்பிடின் மதிபு
மூரியமூன்னுகந் தன்னிலுன்மடங்குள வுறவோய்
தனையின்மற்றுள வுகந்தொறுமடங்கொன்று தணியத்
தெரிவுறுங்கலி யுகத்துக்கோர்மடங்குண்டு தெரிக்கில். (கூ)

அறைந்தவித்திர மன்றியுமாதியா முகத்தி
லுறைந்தவேதியன் புடகரனென்பவ னொருவ
னிறந்துகூற்றினை யெதிர்ந்துமானரகனை யேற்றிச்
சிறந்தநல்லுட லொல்லையிற்சேர்ந்துமீண் டுய்ந்தான். (கo)

வரிசிலைக்கரத் திராகவன் மனுநெறிவழாம
லிருநிலத்தர சியற்றிரண்டாமுகத் தெல்லைப்
புரியும்வேதியன் புதல்வன்மாண்டுய்ந்தது புகலிற்
பெரியமாதவ ருரைத்திடும்பெருங்கதை யன்றோ. (கக)

வாசுதேவனுந் தம்முனும்வருந்துவா பரத்திற்
பேசுமாமறை விஞ்சைகள்பெரிதுணர் காலை

யோசைவாரிதி யுறைந்திடுமூதலையுண் டொழிந்த
பூசுரன்றனிப் புதல்வனையழைத்தனர் புகழோய் (௧௨)

அனையரன்றியு மந்தகனிடஞ்சென்று மீண்டா
ரெனையவொன்றியா மியம்புகே மெனமுனியியம்ப
வனையும்வார்கழன் மன்னவன்மாண்டுயர்ந்தார் கதையை
வினையமுற்றிய வருந்தவவிளம்பென விளம்பும் (௧௩)

நந்தியம்பதி யுறைபவனுன்மறை யுணர்ந்தோ
னிந்துசேகரன் பூசனையனுதின மியற்றி
வந்திசெய்பவ னீதியின்வழாதவ னியமஞ்
சந்திதோறுமே தணப்பறப்புரிந்திடு தவத்தோன். (௧௪)

கோதிலாதவன் மாகமாதந்தொறுங் குருகிச்
சீதநீரிடைப்படிபவன் வெகுளியைச் செகுத்தோ
னுதனுமமே கனவினு நனவினுநவிற்றி
யோதுவாய்மையன் புட்கரனென்பவ னொருவன். (௧௫)

அங்கியின்றுறை முற்றியேயில்லறத் தமர்ந்து
தங்குகேளிருஞ் சுற்றமுந்தணப்பறப் பெருகப்
பொங்குசெல்வத்திற் புரந்தரன்பொலிவென வாழ்நாட்
டுங்கவெந்திறன் மறலிதன்றூதரை நோக்கி, (௧௬)

வல்லையேகிநீர் நந்தியம்பெருநகர் வழாகத்
தெல்லைசென்றதிற் புட்கலனென்பவன் றன்னை
யொல்லைபற்றியே கொடுவருவீரென வுரைப்பக்
கல்லெனத்திரட் குலவுத்தோட் கிங்கரர்கடிதில். (௧எ)

அன்னவூரெய்தி யுறைந்தபேரையுற வதனுன்
மன்னுபுட்கரன் றனைப்பற்றிமறலிமுன் விடலும்
பொன்னின்மாமணிப் பொலன்றவி சிழிந்தெதிர்நடந்து
முன்னரெய்திய மறைமுனிக்குவகையு மொழிந்தே. (௧அ)

கடகவண்கையா லவனதுகரங்களைப் பற்றி
யடர்பசும்பொனு ரணைமிசையவனுட னிருந்து
விடையம்யாவையும் வென்றமாதவத்து வேதியனே
யிடையினீர்வர வேத்தவஞ்செய்தன மென்று. (௧௯)

மாடுநின்றதன் றூதரைவல்லையி னோக்கி
யூடுகண்ணழ லொழுகிடவுறுத்திடா நம்மைப்

பேசொர்நந்திப் பதியினிற் பெருந்தவமறியா
மோசொல்குணப் புட்கலன்றனைத்தர மொழிந்தாம். (உ0)

அவனைப்பாதக வசடனைக்கொடுபுகா தறஞ்சே
ரிவனைக்கொண்டிவ ணடைந்தனீ ரிவனிலையுணரீர்
சிவனைப்போதுறை சிளவனைத் திருநெடுமாலா
மவனைப்போலவ ரிவன்திறம்யாவரோ யுணர்வார். (உக)

எனவுரைத்துவாய் மடித்துநீரிழைத்தது பொறுத்தே
நினைவினுக்குமுன கடிகியேநெறியலா தியற்றி
வினைசெய்புட்கலன் றனைக்கொடுவிரைவின்மீள் குதிரென்
றினையகூறிப்பின் மறைவலார்க் கிஃதெடுத்துரைத்தான். (உஉ)

அந்தணாளநீ யெம்மிடையடைந்ததற் கயலோர்
மைந்தர்நன்மனை யனைவருமவாய்திரந் தரற்றி
வெந்துயர்க்கடல் வீழ்ந்தனரவர்மெலி வகல
முந்திநீசெல வேண்டுமென்றந்தகன் மொழிந்தான். (உங)

நன்றுநன்றெனக் கேட்டமாமறையவ னவில்வான்
றென்றிசைத்தலை யடைந்தயானரகினிற் றிறனு
மொன்றுமானிட ரதனிடையுழந்திடு துயரு
மின்றுகாண்டியா னேகுவன்பணித்தரு ளெனவே. (உச)

கேட்டகூற்றுவ னதற்கிசைந்தெழுந்துகீழ் நிரைய
வீட்டமூடுசென் றெய்தினனெழுநர கெய்தி
வாட்டமுற்றிடு மன்பதைவருத்தமு மற்றுங்
காட்டினனவன் வேதியனவையெலாங் கண்டான். (உரு)

மன்னுதீவினை ரவுரவமகாரவு ரவமும்
பின்னைநாயுண்டி விச்சனம் பெரும்புழுச்சேறு
துன்னுவாளிலை யடவியேசுடுகட மதற்பின்
பன்னருந்தழற் பயானகங்கிருமி பக்கணமே. (உசா)

பாரவெண்புழு மண்டலம்படரும்மை தரணி
யீரமே சுடுசேற்றுமண் கறுமணலிழிபா
யாரவாயிநீ ருண்டியோடவிசிரு கரம்பின்
கோரரோதனங் காய்ந்தவெண் மணற்சுடுகுவியல். (உஎ)

எண்ணிலாவிவை முதலிய நரகத்தினெல்லாம்
புண்ணினீர்புழுச் சொரிந்திடக் கழுவினிற்போட்டுக்

கண்ணினூசிக ணிறுத்திடக் கதறுவாரழுவார்
வெண்ணிறத்தசை புலிகவர்ந்துணவெரு விடுவார். (உ௯)

கணங்கொள் வெண்புழுக் கலித்திடுங்காய்கருஞ்சேற்றி
லுணங்கிவீழ்மேவ யழுத்திடவுறு துயருறுவார்
நிணங்கள்சிந்திடக் கரும்பனைநெடுங்கருக் கதனாற்
சுணங்கனுண்டிடவீர்ந்திட வுயிர்முற் றுஞ் சோர்வார் (உ௬)

பாரவாய்மழுப்படையினு லெறிந்துடலைபதைக்க
வீரவாளினாலரிந்திட வுயிரிடைவார்கள்
காரநீரினைத்தீயெழக் காய்ச்சிமேற்கவிழ்ப்பச்
சோருமெல்லுடல் வெந்திடத்துடித்துடல்பதைப்பார். (௩0)

மலையினும்பரின்வைத்தவர் வலிதினில்வருந்தத்
தலைகண்மேனிக டகர்ந்திடவீழ்ந்துடறளர்வார்
நலியுங்கூதையிற்பனியினு னடுங்கிநின்றயர்வா
ரலையுந்தீவினைப்படுபவ ருயர்வெலாநோக்கா (௩க)

அளிகொணெஞ்சின னலக்கணுற்றிடுமிவர்க்கிரங்கித்
துளிகொள்கண்ணினீர் முகத்தினன்சோர்வுறுமுளத்தா
னெளியராகிநின் றிரங்குவீரித்துயருறுவீர்
களிர்கொணல்லறம் புரிந்திலீரோவெனகவின்றுன். (௩உ)

வேறு.

கல்லவனினமனை கூறுதலோடு கரகந்தோர்
சொல்லுவாந்தோ புண்ணியநெஞ்சிற் றேயாதே
பல்வகையாய பாவமியற்றிப் பழியீட்டிப்
புல்லரிதாயத்திநரகத்தே புரள்கின்றேம். (௩௩)

தன்மனையாடன் னில்லிலிருந்தே தளர்வெய்தப்
புன்மைபுரிந்தே யேதிலர்தாரம் புணர்வுற்றே
நன்மைபுரிந்தோர்க் கின்னல்விளைத்தோநாமோடாறு
தொன்மையவாய தீநாகத்தேசுழல்கின்றேம். (௩௪)

மன்றிலிருந்தே வாரமுரைத்தோம் வயிறாரக்
கொன்றுயிர்தின்றே மேனிவளர்த்தோங் கோவின்பால்
கன்றிடரெய்தமுற்றுமடர்ந்தே கவர்வுற்றே
மின்றிதுகாலந் தீநரகத்தே யிடைகின்றேம். (௩௫)

மாதவருக்குந் தாபதருக்கு மறையோர்க்கு
மேதமிழைத்தே வஞ்சனையாலே யெளியோரைப்
பீதிபடுத்தேந் தேசிகருக்கும் பிழைசெய்தே
மாதலினித்தீ வாய்நரகத்தே யழிகின்றேம். (௩௬)

தாயொடுதந்தை தன்னையிகழ்ந்தே தவறுற்றேந்
தூயவிருந்தாய் வாயிலின்வாடத் தனிதுய்த்தேங்
காயெரிவைத்தே வீடுசிதைத்தேங் கழிவுற்றேம்
பாயெரிசிந்துந் தீநரகத்தே படிகின்றேம். (௩௭)

மேலவர்தம்மை நாவிலிகழ்ந்தேம் வினையாலே
சூலியருந்தி முற்றுகருப்பந் தொலைசெய்தேங்
காலிகணீருண் போதவையோடக் கலைவித்தே
மோலிடுவாய்நா யுண்ணரகத்தே யுறைகின்றேம். (௩௮)

உற்றொருதெய்வந் தன்னைவழுத்தி யொருவாயான்
மற்றொருதெய்வந் தன்னையிகழ்ந்தே வசைசொன்னோங்
கற்றவர்நெஞ்சங் கன்றமுனிந்தேங் களியாலே
பற்றியகீடஞ் சேர்நரகத்தே படிகின்றேம். (௩௯)

ஆதுலருக்கும் பூசுரருக்கு மளியோர்க
ளீதல்விலக்கிப் பாவவசத்தா லிடர்செய்தேம்
பூதிதரித்தே யீசனையன்பாற் புகலாதே
வாதைபடுத்துந் தீநரகத்தே மருள்கின்றேம். (௪௰)

ஆனதினத்தே நல்விரதங்க ளவைவிட்டேம்
வானவுவாவின் மாதரிடத்தே மனம்வைத்தே
மீனமில்லாதே மெய்ப்பலிவேட்டார்க் கிட்டுண்ணா
ஊனபலத்தா லின்னரகத்தே யுழல்கின்றேம். (௪௧)

நன்றிபிழைத்தேங் காவலன்மாள நனிகண்டும்
பொன்றுதல்செய்யா தாரமரஞ்சிப் புறகிட்டே
மன்றியடைந்தார் தம்பொருள்வவ்வி யவைகொண்டேந்
துன்றியபாவத் தீநரகத்தே சுழல்கின்றேம். (௪௨)

அன்புறுமாக திங்களினன்னீ ராடாதே
வன்புமுயன்றே யாடினவர்க்கும் வசைசொன்னோ
நன்பகன்முற்று நாரணணாம நவிலாத
துன்பமனத்தோ டிந்நரகத்தே துவள்கின்றேம். (௪௩)

என்றவர்கூறக் கேட்டலுநெஞ்ச மிடருற்றுப்
பொன்றிகழ்மார்ப னக்தோவந்தோ பொறியற்றீர்
மன்றினடிக்கும் வள்ளல்பதத்தே மனம்வைத்தா
லன்றியுமக்கித் தீவினைநீக்கு மடைவுண்டோ. (சச)

மாமறையாளன் சொன்னமொழிக்கே மகிழ்வெய்தி
யாமினியுய்ந்தே மையநினைக்கண் டிடர்தீர்ந்தோந்
தேமொழிதன்னு லாவிகுளிர்ந்தே செயல்பெற்றேந்
தோமறுசிந்தை வேதியவென்றே துதிசெய்தார். (சரு)

வேறு.

கண்டுகாலன் கருத்திற்பொறுமையாற்
கொண்டுநின்னைக் குறித்தழுதத்தலை
யொண்டொடித்திரு வொப்பவண்மாழ்கின்ருள்
பண்டைவேதிய மீண்டுபடர்கென்ருன். (சசு)

வெய்யகூற்று விளம்பலும்வேதிய
னையவின்னிரை யத்திலழுங்குவார்
கையெடுத்துக் கலங்குதல்கண்டுமீண்
டெய்தவுங்கா லெழுந்திடுமோவெனு (சஎ)

ஆறணிந்தசடைமுடி யண்ணலைப்
பாறணிந்த மழுவாட்படையனை
நீறணிந்த நிமலனைமாதொரு
கூறணிந்த கொழுஞ்சுடர்க்குன்றினை (சஅ)

கங்கைசூடுங் கடுக்கைச்சடையனைத்
திங்கள்சூடிய தீநிறவண்ணனை
யங்கைமீதி லழலெடுத்தாடியைப்
பங்கயாசன னேத்தும்பரமனை. (சகூ)

சாமவேதனைத் தற்பரவாழ்வினைக்
காமனுகங் கருக்கியகண்ணனை
வாமமேவு மடவரறன்னெடு
மீமமேவி யிருக்குமிறைவனை. (ருo)

வேதவாய்மை விதியினிலேத்தெடுத்
தோதியுன்னடிக் கன்புடையேன்றனி

நாதனேயின் னரகிடைத் துன்னுவார்
பாதகந்தவிர்த் தேறப்பணி யென்றான். (௫௧)

என்னும்வேலையி லீசன்புகழ்வெள்ளந்
துன்னிமாநர கத்திற்றுளங்குவார்
கன்னமூலத்திற் சென்றுகலத்தனு
மின்னதீர்ந்து நிரையம்விட்டேறினார். (௫௨)

ஏறியன்னவர் யாவருநன்மொழி
கூறியேகினர் கூற்றுவனும்மகிழ்ந்
தாறுசிந்தைய னாகியறத்தியன்
மாறிலாதோய் வரந்தருவேனென (௫௩)

வாங்குநீர்சூழ் மகிதலத்துப்புக
ழோங்கநின்கிளை யோடுமுயர்ந்தென்றுந்
தீங்கெம்மாலுற லன்றிச்சிவனடிப்
பாங்கனாகிநீ பற்பகல்வாழ்தியால். (௫௪)

இந்தமாக்கதை கேட்டிடுவாரெவர்
சிந்தைகூர்ந்திடச் செப்பிடுவாரெவ
ரந்தனாள வவமிருத்தன்றியே
யுந்துநீர்சூ ழுலகிடைவாழ்வரே (௫௫)

என்றுகாலன் வரமளித்தேகென
வொன்றுமாதவப் புட்கரனெல்லையே
பொன்றுமேனியிற் போய்புகுந்தேயெழா
நின்றுமாழ்கு மவர்துயர் நீக்கியே. (௫௬)

காலகாலனைக் கண்ணொருமூன்றுடைச்
சூலபாணியைத் தொன்மறையாளனை
யாலஹாலமுண் டானைவழிபட்டு
ஞாலமேனெடு நாளிருந்தானரோ. (௫௭)

**புட்கரன் காதையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.**

ஆக அத்தியாயம் ௧௦-க்குத் திருவிருத்தம் ௬௭௫.

## பதினோராவது,

## சம்புவதையுண்ட அத்தியாயம்.

மாசறுவசிட்டனென்பான் பின்னருமன்னரேறே
யாசறவிராமன்பாரி லரசியனடத்துங்காலைப்
பூசுரன்புதல்வன்மாய்ந்து போனவனுய்ந்தானென்னப்
பேசியகாதைதன்னைப் பேசுவனென்றுசொன்னான். (க)

பொன்னுலகொக்குஞ்செல்வத் தயோத்திமாபுரியின்மேவித்
தன்னெடுந்துணைவரோடுந் தசரதராமன்பாரி
னன்னெறிநடாத்துங்காலை நான்மறையந்தணாளன்
பன்னியோடெழுந்துமாய்ந்த பாலனைக்கொண்டுவந்தான். (உ)

வந்தவன்பிணத்தைக்கோயில் வாயிலின்வைத்துமாழ்கி
யந்தமாமகவைப்புல்லி யாற்றுவானழுவான்சோர்வா
னிந்தமாநிலத்திலின்னு மிருப்பனோமகனேயென்பான்
சிந்தையாழ்துயரின்மூழ்கித் தெருமந்துசெப்பலுற்றான். (ங)

வேறு.

கண்ணேயென்கண்மணியே காதற்றிருமகனே
மண்ணேழுந்தேடிடினுங் கிட்டாதமாமணியே
புண்ணேபடுத்தியதிற் பொங்கழல்வேலூன்றியபோற்
பண்ணேர்மொழிக்குதலைப் பாலகநீயேகினையே. (ச)

என்றினியான்காண்பே னிளையோரொடுங்கூடி
முன்றிற்புறவெளிபோய் முன்போல்விளையாடி
நின்றுவருங்கோலமுநின் னீலச்சிகைமுடியுந்
துன்றுமணிச்சுட்டியுமுன் சோதிமுகச்சோபையுமே. (ரு)

என்னேவிதியே யிழைத்தவாறிஃதாமோ
தன்னேரிலாதீன்ற தாதையர்க்குத்தன்புதல்வர்
பின்னேயியற்றுங் கடனைப்பெறுதாதை
முன்னேபுதல்வர்க் கியற்றமுடித்தாயே. (சா)

சீலவொழுக்கத்திற் றீதொன்றிழைத்தறியேன்
காலகதியிற் பிழைசிறிதுங்கண்டறியேன்

ஞாலமிசையொருவர் தம்மிடத்துநாங்காணா
வாலமரணமிஃ தியார்தவறால்வந்ததுவே. (எ)

மன்னன்முறைதிறம்பின் வானமழைவழங்காப்
பின்னரிருநிலத்துச் சாவும்பிணிவளரா
மன்னமுறையேயென் றறிந்தேனிராகவனார்
தன்னரசினீதித் தவறால்விளைந்ததன்றே. (அ)

ஆதலினானீதி யியற்றாவரசன்முன
மாதினொடானா மணிக்கோயில்வாயிலிடைச்
சாதல்புரிவேன் றவறிழைத்ததாசரதி
தீதறவாழ்வோங்கி யிருக்கவெனச்செப்பினனே. (கூ)

வெஞ்சிலைக்கைக்காகுத்தன் மீதிற்பழிதூற்றித்
துஞ்சியிடுபாலகன்போற் றானுமுயிர்துறப்பான்
வஞ்சினமுஞ்சாற்றி மறையோனவணிருந்தான்
கஞ்சமலர்போலொளிருங் கண்ணனிதுகேட்டலுமே. (கo)

வேறு.

வில்லியர்திலகன்பின்னர் வெந்திறற்சிலதர்க்கூவி
யொல்லையிற்றருதிர்நீதி யமைச்சர்களோடும்வேத
வல்லவர்தமையுமென்னும் வாசகந்தலைமேற்கொண்டு
சொல்லியதூதரோடாங் கனைவருமவையிற்றொக்கார். (கக)

சுமந்திரன்முதலவாய தூய்நெறியமைச்சர்தாமு
மமர்ந்தமார்க்கண்டன்மிக்க மௌற்கலன்கார்த்தியாயன்
சமம்பெறுவாமதேவன் காசிபன்றகுசாபாலி
யிமந்தனிலுள்ளந்தூய நாரதவிருடியின்னும். (கஉ)

கோதமனோடியாருங் குழுமியாங்கிருந்தவெல்லை
மாதவமுனிவர்தம்மை வரிசிலைக்குரிசினோக்கி
வேதியன்வினையமுற்றும் விளம்பினனதனைக்கேட்டுப்
போதுறைகிழவனன்ன நாரதன்புகல்வதானான். (கங)

கொடுஞ்சிலையுழவகேட்டி குலமறையாளன்மைந்தன்
மடிந்திடுதகைமைக்கேது வகுத்தியானுரைப்பன்முன்ன
மடங்கியமுதலுகத்தி லருந்தவமியற்றல்வேள்வி
தொடங்கியமறையோர்க்காகு மற்றவர்தொடங்கிற்றீதாம். (கச)

அன்னதிற்பின்னிரண்டா முகத்தினிற்றவத்தினுக்க
மன்னவர்தமக்குமாமூன் றாமுகம்வணிகருக்குஞ்
சொன்னவத்தவமாநாலா முகத்தினிற்சொல்லுங்காலைப
பின்னவர்தமக்குமாகும் பெருந்தவமென்னப்பேசில். (௧௫)

கோத்திரம்தனுக்காகாக் கொடுந்தவமிவ்வுகத்திற்
சூத்திரனியற்றுகின்ற தீமையாற்றொலைந்தான்பாலன்
பாத்திபர்க்கரசேநீயப் பழுதினையகற்றிலின்னே
காத்திரத்துயிர்வந்தெய்தி யெழுவனிக்காளைகண்டாய். (௧௬)

எண்டிசையாளுமன்ன ரியல்பினாற்செங்கோலோச்சு
மண்டலந்தன்னிற்றத்தம் வருணத்துக்கியலாச்செய்கை
கொண்டவர்தம்மைத்தண்டங் குறித்திடாக்கொற்றவேந்தர்
விண்டதீநரகந்தன்னில் விழுவர்காண்வேந்தர்வேந்தே. (௧௭)

ஆதலானினதுதேய மனைத்தினும்புகுந்துநாடித்
தீதுளகடிந்துநீதி நிறுத்திடிற்செங்கோல்வண்மை
மேதினிபுகழுமின்று விளிந்தசேயுயிருமீளு
மாதுயருலகுக்கில்லை மனுநெறிவழுவாதென்றான் (௧௮)

வேறு.

என்றியாழ்முனி சொல்லியிருத்தலு
நன்றுநன்றென நாடியிராகவன்
றன்றுணைப்பெருந் தம்பியைக்கூவியே
நின்றுவேறொரு மாற்றநிகழ்த்துவான் (௧௯)

கழிந்தவேதியன் காளைதன்காயமற்
றழிந்திடாம லடுதயிலத்தினுற்
பொழிந்ததோணியிற் போட்டுப்புரத்தியென்
றெழுந்துபுட்பக மானத்தையெண்ணினான் (௨0)

சிந்தையெண்ணிய காலத்திற்சேணிடை
வந்துதோன்றிமுன் னெய்தியமானத்தின்
முந்திமாதவ ராசிமொழிந்திட
விந்திரன்போ லிராகவனேறினான் (௨௧)

வாங்குசாபமும் வாளிபெய்தூணியுந்
தாங்கிநல்லுடை வாளுந்தனிமருங்

கோங்கவார்த்தங் குருத்திரனென்னவே
வீங்குதோள்வள்ளன் மேற்றிசையேகினான். (உஉ)

குடதிசைத்தலைக் குற்றமின்றுதலால்
வடதிசைத்தலைக் கீட்டிசைவைப்பெலாங்
கடிதினேகினன் கைதவமின்மையா
னெடியதென்றிசை யெல்லையினேடினான். (உங)

ஆங்குநேடி யடைந்திடுகாலையி
லோங்குமாமலைப் பக்கத்தோரோடையிற்
பாங்கர்பாதம் பழுமரக்கொம்புறத்
தூங்குவானைக் கண்டானிதுசொல்லினான். (உச)

தேவருக்கு மரியசெழுந்தவம்
பாவநீங்கிடப் பற்பகலாற்றுவா
யாவனீமறை யோனெனிலக்கண
மூவர்போற்ற முழுப்பதமெய்துவாய். (உரு)

அன்றிமன்னவ னாயின்மாற்றார்தமை
வென்றுமேதினி முற்றும்விரிகுடை
யொன்றுநீழ லிடவுலகாள்வையா
னின்றபின்னிரு வர்ணத்தெவன்கொனீ. (உசா)

தப்பில்வாய்மைத் தசரதராமன்யா
னொப்பிலாதநீ யுண்மையுரைக்கெனக்
கொப்பிற்றூங்கித் தவம்புரிகொள்கையான்
செப்புகேனது கேளெனச்செப்பினான். (உஎ)

சம்புவென்பேர் சரீரத்தொடுமெழுந்
தும்பரெய்த வுறுதவஞ்செய்கின்றே
னம்பசூத்திர னென்றலுநாயகன்
செம்பொன்வாளுரு வித்தலைசிந்தினான். (உஅ)

சிலையிராமன் றருமந்திருத்திய
நிலைமையோர்ந்து நிறைமுகிலூர்தியு
மலகிலாத வமரருமாண்டெய்தித்
தொலைவிலாத மலர்மழைதூவினார். (உகூ)

நல்லைநல்ல தருமத்தைநாட்டிய
வில்வலாய்வரம் வேண்டுவகொள்கெனச்

சொல்லலோடுந் தொழுதுமழைவண்ண
னொல்லைமாண்ட மகவுயிருய்யவே. (௩௦)

வேண்டுவன்வர மென்றுவிளம்பிய
வாண்டகைக்கமு தாசனரோதுவார்
நீண்டவாளினா னீசன்றலையற
மாண்டபோது மதலையுய்ந்தானன்றே. (௩௧)

பின்னுமாசிகள் கூறிப்பெயர்தனு
மன்னிராம னயோத்தியில்வந்தெய்தி
முன்னமாய்ந்துயிர் பெற்றோன்முகத்தினை
யுன்னிநோக்கி யுவகையில்வைகினான். (௩௨)

ஆனவேதிய ராசிகள்கூறிட
ஞானமாமுனி வோர்கணன்றென்றிட
வானுமண்ணும் வளம்புகழ்ந்தோதிட
வேனைமாகதக ரெங்கணுமேத்தினார். (௩௩)

காவன்மன்னன் முறைவழிகாத்திடிற்
சாவகாலத்திற் சார்ந்திடுமோவென
நாவினாலிவ் விராகவனன்புகழ்
மூவரன்ன முனிவருமேத்தினார். (௩௪)

ஆழிசூழு மவனிநடாத்திநீ
டூழிவாழ்தி யுறவோயெனச்சொலி
வாழிமாதவ ருய்ந்தமகவொடுந்
தாழ்விலாதவர் தாங்களுமேகினார். (௩௫)

சம்புவதையுண்ட அத்தியாயமுற்றிற்று.

ஆக அத்தியாயம் ௧௧-க்குத் திருவிருத்தம் ௪௱௧௦.

---

பன்னிரண்டாவது,

## சாந்தீபினி புதல்வனுய்ந்த வத்தியாயம்.

பின்னரும்வசிட்டனென்னும் பெருந்தகையரசரேறே
மன்னியதுவாபரத்தின் மறிகடற்புறதநுமாய்ந்தான்
பன்னெடுங்காலஞ்சென்று பாலனுய்ப்பிழைத்தகாதை
தன்னையான்கூறக்கேட்டி·யென்றதுசாற்றலுற்றான். (க)

வேறு.

பொன்னுலகமொப்பவளனோடுபொலிவோங்கித்
துன்னியிசைவண்டுமுரல் சூழல்பலதுற்றிப்
பன்னுமறைநாலுமுணர் பண்டிதர்நெருங்கு
மன்னகரமேற்றிசை யவந்தியெனலாமால் (உ)

அப்பதியின்வாழ்வுபெறு மந்தணரின்மிக்கோ
ணொப்பரியநான்மறையு மங்கமிருமூன்று
மெய்ப்பொருளின்விஞ்சுகலை யெட்டிறழுமெட்டுந்
தப்பறவுணர்ந்தொழுகு சாந்திபினியென்பான். (ங)

ஆயவனுணர்ந்தகலை விஞ்சையினளப்புந்
தூயநிலைநிற்றலு மொழுக்கநெறிதோய்வும்
வாயினில்வழுத்தவரி திந்திரன்வணங்கு
மேய்பிரகற்பதியை யொக்கும்வினையத்தான். (ச)

வல்லமறைவாணனவன் வைகிவளர்நாளின்
மூல்லைவடமீனின்வளர்·முத்தநகையாள்பா
லெல்லையறுவாரிதி யெழுந்தமதியென்ன
நல்லகுலமைந்தனரு ணல்கிடவுதித்தான். (ரு)

மாசறுகுலக்குமா னைப்பெறலுமன்னோ
வாசறவளர்த்துமுனி யைந்துவயதின்மேற்
றேசுறவிளங்குபுரி நூல்விளைவுசெய்து
காசறநல்வேதவுரை கற்றிடவளித்தான். (சு)

வேறு.

ஆதியாம்வேதத்தோடு மங்கமுமுணர்ந்துவிஞ்சை
யோதியேவளருநாளி னொப்பிலாமாகதிங்கட்
போதலுந்தோழரோடப் புதல்வன்பூரணையாம்பக்கத்
தேதமில்பிரமபாத மெனுங்குடகடலிலெய்தி. (௭)

பொருந்தியாசமனமாதி புனிதமாந்தொழில்கண்முற்றித்
திருந்தியதோழரோடுந் திரைகடற்றுறையுட்சென்றே
விரிந்தநீருள்ளிறங்கி விண்டுவையுலகமேத்து
மருந்தவன்றன்னையிவ்வா றேத்தியேயாடலுற்றான். (௮)

அரியகிட்டினனேவேத வச்சுதாவடியனேனிவ்
விரிதிரைப்பிரவாகத்தின் மேவியேமாகதிங்க
ளுரியநீராடுமாற்றா லுளமகிழ்ந்தொல்லையெய்திப்
பரிவுறக்காத்துநீயே படர்கரையேற்றுவாயே. (௯)

என்னுமந்திரத்தையோதி யிரும்புனலதனிற்றாழ்ந்தான்
மன்னியதோழரெல்லா மறிகடற்கரையினேறிப்
பொன்னணிந்திலங்குமார்பிற் புதல்வனங்கெழுதல்காணார்
பின்னர்நீர்த்திரையுட்டேடிக் கண்டிலர்பெயர்ந்துபோனார். (௧௦)

வாடியவுளத்தர்கண்ணீர் வழிந்தெறிமுகத்தர்நில்லா
தோடியகாலர்நீரற் றுலர்ந்தநாவுடையமைந்தர்
மாடுறச்சென்றுசாந்தி பிணியுந்தன்மைந்தனின்று
மூடுநீரகத்திறங்கி மூழ்கினான்காணோமென்றார். (௧௧)

ஈதவரிசையாமுன்ன மிருந்தவனயலேவைகு
மாதுதன்மைந்தற்காணே மென்றவர்வலித்தமாற்றங்
காதினிற்காய்ந்தவூசி யெனச்செலக்கலங்கியேங்கிப்
பூதலத்திடையேவீழும் புலம்பிடும்பொருமியேங்கும். (௧௨)

ஆனனந்தன்னிற்கையா லறைந்திடுமரியமைந்தன்
போனநல்வழியேயானும் போவனென்றெழுந்துபொங்குங்
கானிடைக்கொடியவேடன் கடுங்கணையுருவப்பாயு
மானெனமறுகியேங்கி மடவரல்வருந்துங்காலை. (௧௩)

மறையவனுள்ளந்தேறி மாண்டதுவந்துசொன்ன
சிறுவரைமுகத்தைநோக்கித் திரைகடலிடையேமாய்ந்த
மறுவிலாவுமதுதோழ னெனதுசொல்விமறிநீர்புக்கா
னறியநீருரைத்திரென்ன வடுத்தடுத்துரைப்பதானார். (௧௪)

கேட்டலுமைந்தரெல்லாங் கிட்டினாவச்சுதாவென்
றேட்டினிலெழுதாவேத மெனத்தகுசுலோகந்தன்னை
மீட்டுமீட்டுரைத்துமைந்தன் விரிபுனலிடையிற்றாழ்ந்தான்
வாட்டமில்லாதான்மீண்டு வந்திடக்காணேமென்றார். (௧௫)

விடலையங்குரைத்தபாட றன்னையேவிரும்பிக்கேட்டு
நடலைதீருளத்தனாகி நங்கைநீவருந்தவேண்டாங்
கடலினஞ்சிறுவன்சொன்ன பாடலின்கருத்தினாலே
படலையந்துழாய்மாறனே பரிவறக்கரையினேற்றும். (௧௬)

வருந்தனீயுளத்திலென்று மடவரறன்னைத்தேற்றித்
திருந்தியமுனிவன்முன்போற் றெளிந்தினிதிருந்தானிப்பாற்
பொருந்துசீர்வசுதேவன்றன் புதல்வனாமிராமனுக்கு
மிருந்தகண்ணனுக்குஞ்செய்த வாறெலாமியம்பலுற்றாம். (௧௭)

பல்லியந்துவைப்பவேத பாரகர்தம்மைக்கூவிக்
கல்லெனத்திரண்டதிண்டோட் காளையரிருவருக்கு
நல்லியற்சடங்குமுற்றி நவையறுமுந்நூல்சாற்றிச்
சொல்லியபிரமசாரி விரதத்தைத்துலங்கச்செய்தான். (௧௮)

இளையவர்பிறந்தகாலத் திருஞ்சிறையதனின்வைகுந்
தளையுடையலங்கன்மாலை வசுதேவனுள்ளந்தன்னா
லழலறாதீம்பானல்கும் பசுவையாயிரத்திரட்டி
வளைகடலுலகில்வாழு மறையவர்க்குகதஞ்செய்தான். (௧௯)

எண்ணியபடியேகோக்க ளீரையாயிரமுமன்றே
நண்ணியமறையோர்க்கெல்லா நவையறவினிதுநல்கிப்
புண்ணியகுலத்துக்கேற்ற புரோகிதர்கற்கராலே
கண்ணனுந்தம்முன்றானு மறைமொழிகற்கச்செய்தார். (௨௦)

ஆன்றநல்விஞ்சைக்கெல்லா மாதரமாகியார்க்குஞ்
சான்றெனநின்றநம்ப ரிருவர்க்குந்தகைமைசால
வீன்றியவிஞ்சையீவர் ரிருலகிடையிலையென்றாலுந்
தோன்றியபிறப்புக்கேற்பக் கற்பபோற்றுடங்கலுற்றார்.

எண்ணரிதாயவெண்ணெண் கலைகளாவியன்றவெல்லா
மண்ணிடையொருவர்யாரே வருவிப்பாரென்னத்தேர்ந்து
கண்ணனுந்தம்முன்றானுங் காசிபர்குலத்துவந்த
புண்ணியனாசாந்தி பினியிதற்குரியன்போலும். (௨௨)

எனமனத் துணிவினெண்ணி யிருங்கடிநகரநீங்கி
நினைவினுங்கடிதுபோகி நீணகரவந்தியெய்தி
யனகசிந்தையனுஞ்சாந்தீ பினிமலரடியிற்றாழ்ந்து
வினையநெஞ்சினராய்விஞ்சை விழைவினாலடைந்தோமென்றார். ()

அடைந்தவர்நிலையுமேனி யழகையுங்குறித்துநோக்கிக்
குடைந்துவண்டுண்ணும்பைந்தார்க் குமரர்நீர்வருதிரென்று
விடம்படுவேதநான்கு மியலபெறுமங்கமாறு
மிடைந்தவேலரசர்நீதி யிருமூன்றுவில்லினாலும். (௨௪)

முதலியகலைகளாக மொழியறுபத்துநாலுஞ்
சதமகன்குருவேயனா னாடொறுந்தானொன்றொன்றாய்
விதமுறவுரைப்பவெண்ணெண் டினத்தினில்விரைவினோடு
மதலையர்தாமுங்கற்றார் மற்றவர்க்கரியதுண்டோ. (௨௫)

கலையெலாங்கடிதினீந்த காசறுதவத்தோன்றனை
மலையுலாங்குவவுத்திண்டோண் மைந்தர்கள்வணங்கியேத்தி
நிலையறவிஞ்சைதந்த நிமலனேநினக்கியாங்க
டலைமையாயளிக்கவேண்டுந் தக்கணையருளுகென்றார். (௨௬)

கூறியமொழியைக்கேட்ட குரவனிக்குமரர்தம்மைத்
தேறிடுந்தகைமைதென்றாற் றேவரோயியக்கர்தாமோ
மாறிவரொக்குநீரார் வையகத்திலையென்று
வாறியவுளத்தினான்போ யாயிழையோடுந்தேர்ந்தான். (௨௭)

குமரர்நீர்தருவதுண்டேற் குரைகடற்பிரபாதத்தி
லமரரும்வியக்குமாக மதியினீராடப்போகி
யெமதுடைச்சிறுவன்மாய்ந்தா னவனைநீரீதிரென்னச்
சமரிடைக்களிறுபோல்வார் தருதுமென்றெழுந்துபோனார். (௨௮)

ஆழியந்தடந்தேரேறி யார்கலித்தீரமெய்திப்
பாழியந்தடந்தோள்வீரர் நிற்றலுநின்றபண்டை
வாழியவருணராச னுணர்ந்துவந்தவரைவாழ்த்தி
யூழியின்முதல்வர்நீரிங் குற்றவாறுரையுமென்றான். (௨௯)

யாதவர்குமரர்கேளா வெமதுடைக்குரவன்மைந்தன்
சீதநீர்படியவந்த சிறுவனைத்திரைக்கைதன்னான்
மோதியுட்கரந்துகொண்டாய் முன்னரேதருதிரென்ன
வோதியமாற்றங்கேட்ட வுததிக்கோனுரைப்பதானான். (௩௦)

## சாந்தீபினி புதல்வனுய்ந்த வத்தியாயம்.

அடியனேனவனைமுன்னங் கரந்திலேனூழிதன்னுட்
கொடியவல்லசுரன்பஞ்ச சனன்கொலைமுதலையாகி
வடிவெடுத்துறைந்தானையா மதலையைக்கவர்ந்ததுண்டேற்
கடிதவன்றன்னைப்பற்றி யவனுழைக்கவர்திரென்றான். (௩௧)

கொலைபுரிந்துண்ணும்வாட்கைக் கொடுந்தொழிலரசனிந்த
வலைகடமசெய்யுந்தீமை யடியனாலடங்காதையா
மலைநிகருருவன்சங்க வடிவினன்வயிற்றைப்போழ்ந்து
சிலையுறைவயிரத்தோளீர் சிறுவனைக்காண்டிரென்றான். (௩௨)

அவ்வுரையியம்பலோடு மஞ்சனவெழிலிவண்ணன்
செவ்விதுசெவ்விதென்றாத் தேரினின்றிழிந்துபாய்ந்து
பவ்வநீர்முழங்கப்புக்குத் தேடினன்கண்டுபற்றி
வெவ்வியவிடங்கர்போல்வான் விலாவகடீர்ந்துபார்த்தான். (௩௩)

சங்கமொன்றகட்டிற்கண்டான் றவமுனிமகவைக்காணா
னங்கையிற்பணிலமேந்தி யலப்படையவனைக்கூடி
யிங்குநின்றென்னையென்னா வெரிமணித்தேரினேறி
மங்கினரெவருந்தொக்கு மறலியாலயத்தின்வந்தார். (௩௪)

ஏந்தியசங்கந்தன்னை யெழிலிமேனியன்வாய்வைத்துப்
பூந்தவிசுறைவானாருந் தலைபொதிரெறியவூத
நாந்தகக்கடகவண்கை நமனதுசெவியிற்கேட்டுக்
காந்தியநெஞ்சனஞ்சிக் கதுமெனவெழுந்துவந்தான். (௩௫)

அஞ்சனக்கிரியும்வெள்ளி யசலமுமென்னநின்ற
வெஞ்சிலைவீரர் தம்மை விழியிணைகுளிர்ப்பநோக்கிக்
கஞ்சநாண்மலர்பொற்செய்ய கழலிணைதொழுதுவாழ்த்தித்
தஞ்செனநின்றவீரர் வந்தவைசாற்றுகென்றான். (௩௬)

கருமுகில்வண்ணன்கேட்டுக் காலநீகடிதினீண்டெங்
குரவன்றன்புதல்வன்றன்னைக் கொணருதியென்னலோடும்
புரிகுவனஃதேயென்னப் பூங்கழற்றருமனாங்கே
விரைவினிற்குமரன்றன்னை வீரர்முன்கொணர்ந்துவிட்டான். (௩௭)

அழிவுறுயன்றுபோல வமர்ந்தநற்புதல்வன்றன்னைப்
பழியறுவீரர்தேரிற் பரிக்கினிதேற்றியொல்லை
வழியிணைநீந்திச்சாந்தீ பினிமலர்ச்சரணம்வாழ்த்திப்
பொழிபெருங்கருணைக்கண்ணார்புதல்வனைமுன்னர்விட்டார். (௩௮)

கண்டுளங்குளிர்ந்துநின்ற கலையுணர்குரவன்றன்னைப்
புண்டரீகக்கண்ணு மிராமனும்புகழ்ந்துபோற்றி
விண்டதீவினையா யின்னும்வேண்டுவகோடியென்ன
வண்டர்தேசிகனையொப்பா னகமகிழ்ந்தீதுசொன்ஞன் (௩௯)

வாரியிலிறந்துபோன மகவையெற்களித்துநின்றீர்
பாரினிற்குரவற்கேற்ப ப்பரிந்துதக்கணையளித்தா
ராருளருமையொப்பா ரளித்தவிச்சீர்த்தியெங்குஞ்
சீரிதாய்வளர்கவென்றுஞ் சேருநும்பதியினென்ருன் (௪௦)

ஆனதேசிகன்ருனல்கு மருள்விடைகொண்டுதேரிற்
கானுலாந்துளபமாலுந் தமமுனுங்கடிதினேறிப்
பானிலாவெறிக்குஞ்சோதிப பணிலம்வாய்வைத்தவோதை
வானெலாமுழங்கவூதி வளநகர்மருவிஞரால். (௪௧)

என்றெடுத்தினையவோதிவசிட்டமாமுனிவன்மீண்டும்
வென்றிவேல்வேந்தர்வேந்தே தேவர்தம்வியப்பிஞலே
பொன்றிப்பிஞவிபெற்ருரளப்பிலர்புகலவற்ருே
வின்றதின்மூன்றுகாதை யியமபினேமினிதினென்ருன் (௪௨)

அடைவினிலிரவிப்புத்தேள் வழிவரும்மரசர்தங்கண்
முடிபடச்சிவந்தபொற்ருண் முனிவநீமொழிந்தவிந்தத்
தொடைபெறுகாதைகேட்டுத் துளக்கமுற்றுளங்களித்தேன்
சடைமுடிமாசிருங்கன் சரிதத்தைச்சாற்றுகென்ருன். (௪௩)

சாந்திபினிபுதல்வனுய்ந்த அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௧௨-க்குத் திருவிருத்தம் ௪௫௩.

பதின்மூன்றாவது.

## மாச்சிருங்கன்மணஞ்செய்த அத்தியாயம்.

வாளென்னவரிநெடுங்கண் மடநல்லார்மாமதன
வேளென்னக்காதலித்து விரும்புமெழில்விறல்வேந்தே.
கேளென்னவருந்ததிதன் கேள்வனவன்கேட்டகதைக்
கோளின்னல்படாதுகொளக் கூறுவான்றுடங்கிஞன். (௧)

ஆசறுசீர்மாச்சிருங்க னரியவிஞ்சையீரேழுந்
தேசிகனைவழிபாடு செய்துணர்ந்துதக்கணையு

மாசறவேதானுதவி மற்றவனுல்விடைபெற்றுத்
தூசணியுமல்குனல்லார் வதுவைசெய்வான்றுணிந்துவந்தான். (௨)

ஈன்றதவத்தோன்மனையி னெய்திடலுமியற்குச்சன்
றோன்றலுக்குமகண்மொழிய வுசத்தியனுந்துணிந்தவற்கே.
யூன்றிமணமுடிப்பனென வுவகைமறையோர்க்குரைத்து
நான்றகுழற்சுவிர்த்தைதகையி னலம்பெறுகாப்பணிவித்தான். (௩)

வரிந்தசடைக்குச்சமுனி மகவுக்குமறைவழியே
புரிந்துகனற்றுறைமுடித்துப் புகல்சடங்குமுற்றுவித்து
விரிந்தசடைமுனிவரெல்லாம் புடைசூழவியனோனை
தெரிந்துநிறைசுவிர்த்தையெனுந் திருவைமணஞ்செய்வித்தான். (௪)

ஆங்கதனைக்காண்டலுமே யருங்கிணற்றிலிழிந்துய்ந்த
பூங்கொடியார்மூவருக்கும் பொருமைமனந்தனைவெதுப்பத்
தாங்கரியமணப்பந்தர் தனிலெய்தித்தனித்தனியே
யோங்குபெருவெகுளியொடு மாசிருங்கற்கிவையுரைத்தார். (௫)

பங்கமறுமருந்தவனே பாவையிவடனைப்போல
வெங்களையுமணம்புணர்தி யிதனைமறுத்துரைப்பாயேற்
றங்குபெருஞ்சாபமுனைச் சாற்றிடுதுமெனலோடு
மிங்கிதனுக்கேதுசெய லெனவிருந்தானிருந்தவத்தோன். (௬)

எண்ணியவனிருக்கின்ற வியல்பனைத்துமுளத்தறிந்து
புண்ணியனும்வியாதமுனி புகலுவான் புரிதவத்தோய்
கண்ணியநின்குறிப்புணர்ந்தே னல்வளையோர்காலத்திற்
பண்ணிமணமுடிப்பதறன் பகுதியதுபகர்துமெனு. (௭)

பண்டைநாண்மாந்தாதா வெனவுரைக்கும்பார்த்திபனுக்
கொண்டொடியாரைம்பதின்ம ருளரவரையொருபொழுதிற்
கண்டுசௌபரியென்பான் மணமுடித்தான்கலைமதியும்
வண்டுமுரற்றார்த்தக்கன் மடந்தையரைப்புணர்ந்ததுண்டால். ()

என்றுபராசரமுனிசே யியம்பியநன்மொழிகேட்டு
நன்றெனவேயுவந்து நங்கையர்கண்மூவரையு
மன்றுதான்பிரமமெனு மருமணத்தின்படிபுணர்ந்து
துன்றுதார்புனைவேணி மாசிருங்கத்தூயோனும். (௯)

கூடியமாதவரினிது கொண்டாடிவிடைகொடுக்க
வாடியநுண்ணுசுப்பினைய வனிதையார்நால்வரொடும்

பீடுபெறுமில்வாழ்வும் பெரிதோம்பியினிதிருந்தா
ஞடுபுகழ்நரபதியே யெனவசிட்டனவின்றிடலும். (க0)

இரவிகுலத்திகல்வேந்த னியம்பிடுவானிருந்தவத்தோய்
புரையறுமேல்வருணமொரு நாலுக்கும்புகன்றிட்ட
பெரியமணத்தியற்கைகளுஞ் சவுபரியப்பேதையணைத்
தரையின்மணம்புணர்ந்ததுவுஞ் சாற்றுகெனமுனிசாற்றும். (கக)

வேறு.

பேணியபிரமந்தெய்வ மாரீடம்பிரசாபத்தியம்
பூணுமாசுரங்காந்தர்வம் புகலிராக்கதம்பைசாசங்
காணவேயுரைத்தவெட்டுக் கடிமணமிதனுளுனு
மாணுயர்மறையோர்க்காகு மற்றவர்க்குரைக்குங்காலே. (கஉ)

மாசறுமரசருக்கும் வணிகர்க்குமுரியவாக
வாசுரமியாழோர்கூட்ட மரக்கர்தங்கடியிம்மூன்றும்
பேசுவர்பின்னர்ச்சொன்ன பைசாசப்பேரியற்கை
நீசரிலறிவொன்றின்றி நிறைந்தபாதகருக்காமால். (கங)

மணத்தினுக்குரிமைபூண்ட வரன்றனைவலியக்கூவி
யிணர்த்தொடைக்குழலினளுக் கெழின்மணிக்கலன்கள்பூட்டிக்
குணத்தொடுமணஞ்செய்வித்துக் கொடுத்தலேபிரமமென்பார்
புணர்த்தவரெழுமூவர்க்கப் பிதிர்க்களைப்புரப்பர்மாதோ. (கச)

சாற்றியவேள்வியாங்கண் சடங்கிற்குமகளைநல்க
லாற்றல்சால்தெய்வமென்ப ரந்தமாமணஞ்செய்வித்தோர்
கோற்றொடிப்புதல்வன்றன்னு லீரேழுகுலப்பிதிர்க்க
டோற்றியநரகினின்றுந் துரக்கத்திற்சேர்ப்பிப்பாரால். (கரு)

பசுவொடுகோளைவாங்கிப் பாவையைவரனுக்கீத
லிசையுமாரீடமென்ன வியம்புவரவள்பாற்றோன்றும்
வசையறுபுதல்வன்மாண்ட பிதிர்க்களிலாறுவர்க்க
மசைவில்பொன்னுலகந்தன்னி லமர்ந்திடவளிக்குமன்றே. (கசு)

மகண்மொழிந்தெய்திவந்த வரன்கையிலொன்றும்வாங்கா
தகமகிழ்ந்தணங்கனுளை யன்புறமணத்திரென்று

துகளறுமைந்தனுலே தூயவெண்குலமும்வாழும். (கஎ)

## ௬௬ மிருகசிருங்கன் மணஞ்செய்த அத்தியாயம்.

இன்னனவளித்தாலீது மெனமடவாரையீதல்
பன்னுமாசுரமதென்பர் பற்றியவேட்கையாலே
கன்னியுந்தலைவன்றானுங் காவினிற்கலந்துபின்னர்
மன்னியேமணத்தல்யாழோர் மணமெனவுரைப்பர்மாதோ. (௧௮)

நலிபவர்தம்மையெல்லா நாளமர்க்களத்தின்மாய்த்து
வலிதினிற்கொண்டுபோத லரக்கர்தம்மணமதாகும்
நிலையழிந்தவசமுற்றார் நெடுந்துயில்கொள்வார்தம்மைத்
தலைமைதீர்கைதவத்தான் மணத்தல்பைசாசமாமால். (௧௯)

மறையவர்தமக்குநாலு வருணத்துமணக்கும்போழ்திற்
பிறைநுதன்மறையோர்மாது முதற்பின்னோர்மகளிரீறாய்
முறையினிற்றருப்பையம்பு முனைபெறுதுலாக்கோல்தூசு
குறைவறப்பிடித்துநிற்பக் கொழுநன்றீச்சடங்குமுற்றும். (௨௰)

தூயதாயுரைத்தநீதிக் கடிமணந்துய்த்தானாகி
லாயுளுந்திருவுமோங்க வருமகப்பேறுமுண்டாந்
தீயதாயுரைத்தமற்றைக் கடிமணஞ்செய்தானாகில்
வீயுநற்செல்வமக்கட் பேறின்றிவிரைவின்மாயும். (௨௧)

வேறு.

இதுமணமெட்டிற்கு மியல்பென்றோதினேம்
விதுவுறழ்கவிகையாய் வினையவண்ணமே
சதுர்மறைச்சவுபரிச் சரிதைகேளென
முதுமொழித்தேசிகன் மொழிவதாயினான். (௨௨)

காம்பிலிநகரினன் கலையின்வாரிதி
யேம்பலுற்றுயிர்தொறு மிரங்குமுள்ளத்தன்
போம்பணிவிடையங்கள் புறத்திலாதவ
னோம்பியதவத்தினின் றுலர்ந்தமேனியான். (௨௩)

சாந்திராயணம்பல சரித்ததூயவ
னோர்ந்துமாதவத்துப வாசமுற்றுளோ
னீந்துநீர்சருகிவை நெடிதருந்திப்பின்
பாந்தள்போற்கானுகர்ந் தியோகம்பண்ணுவோன். (௨௪)

நெடுந்தகைச்சவுபரி யென்னுநேரிலான்
கொடுந்தவமியற்றுவான் குலவுமோடையு

ளடங்குநீர்மூழ்கியே யாண்டுபன்னிரண்
டொடுங்கினனெழாதவ னுறைதன்மேயினான் (௨௫)

அன்னவன்றவம்புரி யமலவாவியின்
மன்னுமோர்சமவத மென்னும்வாளைமீன்
றுன்னியதேளிருந் துணையுமக்களுந்
தன்னையேசூழ்தரச் சரித்துவாழுமால். (௨௬)

வரியுடைநெடியமீன் மனையுஞ்சுற்றமும்
பிரிவறவாழ்தலைக் கண்டுபேதுறு
விரிசடைமுனிவரன் விழைந்தில்வாழ்க்கையே
புரிவதுநலனெனாப் புனல்விட்டேறினான். (௨௭)

ஏறியமாதவ னியல்பினான்மணப்
பேறியாமெய்திடப் பெண்ணெங்குண்டெனா
வாறியசிந்தைய னங்குநின்றெழா
மாறிலாவயோத்திமா நகரின்மன்னினான். (௨௮)

வேறு.

மனுகுலத்திற்றோன்றியவேன் மாந்தாதா
வெனவுரைக்கு மன்னன்றன்பால்
புனிதமுனியெய்துதலும் விதிமுறையி
னெழுந்திறைஞ்சிப் பூசையாற்றி
வினையமுறுமாதவநீ யிவணணைந்த
பரிசெடுத்து விளம்புகென்னப்
பனிமதியினுயர்கவிகை வேந்தேகே
ளெனமுனிவன் பகர்வதானான். (௨௯)

செங்கதிரோன்றிருக்குலத்திற் றோர்வேந்தே
யார்வேட்டுச் சென்றவெல்லா
மிங்கிலையென்னாதளிப்பாய் மனுகுலத்தை
விளக்கவரு மிசையார்வேந்தே
மங்கையரைம்பதின்மருளர் மன்னுநின்
வயினுதித்து வளர்வோர்தம்மிற்
பங்கமறயான்மணக்க வொருதெரிவை
தருதிநெடும் பரிதிவேலோய். (௩0)

என்றமுனியெழில்வடிவி னிழிவுகண்டு
மனத்திகழ்ந்தே யீயோமாகிற்

பொன்றுவதாய்ச்சாபமின்று புகல்வனென்று
  மனத்தெண்ணிப் புனிதனேகேள்
மன்றன்மணிமுடியரச ரீன்றெடுத்த
  வனிதையர்தாம் வரித்தோனுக்கே
யன்றுமணவினைமுடிப்பா ரலதன்றித்
  தாதையரா லாவதுண்டோ. (௩௧)

மாதவனேநினக்கவாகண் மாலையிடப்
  பொருந்தினரை வழங்குவேனென்
றோதுதலுமுனிவனுவந் தப்பரிசே
  யமையுமென வுழையுநின்ற
மூதுணர்வின்முதுமகனுங் காஞ்சுகியை
  நீயிந்தமுனிவற் கொண்டு
பேதையர்பாற்சென்றிவனைக் காட்டியிவ
  னுரைத்ததனைப் பேசுகென்றான். (௩௨)

காவலவனுரைகேட்டுக் காஞ்சுகிமா
  தவர்கொடுபோங் காலைதன்னின்
மேவுமிடைநெறியதனில் வேதமுனி
  பொல்லாத வேடநீக்கி
யேவலராகியமதனுங் காமிக்கு
  மெழில்வடிவ மெடுத்தேயந்த
பாவையர்தம்முன்னடந்தான் காஞ்சுகியுந்
  தாதையுரைப் பரிசுசொன்னான் (௩௩)

வந்தமுனிதிருவழகை வரிவிழியாற்
  பருகுவார் போலவாகிக்
கந்தமலர்க்குழைபிடியாக் காமனிவ
  னெனவிரகக் கவலைமீதூர்ந்
தெந்தையுரைப்படிதவறு திவனைமணம்
  புணர்வமென வெல்லோர்தாமுஞ்
சிந்தைவிருப்புடனெழுந்து தனித்தனியே
  காஞ்சுகிமுன் செப்பினரால். (௩௪)

ஆங்கதுகேட்டியல்வேந்த னிவன்வடிவுஞ்
  செயலையுங்கண் டதிசயித்துப்
பூங்குழலார்வரையு மோர்பொழுதின்
  மணம்புணர்த்திப் போதியென்னத்

தாங்கரியவுவகையொடு மின்னனையார்
தமைக்கொடுபோய்ப் பன்னசாலை
தீங்கறவேதானெய்தித் தெய்வதச்
சனைநினைந்தா னவனுஞ்சேர்ந்தான். (௩௫)

சேர்ந்தவனைமுகநோக்கித் தெரிவையனாம்
பதின்மருக்குஞ் சிறந்தவில்ல
மோர்ந்திவணீசமைத்தியென வுரைத்திடலு
மகமகிழ்வா னும்பர்தச்ச
னேர்ந்துபசும்பொன்னானு நவமணியி
னிரையானு நிமிடந்தன்னி
லார்ந்தநெடுமாளிகையு மரமியமுஞ்
சாலைகளு மடைவிற்செய்தான். (௩௬)

செம்பொனெடுங்கோபுரமு முத்தணிந்த
முழுமுகப்புஞ் சிறக்கும்வண்ண
மைம்பதுமாமனைவியர்க்குந் தனித்தனியே
யில்லிடங்க ளமைத்தபின்ன
ர்ம்புநெடுங்கொடியிடையு மாளிகையிற்
குடிபுகுந்த பரமயோகி
யும்பர்தருவெனத்தவத்தா லில்லறத்துக்
குரியவெலா முதவினானே (௩௭)

இனியபாற்பசுநிரைக ளேவன்மட
வாரேவற் கியைந்தமாந்தர்
நனியுயர்தானியத்தொகுதி நவமணிநன்
கலன்வெறுக்கை நானஞ்சாந்தம்
பனிமதிபொற்றாய்பசும்பொன் பட்டாடை
பரியங்க மனைகண்மற்றுந்
தனித்தனியோர்மனைகடொறு மளப்பிலா
மிகுவளனுந் தந்துவாழ்ந்தான். (௩௮)

ஓங்குதவமாமுனியு மொளிமுடிவேந்
தளித்திடுமொண் டொடியார்தாமும்
வீங்குகடற்சூழுலகில் விண்ணவர்தம்
பெரும்போகம் விரும்பித்துய்த்துப்
பாங்குபெறுமுவகையொடு மில்லறத்தி
னருந்தருமம் பரிக்குநாளில்

வாங்குசிலைக்கைக்குரிசின் மாந்தாதா
மகவாசை மனத்திற்கொண்டான். (௩௯)

கானுறையுந்தவமுனிக்குக் கன்னியரைம்
பதின்மரையுங் கணத்தினீந்தேன்
மானிடர்சென்றறியாத வனத்திலவன்
கொடுபோன மடவார்வாழ்தல்
யானறியவேண்டுமெனக் கடிதெழுந்து
விரைவினுட னருங்கானீந்தி
ஞானமுனிசவுபரிதன் னாச்சிரமந்
தனைக்கடிதி னண்ணினனே. (௪௦)

முகிலுரிஞ்சிக்கொடியாடு கோபுரமு
மணிமுகப்பு முத்தமாலை
யகிலமெலாநிலவெறிக்க வழகெறிக்கு
மரமியமு மமரர்நாட்டும்
புகலரியமண்ணிடத்து நாகருறை
யுலகத்தும் பொற்புநேரா
மிகுவளனாயினவனைத்துங் கண்டுமிக
வதிசயித்து வியந்துபுக்கான். (௪௧)

புக்கவனோர்மனையிடத்திற் சென்றிடலுந்
தாதைவரல் புரிந்துநோக்கி
யக்கணமேசென்றிறைஞ்சி யகமகிழுந்
தன்மகளை யரசனோக்கிச்
செக்கமலத்திருவனையாய் கணவனொடு
மிந்நெடுநாட் டிங்கொன்றின்றி
யொக்கவுடன்வைகினையோ கேள்வெறுப்பா
லெங்களையு முன்னினையோ. (௪௨)

இயம்புவாயெனத்தாதை வினவுதலு
மகமகிழ்வா லேழைசொல்வா
ணயம்பெறுநல்லுண்டியினி னவமணிப்பூண்
கலன்வகையி னறையாரத்திற்
பயம்பெறுநற்பசுநிரையிற் சிலதர்சில
தியர்தொகையிற் பசும்பொற்றாசில்
வயங்குமிருந்திகழவையி லுலவாழ்கை
தனிற்குறையாவாழ்வு பெற்றேன். (௪௩)

ஆறுனுமனத்திலொரு குறையுடைய
ளடியனே னஃதேதென்னில்
வாறுடர்தருவனைய முனிபிரியா
தென்மனையில் வாழ்தலாலே
பூநாறுங்கருங்குழலெந் துணைவியர்தந்
துணைபுணராப் புணர்ப்பின்வைக
ருறுகுங்குறையலது வேறுகுறை
யில்லேனின் றனையையென்றாள். (சச)

அந்தவுரைகேட்டிறைவ னயன்மனையி
லுறையுமகளருகுசாரத்
தந்தைவரவினைக்கண்டு தாடொழுதா
டனைக்குறையே தென்னச்சாற்ற
முந்தவடிதொழுதமக ளுரைத்தபடி
யவடானு மொழியக்கேட்டா
னிந்தவண்ணமிறைவினவப் புதல்வியர்மற்
றெல்லோரு மிவையேசொன்னார். (சரு)

ஈன்றமடவாரெல்லா மிவ்வுரையே
புகலக்கேட் டிகல்வேன்மன்னன்
றோன்றியபேருவகையினுற் றாயமுனி
தனைநாவிற் றொலையாதேத்தி
யான்றபேரன்பினொடு மயோத்திநகர்
தனிலடைந்தா னரிவைமாரு
மூன்றுமகவோரொருவர் முனியருளா
லீன்றுசெல்வ முழுதுந்துய்த்தார். (சசா)

பெற்றெடுத்தமகவுக்கு மகவுண்டாய்
வழிவழியும் பெரிதுண்டாகிச்
சுற்றமிகவாடுவு மகடுவு
மாய்மிகவுந் துவன்றிச்சூழ
நற்றவனக்கேளிரொடு மாகமதி
நீர்மூழ்கி நலத்தின்வைகிக்
குற்றமறநெடுங்கால மில்லறத்தின்
பெருவாழ்வு கூடிவாழ்ந்தான். (சஎ)

இத்தனையோர்தவப்பெருமை யிந்தமுனிக்
கெதிர்ந்தவா றென்னுவெஞ்னி

லத்தலையோர்மடுப்புனலுட் பன்னீராண்
டளவையெழா தாழ்ந்துமூழ்கி
மெய்த்தவஞ்செய்திடுகாலை யீராறு
மாகமதி விரிநீர்மூழ்குஞ்
சுத்தமுறுதவப்பயன்கா ணெனவசிட்ட
முனியெடுத்துச் சொல்லினானே. (சஅ)

**மிருகசிருங்கன் மணஞ்செய்த அத்தியாயம் முற்றிற்று.**

ஆக அத்தியாயம் கசு-க்குத் திருவிருத்தம் ரு0க.

பதினான்காவது,

## மிருகசிருங்கன் இல்வாழ்க்கையுரைத்த அத்தியாயம்.

பேரியற்கைமுனியுரைத்த கதைகேட்டு
மனமுவகை பெரிதுகூர்ந்து
தாரியற்கைமணிமவுலித் தனிவேந்தன்
முனிவரநீ முன்னஞ்சாற்று
நாரியர்க்குள்வடமீனிற் கற்புடைய
நால்வரொடு நவைதீர்வேதச்
சீரியற்கைமாசிருங்க னில்லறத்தின்
வாழ்ந்ததினிச் செப்புகென்றான். (க)

வேந்தனிது வினாவுதலும் வேதமுனி
வினாவினுக்கு விடையுஞ்சொல்வான்
மாந்தரினில்லறநெறியே யொழுகிடுவார்
மண்ணுலகும் விண்ணும்போற்றச்
சேந்தவிகபரமிரண்டி லீரிடத்தும்
வழுவாது சிறக்கத்துய்ப்பார்
பாந்தண்முடிப்பாரில்வரு மானிடருக்
கில்லறம்போற் பலிப்பதுண்டோ. (உ)

ஆதலினால்விடிவதன்முன் னாறுகன்ன
லெனத்துயிறீர்ந் தடைவிற்றங்க
ளாதனையேமனத்தெண்ணித் தருமமொடு
பொருணினைத்து நலிவுநீங்கி

யேதமறுநிருதிதிசை தனிலொருசா
 ரேய்வீதி யெல்லையேகிக்
காதுதனிற்பூணூலிட் டுத்தரிகந்
 தனைத்தலையிற் கட்டிமாதோ. (ரு)

வடதிசையைநோக்கியிருந் தொருதிரண
 நிலத்தினிட்டு வாய்மைகூறு
துடனுமிழ்தல்காறுதலோ டொழிந்துமல
 சலங்கழித்தங் கொல்லைநீங்கி
யிடதுகையாலெச்சில்பிடித் தியல்புறுமண்
 ணள்ளியெடுத் திருநீராறறிற்
தடமதனினீரையொரு பாத்திரத்தின்
 மொண்டகன்று சவுசஞ்செய்ய. (௬)

அல்லதுபாத்திரமிலதே னீர்க்கரையி
 னொருமுளத்துக் கப்பால்வைகிப்
புல்லுசவுசக்கழிநீர் பெருநீரிற்
 கூடாத புலத்தைப்பார்த்தே
யெல்லையினிலிருந்தெட்டிச் சவுசஞ்செய்
 திலிங்கத்துக் கொருக்கான்மண்ணுஞ்
சொல்லுகுதத்திற்கைங்கான் மண்ணுமிட்டே
 யிடதுகைக்குத் தொகைபத்தாமே. (௭)

கையிரண்டுமுறக்கூட்டி யேழுமுறை
 மண்ணிட்டுக் கழுவிப்பின்னர்
துய்யதிருக்காறனக்கு மைந்துமுறை
 களிஞன்மண் டொட்டுத்தேய்த்து
மெய்யின்முனஞ்சொன்னவிட மொருமுறை
 மண்ணால்விளக்கி விளங்குநீரைப்
பையவிதியாலுமிழ்ந்தே யாசமன
 மூன்றுமுறை பண்ணிப்பின்னர். (௮)

வார்ந்தொழுகுதெண்ணீரைப் புறமெடுத்து
 முகங்கழுவி வைமுள்ளேனுஞ்
சேர்ந்தொழுகுபாலேனு முள்ளமரத்
 தருகுசென்று செல்வமாயுட்
கூர்ந்தமதிபுகழ்காந்தி குலப்புதல்வர்
 வலியனைத்துங் கொடுப்பாயென்ன

நேர்ந்தசிறுவிரற்பருமை யீராறங்
குலக்கம்பு நெரித்துமாதோ. (எ)

பல்விளக்கமதிற்காகா நாளெய்திற்
பல்காளீ ருமிழ்ந்துசுத்த
நல்விதத்திலியற்றியபி னுசமன
விதிமுடித்து நதியுளெய்திச்
சொல்லியசங்கற்பத்தின் முறைமூழ்கிச்
சுரரிருடி பிதிர்க்கடம்மை
வல்லமுறைதருப்பித்துக் கரையேறி
மாசில்கலை யிரண்டுசுற்றி. (அ)

உத்தரிகமொன்றணிந்து பின்னருஞ்சுத்
தாசமன முதவித்தங்கள்
பத்திபெறுகுலாசாரப் படிபூதி
கோபியொன்றைப் பாலந்தீட்டிச்
சுத்தமுறுமருக்கியத்தோ டியன்றசந்திக்
கடனனைத்துந் துலங்குவான்மீ
னத்தமனமாவதன்முன் கடிதியற்றி
யருக்கனெழு மளவுமாதோ. (கூ)

நலம்பெறுகாயத்திரியை நனிசெபித்து
வானிரவி நணுகுங்காலைப்
பலன்பெறவேயுபதானம் பண்ணியபி
னுதனமும் பரிந்துசெய்து
வலம்புரியுமோமமுடித் தாங்கியனற்
றனமது வழங்கியங்ஙன்
றலம்புகழ்காலத்திலொரு கூறுதள்ளி
யிருகூற்றின் மறையுஞ்சாற்றி. (க0)

புற்றருப்பைசமிதையிவை போய்க்கொணர்ந்து
முக்கூற்றில் வருத்தமின்றிச்
சொற்றநெறிதனிலெய்தும் பொருளீட்டி
யதன்பின்சொன் னலாங்கூற்றி
லுற்றபுனலாடியுச்சிக் கடன்கழித்துப்
பிரம்வெச்ச முவந்துசெய்த

பிற்றையினிற்றேவருக்கு மிருடியர்க்கும்
பிதிர்க்களுக்கும் பெருநீர்நல்கி. (கக)

சீரியதன்மனையெய்தி யாதித்தன்
கவுரிமால் திறலார்வேழப்
போர்முகத்துவிநாயகன்பி னுருத்திரனோ
டைவரையும் பொறையினாற்றி
நேருடனேபஞ்சவெச்சஞ் சுவானபலி
காகபலி நெடியபூத
மாரவுதவிடுபலியோ டனைத்துள்ள
பூதபலி யடங்கச்செய்தே. (கஉ)

புறக்கடையின்வந்தெய்தி யதிதியர்தம்
வரவதனைப் புகுந்துநேடி
யறத்தினர்வந்தாலவர்க்குத் தேவரைப்போற்
பெரும்பூசை யளித்துப்பின்னர்
சிறப்புடனேபுனிதவிடத் தானதொரு
பொற்கலத்தைத் திருந்தவைத்தே
யுறப்பரிவாற்கீழ்திசையே நோக்கியிருந்
துரையொன்று முரையானாகி. (கங)

ஈன்றவர்கள்குரவரொடு முதியோர்க
ளிளஞ்சிறார் விருந்தரென்று
மான்றமுதுநோயாளர் கருப்பமுறு
மடவார்க ளாதியானோர்
தோன்றிடமுன்றுய்ப்பித்துப் பஞ்சபலி
பிராணாதி சொன்னவைந்து
மூனறியவாகுதிமுதலா யுரைத்தவிதி
யத்தனையு மோர்ந்துசெய்தே. (கச)

முந்துபழஞ்சோறுதி விழுப்பமிலா
வத்துணையு முழுதுநீத்துச்
சிந்துநறுநெய்வெண்சோ றட்டகறி
யித்துணையுந் தெறுவிதன்னாற்
றந்திடவேயினியகறி முதலருந்திப்
புளிப்பெரிப்போ டுப்புச்சார

## மிருகசிருங்கன் இல்வாழ்க்கையுரைத்த அத்தியாயம்.

வெந்தகறிநடுவருந்தி யந்தியத்திற்
பாறதிமோர் விளம்பத்துய்த்தே. (கரு)

குண்டிகைக்கைப்பகவருக்குக் குக்குடவண்
டத்தளவாய்க் கொள்ளுஞ்சோற்றுப்
பிண்டமிருநாலாகு முயர்வானப்
பிரத்தருக்கவ் விரட்டிபேசி
னெண்டிசையும்புகழ்ந்திடுமில் லறத்தினருக்
கெண்ணான்கென் றியம்பலாகுந்
தண்டுறுகைத்தலப்பிரம சாரிக்கு
வயிறுகொள்ளு மளவுந்தானும். (கசு)

ஓதியவிப்படியருந்தி யுத்தரா
போசனமு முதவிப்பின்னர்
கோதறவேமண்டொட்டுக் கையொடுவாய்
கால்கழுவிக் குற்றநீங்கி
நீதியிற்சுத்தாசமனம் பிராணாயா
மஞ்செய்து நிலத்தின்வைகி
னாதனையுண்ணினைந்துகையா னுபிதலந்
தொட்டுநல்லா சமனஞ்செய்து. (கஎ)

தாம்பூலம்பெரிதருந்தித் தற்பரத்தைச்
சிந்தித்துத் தகைமையோடு
மாம்பொருள்சேர் நூல்பார்த்தே யறுகூறு
மெழுகூறு மடைவினீக்கி
யோம்புறுதன்மனைவாழ்க்கைக் குறுங்கருமத்
திடைபோயெண் கூறும்போக்கி
வாம்பரித்தேர்க்கதிர்க்கடவு ளத்தமன
வரையடையு மளவுமாதோ. (கஅ)

தெண்ணீரிற்கால்கழுவிப் புனிதனாய்
மாலையிற்செய் கடனுந்தீர்ந்தே
யுண்ணீர்மையாகச்சா வித்திரியை
யுடுத்தோன்று மளவுமோதிப்
பண்ணியதோருபதான மோருமபி
வாதனங்கள் பரிந்துசெய்து

புண்ணியவேள்விச்சாலை புகுந்தவளர்
தீத்தொழிலும் பொருந்தச்செய்தே. (கக)

விருந்தினொடுமிரவருந்தி யாசமனத்
தொழின்முடித்து மெல்லிதாகப்
பொருந்தியபஞ்சணையேறிக் குறுமுனிமான்
முசுகுந்தன பொருவிலாத
வருந்தவத்துநற்கபில ஞாதித்த
னிவரையெண்ணி வயினதேயன்
றிருந்தியமந்திரஞ்செபித்துச் சிவனடித்
தாமரையிணைமேற் சிந்தைசெய்தே. (உ0)

நிறைகும்பத்தீபமிவை வழுவாமற்
றலைமாட்டி னெறியின்வைத்து
முறையொன்றுமொழிந்தபடி கீட்டிசையிற்
றலையாக முல்லைமூரற்
கறைவென்றவேனெடுங்கட் கலாமதிபோற்
றிருவதனக் கலவைகொங்கைப
பொறைகொண்டநுண்மருங்குற் பூவையொடுந்
துயில்வதுவே புலமைத்தாமால். (உக)

தன்மனையிற்றுயில்கொள்ளிற் கீட்டிசையிற்
றலைவைக்கத் தாழாநேய
மன்னியமாமன்மனையிற் றென்றிசையிற்
றலைவைக்க வதிந்தவூர்விட்
டன்னியமாம்பதியடையின் மேற்றிசையிற்
றலைவைக்க வவையேயன்றிப்
பின்னர்வடக்கொருக்காலுந் தலைவைக்க
வாகாதாம் பேசுங்காலே. (உஉ)

சொல்லுமுவாவிரண்டினும்பின் சொல்லாத
நாட்களினுந் தோகைமாதைப்
புல்லியிடுமுறையொழிந்து நல்லதின
நல்லோரை புகுதல்பார்த்து
வல்லணையமுலைசேர்தன் மரபாகு
முன்னொடுபின் னியாமமாற்றி

யல்லினிடையைமூன்று நாழிகையுந்
துயில்புரித லழகிற்றம்மா. (உங)

இந்தவண்ணநீதியினி லொருசிறிதுந்
தவறுமல வியற்றினோர்கள்
கந்தமலர்நான்முகத்தோன் பேரவையி
னெய்திநெடுங் காலம்வாழ்வர்
சந்ததமுமாசிருங்க ளிவ்வண்ணந்
தவறுமற் பரிக்கமற்றைப்
பைந்தொடியார்நால்வருந்தங் கற்புநிலை
நின்றபடி பகர்தல்செய்வாம். (உச)

**மிருகசிருங்கன் இல்வாழ்க்கையுரைத்த அத்தியாய முற்றிற்று.**

**ஆ அத்தியாயம் கச-க்குத் திருவிருத்தம் ருஉரு.**

பதினைந்தாவது,

## கற்புநெறியுரைத்த அத்தியாயம்.

அன்னவூர்தியு மாழியஞ்செல்வனுங்
கன்னலூறுசொற் காரிகைபாகனு
மென்னுமூவர் முதலவெத்தேவுந்த
மன்னுகாதல ரென்பர்மடந்தைமார். (க)

பித்தனாயினும் பேதையனாயினு
மத்தனாயினு மாண்பிலனாயினு
முத்தமத்திரு வொப்பவர்கேள்வர்தம்
பத்தியோடவ ரேவற்படிகிற்பார். (உ)

பிணியனாயினும் பெற்றியைநீக்குறுந்
தணியன்மாந்து தகைமையனாயினு
மணியிலாதவ னாயினுமன்பர்தம்
பணிவிடைத்தலை நிற்பர்நற்பாவைமார். (ங)

அழகுமின்றி யறமிகுமூப்புமு
கிழவனாயவன் கிட்டியகுட்டநோய்
பழவினைப்படி யெய்தினும்பாவைமார்
மழவனென்ன மகிழ்நரையெண்ணுவார். (ச)

ஒன்றுகேள்வ ருளத்தின்மகிழ்ந்தொன்றை
நன்றிதென்றிடிற் றாமுநன்றென்பரா
லன்றுதீமையென் றாலதுதீமையே
யென்றுகூறுவ ரேத்தருங்கற்பினார். (௫)

ஊமன்பங்கு செவிடனுறுப்பிலி
வாமனன்குரு டன்னெனவைகினுந்
தாமவார்குழற் றையனல்லார்தனிக்
காமனென்னக் கணவரைப்பேணுவார். (௬)

ஏதிலானோ ரிளையவனின்புற
வோதினாலு முறுபொருளீயினும்
பீதிசெய்யினும் வன்பிற்பிடிக்கினுங்
காதல்செய்திடார் கற்புடைமாதரே. (௭)

ஆனகேள்வ னடாததுரைப்பினுந்
தானெழுந்துட றாக்கிப்புடைப்பினு
மூனமேபடத் தாள்கொடுதைப்பினு
மோனமாகுவர் முல்லைமடந்தைமார். (௮)

தன்கரத்திற் றலைவனளித்திடு
பொன்கரத்தல் பிறரைப்புகழ்ந்திடல்
வன்கரத்திற் சினுகிட்டுவாய்விடல்
மின்கரக்கு மிடையார்விரும்பிடார். (௯)

மண்ணினும்பெரு வானவரென்றும்வாழ்
விண்ணினுநிக ரில்லாவிடலைதா
னண்ணினுமவ னாயெனவெண்ணியே
கண்ணினோக்கார் கணவனையேத்துவார். (௧௦)

கொண்டகேள்வன் குறிப்பறிந்தேநுக
ருண்டிபேணி யுவப்பனவூட்டுவார்
கண்டுகேட்பினுங் காதலன்மேற்றவ
றுண்டுதானென் றுரையார்மடந்தைமார். (௧௧)

அன்பர்நெஞ்ச மனுரொடுமின்னலாய்த்
துன்பமுற்றிடிற் றாமுந்துளங்குவா
ரின்பமன்னவ ரெய்திடிலப்பொழு
தின்பமெய்துவ ரேத்தருங்கற்பினார். (௧௨)

ஊறுகேள்வ ருறுசுவையாறொடுஞ்
சோறுதுய்க்குமுன் றுமொன்றுந்துய்த்திடார்
வேறோரில்லில் விழவிற்றனிச்செலார்
நாறுபூங்குழ லாரியரென்பவே. (கங)

காந்தனுக்குமுன் கண்டுயில்கொண்டிடா
ரேந்தலுக்குப்பின் னின்றுயிலேற்றெழார்
சார்ந்துவேறோர் சயனத்திற்றங்கிடார்
பூந்தண்வார்குழற் பூவையரென்பவே. (கச)

தங்குகேள்வனை யீன்றெடுத்தார்தமைப்
பங்கமற்ற பகவனையோகனைத்
துங்கநீதிக் குரவனைத்தொன்முறை
மங்கைமாதர் வழிபட்டுவாழ்வரால். (கரு)

தோய்ந்தகேள்வனோர் தோகையைச்சேர்ந்திடிற்
காய்ந்துமற்றவ ளோடிகல்காட்டிடா
தேய்ந்துநட்புற் றிணங்கியிருப்பரால்
வேய்ந்தபூங்குழன்மெல்லியலார்களே. (கசு)

சேயகால மகன்றிடுசீரியோன்
போயதேயத்திற் றீங்குபுகாவண
மேயநல்வரம் வேண்டுமென்றெண்ணியே
தூயதேவைத் தொழுவர்கணங்கைமார். (கஎ)

கொழுநன்மாண்டிடிற் கோதையர்செந்தழற்
றெழுதுமூழ்கித் துணைவனரகிடைத்
தழுவினன்னெனி னுந்தடக்கைபிடித்
தெழுதியென்னத் துரக்கத்தினேற்றுவார். (கஅ)

கணவன்வேற்றூர் கலந்திடுகாலையிற்
பணைமுலைக்குக் கலவைபரிந்திடார்
மணமலிந்த மலர்க்குழல்வைத்திடார்
துணைநெடுங்கணுக் கஞ்சனந்தொட்டிடார். (கக)

காயமல்கக் கவினனிதாங்கிடார்
தூயபாக்கொடு வெள்ளிலைதுய்த்திடார்
மேயநுண்டுகில் வெள்ளைபுனைந்திடார்
தேயுநுண்மருங் குற்றிருமாதரே. (உ௦)

## வேறு.

பூத்திடுமுதனுடன்னிற் புலைச்சிபோன்மகளிர்நீங்கக்
காத்திடுமற்றைநாளிற் கலைமறையாளரான்றோர்
நீத்திடுமளவுமேக நிறைந்திடுமூன்றுநாளிற்
பார்த்ததிற்பாதிநீங்க நாலினீர்ப்படிவதாக. (உக)

தூய்மையற்றிடுநாண்மூன்றுஞ் சூதாடல்புனலின்மூழ்கல்
தீமைபெற்றெழுதலெண்ணை தேய்த்திடல்பல்விளக்கல்
வாய்மைசொற்றிடநகைத்த லோடன்மண்ணகழ்தன்மற்று
மாய்மனத்தானுந்தேவை யரிச்சித்தனினைத்தல்பின்னும். (உஉ)

சூதகமுற்றுடன்னைத் தொட்டுடனிருத்தல்பேசல்
பாதையினடத்தன்மற்றோர் பதியிடைத்திருநாட்காண்டல்
சீதமென்கலவைபூச றிவாவினிற்றுயிறன்முற்று
மாதருக்கடாததென்ன மனுமுதலனைத்துமோதும் (உங)

மருவியநாலாநாளில் வயங்குநீரதனின்மூழ்கி
யிரவியைநோக்கிப்பஞ்ச கௌவியமினிதுதுய்த்துத்
திருமனைபுனிதமாக்கிச் சென்றதிற்புகுந்துவேண்டும்
விரைநறுங்கலவைபூசிக் காதலன்விரும்பவைகல். (உச)

நயந்துடன்கருப்பமுற்றாற் றீயவர்நட்புத்தீர்ந்து
பயங்கொளும்வேடந்தன்னைப் பார்த்திடாதொழிந்துபல்கா
லயர்ந்திடவஞ்சஞ்செய்வார் சூழ்ச்சியையறிந்தகற்றி
வயங்கியகுளவிமேன்மேல் வளர்ந்திடுவண்ணஞ்செய்தல். (உரு)

இப்படியுரைத்தகற்பி னியல்பினோடொழுகியென்று
மப்படிவாழவல்ல வணங்கனார்கணவரோடு
மெய்ப்படியிடத்தோரேத்து புகழினார்விளங்கிப்பின்னர்
பொய்ப்படிவத்தினீங்கிப் பொன்னுலகடைந்துவாழ்வார். (உசு)

வேறெடுத்தோதத்தக்க விரதமாநதவந்தானேது
கூறிடுந்தருமமேது குறிக்கொளுஞ்சமாதியேதிங்
கீறிலாத்தீர்த்தந்தானே தியாகமேதிவைமற்றெல்லா
நாறுபூங்குழலார்தங்கள் பதியெனநயப்பார்மன்னோ (உஎ)

மணமகன்மகிழப்பெற்ற மடந்தைமார்தேவரின்பங்
கணமலிபுலகிற்றுய்த்துக் கடையினின்முத்திசேர்வார்

துணைவனுல்வெகுளப்பெற்ற தொடிக்கையார்நரகிற்றுன்பம்
புணரிசூழ்புவியிற்றுய்த்துப் பின்னருநரகிற்போவார். (உஅ)

ஆதலாலிவைகளெல்லாங் கடைப்பிடித்தருந்தவத்து
மாதவன்மனைவிமார்க ளுல்வருமரபினின்று
நீதியின்வழாதுகற்பி னிலையினில்வாழ்க்கைநேர்ந்து
தீதறநோற்றுநாளுஞ் சிறந்தினிதிருந்தார்மாதோ. (உகூ)

கற்புநெறியுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் கஈ-க்குத் திருவிருத்தம் ருருச.

---

பதினாறவது,

## மிருகசிருங்கன் மகப்பேறுரைத்த அத்தியாயம்.

---

இங்கிவர்கள்வைகலு மிசைந்தினிதுவாழ்நாட்
டிங்கணுதன்மெல்லியல் சுவிர்த்தைதிருவொப்பாள்
பங்கமிலாநற்கிரக முச்சமொடுபார்க்க
மங்கலநல்லோரையினின் மாமகவையீன்றாள். (க)

வந்தமகவின்வதன மாமுனியுநோக்கி
முந்தியதவத்தினின் முளைத்தபயனென்று
வந்தமில்பிதிர்க்கள்கட னற்றதினியென்றே
சிந்தையின்மகிழ்ச்சியொடு பின்னுமிதுசெய்தான். (உ)

மேலிவணியற்றிடு தவத்தின்மிருகங்கள்
கோலியவனைத்தறி யெனத்தனிகுறித்தே
தோலுடனுரிஞ்சுமென வெண்ணியதுசூழ்ந்தே
பாலன்மிருகண்டுவென வேபெயர்பகர்ந்தார். (ங)

விண்ணிடைமதிக்கலை வளர்ந்ததெனவேதப்
புண்ணியன்வளர்ந்துபுரி நூலதுபுனைந்தாங்
கெண்ணறுமறைப்பகுதி யாவையுமுணர்ந்தே
மண்ணினிடைமுற்கலன் மருத்துதியைவேட்டான் (ச)

மாதுகமலைத்திருவு மன்னியதவத்தா
லோதுமுறைநீதிமறை யுத்தமனையீன்றாள்
காதலன்வளர்ந்துமுனி கண்ணுவனளித்த
பேதைகலையென்னுமொரு பெண்ணினைமணந்தான். (ரு)

வயங்குவிமலைத்திரு மடந்தையுமனத்தே
நயந்துசுமதிப்பெயரி னன்மகனையின்றாள்
பயன்கெழுகுமாரனும் வளர்ந்துமறைபல் ளித்
தயங்கியசுமந்துமகள் சத்தியைமணந்தான். (சு)

ஆனசுரசைத்திருவு மன்புமிகவோங்கி
மானசுவிர்தன்றனை மகிழ்ந்தினிதினின்று
ஞனமில்குமாரனும் வளர்ந்துமறையோதிக்
கானுறைதவப்பிருகு கன்னியைமணந்தான் (எ)

தன்குமரர்நால்வரொடு தானுமிகவாழ்வுற்
றின்பமுறவேள்விக ளியற்றல்புரிவித்தே
யன்பினிவரோடினி தமர்ந்துமனைவாழ்க்கை
துன்பமறவேதமுனி துய்த்தொழுகுநாளின். (அ)

ஐந்தையுமவித்தமுனி மூத்தமகவன்றி
மைந்தரொருமூவரு மகப்பெறுதன்மேவ
வந்தவிளையோர்களு மருங்குறைகணிக்கித்
தந்தையிலருங்கலை தழைத்திடவளர்ந்தார். (கூ)

ஈங்கிவர்தழைத்தொழுகு மெல்லையினில்வல்லே
வீங்குதவவேதமுனி யாமிருசிருங்கன்
பாங்குபெறமாகமதி பல்கிளையோடாடித்
தேங்குபுனருங்குமொரு தேவைவழிபட்டே. (க0)

வைதிகநெறிக்கணுறு மாவிரதமாற்றி
யெய்தியதுமூப்பென விகழ்ந்துமனைவாழ்வைக்
கைதவமறுத்தொழுகு கற்பின்மடவாரை
பொய்தவிரரும்புதல்வ ரம்மனைபுகுத்தி. (கக)

உற்றபெருவேள்வியழ றன்னையுளடக்கி
நற்றவம்விரும்பின னெழுந்தடவிநண்ணிப்
புற்றழையருந்திமிரு கத்தொடுபொருந்திக்
கற்றரைதுயின்றுவிழை வற்றுடல்கழிந்தான். (கஉ)

பொன்னுடலெடுத்துலகு பூத்தவனிருக்கு
மன்னவுலகத்தினவ ணேடினிதிருக.
வுன்னரியகற்பமவ னுற்றுவிருபென்னு
மன்னியவிரிஞ்சன்மக னுயறிவன்வந்தான். (கங)

வந்தபினிதாகனெனு மன்னவிருடிக்கே
யந்தமறுஞானநிலை முத்தியறிவித்து
முந்தைவரனன்றுரை மொழிப்படிவழாமற்
சிந்தைமலமற்றுவிழை சிற்பரமடைந்தான். (கச)

வேறு.

நண்பின்மைந்தர்த மனையிடைநால்வருமிருந்து
பண்பினிற்சில நாளொடுபருவங்கள்கழிய
வெண்பருத்தியிற் கருங்குழல்வெளுத்துப்பல்வீழ
வொண்பொன்மேனியுந் திரைவரமூப்பினையுற்றார். (கரு)

ஈன்றதாயர்மூப் பெய்தியவியல்பையுங்கண்டு
தோன்றலின்றித்தான் றுயருறுதன்மையுந்துணிந்தாங்
கான்றகேள்வியான் மிருகண்டுவென்பவனறிவான்
மூன்றுகண்ணிறைக் காசியிற்செலவதுமுயல்வான். (கசு)

முயலுமேல்வையி லந்தநாடரசுசெய்முதல்வன்
கயலுலாந்திரைக் கங்கைசூழ்காசியம்பதிக்கே
யியலுந்தானையோ டேகிடுமரசனற்றுணையாய்
மயலெலாமற நோற்றவனேகிடமதித்தான். (கஎ)

மதித்துத்தாயரோர் நால்வருமருத்துதியெனப்பேர்
விதித்ததன்னுடைமனைவியும் வியந்துபின்செல்லக்
கதித்தகாதன்முன் னேகிடக்காசியைநோக்கித்
துதித்தமாதவனெழுந்தனன் வழிதனைத்தொலைப்பான். (கஅ)

பெருத்ததண்டக வனத்திடைப்பெருவழிதொலைத்து
வருத்தமுற்றிடி லன்னைமீர்மங்கையோடீச
னருத்தியோடம ரானந்தக்கானனத்தமைதி
யுரைத்தல்செயகுவன் கேட்டிரொன்றினையனவுரைப்பான். (கக)

வேறு.

தாயிலவர்க்குந் தந்தையிலாதே தளர்வோர்க்கு
நோயுடையார்க்கு நுண்பொருளில்லா வறியோர்க்கும்
வாயினிகழ்ந்தே தங்கிளைதள்ள மறுதேயம்
போயினருக்குங் காசியலாதே புகலுண்டோ. (உ0)

பேதையருக்கும் பாவவுசத்தைப் பெற்றோர்க்கு
மாதுலருக்கு மாதுயர்மிக்க வடைந்தோர்க்குஞ்

சாதலணித்தாய் மேனிமெலிந்தே தளர்வோர்க்கும்
பூதலவைப்பிற் காசியலாதே புகலுண்டோ. (உக)

நிந்தனைசெய்ய மானமழிந்தே நின்றோர்க்குஞ்
சிந்தையுணர்ந்தே வேறுதவங்கள் செய்வோர்க்குஞ்
சந்ததியன்றித் தாயமொறுக்கத் தளர்வெய்தும்
புந்தியினர்க்குங் காசியலாதே புகலுண்டோ. (உஉ)

## வேறு.

அன்னதலத்தைந்துக்ரோ சத்தளவி
னவதரித்து வைகினோர்கண்
மின்னுமதிவேணியரன் றிருவருளா
லதிமாயை விட்டுநீங்கி
மன்னுமனசங்கற்ப விகற்பமொழிந்
தானந்த மருவலாலே
துன்னரியவானந்த கானனமென்
றவ்விடத்தைச் சொல்வர்மாதோ. (உஙு)

அத்தலையின்மருவினர்தங் கன்மமல
மவித்திருந்தே யரும்பாவண்ண
முத்திதருமுழுமுதல்வன் மோகாந்த
காரநிலை முனிபுந்தீபஞ்
சுத்தமுறுமகிலேச னென்னுமொரு
சிவாக்கினியாற் சுடுதலாலே
சத்தியமேயவ்விடத்தைப் பேசரிய
மசானமெனச் சாற்றுவாரால். (உச)

ஈண்டுபிறவிப்பெருநோய் மானிடரத்
தலையடைந்தே யிறக்குங்காலைக்
கோண்டருவெண்ணிலவெரிக்குஞ் செம்பவளக்
காடனைய கொழுங்கோடீரத்
தாண்டகைவந்தருகெய்தி யவர்முடியை
மடியிருத்தி யன்பினோடுந்
தீண்டரியவலதுகன்னத் தோங்கார
முரைத்துமுத்தி சேர்க்குமன்றே. (உரு)

யோகத்தாற்சமாதியினாற் சிவதருமத்
தாற்றழலி னுறவோர்செய்யு

## அ௬ மிருகசிருங்கன் மகப்பேறுரைத்த அத்தியாயம்.

மியாகத்தாலெய்துபலன் றருகாசி
யெல்லையினி லினிதுவைகில்
மோகத்தால்வெகுளியினான் மடமையினான்
முதுமூப்பு முற்றியெய்துஞ்
சோகத்தாற்பல்பிணியால் வறுமையினாற்
றுயருழலார் சொல்லுங்காலே. (உ௬)

என்றினையபலகூறி வழிதொலைக்குந்
தாயர்தமக் கிளைப்புமாற்றித்
துன்றுமலர்ப்பொழிலுடுத்த வடகாசி
யெல்லைதனிற் றுயரநீங்கச்
சென்றுமணிகன்னிகையாஞ் செழும்புனலி
னினிதாடித் தேவராதிப்
பொன்றியநற் பிதிர்க்கள்கட
னீருகநியமங்கள் பொருந்தச்செய்தான். (உஎ)

அக்காலையாதுலர்கட் கன்னதா
னாதிமுத லனைத்துமீந்து
முக்காலமுங்கடந்த முதற்பொருடன்
றிருக்கோயின் முன்றிலெய்தித்
தக்கார்தங்குறைதீர்க்குந் தூண்டிவினா
யகனடியைத் தாழ்ந்துபோற்றி
யிக்காருந்தறியயறு மோதகமெள்
ளுண்டைபொரி யிளநீரீந்தான். (உஅ)

கரியநிறக்கஞ்சுகத்துக் காலவயி
ரவனடியைக் கருதியேத்தி
விரியுமவணமைந்துள்ள பரதேவ
ரனைவரையும் விரும்பிப்போற்றி
வரிபரந்தவிழியுமையோ டிருந்தவிசு
வேசரடி வணக்கஞ்செய்தான்
நரைவிரவுகுழற்றுயர் நால்வரொடு
மனைவியொடு நவையிலாதான். (உ௯)

தோத்திரங்கள்பலவோதித் தொழுந்தோறு
மானந்தந் துளும்பிக்கண்ணீர்
கேத்திரத்தின்வழிசோர நின்றுருகிப்
பின்னரோர் மனையினெய்திக்

கேத்திரத்திலுணவொழிதல் துயிலொழித
லிவையியற்றிக் கிலேசநீங்கி
மாத்திரைப்போதளவுமவங் கழியாம
னியமத்தின் வழியினின்றான். (கூ0)

வைகறையிலெழுந்துகங்கை மணிகர்ணீ
காதீர்த்த மருவியாடித்
துய்யதவவேதியரோ டேனுறைந்து
குரோசமைந்துட் சொல்லப்பட்ட
வையர்திருப்படிவமாஞ் சிவலிங்க
மத்துணையு மறிந்துபோற்றிப்
பொய்யிலவன்றன்பெயரா லொருசிவலிங்
கத்தையங்கு பொருந்தச்செய்தான். (கூக)

அந்தமிருகண்டலிங்கத் தயலாக
வன்னையருந் தத்தம்பேராற்
புந்திமகிழ்ந்தொருநாலு சிவலிங்கத்
திருவுருவும் பொருந்தச்செய்தார்
சந்தமுலைமருத்துதியுந் தன்பெயரா
லொருலிங்கந் தாபித்திட்டாள்
சிந்தையுவந்தனுதினமும் புனிதநீ
ராடிவைகித் திளைத்தார்மன்னோ. (கூஉ)

உணங்குபெருமாதவர்க ளோராண்டிப்
படிக்கழிய வொருநாடன்னிற்
கணங்கொள்கயலுகழுமணி கருணியெனும்
பூந்துறையிற் கங்கையாடி
யணங்குதருநண்பகலி லாதவத்தின்
மெலிந்தமலன் கோயிலெய்தி
வணங்கியகையினராகி வலங்கொண்டு
சந்நிதியின் மருவுங்காலை. (கூகூ)

அடைந்திடுமேப்பதனாலு மாதவத்தின்
கதிர்வெதுப்பு மழலினாலு
மடந்தையராந்தாயரொரு நால்வருந்தம்
வசமழிந்து மயங்கிவீழ்ந்து
கிடந்துயிர்போமெல்லையினிற் கடிதடைந்து
கேசவற்குங் கிட்டாவள்ள

விடைந்தவருக்கருள்சுரப்ப வின்னருளால்
வந்தெய்தி யீதுசெய்தான். (௩௪)

விழிந்திடுவார்தந்தலையைப் பொற்குரங்கின்
மிசைவைத்து விருப்பினோடு
நளிந்தபகீரதித்திவலை மதிக்கலையி
னமுதமுக நளினந்தோய்ப்பத்
துளிந்துநறைபிலிற்றிதழி முடிசாய்த்துக்
கொழும்பவளச சோதிவாயாற்
றெளிந்திடுநான்மறைப்பொருளாந் தாரகத்தை
வலச்செவியிற் செப்பினுனல். (௩௫)

**மிருகசிருங்கன் மகப்பேறுரைத்த அத்தியாய முற்றிற்று.**

ஆூ அத்தியாயம் கசூ-க்குத் திருவிருத்தம் ருஅக.

---

பதினேழாவது,

## மார்க்கண்டன் பிறப்புரைத்த அத்தியாயம்.

ஆங்கணிறந் திடுநால்வரை யறிவுற்றிடுமைந்தன்
றாங்கியெடுத் தீமத்தொழில் தனைநீதியின்முடித்தே
பாங்காயொரு குமரன்றனைப் பயந்தேயவன்றன்னூற்
றீங்கொனறிய காலன்றனைச் செற்றானெனவுரைத்தான். (க)

கற்பின்றலை யாய்நின்றவள் கணவனிதுகூற
வெற்பொன்றிய புயவேந்தனும் வெரீதெடுத்துரைப்பான்
பொற்பொன்றிய காலன்றனைப் புதல்வற்கொடுகடத்த
னற்புங்கவ னுரையென்றலும் வசிட்டனிதுநவின்றான். (உ)

மாண்டோர்பெருங் கடனாற்றிய மறையாளனுமங்ஙன்
றாண்டாவிளக் கனையாளொடு பலநீர்த்துறைதோய்ந்தே
பூண்டாதர வத்தோடொரு புதல்வற்பெறவேண்டி
யாண்டேபல கழியத்தவ மதினின்றுபசரித்தான். (௩)

விதியாநிலை பெற்றோங்கிய மிருகண்டுவின்றவத்தான்
மதியார்சடை முடிவானவர் மகிழ்வோடவணெய்தி
யதிமாதவ முயல்போய்வர மதுநல்குவன்வேண்டென்
றெதிராய்மொழி தலுமன்னிலை மறையோனிதிசைப்பான். (௪)

அய்யாசரணமலாசரணுதிசரண்மழுவார்
கையாசரணடியேனிது காலத்தினதளவு
மையார்மழை யறவாடிய பயிர்போன்மகவின்றி
நையாவுள மெலிந்தேன்மக வருள்வாயெனநவின்றான். (ரு)

வேறு.

தீயமகவாயொருநூறாண் டிருக்குஞ்சிறுவனளிப்போமோர்
தூயமகவாய்ப்பதினாறாண் டிருக்குநதோன்றலளிப்போமோ
யேயதவத்துமாதவனே யேதுவிழைவிங்கியம்பென்னப்
பாயும்விடையானுவந்துரைப்பப் பரமமுனிவனீதுரைத்தான் (சு)

புன்மைமகவையான்வேண்டேன் பொருந்துவயசுகுறைந்தாலு
நன்மைபயக்குநல்லுணர்வு நன்னீதியினிலம்புகழுந்
தன்மைபயக்குமொருமகவைத் தரவேவேண்டுமருளென்னத்
தொன்மைமறையோனிரந்திடலுந் தோகைபாகன்சொல்லுவனால்.

நன்றுநீவேண்டியபரிசே நவைதீர்குணத்துஞானநிலை
யென்றுமுடையவொருமகவை யீரெட்டாண்டேயிருப்பதற்குத்
துன்றுதவத்தோயினிதளித்தேன் றுயரந்தீர்ந்துவாழ்கியென்று
மன்றினடிக்குஞ்செஞ்சோதி மழைமின்னெனமறைந்திட்டான்.

வரங்கொண்மறையோன்மனைபுகுந்துமகிழ்ந்துசிலநாட்கழித்ததற்பி
புரங்களெரித்தோன்றிருவருளாற் புனிதமனைவிதிருவயிற்றி [ன்
னிரம்புகருப்பம்பதிந்திடலு நிகரின்மறையோன்சூற்சடங்கு
பரந்துமறையோர்தமைக்கூவித் திங்கடோறும்பண்ணினனே. (கூ)

சொல்லும்வியாளகேந்திரத்திற் றூயமுகூர்த்தந்தனிலெந்து
நல்லகிரகவுச்சத்திற் சதையநாளினவையில்லாள்
வல்லமகவையளித்தலுமே வானோர்வானோர்க்கிறைமுனிவர்
வில்லிற்பொலியநுதலரம்பை மாதரெவரும்வியந்துவந்தார். (க0)

வானச்சிறுவெண்பிறைக்கொழுந்தில் வயங்குமகவைக்கண்டுவந்தார்
கானத்துறையும்வியாதமுனி சாதகருமமுறைமுடித்தார்
ஞானக்குமரன்றனக்குரிய நாமகரணஞ்சாற்றியபின்
தானத்தடைந்தோரனைவோருஞ் சிறுவன்வடிவந்தனைப்புகழ்ந்தே

வேறு.

வடிவமதைச்சொல்லுதுமோ வண்ணமதைச
சொல்லுதுமோ மகிழ்நீத

னெடியதவத்தானுருகி நிமலனுதித்
தானெனவே நிகழ்த்துவோமோ
படியிலெதையெடுத்துரைப்போம் பாலகன்றன்
றிருவுருவை யென்னப்பன்னிக்
கொடிநகரிலுள்ளோருந் தேவரொடு
மாதவருங் கூறினரால். (கஉ)

வேலைதொறுஞ்சடங்கியற்றிச் சவுளவுப
நயனமிவை விதியிற்செய்து
சீலமறையொருநாலு மங்கமவை
யிருமூன்றுந் தெருளச்செப்பிப்
பாலகனுமார்க்கண்டன் றனைப்பரிவால்
வளர்த்திடலும் பண்பினோங்கி
ஞாலமெலாம்புகழ்ந்தேத்தக் கலைமதிபோ
லுடோறும் வளருநாளில். (கங)

திருந்துதவப்புதல்வனுக்குத் திருவயதீ
ரெட்டுவந்து சேருங்காலைப்
பெருந்தகைதன்றாய்தந்தை யனுதினமு
மழுதிரங்கு பெற்றிகண்டு
வருந்தியழுதிடவடுத்த வாறெனக்கிங்
குரைத்தியெனு மகவைநோக்கி
யருந்துயரமுளங்கவற்ற வாற்றாத
தாதையீ தறையலுற்றான். (கச)

நெடுங்காலமகவின்றித் தவஞ்செய்து
சிவனருளா னின்னையீன்றேன்
விடங்காலுமரவணிவா னொருபதினா
றாண்டுனக்கு விளம்பியிட்டா
னொடுங்காதபுகழுடையோ யுற்றதந்தப்
டதினாறாண் டதனுள்ள
நடுங்காநின்றனமென்றா னதுகேட்டு
மார்க்கண்ட னவில்வதானான். (கரு)

ஈங்கிதற்கோதுயருறுத லெனைக்குறித்து
நீருளத்தி விரங்கவேண்டாம
வாங்குதிரைக்கடனஞ்ச முண்டமரர்
தமக்குவரு மறுக்கந்தீர்த்தான்

றீங்கடியாரிடத்தகற்றுஞ் சிவபெருமான்
றனக்கடிமை செய்தியானென்
பாங்கில்வருகாலனைவென் றென்றுமிற
வாதபடி பயில்வேனென்றான். (கசு)

சிறுவனுரைத்தமைகேட்டுச் சிந்தையினின்
மகிழ்வோங்கச் செம்மல்கேட்ட
யறிவுறுமாண்டைந்ததனி லடுங்காலன்
பாசத்தா லார்க்கப்பட்ட
மறுவறுநற்குலத்துதித்த சுவேதகே
துவைப்புரந்து வருத்தந்தீர்த்தான்
பிறையினிளநிலவெறிக்க விலகுசடா
முடிபுனைந்த பெம்மானன்றே. (கஎ)

இன்னமொன்றுகேட்டிடுதி சிலாதன்மக
னெட்டுவய தெய்துவானைத்
துன்னியடுங்கூற்றெதிர்ந்து காலபா
சங்கழுத்திற் சுற்றநோக்கிப்
பின்னியபாசத்தினொடுங் காலனையுந்
துரந்தந்தப் பெரியோன்றன்னைத்
தன்னடிமையாய்ப்புரந்து நந்தியென
வைத்தானச் சம்புவன்றே. (கஅ)

மந்தரவெற்பினைநிறுவிப் பாற்கடலைக்
கடைந்திடுநாள் வானோரஞ்ச
வந்தவான்முகில்போல வெழுநஞ்ச
முண்டமர ரலக்கண்டீர்த்தான்
சுந்தரமார்நீலகண்டன் சோதிமழுப்
படையாளன் சுருதிமூர்த்தி
யிந்திரனுர்தோணெரியச் சிறிதுமுனிந்
தருள்புரியு மிறைவனன்றே. (ககூ)

உலகமெலாநலியவரு சலந்தரனைக்
கால்விரலி னுகிரிற்கீறு
மிலகுசுடர்ப்படையாழி துறந்துகரு
வனையினுட விருத்திவீழ்த்தி
நிலவிடுமன்னுயிரனைத்தும் புரந்தழித்தங்
கொருபொருளாய்நெடிதினின்ற

கலைவைவனமுலையிமவான் கன்னிதரு
மணந்திளைக்கும் கணவனன்றே. (உ0)

தங்கவரைச்சிலைகுனித்து வாசுகிநா
ணிடைகொழுவிச் சங்கபாணிப்
பங்கயக்கண்முகுந்தனெடும் பகழியா
யமரருறும் பரிவுதீரப்
பொங்குதிரிபுரமழலிற் பொடிபடவெண்
ணகைபுரிந்தான் புனிதத்தெண்ணீர்க்
கங்கையொடுமெழுதநிலா வெண்குருத்துச்
சடைக்கணிந்த கடவுளன்றே. (உக)

செற்றமகன்றலகமெல்லாந் தழைத்தோங்க
வோரயதந் தேவராண்டு
மற்றவந்தகாசுரனைச் செருமுகத்திற்
றிரிசூல மருமத்தெற்றிக்
கற்றைவெயிற்கதிர்வெதுப்ப வூன்கான்று
கழியுமட்டுங் கையிற்கொண்டான்
புற்றரவாபரணமணிந் தீமத்தி
னடமாடும் புனிதனன்றே. (உஉ)

பூங்கணைதொட்டெவ்வுலகும் வெற்றிகொளுங்
காமவேள் புகுந்தபோரிற்
றுங்குறுதற்கண்விழித்துக் கனலேவி
யவன்வடிவஞ் சாம்பராக்கி
யாங்கவன்பேரெவ்வுலகு மனங்கனென
வறைவித்த வமலனூவான்
பாங்குபெறுமேதாழனெனத் தனதனிடத்
தருள்பொழியும் பரமனன்றே. (உ௩)

மைந்தநீசரணமெனப் போய்ப்புகுந்து
நறுமலரால் வழிபட்டேத்தி
இந்துசேகரனருளா லிறவாம
லிருக்கவரம் பெறுவாயென்னத்
தந்தையுளமகிழ்ந்துவிடை கொடுத்திடலுந்
தவமறையோன் றொழுதேகிச்
சிந்துமுனியினிதுறையுந் தென்றிசைவா
ரிதித்தீரஞ் சென்றுமன்றே. (உ௪)

வானந்தத்தொளியுருவாய் மாமறையின்
முடிவிடத்து வைகுவானை
யானந்தத்திருநடன மடியவர்கண்
களிக்கமன்றி லாடுவானைக்
கானந்தப்புரங்காடே யரங்காகக்
கைக்கொண்ட கடவுடன்னைப்
பானந்துதிருமொழியார் நாணநிறை
கற்போடு பலிகொள்வானை (உரு)

அத்தலையின்மார்க்கண்டன் றன்பெயராற்
சிவலிங்க மமைத்துநாளுந்
தத்துபுனன்மும்போதும் படிந்துமலர்
விதிமுறையிற் சாத்திச்சாத்திப்
பத்தியினற்புகழ்பாடி யுள்ளுருகி
யன்பினொடு பரவலாலே
சித்தமகிழ்ந்திறையிருந்தான் வேதியனு
மப்பரிசே தினமுஞ்செய்தான். (உசு)

அக்காலந்தனிலோர்ஞான் றழற்பொழியுஞ்
செங்கண்ண னழன்றநெஞ்சன்
மைக்காளமுகிலனைய வடிவத்தன்
பிறையெயிற்றன் மடித்தவாயன்
முக்காலங்களுமரனை வழிபாடு
செயுமுனியை முடிப்பேனென்று
வெக்காலங்களுமொறுக்கு மிருத்துவொடுங்
காலனெய்தி யீதுசெய்தான். (உஎ)

கருங்கொண்டல்கிளித்தெறிக்கு மின்போலப்
பாசத்தைக் கடிதில்வீசி
மருங்கொன்றிப்பூசனைசெய் மறையோன்றன்
கழுத்திட்டு வாங்கலோடும்
பொருங்குன்றமதயானை யுரிபோர்த்தான்
பூசனையிற் பொருந்துவேனை
நெருங்கின்றதெவன்மறலி கேட்டியென
மார்க்கண்ட னிகழ்த்தனுற்றான். (உஅ)

வேறு.

அந்தமிலானை யாதியிலானை யடியார்தம்
பந்தனைநீக்கிப் பாசமறுக்கும் பழையோனை
வந்தனைசெய்தே பூசைபுரிந்தே வாயார
வெந்தைபிரானை யேத்திடுகாறு மிடைநிற்பாய். (உகூ)

மூவகையாய போதினுநன்னீ ரிடைமூழ்கித்
தேவனையன்பிற் பூசனைநாளுஞ் செய்யாதே
பாவவசத்தாற் சோறுநுகர்ந்தும் பலபோகம்
பூவலயத்திற் றுய்த்திடுவோரைப் போல்வேனோ. (௩0)

மண்டனிலார்வம் பொன்றனிலார்வம் மனைவாழ்க்கைப்
பெண்டனிலார்வ மாமகவார்வம் பிறவாழ்விற்
றண்டலிலார்வ மூனுடலோம்புந் தனியார்வ
மெண்டழல்வேணி யீசனடிக்கே யெனதார்வம். (௩க)

என்றிவனோதக் காலனகைத்தே யேடாநீ
பொன்றிடுபோதிற் பூசனைசெய்தல் புலமைத்தோ
அன்றுளகங்குற் போதினில்வேண்டு மவையெல்லா
நன்றுபகற்போ தேயுலகத்தோர் நனிகொள்வார். (௩உ)

அன்னதறிந்தே தீவினையுற்று லதுநீங்க
முன்னையுணர்ந்தே நல்வினையெல்லா முயலாமற்
றின்னியவள்வாய் நாய்வருபோழ்திற் சிறுகோலைத்
தன்னிடையில்லார் கையிடைபெற்றுத் தகைவாரோ. (௩௩)

வீந்திடுகாலம் வந்திலதாமேல் வேலாலே
பாய்ந்திடுபோழ்து மாவிபுடைத்துப் படர்தீர்வார்
மாய்ந்திடுகாலம் வந்திடினுண்புல் வாளாகச்
சாய்ந்துயிர்மாய்வர் காலவசத்தைத் தகைவாரார். (௩ச)

காசினிமுற்று மோர்குடைநீழற் காத்தோரும்
வாசவனாரும் பொற்கமலத்தில் வதிவோருஞ்
சீசியுரைக்கி லெத்தனைகோடி திரளாயென்
பாசவலத்திற் கட்டியொறுக்கப் பட்டாரால். (௩ரு)

வேதியர்மாணி யின்னபசப்பால் விடுவேனென்
றோதினைகொல்லோ வென்றிடுகால னுரையாமுன்

மாதவனோது மீசனடிக்கே மலர்தூவும்
போதிடர்செய்வார் நிரகத்தே புகுவார்காண். (௩௬)

ஆரையொறுத்தா ஞாயினுமீச னடியாராம்
பேரைபொறுப்பா னீசனலாதே பிறருண்டோ
பாருலகத்தே மன்னவர்தூதர் பழிசெய்தாற்
றீரவெறுப்பார் மன்னவரல்லாற் சிலருண்டோ. (௩௭)

மால்வரைதன்னை யூடுபிளப்பார் மதியாமல்
வேலைகுடிப்பார் வானொடுமண்வே றதுசெய்வா
ரேலவிரிஞ்சன் வாசவனைப்புல் லெனவைப்பார்
சூலமெடுத்தா னன்பரியற்றாத் தொழிலுண்டோ (௩௮)

மாயவிரிஞ்ச னாதியர்வானோர் வந்தெய்தித்
தீயவிழைத்தா ராயினும்யாதுஞ் செயவற்றோ
பேயுனைசொற்றாய் காலபொறுத்தேம் பெயரென்னச்
சேயிதுரைத்தான் காலன்முனிந்தே யிதுசெய்தான். (௩௯)

வேறு.

திருவிலிவேதியச் சிறுவகேட்டியென்
பெருவலிக்கெதிர்நின்று பேணவல்லவ
ரொருவரைக்காட்டுதி யுரைத்தவீசனும்
வெருவறநின்னுயிர் விரைவிற்கொள்கின்றேன். (௪0)

என்றுரைத்தெயிறுதின் றிருகண்டயுகத்
தன்றிணிபுயத்திடை தாக்கிப்பற்றுவான்
சென்றெதிர்பாய்ந்தனன் றிங்கட்டேவன்மேற்
குன்றியவிடவராக் கடிவதென்னவே. (௪௧)

பற்றிடுபோதினிற் பரமலிங்கத்தின்
முற்றியசோதியாய் முழக்கமோடெழுந
துற்றொருதாளினா லூரத்துத்தாக்கலும்
பொற்றைபோல்வீழ்ந்தனன் புரண்டுகாலனே (௪௨)

கண்ணினும்வாயினு முதிரங்கான்றிட
மண்ணிடைமறலிபோய் மறிந்துவீழ்தலும்
புண்ணியவேதியன் புராரிதன்சர
ணெண்ணினனெடுத்தெடுத் திசைப்பதாயினான். (௪௩)

## வேறு.

விடபுயங்கர்தம்வாகுநாணிடு மேருமால்வரைவில்லியைப்
படியளந்தவனெடியசாயக மெனநயந்திடுபரமனைக்
கொடியமூவெயிலொடியினீறெழ முறுவல்கோலியகுழகனை
யடியின்மாமலர்புனைகுவேனையு மறலியோகொலவடர்வனே. (௪௪)

ஐந்தருத்தொடைமலர்கடங்கிய வருணபங்கயசரணனைப்
பைந்துணர்க்கணையாளியைச்சுடு பாலலோசனமுதல்வனை
வெந்துமுற்றியபூதிதுய்த்து விளங்குமெய்யனையையனை
வந்தனைத்தொழில்புரிகுவேனையு மறலியென்செயவல்லனே. (௪௫)

புகர்மதாசலவுரியைமேலிடு போர்வையாளியையிரசிதச்
சிகரிமேலுறைவானைவானதி சிதறுசீதரமுடியனை
மகரவாரிதிதுயிலுமாலயன் வழிபடும்பதயுகளனை
நிகரிலாவடிபணிகுவேனையு நடுவனோகொலநினைவனே. (௪௬)

மண்டலத்தெழுசண்டவாசுகி மகரகுண்டலவளையனைக்
கண்டையிற்பொலிகண்டவெற்பன குண்டையிற்பொலிகடவுளைச்
சண்டனைத்தெறுசண்டனைப்பொரு சமரனுந்தகவயிரியைப்
பண்டனிற்புகழ்பரவுவேனையு மறலிவந்தெதுபண்ணுமே. (௪௭)

புட்பகத்திறைதோழனைப்பொறி யுரகபூடணமுதல்வனை
விட்பகற்றெறிகட்புலத்தினை வேறொடுங்களைவீரனைத்
தட்பமுற்றநல்விமையவெற்பருள் வல்லிதங்கியதாருவை
நட்பினுற்றடிபரவுவேனையு நமனெதிர்ந்தெதுசெய்யுமே. (௪௮)

பிறவிமுற்றியகடல்கடத்திடு பெரியவம்பியையுலகின்வாழ்
துறவினர்க்குறுமறுவர்வஞ்சகர் துரிசறுத்தொளிர்சுடரினை
முறைமைதப்பியதக்கனார்தகர் முடிபெறப்பணிமுனிவனை
மறையினிற்புகழ்வேனையோவொரு மறலிவந்தெதிர்மலையுமே. ( )

பூதநாதனைநான்முகத்தினு மேவிதித்திடுபுனிதமாம்
வேதநாதனைஞானநாதனை விடமருந்தியநாதனை
யாதிநாதனைவிண்டுவேமுத லம்பரத்தவரேத்துதா
ஞாதநாதனையன்புளேன்முன நமனும்வந்தெதிர்நவிலுமே. (௫௰)

முத்தொழிற்குமுதற்பொருட்டனை முக்குணத்தினுமேலதாந்
தத்துவத்தின்விளக்கமாகிய தற்பரத்தினையொருவனை

வித்தகக்கணநாதர்சூழ்வர வெற்பின்வாழ்தனைவெற்பினைய்
பத்தியிற்றொழுவேனையோகம ணார்முனிக்கெதிர்பகருமே. (ருக)

வேறு.

மூன்றுகண்ணுடை மூத்தநாதனை
நான்றவரர்குழ னங்கைபாகனைத
தோன்றுமன்பினாற் றொழுதவன்பன்மை
லேன்றுவந்துகூற் றேதுசெய்யுமே (ருஉ)

காலகாலனைக் கயிலையாளியைப்
பாலலோசனப் பரமதாணுவைச
சூலபாணியைத தொழுதவன்பன்மே
லேலவந்தகூற் றேதுசெய்யுமே (ருங)

உருத்திரன்றனை யுமைதன்கேள்வனை
நிருத்தமாடிய நிமலமூர்த்தியை
யருத்தியாற்றொழு தேத்துமன்பன்மேற்
செருக்கின்வந்தகூற் றென்னசெய்யுமே. (ருச)

நீறுபூசியை நிலவுசூடியை
யேறதேறியை யிடபகேதுவை
யாறுதாங்கியைப் போற்றுமன்பனமே
சீறிவந்தகூற் றேதுசெய்யுமே. (ருரு)

கொழுந்தமுனிகா கோலவண்ணனைப
பழந்தவத்தினோர் பாவகத்தனை
யழுந்துபூசையிற் பரவுமன்பன்மே
லெழுந்துவந்தகூற் றேதுசெய்யுமே. (ருசு)

பகலின்பற்குவை பறிததவீரனைச
சகளநிஷ்கள மானசம்புவைப
புகலுங்காதலாற் போற்றுமன்பன்மே
லிகலிவந்தகூற் றேதுசெய்யுமே. (ருஎ)

அதிர்நதவான்முத லைந்துமாதியை
யுதிர்ந்தசுண்ணநீ றுலவுமார்பனை
முதிர்ந்தகாதலான் மூற்றுமன்பன்மே
லெதிர்ந்துவந்தகூற் றேதுசெய்யுமே. (ருஅ)

தேவதேவனைச் சிற்குணத்தனை
மூவராய்த்தொழின் முடிக்குமுநதையை

நாவினாற்புகழ் நவிற்றுமன்பன்மே
லேவில்வந்தகூற் றேதுசெய்யுமே. (ருகூ)

இன்னதன்மையா யீரொட்டாகவே
பண்ணிமார்க்கண்டன் பகர்ந்தபாடலை
யுன்னியோதுவா ருழைவெங்கூற்றுவன்
மன்னிடானவர் வாழ்தலுண்மையே. (கூ0)

வேறு.

என்றுமார்க்கண்ட னெடுத்துரைக்குமேத்துரைகேட்
டன்றுதானுள்ளத்தி லார்வமிகப்பெருக
நின்றோனைத்தன்னருளா னோக்கிநெடுந்தவத்தோய்
நன்றுநீரெம்மை வழிப்பட்டநன்னிலையே. (கூக)

ஊழிநெடுங்காலத்து மொவ்வாதகற்பத்தும்
பாழிநெடுந்தவத்தோ யாண்டுபதினாறாகி
யாழியுலகி லிறவாதமர்ந்தினிதாய்
வாழியெனவுரைத்து நம்பன்மறைதலுமே. (கூஉ)

நம்பனளித்தவரம் பெற்றஞானப்புதல்வ
னும்பர்வியப்ப வுலகோரினிதேத்தத்
தம்புதல்வர்க்காய்மெலிந்த தாய்தந்தையுண்மகிழ்வித்
தம்புவியிற்றீர்த்தங்க ளாடுவான்போயினனே. (கூங)

போனமுனிவன் புனிதநீர்புக்காடி
வானநிலையேழு மண்ணேழுஞ்சென்றுலவி
யானபிரளையத்து மாவியழியானாகி
யூனமறவென்று மூமாபதிபோல்வைகினான். (கூச)

வீழ்ந்தநமனும் விழிவழியேநீரொழுகத்
தாழ்ந்ததுயருழந்து சம்புமலர்த்தாள்பணிந்தே
யாழ்ந்தமதியில்லே னவமதியாலீதிழைத்தேன்
றாழ்ந்தபுரிசடையோ யென்றுரைத்துத்தான்போனான். (கூரு)

ஈதுகாண்முன்னிகழ்ந்த தித்துணையுமார்க்கண்டன்
றாதைதிருத்தாதை தணவாதுமாகமதிப்
போதுதொறுமூழ்கியிட்ட புண்ணியத்தினாலென்று
தீதிலாமாமுனிவன் றேர்வேந்தனுக்குரைத்தான். (கூகூ)

மார்க்கண்டன் பிறப்புரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் கஎ-க்குத் திருவிருத்தம் கூருகூ.

## பதினெட்டாவது,
# தீர்த்தவிசேடமுரைத்த அத்தியாயம்.

பகலவன்குலத்துவேந்தன் கேட்டபின்பண்பினாலே
யகமகிழ்ந்தினிதுநோக்கி யையநீயோதுமாற்றான்
மகரவாதித்தனுற்ற மதிதொறுந்தெண்ணீராடச்
செகதலவளாகவைப்பிற் றீர்த்தங்களையாஞ்செப்பாய். (க)

என்னவேயிறைவன்கூற வருந்தநிக்கிறைவுஞ்சொல்வான்
மன்னவாமாகதிங்கண் மருவியவமையமெல்லாம்
பொன்னகர்ப்புறத்தினுள்ள நீரொலாம்புனிதநீரோ
யன்னதில்விசேடமாக வேதங்களறைந்தகேளாய். (உ)

நால்வகைப்பொருளுநல்கு நற்பிரயாகைபின்னர்
வாலியநைமிசம்பின் வருகங்கைத்துவாரந்தெண்ணீ
ரோலிடுமவந்திநன்னீர் சரயுவாழ்துவரையோடு
பாலெனத்தகையகங்கை வாரிதிபடியுமெல்லை. (ங)

உயர்குருபூமிநல்லோ ருரைத்திடும்யமுனைகாஞ்சி
மயர்வறவெழுந்தகோதா வரியொடுதுங்கபத்திரை
கயனுகழ்கிஸ்ணவேணி கண்டகைபெண்ணைபாலி
யியல்பெறுபொன்னிவையை யியற்றமிழ்ப்பொருநையோடும்.(ச)

உறுதிரியம்பகத்தோ டோங்குமோங்காரஞ்சோணை
மறுவறுகளாஞ்சிரம்புட் கரமொடுசிந்துமற்று
மிறைபுருடோத்தமம்பி னியன்றகோகன்னமெங்குந்
துறைபெறும்பிருகுகச்ச பாகளம்பிருகுதுங்கம். (ரு)

காசினிபுகழுந்தூய வெதிரிகாச்சிரமங்கண்டோர்க்
காசறமுத்திநல்குஞ் சரசோதியாதியாகப்
பேசியதிர்த்தமின்னும் பெரிதுளவவற்றின்மேலாய்
மாசறப்புனிதமாய மான்மியதீர்த்தங்கேளாய். (சு)

மெய்யுரைப்பொறியைந்தாய விடயத்தையடக்கல்யார்க்கும்
பெய்யருளுடைமைபோற்ற னடுநிற்றல்பிறழாதீகை
வெய்யவுளொடுக்கமென்று மகிழ்ச்சியின்மேவிவைகல்
துய்யதோரன்பியற்றுந் தொழில்செய்யல்தீர்த்தமாகும். (எ)

வேண்டியநியமம்வேத மந்திரஞ்செபங்கள்யார்க்கு
மாண்டகல்வாய்மைவீரந் தயிரியமாசில்ஞான

மீண்டியவிரதங்கோற லொழிந்திடவிதையத்தூய்மை
பூண்டிடுதியானதீர்த்தம் புராரியைப்பரவதீர்த்தம். (அ)

கள்ளன்பொய்க்குறளைவாயன் கடியசொற்கொடியநெஞ்சன
றள்ளருங்களியன்றூர்த்தன் றண்ணளியிலாதலோபி
யுள்ளத்தின்மலத்தையற்றே யுடன்மலங்கழுவினல்லால்
வெள்ளநீர்க்கங்கைதோய்ந்தும் விமலமதாகமாட்டான் (௯)

உறுபுனலதனில்வீழ்ந்தே யூத்தையைக்கழுவிவிட்டாற்
பொறியிலாமாந்தரந்தோ புனிதத்தைப்பொருந்தமாட்டா
ரெறிதிரைப்புனலின்மூழ்க வில்லைமற்றென்றபோது
மறுவறுமனத்தின்வஞ்ச மற்றவர் தூயர்மாதோ (௧௦)

மனமலவிடையப்பற்றே மற்றதையொழித்ததீர்த்தங்
கனநிதியளிக்குந்தானந் தவங்கல்விகனல்செய்வேள்வி
யினையனபுனிதமாகு மிதையமேபுனிதமாகில்
வினையினிமறியதுண்டோ விதையமேவிழுப்பமானால் (௧௧)

அகந்தனிற்றூய்மையில்லா ரைந்தழற்றவநின்றாலும்
பகர்ந்திடுபுனிதமாகார் பவத்தையும்பெறுகலாற்று
ரிகழ்ந்துவஞ்சங்கணீத்தா ரோதிழையாரைப்புல்லி
மகிழ்ந்திடப்புணர்வரேனும் புனிதராய்வழுத்தலாவார் (௧௨)

பற்றியவிராகமாதி பங்கமோர்சிறிதுமற்று
முற்றியகாமக்குரோத முதற்படுசூழியுமன்றி
நற்றவஞானமென்னு நவையறுதீர்த்தமாடப
பெற்றவர்தாங்கள்தண்மை பிறப்பறக்கழுவினாரே (௧௩)

மானததீர்த்தமீதா மண்ணிடைச்சிலதெண்ணீருக்
கானபேர்விழுப்பமெவ்வா றடைந்ததென்றுரைக்கிற்கேட்டீ
மானிடருருவினுத்த மாங்கம்போன்மண்ணினுள்ளுந்
தானவேற்றுமையினாலே தகுதியைசசாருந்தெண்ணீர் (௧௪)

துரகமேதத்தின்மிக்க தூயநீர்மாகமாடார்
விரதங்கள்யற்றல்செய்யார் வெறுக்கைகடானமீயா
ரரஹரவென்றுகூறா ராவினமறையோர்க்கீயா
ரிரவலராகித்தோன்றி மறுமையிலிடரிற்றாழ்வார். (௧௫)

கரத்தினின்மலர்பெய்தேத்தல் காலினிற்கோயிற்சூழ்தற்
சிரத்தினில்வணங்கல்வாயிற் சிவன்றிருப்புகழைப்பாடல்

பெருத்திடுமனத்தினம்பன் பெருவடிவினைப்பாவித்த
துரைத்திடுபுனிததீர்த்த மென்னுமிவ்வுலகமம்மா (௧௬)

வேறு.

வஞ்சகமில்லா நெஞ்சேநெஞ்சா
மறுமனைசெல்லாத் தாளேதாளாஞ்
செஞ்சொலுரைக்கு நாவேநாவாஞ்
செழுநிதியீயுங் கையேகையா
மஞ்சிநடுங்கு மேதிலர்தாரத்
தவையவநோக்காக் கண்ணேகண்ணா
மெஞ்சலிலாதே யிப்பரிசுடையோ
ரெய்தியவிடமே புனிதமதாமால். (௧௭)

வேறு.

கள்ளமனத்தின் விருப்புற்றார்
கடியபாவந் தனக்கஞ்சா
ருள்ளபொருளை யிலையென்பா
ருளதின்றின்றே யையுறுவார்
தொள்ளையுணர்வா லேதொன்று
சொலினுந்தர்க்க மிடத்தொடுப்பார்
பள்ளநெடுநீர் மூழ்கிடினும்
பலத்தையடையார் பாரிடத்தே (௧௮)

இமிழ்நீர்க்கடல்சூ ழிரும்புடவி
யெங்குமெய்தி யெறிதிரைமுத்
தமிழ்நீர்த்துறைக டொறுந்தோயற்
கொருப்பாடுடையார் முதனாளே
கமழ்நீரருவி மதந்தூங்குங்
கவுழிக்கபோலக் கரிமுகனை
யமிழ்தின்கனியால் வழிபட்டே
யரியபிதிர்க்கள் கடனிரப்பி. (௧௯)

எழுந்துதீர்த்தந் தொறுமெய்தி
யியன்றபொருளா லுலக்கீந்தே
யுழந்தபிதிர்க்கள் கடனாற்றி
யுற்றமறையோர் தமைக்கூட்டி
யிழந்துபாவம் போய்நல
நியமம்பிடித்த வியல்புடனே

பழுந்தம்பதியி னடைந்திடுவார்
பரமபதத்தை யடைந்திடுவார். (உ0)

பொருளைவேட்டங் கொருவனுக்கா
யொருவன்போய்நற் புனலாடி
லருளிலவனுக் காறிலொன்றே
யடையும்பலனு மதுவன்றித்
தெருளிலொருவன் றனைநினைந்தே
தருப்பைமுடிந்து தெண்ணீரின்
மருளினெஞ்ச னுடியிடி
லெட்டிலொன்று மற்றவற்கே. (உக)

ஒன்றிப்புதுநீ ராடிவோ
னுண்டிநெருன லொழிந்திட்டே
யன்றைப்பொழுதே சிர்கேச
மகற்றியிரந்தோர்க் கடைவுசெய்து
துன்றிப்புனலிற் றோய்ந்திடுத
றாயகரும மிதுநிற்க
வென்றிப்புயனே யித்துணையு
மாகமதிக்கு விளம்பியதால். (உஉ)

இனியகதலி யிலங்கைநெல்லி
யெள்ளுநாழி நெய்நாழி
பனிகொண்மதிபோ லறவெழுத்த
பச்சையரிசி நானாழி
கனிகொள்பாகோ டிலைபிளவு
நற்பூசணிக்கா யெள்ளுண்டை
புனிதமறையோர்க் கனுதினமு
மாகமதியிற் புகழ்ந்தளிக்க. (உ௩)

சுவையாறுடைய நல்லடிசி
றுய்யதூசு கஞ்சுகங்க
ளிவையாதிகளாஞ் சிற்றுண்டி
யில்லாமறையோர்க் களித்திடுக
நவைதீர்நறுநெய் பெருந்தீப
நறுங்குங்கிலியம் மகில்சந்த
மிவையாற்றூபஞ் சூளிதிருக்
கோயிலிடத்தி லியற்றிடுதல் (உச)

சொன்னமறையின் வழுவின்றித்
தூயமாக மாடினர்கள்
பொன்னினுலகத் தமரேசன்
போகமெல்லாம் புகுந்துய்ப்பா
ரன்னதகைமை யுணராம
லவனிமாந்த ரன்னியமாய்
மன்னுதவங்கண் மேற்கொண்டு
வாழாகழிப்பர் வாழ்நாளே (உரு)

வாடாவேள்வி மிகுதரும
மருவுதழலைந் திடைநிற்குங்
கோடாவிரதந் தவந்தானங்
கோடியியற்றி முடித்தாலும்
வீடாவுலகின் மாகமதி
விரும்பிப்புனலா டினரெய்தும்
பீடார்பேறு தருவனவோ
பருதிகுலத்திற் பெருந்தகையே. (உசு)

தீர்த்தவிசேடமுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் கஅ-க்குத் திருவிருத்தம் சுஅக.

பத்தொன்பதாவது,

## சுவிர்தன் முத்திபெற்ற அத்தியாயம்.

என்றுமொழிந்திடுவசிட்டன் பின்னுமா
கத்தினிய லெடுத்துச்சொல்வான்
றென்றுபடுபாதகரிற் சுவிர்தனெனுந்
தொழுகுலத்தோன் றொலையுங்காலை
யொன்றுமனப்பின்னிரக்க லூக்கத்தான்
முத்திநிலை யுற்றானந்த
நன்றிபடுகாதையினைக் கேட்டிநர
பதியென்ன நவில்வதானான் (க)

வேறு.

நகைமுகமங்கையர் புனல்குடையுந்துறை
நறுமதை யின்கரைவாய்

பகலினிளங்கதிர் மறையநெருங்கிய
பசியநறும் பொழில்சூழ்
புகழகளங்கம தெனவியல்கொண்டுயர்
புரியினமர்ந்திடுவோன்
றுகளறுமந்தணர் மரபினில்வந்திடு
சுவிர்தனெனும் பெயரான். (௨)

வேதமுமங்கமு மாகமமும்பல
வேறுள விஞ்சைகளு
மோதியுணர்ந்தவ னாகியுநெஞ்சி
னுலோப மிகுந்திடலாற்
றீதறுவிஞ்சைகள் சாலவழங்கிய
தேசிகனின் புறவே
யீதல்புரிந்தில னோர்விழலென்பது
மேயவ னன்புடனே. (௩)

நண்ணியவிஞ்சைக ளோரறுபானொடு
நாலெனு மத்துணையு
மெண்ணியுணர்ந்த வெலாநிதியாசையி
னியார்வயி னுங்கொளவே
புண்ணியமென்பது முண்டுகொலென்றிறை
புந்தியின் வைத்தறியான்
மண்ணினுணீசர் வழங்கினுநீணிதி
வந்துடனேபெறுவான். (௪)

கட்டியசெம்பொன் னுரைத்திடுவெள்ளி
கடற்பவ ளந்தரள
மெட்டியர்நாடொறும் விற்பனையானவையு
மெட்பய றோடரிசி
மட்டவிழார மலைப்படுகாரகின்
மற்றுள கோவினமும்
பட்டொடுவெண்க வரித்திரளுங்கொடு
பற்பகல் விற்றிடுவோன். (௫)

வேறொருவன்கையின் மெய்ப்பொருள்கொண்டு
விழுத்தக வானதொரு
பேறுகள்விற்றிடு நீணிதிகொண்டு
பிறர்க்கென நீர்படியு

மாறுதருஞ்சடை யானுறுபூசையு
மன்னிய ருக்குதவிச்
சோறுகளுண்டதல்லாதுதன்னில்லிடை
துய்த்தறியான் மறவோன். (சா)

வேறு.

இத்தன்மையினெவருந்தரு மிருநீணிதிபெறவே
பித்தன்புரிதருமந்தவ மாராதனைபிறவு
நித்தம்பிறர்க்கென்றேயவ னெடிதீட்டுவதல்லாற்
சித்தந்தனிற்றனக்கென்றொரு செயல்செய்திலன்றீயோன். (எ)

கூலித்தருமஞ்செய்திடு கொடியோனிதுதொழிலா
லோலக்கடலுலகத்தினி லொருகோடிபொன்னீட்டிச்
சாலத்தளர்வுறுநாளிடை தனிமூப்பதுவெய்தி
சீலச்சிகைபஞ்சொத்திட நிலையற்றுடறளர்ந்தான். (அ)

வேறு.

அன்னகாலையி லன்னவன்முன்னமே
யென்னபாவ மியற்றினம்யாவரும்
பொன்னின்மாரி பொழிகுனற்போய்ப்பெற
வுன்னின்மூப்பிடை யூறுயொடுங்கிற்றே. (கூ)

இன்றென்னில்லத் தியற்றியசோறலாற்
றுன்றுமன்னியர் சோறுண்ணப்பெற்றிலே
னன்றுநாம்பொரு ளீட்டுநலனெனக்
கன்றுசிந்தைய னெண்ணிக்கதறினன். (கo)

மற்றவேதியர் மாழ்கிடுங்காலையின்
முற்றும்யாவு முடிவுவந்தெய்தலா
லற்றைநாளிலவ் வந்தணன்புந்தியிற்
குற்றமில்லதோர் கொள்கைபொருந்தியே. (கக)

கோடிசெம்பொற் குவியலைத்தேடினேம்
வீடுசேரும் வினையநினைத்திலே
மாடுதீர்த்தமு மாக்குந்தவங்களும்
பீடைநெஞ்சாற் பெரும்பொருட்கீந்துளேம். (கஉ)

சாவுவந்து முடுகியுந்தன்னுட
லோவறுங்கிழ வாகியுருக்கெட்டு

நாவிறங்கியுந் தாணடைமாறியும்
பாவியாசை யிளமையிற்பல்கிற்றே. (கங)

வீங்குமாசையை வென்றவர்மேலவ
ரோங்குமாசையி லுற்றவர்கீழ்மையர்
வாங்குநீருல கோரைவருத்திடுந்
தீங்கிவ்வாசைமற் றேதுண்டுதீயதே. (கச)

நலங்கெடுத்திடு நாணமழித்திடுங்
குலஞ்சிதைத்திடுங் குற்றமளித்திடும்
பலன்றவிர்த்திடும் பாவத்திற்றள்ளிடு
மிலங்குமாசை யிதற்கிணையில்லையே. (கரு)

ஆதலாவிந்த வாசைத்தளையெனு
மாதுயர்ச்சிறை தன்னில்வளைப்புண்டே
நீதிதீர்த்த நிலைநின்றயாமினிச்
சாதன்முன்னந் தருமமியற்றுவேம. (கசு)

என்றுநெஞ்சினி லெண்ணியவேதியன்
றுன்றுமார்வந் துரிசறநீக்கியே
பின்றைநற்றவஞ் செய்யப்பெரிதெண்ணி
யன்றுவைகின னற்றையிற்கங்குல்வாய். (கஎ)

சோரர்வந்து தொழுகுலத்தோன்முன்றி
லாரவைகிப் பொருள்கொடுத்தேயன்ன
நீரொடுண்டு நிசியினிலாயிடைச்
சேரவைகித் துயில்வதுபோற்செய்தார். (கஅ)

மனையுளோர்களு மாமறையாளனும்
வினையமின்றி விழிதுயில்கொண்டிடுங்
கனையுநள்ளிருட் கங்குற்பொழுதினி
லனையகள்வ ரமர்ந்தனர்கூடியே. (ககூ)

புதவுவாயிற் புடைத்துப்புகுதலிற்
பதறியஞ்சும் பழமறையாளனை
விதனமுற்றிடத் தண்டம்விளைத்துடன்
சிதைவிலாப்பொருள் சேரக்கொண்டேகினர். (உ0)

கள்ளர்போகக் கதிரவன்முன்வரப்
புள்ளலம்பு புளரியங்காலையிற்

றள்ளருந்துயர் கொண்டசளக்கினன்
மெள்ளவாய்திறந் தின்னவிளம்புவான். (உக)

ஐயவோவிதி யேயறனன்றியே
வையமெங்கும் வருந்திப்படைத்திடு
துய்யகைப்பொருள் சோரர்கொண்டேகினார்
வெய்துயிர்த்து மெலிந்துவருந்தினேன். (உஉ)

எண்ணரும்பொரு ளீட்டியதன்றியே
புண்ணியஞ்சிறி தேனும்புரிந்திலேன்
மண்ணிற்றானம் வழங்கியிட்டேனல்லே
னண்ணியென்னிதி நானொன்றுந்துய்த்திலேன். (உ௩)

கொடியதானங்கள் யாரிடைக்கொண்டது
நொடியின்விற்றுட னுண்பொருளீட்டினேன்
படியின்யான்செய்த பாவமெல்லாமெடுத்
தடைவிநோதிடி னுவினடங்குமோ. (உச)

ஞாலமெங்கு நடந்துபொன்னீட்டினேன்
காலைமாலைக் கடனுங்கழித்திலேன்
சாலவாச மனத்தையுஞ்சார்ந்திலே
னேனுமந்திர மெண்ணிச்செபித்திலேன். (உரு)

நசையொழிந்தொரு நாள்வழிப்பட்டிடி
லசைவில்விண்ணவ ராக்கமின்றெய்தலாம்
பசியமென்றழைப் பூக்கொடுபோவியே
னிசையவீசனை யேத்துதலெண்ணிலேன். (உசா)

பங்கயக்கணன் பாவவிநாசனன்
மங்குல்போலு மரகதமேனியன்
சங்குசக்கர மேந்திதன்றாளினிற்
பொங்குமாமல ரேத்திப்புனைந்திலேன். (உஎ)

வேண்டினார்தம் விழைவனைத்துந்தரு
மாண்டகைப்புக ழானைமுகத்தனைக்
கூண்டசெங்கதிர்க் கற்றைக்குரிசிலைப்
பூண்டவன்பாற் புகழ்ந்துபணிந்திலேன். (உஅ)

இம்மையிற்றிரு வாக்கத்தையீந்திடு
மம்மையிற்ற னரும்பதநல்கிடும்

வெம்மைதீர்பனி வெற்புதவுங்கொடிச்
செம்மலர்ப்பத மேத்தவுஞ்செய்திலேன். (உ௯)

நினைந்தபோழ்தி னெடும்பவநீக்கிடுங்
கனைந்துவண்டார் கடுக்கைக்கடவுண்மேல்
வனைந்தசீருத் திரந்தனைவாயினாற்
புனைந்துரைத்திலேன் வேதம்புகன்றிலேன். (௩௰)

கோதனங்களி லொன்றுங்கொடுத்திலே
னாதுலர்க்குப் பொருள்களளித்திலேன்
சீதவார்பொழிற் செய்துவளர்த்திலேன்
பாதைநீர்துகர்ப் பந்தரமைத்திலேன். (௩௧)

வில்வமர்லை விமலனுக்கீந்திலேன்
நல்லசாளக் கிராமநயந்திலேன்
மல்லனீர்விடுத் தோம்பிவளர்த்திடும்
புல்லிதழ்ப்பூந் துளபம்புனைந்திலேன். (௩௨)

சித்தமுற்றுச் சிவநிசிநோற்றிலேன்
முத்தினத்தரி வாரமுயன்றிலேன்
வைத்தநீணிதி யோடுமெனைகளு
மித்தலைக்கன்றிச் செல்கதிக்கெய்துமோ. (௩௩)

போயிறந்தது காலம்புகுந்தது
நோயுங்காய முதுமைநுடக்கமு
மாயுமாவியும் வந்ததுகூற்றமு
மாயும்போதி னருந்துணையாவதே. (௩௪)

ஏதுசெய்குவ னெவ்விடத்தேகுவேன்
பீதிநெஞ்சம் பிளக்கவருந்தினேன்
மூதறிந்து தருமமுயன்றிலேன்
போதமற்ற பொறியிலியேனெனா. (௩௫)

அஞ்சிமாழ்கி யழுதிடுங்காலையி
னெஞ்சில்வேறு நினைதலுமங்ஙனே
தஞ்சமுற்றவர் போலத்தளர்வகன்
றுஞ்சினேனென் றுவகையினாழ்கினான். (௩௬)

பண்டியானிதி தேடிப்படருநாட்
கண்டல்சூழ்கரைக் கங்கையந்தீர்த்தத்திற்

றண்டுகுண்டிகை தாங்கியமாதவர்
கொண்டமாக வளத்தியல்கூறினர். (௩எ)

பண்பிற்கேட்டனன் பாதிச்சுலோகத்திற்
றண்புனற்றுறை மாகத்திற்றுழுவர்
விண்புரப்பர் விளியும்வினையெனு
வொண்பொருட்சொல் வியாதனன்றேதினன். (௩அ)

அன்னவாறு புரிகுவமல்லது
பின்னர்வேறோர் பெருந்தவமில்லென
நன்னலத்த னருமதையாற்றினிற்
றுன்னியொன்பது நாட்புனல்தோய்ந்திட்டான். (௩௯)

கொடுகிமேனி குலையப்பதாந்தினத்
திடுகுகண்ணின னேறியமூப்பினன்
முடுகியன்னதி மூழ்கிக்கோவிந்தனைக்
கடிதிறைஞ்சிக் கரையிடத்துஞ்சினன். (௪௦)

மீண்டும்பாரினில் வேதியனாகியே
யீண்டிறந்த பிரயாகையிரும்புன
லாண்டோர்மாக மதியமர்ந்தாடியே
மாண்டுசத்திய லோகமருவியே. (௪௧)

ஆதிநான்முக னோடுமினிதமர்ந்
தோதுகற்ப மொழிந்திடுங்காலத்தின்
மேதினிக்கணோர் வேதியனாகியே
நாதன்காசி யணிநகர்நண்ணினன். (௪௨)

காசியானந்தக் கானனந்தன்னிடை
மாசில்கங்கையின் மாகநீர்மூழ்கியே
பூசுரன்னவன் போன்றினனக்கணத்
தீசன்முத்தியி லேற்றினனென்பவே. (௪௩)

வேறு.

நருமதையின்மாகமதி யாடியிடுநற்பயனாற்
புருகூதனகரடைந்து புவியினின்வேதியனாகிப்
பிரயாகைப்புனலாடிப் பிரமபதஞ்சேர்ந்தபின்னர்
விரையார்காசியின்விளிந்து வீட்டின்பமெய்தினன். (௪௪)

சுவிரதன் முத்திபெற்ற அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் கக-க்குத் திருவிருத்தம் ஏ௨௫.

இருபதாவது,

## வீமனேகாதசி விரதமகிமையுரைத்த அத்தியாயம்.

என்றுமுனிவரன்பின்னு மிரவிகுலத்தின்வேந்தே
நன்றிமாகமதியி னலத்தையாரேநவில்வா
ரன்றிமதியமீரா றதனின்மாகமதிதான்
வென்றியிமையோர்தம்முன் மகவான்போல்விளங்கும். (௧)

பெருகுபாவமனைத்து மாகமதியும்பிறந்தால்
வெருவியோடிக்கதறி வெவ்வேறுகவிரியு
மரியதேவர்காந்தியனைத்துந் தெண்ணீரடங்கிப்
புரியுநன்மையென்ன வேதநான்கும்புகலும். (௨)

மறைக்குமாயையொருவி மனனத்துற்றோர்தாமு
மெறிக்குங்கதிர்வாளமரின் னெதிர்நின்றிறந்தோர்தாமு
நெறிக்கொண்மாகமதியி னெடுநாண்மூழ்குநிலையோர்
குறிக்கொண்டெய்தும்பதவி கூடார்வேந்தர்வேந்தே. (௩)

அருவிப்புனலிற்படித லதிகபலத்தையருளு
மருவிக்கூபம்வாவி யாடலொருசீர்வழங்கு
மிரையுமாறின்றென்னில் முதனாளெடுத்துவைத்த
வரியகுடத்திற்றெண்ணீர் கங்கையாடலொக்கும். (௪)

ஆடுந்திரத்தையுடையோ ரரியவிரதம்பிடித்து
நீடுமெண்ணைமூழ்கி நெடுநீராடலொழிந்து
பீடார்மாகமுடிவிற் பேசுந்தானம்வழங்கி
லோடும்பரிதியிடைபோய்த் திருமால்பாதத்துறைவார். (௫)

ஆரேமாகமதியின் பலத்தினளவையிசைப்பார்
பாரேழுடைவிறபுரந்த பாண்டுதனயரவருள்
வாரார்கழற்கால்வீம னாசாரியனைவணங்கிச்
சீரார்தவமாமுனிமேய கேளென்றிதனைத்தெரித்தான். (௬)

அடியேன்றன்னையுலகோ ரரிவாரத்தினயிலுங்
கொடியோனென்பரஃது மன்றியரவககொடியோன்
வடிவாள்வேற்கையிளையோர் மற்றச்சகுனிமுதலா
முடியார்வேந்தரெல்லா மிதனைகைத்துமொழிவார். (௭)

உண்டியொழியமாட்டே னேகாதசிவந்துற்றாற்
பண்டையிலும்வாளிரவி வருமுன்பசியோமிகுமாற்
கொண்டபலமூலத்தாற் கொடியபசியைத்தகைவே
னண்டர்குருவேயனையா யடியேற்கருளென்றிரந்தான். (௮)

ஒருநாளியற்றும்விரத மோராண்டியற்றும்பலத்தே
விளைவிற்றருவதாக வேண்டுமெதுநீவிளம்பென்
றரசற்கரசனுரைப்ப வழகிற்றென்றுவந்து
குருபுங்கவகேளென்னாக் குருபுங்கவனுங்கூறும். (௯)

வேறு.

வானோர்புகழுமாகமதி வளரும்பக்கத்தரிவாரந்
தானோர்முறைநீயியற்றுதியே லோராண்டியற்றுந்தகைமையதா
மீனோர்விசும்பின்வெயில்பரப்ப விளியுமிருளும்பனியும்போற்
கானோர்தொடையாய்பாவவினை யிதனாலொழிந்துகட்டறுமே. (௧௦)

கங்கைமுதலாந்திருநதியிற் கலந்துநெடுநாட்படிந்தோரும்
பொங்குதுரகப்பெருவேள்வி யொருநூறடைவிற்புரிந்தோருந்
தங்கவரைபோற்பொற்குவிய றானமாகவளித்தோரும்
பங்கமிலதாமரிவாரப் பலத்திற்பாதிபெறுரன்றே. (௧௧)

அலைக்குங்கடல்சூழவனியெல்லா மளித்தபலனங்கொருதட்டு
நிலைக்குமரிவாரப்பலன்மற் றொருதட்டிலுமாய்நிறுக்குங்காற்
றுலைத்தட்டிணையிலரிவாரத் தட்டுப்பாரந்தூங்கிடுமாற்
சிலைக்கையரசேயிதற்கிணையாய்ச் செப்பும்விரதமொன்றுளதோ. ()

தீற்றுந்தரையினெற்சொரிந்து தெண்ணீர்க்கும்பமதில்வைத்தே
யாற்றுந்துகிலையதின்மேலே யழகாய்வைத்துப்பின்னதின்மேன்
மாற்றினுயர்ந்தபொன்னாற்செய் வராகமூர்த்திதனையிருத்திப்
போற்றியாவாகனமாதி யங்கப்பூசைபுரிந்திட்டே. (௧௩)

உரைத்தவிதியேயுபசார முள்ளவெல்லாமொருங்காற்றிப்
பரித்தவிரவிற்றுயிலாமற் பரமன்கதையாற்போதகற்றி
நிரைத்தகதிரோனெழுமளவி னியமமுடித்துநெடுமாலை
யருத்தியுடனேயருச்சித்துப் பூசைமுடித்தவமையத்தில். (௧௪)

ஆசாரியனுக்கத்துணையு மன்பின்முறையினளித்தபின்னர்த்
தேசார்மறையோர்தம்மோடுஞ் செறிந்தவிருந்தோர்தம்மோடும்

## அத்தியாயம்.

கூசாக்கிளைஞர் தம்மோடுங் குழுமிப்பெரும்பாரணஞ்செய்தோர்
வீசார்கலிசூழுலகினிடை மீண்டும்பிறவார்வேல்வேந்தே. (கரு)

இன்னமுறையேயிவ்விரத மியற்றுவாயென்றிசைத்திடலு
மன்னுதருமன் றிருத்துணையாம் வடிவாள்வீமனிசைந்தேகி
யன்னதிதிவந்தெய்திடலு மற்றைப்புலரிக்கடன்கழித்து
மின்னுதிகிரித்திருமாலை விதித்தமுறையின்வழிபட்டே. (கசு)

பரிதிக்கடவுணன்பகலைப் படருங்காலைப்பசியுடற்ற
வரிதினெழுந்தத்தினபுரத்தி னகன்பூஞ்சோலைகடுவெய்திப்
பிரதைகுமரனீரைஞ்ஞூ றிளநீர்குடித்துப்பெரும்பனசந்
தருதீங்கனியீராயிரந்தா னருந்திப்பசியுந்தணியானாய். (கள)

மொழியார்கருப்புப்பெருங்கட்டு முன்னூறருந்தித்தீந்தேறல்
வழியார்கதலிநெடுங்குலைக ளீரைஞ்ஞூறுவகுத்துண்டு
பொழிபாற்குளம்புநீரருந்திப் போகாதுயிரைப்புறங்காத்து
விழியாவிருந்துநிசிகழித்துப் புலரிப்போதின்விரைந்தெழுந்தே. ( )

காயும்வடவாவனல்போல வயிற்றுப்பசித்தீக்கனன்றெரியத்
தோயமூழ்கிக்கடன்கழித்துச் சொன்னவிரதத்தொழின்முடித்துச்
சீயமனையானெய்தோய்த்த நெகிழ்ந்ததிரளைமூன்றுண்டு
மேயகருணைத்ததிதீம்பால் வெள்ளத்தோடுமிகவுண்டான். (ககூ)

வன்பிற்பசியையுள்ளடக்கி வாயுதனயன்பாரணஞ்செய்
தின்புற்றிடலாலன்றுமுதல் வீமனேகாதசியென்ன
வன்பிற்புகலப்பட்டதுதா னரியவிந்தவிரதமின்றித்
துன்பக்கடலிற்றுளைவாரைக் கரையினேற்றுந்தோணியுண்டோ. ( )

அரியவேள்விகளின்மிக்க வயமேதம்போல்வரையுளெல்லாம்
பரியமேருவதுபோலப் பத்தர்கணத்துமாயனைப்போல்
விரியுநீருட்கங்கையைப்போல் விண்மீன்குழாத்துவிதுவினைப்போ
லுரியவிரதமவற்றுளெல்லா மாகமதியேயுயர்ந்ததுகாண். (உக)

விடங்கொப்பளிக்குந்துளையெயிற்று விரிபைத்தலையாடரவமெல்லா
மடங்கிக்கலுழன்றலைகாண வஞ்சியொதுங்குமதுபோல
முடங்குமுளைவாம்பரித்திண்டே ரிரவிமகரமுற்றுதலுந்
துடங்குவினையிற்பாவமெல்லாந் துரிசற்றிரிந்துதொலைந்திடுமே. ( )

வேறு.

மதியிலாக்கங்குல்போன்று மலரிலாவாவிபோன்று
நிதியிலாவிளமைபோன்று நெய்யிலாவடிசில்போன்று

நதியிலாநகரம்போன்று நாற்றமின்மலரேபோன்றும்
விதியிஞன்மாகதிங்கட் புனல்புகான்விளக்கமன்றே. (உ௩)

வேறு.

வாஞதவன் மாமகரத்துறலும்
வளர்வைகறை யின்னதியின்றுறைபோய்
தேஞர்துளவத்திரு மாலெனவுஞ்
சிவனேயென வும்புனன்மூழ்கிடுவோர்
காஞர்மல ரைந்தருநீழலின்வாய்க்
கனவாலயம் வாழுமரம்பையர்தம்
பூநாறிதழிற்சுதை பெய்திளகும்
புணர்மென்முலேயிற் றுய்யல்புகுந்துறைவார். (உ௪)

ஏகாதசியோடியை யும்புனிதத்
தெழின்மாகம திந்திரஞர்புகல்வார்
மோகாதியின் வைகிடுமாணிடரை
முத்திக்கரை யேற்றுவதென்றுரையாய்
பாகார்மொழி மங்கையோர்பங்குறையும்
பரமன்சிவ மாநிசியொன்றதஞற்
சேகார்தொழில் விற்கொலேவேடனேநற்
சிவலோக மிருத்தியதென்றனனே. (உ௫)

விமனேகாதசி விரதமகிமையுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆ௸ அத்தியாயம் ௨0-க்குத் திருவிருத்தம் எ௫0.

இருபத்தோராவது,

## சிவராத்திரி மகிமையுரைத்த அத்தியாயம்.

முகமஞேடுநீதிசான் முனிவனிதுகூறவே
யகமகிழ்விஞேடெழா வரசரிியேறஞன்
சிகரவரையதனின்வாழ் சிவநிசியின்மான்மியம்
புகரணயதேசிகா புகறியெனவோதிஞன். (க)

அறைகழலினீடுதா ளரசனிதுகூறவே
மறைமுனிவஞேதுவான் மதிகொள்குடமாதமுங்
குறைவினெடுமீனமுங் குழுமுமிடையாகவே
பிறைகுறையுநாளினீள் பெருகுபதிஞலதாய். (உ)

வருதிதியதாகுமால் வரதனிசியானதே
யரஹரவதார்சொல்வா ரதன்மகிமைநாதன்மேற்
பரவரியவில்வமும் பசிபதனைதூவியோ
ரிரவுதுயில்நீங்குவா ரிறைவனுலகேறுவார். (௩)

மகமதனுண்மேலதாம் வருதுரகமேதமே
நகமதனுண்மேலதாம் நவையின்வடமேருவே
புகன்மறையுண்மேலதாம் புனிதமிருசாமமே
திகழ்விரதமேலதாஞ் சிவநிசியதாவதே (௪)

உலகில்வருபாவமா முணர்சமிதையாவையு
நிலைகருகிமாய்வுறு நிமிடமதினீறதாய்த்
தொலைவில்சிகைவீசியே சுடுகனலியாகுமாற்
சிலைவலிசெய்தோளினாய் சிவநிசியதாவதே. (௫)

## வேறு.

பொங்கியவளங்களோங்குஞ் சாகரபுரந்தைச்சூழ்ந்து
மங்குல்போழ்நெடியயிஞ்சிப் புறத்தினின்மன்னிவாழ்வோ
னங்குலனென்னுநாமத் தடுகொலைப்பகழிவேடன்
செங்கணன்குருதிதோய்ந்த வுகிரினன்சிங்கமொப்பான். (௬)

வெண்ணிறத்தசைகள்தின்று வெடிபுலால்கமழும்வாயான்
றண்ணளிசிறிதுமில்லான் றமரொடுங்குழுமிவாழ்வோன்
றுண்ணெனவெழுந்தோர்ஞான்றிற் றொடுகழற்றோளும்வீக்கித்
திண்ணிதிற்கரியகச்சை மருங்குறச்செறித்துநீவி. (௭)

நிணங்கொளும்பகழித்தூணி வெரினுறநெருங்கவார்த்து
வணங்கியசாபமேந்தி மயிரணிச்சுரிகைசேர்த்து
கணங்கொளுங்கரியகுஞ்சிக் கயிற்றினில்விசித்துக்கட்டித்
துணங்கையிட்டலகைசெல்ல வேட்டைமேற்றுணிந்துபோனான். ()

குரவமாமருதுபுன்னை கோங்குவேல்கடம்புவன்னி
மரவங்கூவிளமிரத்தி வெள்ளிலால்மாதுளங்க
மரசுபாதிரிசெருந்தி யங்கோலமகில்வேய்சந்தஞ்
சுரபுன்னைகுடசம்வேங்கை மராமரஞ்சூரைகாரை. (௯)

இன்னனமுதலாயுள்ள மரத்திறனெருங்கியெங்கு
மின்னுவெம்பரிதிவானோன் வெயிற்கதிர்நுழையாதியாரும

துன்னருங்கொடுமுட்கானிற் றமியனாய்ச்சென்றுதொக்கான்
வன்னியிற்கொடியசீற்றக் கொலைத்தொழில்மறவன்மாதோ. (௧௦)

கொய்யுளைமடங்கலேறு கோட்டுவாரணத்திற்பாய்ந்து
வெய்யவள்ளுகிரிற்றுங்க விபுலமத்தகத்தைப்போழ்ந்து
துய்யவெண்மருப்பைவாங்கிச் சோரியோடுகுத்தமுத்த
மையறுமாதுளங்கம் பழமெனவயங்குமோர்பால். (௧௧)

குடாவடியுளியமீயற் குரும்பைதொட்டுண்ணுமோர்பால்
கடாநிறைவேழத்தோடு கவையமேற்றுறுதலோர்பால்
விடாதிகல்வெகுளிவேங்கை கேழலைவெகுளுமோர்பால்
படாமுலையவர்கணைய வுழைக்குலம்பாயுமோர்பால். (௧௨)

இரும்பெனமுறியுநீள்கோட் டிரலைகளுகைக்குமோர்பா
லரும்பியசூழியொண்கட் குறுமுயலகலுமோர்பால்
பெரும்புயன்முழக்கமென்னப் பிடிக்குலம்பிளிறுமோர்பாற்
றிரும்பியமுகத்தினோடுஞ் செஞ்சுணங்கீட்டமோர்பால். (௧௩)

விதுவினைக்கவருஞ்சீற்ற விடவெயிற்றகல்வாய்நாகம்
பதவிவிட்டடவியெய்திப் படிந்ததுபோலவாகக்
கதழெரியுயிர்ப்புக்காற்றிற் கானகங்கறிந்துவாடப்
புதையிருணிறத்தபாந்தண் முளைதொறும்புகுவதோர்பால். (௧௪)

கோகிலம்பூவைகிள்ளை குக்கில்காரண்டமாந்தை
தோகைபாறெருவையன்றில் சுவணநீர்க்காகநாரை
கூகையாண்டலைவண்டானங் குரண்டஞ்சிச்சிலிகுறும்பூள்
காகஞ்சாதகப்புண்ணேமி கபோதகநெருங்குமெங்கும். (௧௫)

இத்திரமனைத்துநோக்கி வேட்டத்தினியல்பிற்கேற்ற
குத்திரக்கண்ணியூன்றிக் கோணிநீஇவார்களோடித்
தத்துதாள்பிணிக்கவல்ல வியந்திரந்தரையிற்சேர்த்திப்
பத்திரமரங்கடோறும் பல்வலைநெருங்கவீக்கி. (௧௬)

கட்டியவலையிற்பாய விலங்கினங்கலங்கவோட்டுந்
தொட்டவெஞ்சிலையின்வாளி துறந்திடுங்குணில்கள்வீசும்
விட்டெறிகவண்கலோச்சும் விடர்மரப்பழுவமேறித்
தட்டவாயரவமோச்சித் தவழுஞ்சூலுடும்புநேடும். (௧௭)

பாசங்கள்பரியத்தாவி முன்னரேபடர்ந்துசெல்லக்
காய்சினஞமலியேவுங் கனைகுரற்பறவைபோல

மாசறவிளித்துக்கூவும் வல்லிலங்குடற்றுமாபோ
லாசறப்பயிலுமாணி னடிகண்டுதொடர்ந்துபற்றும். (க௮)

இன்னனவேட்டஞ்செய்து மெலிந்துடலிளைத்ததல்லாற்
றுன்னியோர்விலங்குமாய்க்கப் பெற்றிலன்றுயர்கொணெஞ்ச
னின்னலுற்றிருந்தகாலை யெரித்தவெங்கதிரைவாங்கிப்
பொன்னெடுந்தேரின்வெய்யோன் குடகடற்புறத்தனானான்.(க௯)

திருந்துகோலோச்சிவையஞ் செலுத்துதேர்வேந்தன்மாயப்
பொருந்தியகேளீர்வையம் புரப்பதற்கடைவதேயச்
சரிந்துபுன்மாலையெய்தத் தாபமுற்றிடைந்துவேடன்
விரிந்தபூஞ்சூழியெய்தி வினையமேதென்னநின்றான் (௨௦)

விண்புகும்பருதிசெல்ல மாலையும்விரையினீங்கக்
கண்புதைத்தனையுங்கங்குற் காரிருள்கவித்தலாலே
மண்படர்வரனங்கான மாதிரமென்றுந்தோன்றா
வெண்பிறிதில்லையூனற் றிடவிவணெய்திற்றென்று (௨க)

மறுகியவுளத்தன்கண்ணீர் வழிந்திடுமுகத்தன்மாழ்கிச்
சிறுவர்களூனற்றின்னே வாடுவரென்றுதேம்பும்
பிறைநுதலெயிற்றிசோகம் பெரிதெண்ணிமயங்கிவாடு
நறியவூனின்றிச்சென்றா லுணவுண்டோநமருக்கென்னும். (௨௨)

சிறந்தவைகளையிற்சேர்த்து மென்னினுந்தினவூனற்று
வெறுங்கையோடெய்தினேமேற் பசியினான்மெலிவரந்தோ
உறைந்திவணெய்தித்தெண்ணீ ருணவரும்விலங்குபார்த்து
மறைந்திருந்தெய்துகோற லலனெனமனத்துட்கொண்டான். ()

நீர்த்துறையிடைகரந்து நின்றிடிற்றோன்றுமென்னச்
சேர்த்திடுவில்லின்வாளிச் செங்கையன்சினத்தநெஞ்சன்
வேர்த்திடுமெய்யனீலக் கஞ்சுகன்விரைவிலுற்றுப்
பார்த்தொருவில்வத்தேறிப் படுதழைப்பணையிற்சேர்ந்தான் ()

வையிலைச்சுரிகையாலே முள்ளெலாநறுக்கிமாற்றிப்
பெய்கணைவிலங்கினேவிற் பெரிதிடைதடுக்குமென்னக்
கொய்தனனெறிந்தான்பச்சைக் கூவிளந்தளிரையாங்கண்
கையினிற்சாபநாணிற் கணைதொடுத்திருந்தான்மன்றோ. (௨௫)

குழைத்தபாசடைகடுன்னுங் கூவிளமூலத்தின்கண்
மழைத்ததண்புயல்போனீல மணிமிடற்றாதியென்னத்

தழைத்தபொற்புராணலிங்கந் தனையினிலெவரும்பூசை
யிழைத்தவேட்டுவனுங்காணு தாயிடையிருந்ததன்றே. (உசு)

எய்திடும்விலங்குதன்னை மறைக்குமிக்குழைகளென்னக்
கொய்தவனெறியவீழ்ந்த கூவிளந்தளிர்களெல்லாம்
பொய்கையங்கரையின்வைகும் புராதனலிங்கசென்னி
வைதிகநெறியிற்சாத்து மலரெனமலிந்தவன்றே. (உஎ)

சீதளப்பனியின்மூழ்குஞ் சிரத்தினனுணவுதீர்ந்தான்
போதிருளுறக்கநீத்தான் புராரிமுன்வைகிநின்றான்
ஏதமற்றெறிந்தவில்வத் தியற்றியவழிபாடுற்றான்
மாதவரிவன்போல்யாரே சிவநிசிவரம்பினின்றார். (உஅ)

மயர்வுறுவுலகத்தோர்தம் வல்வினைக்கருமம்வாய்ப்ப
வயர்வறச்சான்றாய்நோக்கு மமலனும்விலங்கினீட்டத்
தியல்புறுவரவுநோக்குங் கிராதனுமிருவரன்றித்
துயிலினையறைக்கங்குல் துறந்திருந்தார்கள்யாரோ. (உகூ)

இன்னவித்தலையவாக வெயினனைவரவுகாணுத்
தன்னமர்காதற்கற்பி னெயிற்றியுந்தளர்ந்துவாடித்
துன்னியகுன்றிமாலை முலையினள்விழிநீர்சோரப்
பன்னினளிரங்கியாற்று தினையனபகர்தலுற்றாள். (ந0)

வேறு.

பேதைப்பருவத்தே வந்தென்னைக்கைபபிடித்தா
யீதித்துணைநாளு மென்னைப்பிரிந்தறியாய்
காதற்கணவாயிக் கங்குலிடைமீளாம
லேதுற்றனையிடையூ றேதென்றறியேனே. (நக)

சாயுஞ்சிலையிற் சரங்கொளுவுமுன்னெதிர்ந்து
சீயங்கொலைபுரியத் தோள்வலிகடேர்ந்தனையோ
காயுஞ்சினவா ளரவங்கடித்தொறுக்கப்
பாயும்புலிபோல்வா யவ்விடத்திற்பட்டாயோ (நஉ)

மானிடவர்செல்லா வனத்திற்றமியாளாய்ப்
போனவழிதேடிப் புகுவேனெனவெழுந்தால்
வானவிருடன்றி வழியறியலாற்றுகிலேன்
றேனுலவுதாரா யெனவழுதுதேம்பினாள். (நந)

வேறு.

ஊன்கிடையாதுவாடி யுணவற்றுபபனியிற்றோய்ந்து
மான்பிணைவரவுபார்த்துத் துயிலற்றுமரத்தினும்பர்த்
தேன்றுணர்பானம்பண்ணி யிருந்துழியிருளைச்சீறி
வான்படர்புரவித்தேரோ னுதையமால்வரையில்வந்தான். (௩௪)

வயங்கியகதிரோனெய்தும் வைகறையதனின்வேடன்
கயங்கியவுளத்தன்வில்வப் பணைநின்றுகடிதிழிந்து
மயங்கியமனைவிதன்னை வருத்தந்தீர்த்திடுவானெல்லை
யியங்கியகாவின்முந்திக் கதுமெனவெழுந்துவந்தான். (௩௫)

மற்றவன்றன்னைநேடி மைந்தரையுடனேகொண்டு
சிற்றிடையெயிற்றிகானிற் சென்றிடுநெறியிற்கண்டு
கற்றடந்தோளிற்புல்லிக் கணவனுக்கிரங்கிமாழ்க
வுற்றவன்றானுமின்ன லொழிகெனமுகமன்சொன்னான். (௩௬)

இளஞ்சிறார்தாமுங்காத லெயிற்றியும்பின்னேபோத
வளைந்தவிற்றடக்கைவேடன் மனையினில்வந்துவைகி
யுளைந்தெழுதுன்பநீங்கி யூணடியவரோடுண்டு
விளைந்திடுவிதியின்கோட்பாற் சிறிதுநாட்செல்லவீந்தான். (௩௭)

வேறு.

அஞ்சனகிரித்தொகுதி யன்னதொருமெய்யர்
மஞ்சிடியெனக்குமுறும் வாய்மையர்கள்வள்வாய்ச்
சிஞ்சுகமெனத்தெறு சினத்தினர்வதைக்கு
நெஞ்சினர்கள்காலபடர் வந்தனர்நிறைந்தார். (௩௮)

எற்றுதியெனச்சில ரியம்புவர்கள்வாளாற்
செற்றுதிரெனச்சிலர் செயிற்பர்நெடுநாணிற்
பற்றுதிரெனச்சிலர் பகர்ந்திடுவர்வேலா
லிற்றுடல்கழிந்திட வெறிந்திடுமினென்பார். (௩௯)

மண்ணினுயர்தேருருளின் வட்டமெனலாய
கண்ணழலகால்வயவர் கைப்படுமவ்வேட
னெண்ணநினைவுற்றழு திரங்கியிடுமெல்லை
விண்ணினொளிபொங்குமோர் விமானமொடுவந்தார். (௪௦)

வந்தகணநாதர்நெடு வாளரவுபற்று
மிந்துவெனநின்றதுயர் வேடனையெடுத்தே

மந்தரமெனத்தகைய மானமிசை வையா
வந்தரவிசும்பிடை யெழுந்தனரகன்றார். (௪௧)

வெங்கொலைசெய்வேடனை விமானமிசையேற்றி
யிங்கிவர்கள்சென்றபடி கண்டியமதூதா
மங்குலனமேனியர்கள் வாளெயிறுதின்று
பொங்கியசினத்தினர் புகுந்திவையுரைத்தார். (௪௨)

வேறு.

யாவர்விடுத்ததூதுவர்நீ ரியாங்கள்பற்றுமிவன்றனைக்
காவல்விடுத்துவிமானத்தி னேற்றிவானிற்கடிதகல்வீர்
மேவுமிவனைவிண்மேவ விடுத்தற்கிசையேமிவ்வேடன்
பாவமிழைத்ததன்றியற னுண்டேலதுவும்பகர்ந்திடுவீர். (௪௩)

கற்பங்கழிக்குமவிரிஞ்சன்முத லெங்கோனாணைகடப்பதன்றாற்
பொற்பொன்றியவிந்திரன்முதலாம் புத்தேளவரும்புரந்திடினு
மற்பந்தவமென்றியற்றானை விமானத்தேற்றியகறிரெனில்
வெற்பின்றலைகள்போனுமது சிரங்களுருளவீட்டுவமால். (௪௪)

என்னமொழியுமொழிகேட்டுக கண்கள்வெகுளவிரைந்தெழுந்து
பொன்னினுலகிற்புரந்தரனைப் போகவதியிற்சலபதியைத்
துன்னுமழகைக்கியக்கர்மன்னைச் சுடுகாடதினிலந்தகனை
மன்னியுறையவருள்புரிந்த மகேசன்பணிக்கவந்தேமால். (௪௫)

எங்கள்பெருமானடியார்தன் னடியார்நீவிரெதிர்ந்தெம்பாற்
பொங்குசெருக்கிற்புயவீரம் புகலத்தகுமோபொறியில்லீர்
சிங்கமுறுத்துவரும்போது சிறுபுன்முயலோசெருவேற்குங்
கங்கைமுடித்தானடியார்முன் காலபடரோவெதிர்வதுவே. (௪௬)

காலகாலனவிரிஞ்சனொடு கரியோனறியாக்கண்ணுதலோன்
சூலபாணிவிடுக்கவரு தூதர்க்கெதிரோநீரென்று
வாலகாலமெனப்பொங்கி யவர்கைமுசலந்தனைபறித்துப்
பாலமார்புதலைசிதற மோணிந்துபுடைத்துவிண்படர்ந்தார். (௪௭)

இழந்தபடையர்செஞ்சோரி யிறைக்குந்தலையர்நடுநடுங்கி
யுழந்ததுயரானீர்வறிதா யுலர்ந்தநாவொரொடுங்குமெய்யர்
சுழன்றவிழியர்நினைதோறுந் துண்ணென்னெஞ்சரழுதரற்றிய
பழந்தம்பதியினிடையோடிப் பருதிமகன்முன்போய்விழுந்தார்.()

சிவராத்திரி மகிமையுரைத்த அத்தியாயம் முற்றிற்று.

ஆ அத்தியாயம் ௨௧-க்குத் திருவிருத்தம் ௭௬௮.

இருபத்திரண்டாவது,

# இயமன் சிவனிடத்துச்சென்ற அத்தியாயம்.

போழ்ந்தமெய்யர் போகுமுயிர்ப்பினர்
வீழ்ந்துதாளை வணங்குறும்வேலையி
லாழ்ந்தகேள்வி யறிஞர்நமன்றனைச்
சூழ்ந்திருந்த சபையினைச்சொல்லுவாம். (க)

உலகொறுத்திடுங் காலனுயர்மிருத்
தலகிலாநிலை யந்தகன்மூவருங்
கொலைகொள்வேலினர் கோரவுருவினர்
மலைகள்போல மருங்கினில்வைகவே. (உ)

பிணியின்முந்து பெருங்கயக்குட்டநோய்
தணிவருஞ்சுரந் தண்குளிர்வெப்பநீள்
கணிதமற்ற வறுமைகலியொடு
பணிவிடைத்தொழிற் பாங்கினினிற்கவே. (௩)

மறப்புச்சோம்பு வருத்தமழுகையாற்
சிறப்பிலாத பசிசினந்தீக்குண
மொறுத்ததாகங் குரோதமுலோபமோ
டிறுத்தகாமங்க ளேவலினிற்கவே. (௪)

விளங்குமோகம் வயிரம்விண்மீனெனத்
துளங்குசத்த முனிக்கணந்தொல்லைநூ
லுளங்கொள்சித்திர குத்தனுமுண்மைநூ
லளந்தசெங்கோ லரசருஞ்சூழவே. (௫)

இருந்தகூற்றுவ னெய்தியதூதனைப்
புரிந்துநோக்கிப் புகையெழக்கண்களி
லெரிந்தசிந்தைய னேழுலகத்தையு
மருந்துவான்போ லழன்றமுகத்தினன். (௬)

கொண்டசீற்றமுந் தூதுவர்கோலமுங்
கண்டுபேரவை முற்றுங்கலங்கியே
பண்டையோவியம் போலப்பதைப்பற்று
விண்டபேருயிர்ப் பும்விடவஞ்சினார். (௭)

துயக்கமெய்திய தூதுவரஞ்சிநீ
ரியக்கராக்கத ரோவிமையோர்களோ

தியக்கமெய்த நுமைச்செகுத்தாரெவர்
மயக்கமற்றிது போதில்வழங்குவீர். (அ)

யாவராயினு மெவ்வுலகத்தினும்
போவராயினும் புக்கிடம்புக்கவர்
சாவதாக்கிச் சினந்தணிப்பேனெனக்
காவலன்சொலத் தூதர்கழறினார் (கூ)

வேறு.

என்னுரை செய்குவ மெந்தாய்
நின்னுரை யாணையி னேர்ந்தே
பன்னிய பாதக வேட
னின்னுயிர் கொள்ள வெழுந்தே. (கo)

சென்றவ னாவி செகுத்தோம்
பின்றைய னாவி பிணித்தே
முன்றிரு முன்றினி னுய்ப்பா
மின்று வழக்கோ டெதிர்ந்தோம். (கக)

எட்டொ டிரண்டு திசைக்கும்
விட்டெரி சோதி விமானத்
தட்டினில் வந்திடு தக்கோர்
மட்டில ரெம்மை வளைத்தார் (கஉ)

ஈடு படுத்தி யெதிர்த்தார்
வேடனை யும்விடு வித்தார்
மாடுறு மானம தேற்றி
யோடி வடாதிசை யுற்றார். (கங)

பின்பு தொடர்ந்து பெயர்ந்தோ
முன்பவ னேக மொழிந்தே
யன்பற வெங்கதை யாலே
யென்பற மோதி யெறிந்தார். (கச)

அன்னவர் சொன்ன வழற்சொற்
றென்னவ நின்னுழை செப்பிற்
சொன்னவர் நாவு துணிந்தே
மின்னிய மண்ணிடை வீழும். (கரு)

## கஉஉ இயமன் சிவனிடத்துச்சென்ற அத்தியாயம்.

காரிடி யன்ன கதிர்ப்பா
ரேர்பெறு மெம்மிறை வற்கே
நீரடி யானடி யாரென்
றோர்மொழி யெம்மை யுரைத்தார். (கசு)

என்ன நிரப்பி யிருந்தா
னன்னது கால னயிற்றான்
சொன்னது சங்கரர் தூதென
றுன்னின னெஞ்சி னுணர்ந்தான் (கஎ)

மாதவ ரோடயல் வைகுங்
கோதமில் சித்திர குப்தா
கேதம விளைத்த கிராதன்
யாது தவத்த னியம்பாய். (கஅ)

என்றிது கூற்று னியம்ப
நன்றிது வென்ன நயந்தே
தொன்று படைத்த தொடர்ச்சி
நின்று கணக்கு நினைந்தான். (க௯)

ஆதி விரிஞ்ச னமைத்த
போது துடங்கிய புல்லன்
சாத லுறுந்துணை தானும்
பாதக மேபயில் வுற்றான். (உ0)

மண்ணிடை மாணிட ரெல்லா
நண்ணிய பாதக நாடி
யெண்ணிய போதி லிவன்றன்
பண்ணிய தேமிகு பாவம் (உக)

கற்றுணர் வெய்து கணக்கி
னிற்றென வோதி யிருப்பக்
கொற்றவ னாகிய கூற்று
மற்றிது செய்ய மதித்தான். (உஉ)

ஆக்கிய போக ளழித்தே
போக்கிடில் யாவர் புறப்பார்
நீக்கிய வீசன்முன் னோர்ந்த
தூக்கிய நங்குறை சொல்வோம. (உ௩)

முத்திரை சால முழுதுதண்
டித்துணை யுங்கொ டெழுந்தே
சித்திர குத்த செறிந்தே
மைக்கரு கண்டன்முன் வைப்போம் (௨௪)

எம்மொடு மெய்துதி யென்றே
மைம்மலை போன்பயி டத்தின்
மெய்மையயி னேறி விரைந்தே
சொமலின் வெற்பிடை சென்றான் (௨௫)

வேறு.

வெள்ளிமால்வரையினகண் வெளிமுகட்டொளிகள்விம்முந்
தள்ளருமணியிற்செய்த தமனியக்கோயில்வாயி
லெள்ளரும்வினையத்தெய்தி யெருமைவிட்டிறங்கிக்கால
னுள்ளியநந்திபாற்போய்த் தன்வரவுரைத்துநின்றான். (௨௬)

கூற்றுவன்வரவையன்னோன் கொன்றைவேணியனுக்கோதச்
சாற்றினோன்றன்னையீங்குத் தருகெனவிறைவன்கூறக்
காற்றினுங்கடுகிச்சென்றீங் கடைகெனக்காலனெய்திப்
போற்றினன்பணிந்தானந்தி நிறுவியபுலத்தினின்றான். (௨௭)

பங்கயத்துறையுமாதி விரிஞ்சனும்பதின்மர்தாமுஞ்
சங்கொடுதிகிரியேந்திச் சலதியிற்றுயில்கொள்வானு
மங்கையிந்திராணிகோல வனமுலைதிளைக்குங்கோவுஞ்
செங்கதிர்க்கிரணத்திண்டே ராதிருசெல்வர்தாமும். (௨௮)

மருத்துவர்தாமுமுன்னீர் வருணனுமனைகழுதூர்ப்
பரித்திடுமியக்கர்கோவும் படர்சிகைக்கனலின்வேந்துஞ்
சரித்திடுபிணையையூரு நிருதியுஞ்சகதண்டத்தை
விரித்திடுபணத்திலேற்கும் விரல்வலிபுரகர்வேந்தும். (௨௯)

கடகரிவதனங்கொண்ட கணங்களுக்கரசன்றானும்
படவரவணையுண்ணுங் கேகயப்பரியினோனும்
வடவரையணுங்கமோத மாருதக்கடவுடானு
முடலைநெட்டலைகையேறு மூழுப்படைவீரன்றானும். (௩௰)

நாரதன்முதலாயுள்ள நற்சுரமுனிவர்தாமும்
பாரினிலாதியான பரமமாமுனிவர்தாமும்

## ௧௨௪ இயமன் சிவனிடத்துச்சென்ற அத்தியாயம்.

வாரிதியவையோரேழு மால்வரைக்குலங்களேழுஞ்
சீருடைக்கங்கையாதி தீர்த்தமாநதியோரேழும். (௩௧)

விஞ்சையரியக்கர்சித்தர் விறல்வலிசுகருடர்தாமும்
வஞ்சிநுண்ணுசுப்புத்தெய்வ மகளிரும்பிறருஞ்சுற்றி
யஞ்சலிசெய்துபோற்று மவர்குறைவினையபின்னர்
நஞ்சணிகண்டத்தண்ண லமனதுமுகத்தைநோக்கி. (௩௨)

கடைக்கணால்வினவலோடுங் காலனுங்களித்தநெஞ்சன்
விடைக்கொடியுயர்த்ததோன்றல் விரைமலர்த்தாளின்வீழ்ந்து
படைத்தகளிநகழிக்குமாதிப பண்ணவன்சரிதநெஞ்சி
னடைத்தனனுவிரை வெடுத்தெடுத்துறைவதானான் (௩௩)

வேறு

தேவர்க்குந்தேவே சிவனேமறைமுதலே
மூவர்க்குமுத்தொழிலுங் கற்பித்தமுன்னோனே
காவற்கடவுளே கண்மூன்றுடையோனே
யாவர்க்குமாயா யிருவினையுமீவோனே. (௩௪)

வேண்டுமுள்ளத்தின் விருப்புவெறுப்பற்றோனே
நீண்டபிறவி நிறையிருளைமாற்றியிடக்
கூண்டகனற்கொழுந்தே கோவாமணிமுதலே
பாண்டுதனயனுக்குப் பாசுபதமீந்தோனே (௩௫)

காமற்கடிந்து கவுரிதனைத்தோய்வோனே
யீமத்திருந்து மெழிமறுறக்கமீவோனே
சேமித்தநஞ்சுண்டு தேவரமுதீந்தோனே
சோமக்கலையணிந்து துள்ளிளமானேற்றோனே (௩௬)

எப்புரமும்வாழவருட் கண்ணாலெழின்மதவே
ளப்புரமுந்நீற வழல்கொழுத்துமபெம்மானே
முப்புரமுந்தீய முறுவலித்தமுன்னவனே
துப்புரவுந்துய்ப்பவனு மாகிநின்றதொல்லோனே. (௩௭)

ஆக்கவிதியாயு மளிக்கநெடுமாலாயு
நீக்கவரனாயு நிறைந்துநின்றகாரணனே
பாக்கியநிற்காணும் பழந்தவத்தினேன்பகரும்
வாக்கியவிண்ணப்பமொன்று சொல்கின்றேன்வானவனே. ()

பம்புபுவனம்படைக்க விதியைப்பணித்தாய்
நம்பியவைபுரக்க நாரணனைக்கற்பித்தா
யம்பொனுலகைத் தமரேசனையும்வைத்தாய்
வெம்புவிசும்புலவ வெய்யோனையும்விடுத்தாய். (௩௯)

சீதவுததி வருணன்றிரத்தளித்தா
யூதைக்குறிசி லுலவும்படிபணித்தாய்
கோதிலளகை குபேரனுக்குமுன்பணித்தாய்
பாதகரைத்தெண்டிக்க நாயேனையும்பணித்தாய். (௪0)

தேவரசுரர் திரிபுவனத்துள்ளோர்கள்
யாவருநீபணித்த வாறேயினிதமர்ந்தார்
வாவுதிரைக்கடலு மண்ணேழும்விண்ணேழுங்
காவலவநீபணித்த கற்பனையினின்றனவே. (௪௧)

அவ்வண்ணமேபணித்த வையனீயென்னளவு
மெவ்வண்ணமென்று மியல்பென்றுமெண்ணாது
செவ்வண்ணநீயே சிதைத்தாலதைத்திருத்து
மெய்வண்ணம்யாதே விளம்பிடநீவேண்டுமால். (௪௨)

நீயுண்மைநீக்கிற் றருமநெறிதவங்கள்
போயவைகள்குன்றும் புணரிகரைகடக்குங்
காயுங்கனலுநெடுங் காலுமுலகனைத்து
மாயும்படிநிமிடப் போதளவின்வந்திடுமே. (௪௩)

ஆனதனாலாக்கினேய் நீயேயடுக்கழிக்கி
லீனமுறுதீநரகங் காத்தலினிவேண்டேன்
வானவனேநீயளித்த வன்படமுழுத்திரையு
மூனமிலாத்தண்டுமிவை யென்றேயொருங்குவைத்தான். ()

காலனுரைத்துக் கதைமுத்திரைப்படங்கண்
ஞாலமிசைவைத்திடலு நம்பனதுகண்டு
கோலமுறுவற் குலைநிலாநின்றெறியச்
சாலநினக்குவந்த தாழ்வேதெனவுரைத்தான். (௪௫)

தொன்றுபடுவினையாற் றோன்றியநாளின்றளவுங்
கொன்றுயிர்கடின்று கொலைக்கருமமேற்கொண்ட
புன்றொழில்செய்வேடன் பொறியற்றபாதகன்று
னன்றிபுரிதவங்க ளென்செய்தானாயகனே. (௪௬)

செல்லும்பரிவேள்வி செய்துமுடித்தானோ
வல்லும்பகலு மருந்தானஞ்செய்தானோ
புல்லுமகரரவிப் போதுபுனன்மூழ்கினனோ
நல்லவிமானத்தேறி நின்னுலகநண்ணுதற்கே. (௪௭)

மற்றவிவனால் வரதனேநீள்கணங்கள்
சிற்றடியேனவற் சிலர்கடமைமுனிந்து
பற்றியறமோதிப் பரிசழியச்செய்ததை
சற்றவநின் முன்னின் றமியேனுரைப்பதற்கே. (௪௮)

கட்டுபெரும்பாவியரு மிவ்வுலகமெய்துவதோ
நாட்டுபெரும்பாதகரி னன்யாரைத்தண்டித்து
வாட்டுநரகில் வருத்துவேனென்றுரைப்பக்
கேட்டபுராரி மறலிக்கிதுகிளர்த்தும். (௪௯)

வேடனொருவனன்று விலங்கடுவான்வேட்டம்போய்
காடதனின்மேவிச் சிவநிசியிற்கங்குலெல்லா
மாடுதழைவில்வத் தருச்சித்துணர்வகன்று
நாடித்துயினீங்கி நம்மருகேவைகினான். (௫0)

கூறுமியற்சித்திர குத்தனுந்தாமறியான்
பாறுபடிவைவேலோய் நீயும்பகுத்தறியாய்
கோறல்புரியுங் கொலைவேடனுமறியா
னாறுமலர்த்தொடையாய் நாமேயறிந்திருந்தோம். (௫௧)

என்னப்பரமன் கனிவாய்மலர்ந்தியம்ப
முன்னர்க்குருகிக் கணக்கன்மொழியலுற்றா
னுன்னைச்சிவநிசியை யோர்ந்தறிவானலன்றே
முன்னர்விழித்திருந்து பூசையிவன்முற்றியதே. (௫௨)

ஊன்கள்கிடையாத படியானுணர்வொழிந்தான்
மான்பிணைகள்பார்த்து வருதுயிலைநீக்கினான்
றேன்றுணர்சேர்வில்வச் செறிந்ததழையெல்லாங்
கூன்சிலையினான்வாவி தடுக்குமெனக்கொய்தெறிந்தான். ( )

இத்துணையேயன்றி யிறைவனேயீச்சுவரன்
பித்தனேயவ்விரதம் பெற்றியெண்ணிச்செய்ததுண்டோ
வித்தகனேயென்கணக்கிற் காணேன்விளம்பவென்று
சித்திரகுத்தன் றெரித்தனையசெப்பலுமே. (௪௫)

ஓதியவாறெல்லா முளவேயுணர்வின்மை
யாதலினலன்றோ கனாநாதனுயினான்
றூதுணர்வினுலுணர்ந்து செய்தானேல்முத்தனுய்
பேதமறயாமா யுறைவனெனப்பேசினான். (ருரு)

நல்லவிரதங்க ளாடோறுமீட்டுகினும்
வல்லமுதுவேள்வி வரம்பிலதுசெய்திடினு
மெல்லையறுதானங்க ளென்னுளுமீந்திடினு
மொல்லைக்கதிநல்குஞ் சிவநிசிக்கொண்டுவ்வாதே (ருசு)

ஆதலாலிந்த விரதத்தளவறியா
தோதினுயுன்மனத்தி லுற்றபரிவொழிந்து
தீதறவேமுத்திரையுந் தாங்கிச்செழுநகர்க்கு
போகியெனவோதினன் புத்தேள்தொழுகழலான் (ருஎ)

அன்னமொழிகேட்ட மறலியகமகிழ்ந்து
கன்னியொருபாகத் திடைவைத்தகண்ணுதலே
சொன்னபிழைபொறுத்தி யென்றுதொழுதெழுந்து
பொன்னமருந்தோளானுந் தன்பதியிற்போயடைந்தான். ( )

வணங்குசிலைக்கை வயவேடன்றான்மகிழ்ந்து
கணங்களுக்குநாதனுய்க் காத்திறைமைபூண்டுமிகு
மணங்கொண்மலர்மானத்து வானரம்பைமாரோ
டிணங்கியரன்வெள்ளிமலைச சாரலினிதிருந்தான். (ருகூ)

அங்குநெடுங்கால மளப்பிலாப்போகமெல்லாந்
தங்கியினிதருந்திக் கற்பகத்தின்றன்னிழற்கீழ்ச்
சிங்கவணையின்மற்றோர் தெய்வேந்திரனென்ன
பொங்குபசும்பொன்னுலகிற் போகமினிதாய்நுகர்ந்தான். (சூ0)

அத்தலையைந்நூங்கி யமராபண்கேட்பக
கொத்துமுடியரவிற் கோமான்றுயில்புரியும்
வித்தகவைகுந்த வியனுலகிற்போகமெல்லாந்
துய்த்துமலர்விரிஞ்சன் சோதியுலகடைந்தான் (சூக)

ஆதிவிரிஞ்ச னவையினெடுநாள்வைகி
மாதிரங்கள்காவலர்தம் வைப்பினெடுநாட்கழித்துத்
தாதவிழுங்கண்ணியரன் றன்னருளாலெவ்வுலகுந்
தீதறவேயெய்திச் செழும்போகந்துய்த்திருந்தான். (சூஉ)

எண்ணமறவேட னியுற்றியிடுந்தன்மையினான்
மண்ணுலகில்வேந்தனே யிப்பதங்கண்மன்னினான்
புண்ணியவிந்நோன்பைப் புலப்படவேதானியற்றுந்
திண்ணியர்கள்செல்கதியைச் செப்புந்தகமையதோ. (௬௩)

என்றுவசிட்ட னியல்வேந்தனுக்குரைத்த
தொன்றுபடுகாதை யிஃதென்றுசூதமுனி
துன்றுசடிலஞ் சுவறுமுழச்சூழ்ந்திருந்த
குன்றனையமாதவத்து மாதவற்குக்கூறினான். (௬௪)

இயமன் சிவனிடத்திற்சென்ற அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் ௨௨-க்குத் திருவிருத்தம் அ௬௨.

இருபத்துமூன்றாவது,

## சிவராத்திரி விரதமுறையுரைத்த அத்தியாயம்.

வானுறையுந்தவமுனிவ னெடுத்துரைத்த
வகைகேட்டு மகிழ்ச்சிபொங்கப்
பானுகுலத்திகல்வேந்த னன்றிதுநன்
றெனப்பகர்ந்து பழையவேத
ஞானமுனியேயுரைத்த திவ்விரதங்
கேட்டதனு னலங்கூர்சிந்தை
யூனமறப்பெரிதுவந்தே னுணராத
வேடனுக்கீ துற்றதாலல். (௧)

பத்தியுடன்விதிமுறையா லியற்றினோ
ருறுபதத்தைப் பகரவற்றோ
வுத்தமனேயவ்விரத மியற்றியிடு
நெறிமுறையை யுரைத்தியென்ன
வத்தகையசிவநிசியின் வழிபாட்டின்
முறையுனக்கின் றறைவனென்று
முத்தனையதூமுறுவ லருந்ததியின்
மணக்கேள்வன் மொழிவதானான். (௨)

முன்னர்திரியோதசியி னொருபோதுண்
டரிவையர்பான் முயக்கமின்றிப்
பின்னர்ச்சதுர்த்தசியில் வைகறையிற்
கடனனைத்தும் பிறழாதோம்பி

யன்னியமாமிழிகுலத்தோர் பாதகரை
யணுகாது பார்த்திடாது
பன்னியுரைபகராது நண்பகலிற்
றிருநதியிற் படர்ந்துமாதோ. (௩)

இயம்பியநல்விதிவழியே புனலாடித்
தூயவெண்டுகி லிரண்டுசுற்றி
யெங்கியநல்லுர்சியினிற் கடன்கழித்துத்
தற்பணத்தின் வகையுமுற்றிப்
பயம்பொழியுங்கோமயத்தாற் பண்ணவனு
லயமெழுகி விதானம்பண்ணி
நயந்துதிருநீறணிந்து கண்ணுதல்பூ
சனைக்குரிய நயந்துபாடி. (௪)

ஐவகையின்னமுதானு மறைந்திடுமா
னைந்தானு மாட்டிப்பின்னர்
திவ்வியவாகமத்தியல்பும் வைதிகத்திற்
பேரியல்புந் திறம்பாவண்ணங்
கைவருந்தவளைத்தநறுஞ் சந்தனத்தின்
குழம்பணிந்து கருத்தொன்றாகிச்
சைவதபோதனன்றெடுத்த முத்தளமாங்
கூவிளத்தின் றழைகள்சாத்தி. (௫)

சறுவனேயுக்கிரனே வீமனே
சங்கரனே சிவனேசான்றாய்ப்
பெறுகதியினலமருளு மீசுரனே
சதாசிவனே யென்றுபேசு
மறுவறுபூதாதிபதி யேயென்னு
மந்திரமோ ரெட்டுமோதிக்
குறைவறவேதூபாதி நிவேத்தியங்க
ளனைத்தினையுங் குறித்துச்செய்தே. (௬)

ஈரெட்டுவகையாய வுபசார
மத்தனையு மியல்பினாற்றி
வாரொட்டுங்களபமுலை மங்கையொடு
மினிதிருந்த வரதன்றன்னை
நாரிட்டமலர்புனைந்து நானியற்றும்
பூசனையை நயப்பாயென்று.

சீரிட்டமலரடியின் வீழ்ந்திறைஞ்சி
யிப்பரிசே செய்யும்பூசை. (எ)

கங்குல்வரும்யாமமொரு நான்கினுக்கு
மிப்படியே கடவுள்பூசை
பங்கமறவேயியற்றி யிறுதிதொறு
மருக்கியங்கள் பரிவானல்கித்
திங்கள்வனைந்தோன்சரிதை பாராட்டித்
துயினீங்கித் தினைப்போதேனுஞ்
சங்கரன்றன்சந்நிதியை நீங்காம
லினிதிருந்து தவத்தனாகி. (அ)

மற்றைநாள்வைகறையிற் புனலாடிக்
கடன்கழித்து வரதன்பூசை
குற்றமறவேயியற்றிக் குரவனையு
முவப்பித்துக் குறித்ததான
முற்றபொருளால்வழங்கி மறையோர்க்குப்
பாலடிசி லுண்ணவூட்டிப்
பிற்றையவரனுமதியாற் புனிதமாம்
பாரணத்தைப் பரிதுசெய்ய. (கூ)

வேறு.

இத்தகையபூசையினை யியற்றுமருந்தவத்தினோர்
சத்தியமாயிரவிபதம் பிளந்துதடையறவெய்திப்
பத்தியினான்முனிவோர்க்குங் கிடையாதபரமசிவ
முத்தியினைமனமாயை யொருவிப்போய்முற்றுவரால் (கo)

ஆரேனுஞ்சிவநிசியை வழுவாமலியற்றுமவர்
பாரேழும்புகழ்முத்தி படர்வதன்றியிவர்கிளையிற்
றூராடுதிரடோளாய் மூவேழுதலைமுறையாய்
வேரோடுவினையகலச் சிவகதியைமேவுவார். (கக)

வேதமுதன்மந்திரத்தி னருச்சிக்கவிரகில்லார்
நாதன்முதலைந்தெழுத்தை நவையறவேயுச்சரித்துத்
தீதறவேவழிபாடு செய்திடினுமிகல்வேந்தே
யாதிமறையவன்புரியும் பூசனையாயரன்கொள்வான். (கஉ)

நலம்புரியும்வேள்விகளா யிரஞ்செய்துநயந்திடினும்
பலம்பெறுநற்றானங்க ளொருகோடிபண்ணுகினும்

நிலம்புகழைந்தழுனுப்ப ணெடுந்தவங்கண்முயன்றுனு
முலம்பொருதிண்டிறற்றோளாய் சிவநிசிக்கொன்றெவ்வாதே. ( )

சிவநிசியுமட்டமியுந் திருவேகாதசியென்னும்
பவமறுநல்விரதங்கண் மாகமதிப்புனல்படிவா
ரவமறவேயியற்றுமிடத் தடுக்குமதுநிற்கவினித்
தவமுடையோர்மாகமதி யாடுங்காற்சாற்றுவகேள். (கச)

அண்டபகிரண்டமுத லனைத்தினையும்புரப்பவனே
துண்டமதிமுடியோனே சிவனேநிற்றொழுமடியேன்
மண்டலமெண்மாகமதி மருவிநீராடுகின்றேன்
பண்டைவினைத்தொடர்பறுத்துப் பவக்கடல்விட்டேற்றுதியால்.

மகரவிதனிற்புனலின் மருவிநீராடுகின்றே
னகரமுதலெழுத்தாயவச்சுதாகோவிந்தா
சிகரவடவரைதிரித்துத் தேவருக்காயமுதளித்தாய்
பகரவரிதாயபெரும் பலப்பேறுந்தருவாயே. (கசா)

கந்தமலர்ச்சுருளழகக் கவுரிதருங்கற்பகமே
தொந்திவயிற்றைந்துகரத் தூயோய்நினைத்தொழுதே
னிந்தவியன்மாகமதிப் புனலாடுமெளியேற்குச்
சிந்தையினில்விழைவனைத்துஞ்சேர்ந்திடநீயருள்வாயே. (கஎ)

செக்கர்நிறத்திவாகரனே செங்கதிராயிரத்தோனே
மக்களுறுதுயர்களையும் வானவனேநிற்றொழுது
மிக்கதிருமாகமதி வியன்புனலிற்படிகின்றே
னிக்கணமேதுயர்களைந் திட்டெனையெளிதிற்புரப்பாயே. (கஅ)

பேரின்பமருள்வாழ்வே மகமாயைப்பெண்ணமுதே
பாரின்பம்பயந்தளிக்கும் பராபரைநின்பதம்போற்றிச்
சீரொன்றுமாகமதிச் செழும்புனல்யான்படிகின்றேன்
றொன்றுங்குழலாளே தமியேனைப்புரப்பாயே. (ககூ)

என்றிவற்றை யெடுத்தோதியியன்மாகநீராடி
நன்றியுடனருக்கியமு மவையறவேதான்கொடுத்துக்
குன்றவில்லிதனைப்போற்றிக் குலமறையோர்க்கினிதளித்துத்
துன்றுநறுநாளினே விரதத்தின்றொழின்முடிப்பார். (உ0)

வேறு.

மண்ணும்வானு மகிழ்ந்தினிதேத்திட
வெண்ணிலாவின்ப மிம்பரிற்றுய்த்துமேற்
றண்ணிலாவணிச் சங்கரனன்பினாற்
புண்ணியத்தனிமுத்தி பொருந்துவார். (உக)

என்றுமாகமதி யினியல்பெலாம்
வென்றிவேற்கைத் திலீபன்வியந்திட
மன்றன்மாலை வசிட்டன்வழங்கிய
தொன்றுமாக்கதை சூதனங்கோதினான் (உஉ)

வாழிமாதவர் வாழிசுருதிநூல்
வாழிநீள்சைவம் வாழிபுராணங்கள்
வாழிவையகம் வாழிமழைமுகில்
வாழிமாகநீராடிடு மாந்தரே. (உங)

இப்புராணமி யைந்துடன்கேட்பவர்
தப்பிலாதுபடிப் பவர்தாமெல்லா
முப்புராரி முதல்வனருளினாற்
செப்பலாதசிவபதஞ் சேர்வரால். (உச)

ஏதுவேண்டுமினித் தவமாந்தரே
யோதுநூலி னொருகவியாயினுங்
காதலோடு பிழையறக்கற்றிடிற்
போதினான்முகன் பொன்னுலகெய்தலாம். (உரு)

சிவராத்திரி விரதமுறையுரைத்த அத்தியாயமுற்றிற்று,

ஆ அத்தியாயம் உங-க்குத் திருவிருத்தம் அஅஎ.

---

இருபத்துநான்காவது,

## சுந்தோபசுந்தர் வதையுண்ட அத்தியாயம்.

---

மன்னவர்மகுடகூளா மணிபடச்சிவந்தபொற்றாட்
பொன்னவிர்மார்பன்செங்கோற் புரவலன்றிலீபன்மீட்டுஞ்
சென்னியினுயர்த்தகையன் சிந்தையினுவகையோடும்
வன்னியிற்புனிதஞான வசிட்டனைவணங்கிச்சொன்னான். (க)

விரிகடல்கலக்கிப்பெற்ற வியன்சுவையமுதம்விண்ணோர்
பருகுநன்னுவக்கல்லாற் பயன்கொடாதுனதுவாக்கா

மரியதெள்ளமுதங்கேட்போர்க் கருஞ்செவிக்கினிமைகூர்ந்து
மருவியவினைகணீக்கி மாசில்வீடளிக்குமன்றே. (௨)

ஆதலாலடியனேனுக் கருளொடுமாகமேன்மை
யோதுவாயினனுங்கேட்கு புவகையிற்களிததுள்ள
மாதவர்க்கரசேயென்ன மன்னவன்விழைவையோர்ந்து
போதுறைகிழவன்றந்த புராதனமுனிவன்சொன்னான் (௩)

நன்றுநன்றிறைவகேட்டீ நவையறுகாதைமுன்னாட்
பொன்றிகழ்சையமென்னும் பொருப்பினிலரியாய்த்தோன்றி
நின்றமாதவந்தத்தாத் திரேயனைநேர்ந்துபோற்றி
வென்றிகொடடக்கைக்கார்த்த வீரியன்வினவினானே. (௪)

அளப்பருந்தருமநீதி யடங்கலுமுணரச்சொன்னா
யுளத்துயர்மாகதிங்கட் பலமெமக்குரைத்தியென்னத்
துளக்கறுகமலத்தண்ணல் சுருதிநாரதற்குச்சொன்ன
கிளப்பருங்காதைதன்னைக் கிளத்துவன்கேட்டியென்னா. (௫)

திருந்தியதவத்துத்தத்தாத் திரேயனுயிரங்கையாற்குப்
பொருந்தமுன்னுரைத்தவாறே யுனக்குநான்புகல்வனென்னச்
சரிந்துதீவினைகெட்டோடத் தருமங்கடழையக்கற்பி
னருந்ததிகணவன்வேந்த னகங்கொளத்தெரிக்கலுற்றான். (௬)

இன்னதோர்காலந்தன்னி லின்னதோரிடத்திலெல்லைச்
சொன்னதோர்விரதத்துள்ள விதியினிற்சேர்வொன்றின்றி
நன்னெறிமாகந்தன்னி னறும்புனலாடுமாறு
முன்னையிவ்விரதம்பூண்டார் பெற்றதுமுழுதுஞ்சொல்வாம். (௭)

பாரதவருடந்தன்னிற் பண்புறுமனிதராகிப்
பேருறுமாகந்தன்னிற் பிறங்குநீராடல்செய்யார்
சீரறுபிறப்பென்னாகுந் தீமலமருந்திவாழு
மூருறைபன்றிசெந்நா யுறுபிறப்பொக்குமன்றே. (௮)

எப்பொருளிசைந்தானேனு மாகநீரினிதாடானேல்
வெப்புறுகிரணவெய்யோன் விளங்கலாப்பகலேபோன்று
மொப்பறுகலைவெண்டிங்க ளுதித்தெழாவிரவுபோன்றுந்
தப்பறத்தேசுமங்கித் தனையினல்குரவிற்றாழ்வான். (௯)

ஆரணவிதியினின்றே யருமகஞ்செய்தானேனுங்
காரணந்தெரிந்துகாலம் விரதத்திற்கழித்தானேனும்

பூரணமதியானமாகப் புனிதநீராடினன்போல்
நாரணன்விடைப்பாகன்ற னல்லருள்சேர்ந்திடானே. (௧0)

அச்சுதனன்புவேண்டி லருவினைதொலைக்கவேண்டில்
வச்சிரத்தடக்கைவேந்தன் வானுலகாளவேண்டில்
நிச்சயஞானமுத்தி நிமிடத்திலெய்தவேண்டி
லெச்சுழல்பிறவிமாந்தர் மாகநீரினிதிற்றோய்வார். (௧௧)

நாடொறுமினிதுபோற்றி வளர்த்தநல்லுடம்புதன்னை
நீடெரிநரகந்தன்னி லிடுவதுநீர்மைத்தாமோ
பீடுசான்மகரஞ்செல்ல வெய்யவன்பெயர்ந்தகாலை
யோடுநீர்நதியின்மூழ்கி யும்பர்வீடுறுமன்மன்றே. (௧௨)

என்புநீள்காலாய்ப்புண்ணீ ரிறைச்சியேசுவராய்மீது
வன்புறத்தோலின்மேய்ந்து நரம்பினில்வாய்ப்பக்கட்டி
யொன்பதுவாயல்காட்டி மலங்களாலுண்ணிறைந்த
புன்புலால்வீட்டைமாகப் புனலிடார்புனிதராகார். (௧௩)

பொருவருமாகந்தன்னிற் புனிதநீராடல்செய்யார்
குரைபுனலிடையிற்றேன்றுங் குமிழியேபோன்றுமிந்தத்
தரையினிற்கருவின்றோற்றந் தங்கிடாமுட்டைபோன்றும்
நரரெனத்தோன்றிவாழார் நாள்செலமாள்வரன்றே. (௧௪)

கடலினிற்பெரியவாய கருப்பவாரிதியின்மூழ்கி
மடமையிற்பிறந்துமாயு மாணிடர்க்கிதுபோலுண்டோ
புடவியின்மாகமாதம் பொருந்தியபுலரிப்போது
தொடுபுனலிடையிற்றோய்ந்தா ரம்பையர்முலையிற்றோய்வார். ()

மாயனுக்கடிமைசெய்யான் மறையவர்தம்மைப்போற்றான்
றீயபாத்திரத்திலீவான் றெளிவிலாஞானம்பெற்றான்
வாயினில்வெகுளிக்காரன் வைதிகநிலையினில்லா
ருயவர்போலமாக மாடிலானரகிலாழ்வான். (௧௬)

குருவிலான்வித்தைபோன்றுங் குணமிலான்செல்வம்போன்று
மருவியதெளிவிலாதான் மாசறுஞானம்போன்று
திருபனைப்பிழைத்தார்போன்று நிதியிலாணிளமைபோன்றும்
பொருவறுமாகமாடான் புகழொடுங்கெடுவன்மன்றே. (௧௭)

பொன்கொடுகன்னிநல்கும் பொறியிலாப்புல்லர்போன்று
நன்பகல்மாதர்தம்பா னலனுறக்கலப்பான்போன்று

மன்பினிலதிதிவாட வயினிதுய்த்திடுவான்போன்று
மின்புறுமாகமாடா னெழுமையினரகின்வீழ்வான். (க௯)

பொய்க்கரியுரைப்பார்போன்றும் புறமனையயப்பார்போன்று
மெய்க்கழிநறவமாந்தி வினையிலாதிழைப்பார்போன்றுங்
கைக்கொள்ற்பாலகீதங் கடிந்தவைபுரிவார்போன்றுந்
துய்க்குநற்புனலின்மாகந் தோய்ந்திடார்நிரையந்தோய்வார். ()

அந்தணர்தம்மைக்கொன்றோ ரரும்பொருள்களவிற்கொண்டோர்
நிந்தனைமதுவையுண்டோர் குரவர்நேரிளையைச்சேர்ந்தோர்
பந்தமுற்றிவரைக்கூடிப் பயில்வுற்றோரேனுமிந்த
வைந்துபாதகருமாக மாடினன்முத்தராவார். (உ0)

மகத்தினால்விரதந்தன்னால் வருந்தியதவங்கடம்மாற்
செகத்தினில்நீங்காப்பஞ்ச பாதகத்திரள்கடம்மைப்
பகற்கதிர்மகரஞ்சேர்ந்த பருவத்திற்படிவாராயி
னகற்றுதும்யாமேயென்று வரும்புனலிரைக்குமன்றே. (உக)

வையகந்தன்னில்வாழு மனிதரைநோக்கிப்பாவம்
வெய்யவன்மகரஞ்சேர்ந்த மாகநீர்விழைவினாடி
லையகோயிவரைநீங்கி யடைகுதுமார்மாட்டென்னக்
கைதவப்பாவமெல்லாங் கண்கலுழ்ந்திரங்குமன்றே. (உஉ)

வாக்கினான்மொழிந்தபாவ மனத்தினானினைந்தபாவ
மாக்கையாலீட்டுபாவ மறிவினாலிழைத்தபாவ
நோக்கினாற்குறித்தபாவ நுன்னுணர்வின்றித்தானே
யாக்கியபாவமெல்லா மாகநீரகற்றுமன்றே. (உங)

பண்டுறுபிறவிதன்னிற் பற்றியபாவசேட
மொண்டொடிமனையாளுற்றூர் புதல்வராலுற்றபாவந்
தண்டலில்பாவமெல்லாந் தபனன்முன்னிருளேபோல
மண்டுதீம்புனலின்மாக மதியிற்சென்றுடமாயும். (உச)

பிறப்பெனுஞ்சேறுபூசிப் பெரிதுழன்மாந்தரெல்லா
மறத்தினினுயர்ந்தமாகத் தரும்புனல்விரும்பிமூழ்கித்
திறப்படக்கழுவினல்லாற் றீர்ந்திடாதென்றுபண்டை
மறைப்பொருளுரைக்குமென்றான் மற்றினியுரைப்பதென்னே. ()

இன்னணவியல்பினைய மாகநீரினிதினாடிப்
பொன்னகர்முதலாயுள்ள புவனபோகங்கடுய்த்துப

## ௯௬ சுந்தோபசுந்தர் வதையுண்ட அத்தியாயம்.

பன்னருஞ்சிறப்பிற்றூய பருதிதன்பதத்தைமேவு
மின்னனாளொருத்தியான்முன் னிகழ்ந்தமைவிளம்பக்கேண்மோ.

பிருகுவின்வழியின்வந்த பெயரியலந்தணாள
னிருசிகனென்போன்பன்னி யெழிறருவயிறுவாய்ப்ப
வரிமதர்நெடுங்கட்பேதை யரிச்சிகைகணவற்கொல்லு
முறையறுகொடியதீய வோரையிலுதித்தாண்மன்னோ. (௨௭)

சேயிழைவளர்ந்தையாண்டு சென்றிடுபருவந்தன்னிற்
காயழல்வேட்கும்வேதக் கவின்மரபதனில்வந்தோன்
மாயிருஞாலமேத்து மாலியவானென்றோதுந்
தூயவன்வேட்டனன்னாளை தொலைந்தனன்விதியின்கோட்பால். ()

கலனிழந்தனையபேதைக் கைம்மையுற்றொழுகுநாளிற்
குலமறையவனாற்றாயுந் தந்தையுங்கூடமாள்க
வலம்வருமுள்ளத்தோடு மருந்துயருளப்பாண்முன்னர்ப்
புலனுறவுருக்கும்வீணை நாரதமுனிவன்புக்கான். (௨௯)

புக்கமாமுனிவற்கண்டு பொருக்கெனவிறைஞ்சிப்போற்றிக்
கக்குவெந்துயரினோடுங் காரிகைநிற்பநோக்கி
மக்கடம்மின்னல்தீர்க்கு மாதவன்மகிழ்ச்சிகூர்ந்து
மிக்கநன்முகமன்கூறி யவட்கிதுவிளம்பினானே. (௩௦)

பண்டைமுற்பவத்திலீசன் பார்பதிதன்னைப்போற்றி
யண்டரும்வியப்பவெய்யோன் றனுவினிலடைந்தகாலைக்
கொண்டமுற்பிறையிலாதி யாதிரைகுழுமுநாளிற்
றொண்டுசெய்தையாறாண்டு துடங்கிநோன்பியற்றிநின்றாய் (௩௧)

அன்றியும்விருச்சிகத்தி லாதவனடைந்தபோது
துன்றுமுற்பக்கத்தேகா தசியினிற்றுடங்கிமற்றை
வென்றிசேர்தனுவின்முன்னை யரிதினமேவுகாறுஞ்
சென்றுநீராடிற்றெய்வ மாகமாய்ச்செப்புவாரோ. (௩௨)

செப்பியவெய்யோன்சாபஞ் சேர்ந்திடுகாலைமுந்து
மொப்பறுமரிதினத்திற் றுடங்கியொண்மாகத்துற்ற
சுப்பிரவரிதினத்தி னளவுநீர்தோய்ந்துசென்றாற்
றப்பறுமிருடிமாக மெனப்பெயர்சாற்றுவாரோ. (௩௩)

மகரஞாயிற்றின்முந்தி வருமெகாதசிதொடங்கி
நிகரறுகும்பத்தேகா தசிமட்டுநீரின்மூழ்கிற்

பகரரும்பிதிர்க்கண்மாக மென்பரிப்பரிசின்மூன்றும்
புகலும்பிரயாகைகோதா விரிகங்கைபுனலிற்றோய்ந்தாய். (௩௪)

காமியமிவையளாகுங் காருவாவாதியாகத்
தோமழுமையாறுய தினமுற்றுநீரிற்றோய்ந்து
தாமெதிரமர்வாசைக்கே கூட்டனித்தியமாய்ச்சாற்றும்
நாமவேல்விழியாயிந்த நல்விரதமுநீசெய்தாய். (௩௫)

இத்திரமியற்றிநின்ற தருமத்தினியைந்தபேறு
மைத்தவார்குழலாய்நின்பான் மன்னியதவமேற்றோன்று
முத்தமப்பிறப்பின்ப மூட்டுமிவ்வுடல்வீழ்காறு
மெய்த்தவமியற்றிநெஞ்சின் மெலிவறுத்திருத்தியென்றான். ()

ஆங்கதுகேட்டதைய மைறகுவாளருந்தவத்தோய்
தீங்குறுகைமையெய்தத் தீமையாதிழைத்தேனென்ன
வீங்கியதுயரங்கூர்ந்து வினவினன்வினவலோடுந்
தூங்கிசைமகதிவீணை நாரதன்சொல்வதானான். (௩௭)

வேறு.

முற்பவத்தினின் மொய்குழன்மாதுநீ
நற்பிறப்பினி னன்மறையாளனு
யுற்பவித்தனை வாரிதனென்றுரை
பொற்புடைத்திரு நாமம்புனைந்தரோ. (௩௮)

வேதநான்கும் விளங்குகலைகளு
மோதிநீதி நெறியினொழுகியே
போதுநாளுனைக் கண்டோர்பொதுமகள்
காதுவேற்றடங் கண்ணிற்சிறைசெய்தாள். (௩௯)

அந்தமாதி னருநலந்துய்த்துநின்
சிந்தைகாம வசத்திற்செயலறக்
கந்தவார்குழற் கற்புடைப்பன்னிபால்
வந்தசிந்தையின் வேட்கையைமாற்றினாய். (௪0)

உள்ளசெம்பொ னனைத்துமுதவிடும்
வள்ளியோரிற் கணிகைவயத்தளித்
தள்ளற்சேற்றி லழுந்திடுமாமைபோற்
கள்ளக்காமக் கடலிடைமூழ்குங்கால். (௪க)

கூட்டுமுன்னையித் தீவினைக்கோட்பினால்
வாட்டிடுங்கய நோயின்மடிந்துளாய்

மோட்டுமோதி முதல்வன்முனிந்திட
நாட்டுமூவேழ் நரகினழுந்தினுய். (சஉ)

நரகசேட நலிவுறுநீர்மையாற்
றரையில்வந்து தனிரியலாயினை
நிரைவளைக்கை மனைவியைநீத்தலால்
விரகில்பேதையிற் கைமையைமேவினுய். (சங)

விதனமிக்கு மனைவிவெதும்பிடப்
பொதுமடந்தையர்ப் புல்லியதீமையோர்
கதியிற்பெண்பிறப் பேழ்முறைகைமையாய்
மதிதளர்ந்து வருந்துவரென்பவே. (சச)

மண்ணிலேழ்பிறப் புற்றுவருந்தனின்
புண்ணியத்திற் றெலைந்ததுபோயதா
னண்ணுமேலைப் பிறப்பினவையற
விண்ணில்வெய்யவன் மெய்ப்பதமேவுவாய். (சரு)

என்றுதேற்றி முனிவரனேகலுங்
கன்றுசிந்தை யிகழ்ந்துகளிப்பொடு
நன்றுநன்றென நான்மறையாட்டியு
மொன்றுமாதவஞ் செய்யவொருப்பட்டாள். (சசு)

ஆசில்விந்த வகன்வரைச்சாரலிற்
காசிலாத கபிலைநருமதை
வீசும்மத்திம தேயத்தின்மேவிய
மாசிலாவருட் கண்டகிவைப்பிலே. (சஎ)

எய்திமாதவ மேற்கொண்டியல்புடன்
வெய்யதீய விடையம்வினையற
நொய்திற்காம முதலறநூறியே
கைதவப்பவக் கட்டறநோற்றிட்டாள். (சஅ)

ஆரணத்தி னகம்புறமாய்நின்ற
காரணத்தினைக் கஞ்சமடுவிலோர்
வாரணத்துயர் மாற்றியவள்ளலைப்
பூரணத்துளத் தெண்ணிப்பொருந்தியே. (சகூ)

மாகமாறுபத் தாடிமனத்திடைச்
சோகமோகந் துறந்திடுந்தூயவ

ளோகையோடு முடலையொருவிப்போய்
பாகசாதனன் பைம்பொற்பதியுற்றாள் (௫௦)

நாறுநாண்மலர்க் கற்பகநாட்டிடை
யூறுமின்ப மொருகற்பந்துய்த்தபி
னேறதேற்று மிறைவனிருந்துவாழ்
மாறிலாக்கயி லாயமருவினாள் (௫௧)

அப்பிறங்க லிடத்துமருந்தவத்
தொப்பிலாளொரு கற்பமுறைந்தபின்
கப்புறும்பட நாகணைக்கண்வளர்
மைப்பிறங்கல்வை குந்தமருவினாள் (௫௨)

அந்தநாட்டொரு கற்பமமர்ந்தபின்
கந்தநாண்மலர்க் காவலன்றன்பதி
சந்தவார்முலை நாலுசதுர்யுகம்
விந்தைபோல விழைவுடன்வைகினாள். (௫௩)

பின்னுமந்தப பிரமன்படைப்பினாற்
பொன்னனாள்சுடர் மாலைபுனைந்திடு
மன்னையுந்தியி னன்றியயோனியிற்
கன்னனூறுசொற் காரிகையாயினாள். (௫௪)

தேவர்தானவர் சித்தரியக்கர்மற்
றேவரெனு மிவள்கண்வலைப்பட்டுப்
போவரோவெனும் பொற்பொடுபூண்முலைக்
கோவைவாய்க்கனி நின்றனள்கொம்பினே (௫௫)

அம்புயாசனத் தண்ணலருளொடும்
வம்புலாமுலை மாதினைநோக்கியே
யும்பர்மாதரி லோவியமேயுனைச்
செம்பொனுடர் திலோத்தமையென்பவே (௫௬)

சோதிவார்கழற் சுந்தோபசுந்தரென்
றோதுகண்டக ரோர்வயிற்றுற்றுளோர்
மாதுநான்முன் னளித்தவரத்தினாற்
றீதுமேற்கொடு நன்மைதிறம்பினார். (௫௭)

வானநாடர் மறுகமுனிவர
ரீனமெய்த விருளறுவேதநூன்

ஞானசீலர் நடுங்கவுலகெனுந்
தானமூன்றுந் தருக்கில்வருந்தினர். (ருஅ)

நறையிலிற்று நறுமலர்க்கற்பகத்
திறையிருக்கை யிழந்துகரந்துளா
னறைவதேதினி யந்தகனுதியர்
துறைபரித்த தொழில்களுங்கைவிட்டார். (ருகூ)

யாவரானு முனையிலிருவருஞ்
சாவுதீர்ந்த வரத்தினர்தம்மைநின்
மேவுநல்வனப் பென்னும்வினையத்தா
லாவியுண்டுல கின்னலகற்றுவாய். (சுo)

அனையபாதகர் தம்முன்னரிவைபோய்
வினையமுன்னி விழைவுறுசூட்சியான்
முனையிலாவி முடித்திவண்மீள் தியென்
றினையவோதி யெழுகென்றியம்பினன். (சுக)

மங்கைகேட்டலும் வல்விரைந்தொய்யெனச்
செங்கைகூப்பித் திருந்திழையாடமீஇப்
பொங்குவானிடை மின்னெனப்போயினள்
கொங்கைதாங்கிக் குழையுநுசுப்பினள். (சுஉ)

பண்டைமாக நதியிற்படுபுனல்
வண்டுசேர்குழ லாடவவாவினைக்
கொண்டுவெண்மணற் கூலத்திற்றங்கினு
ளண்டர்போற்று நருமதையாற்றினே. (சுங)

அன்னமன்ன நடையினளாழ்புன
றன்னின்மூழ்கித் தடங்கரையேறியே
மின்னும்பூம்பட் டுடுத்திவிளங்கிய
பொன்னனாள்குழ லீரம்புலர்த்தினள் (சுச)

வேறு.

புதுத்தளிரிலிற்றிய புயலின்கற்றைமேல்
விதுக்கொளுஞ்செழுங்கதிர் தவழுமேன்மையோற்
கதுப்பினிலுறவனக் களிவண்டார்த்திட
மதுக்கமழ்மல்லிகை மாலைசூட்டினள். (சுரு)

வேளினையாட்கொள விளங்கித்தோன்றிய
கோளிளமதிநுதற்றிலதங் கோட்டியே
வாளுறைகழித்தெனவயங்குகண்களி
னீள்வரியஞ்சன நெடிதுதீட்டினாள். (௬௬)

புண்டரீகத்தயற் புகுந்துபொன்னிற
வண்டுகளிரண்டலம் வருவதென்னவே.
விண்டலப்பரிதியில் விளங்குமாமணிக்
குண்டலங்காதிடை குலவத்தூக்கினாள். (௬௭)

வான்றடருடுக்குலம் வளைந்துசுற்றுறத்
தோன்றிளங்கமு கெனத்துலங்கவிப்பிவா
யீன்றவெண்கதிர்மணிக் கோவையின்னொளி
கான்றிடக்கழுத்திடை கவினப்பூட்டினாள். (௬௮)

சந்தனத்தேய்வையுந் தயங்குநானமுஞ்
சுந்தரச்சுண்ணமுந் துணர்த்ததாமமு
மந்தரக்கிரியென வளருங்கொங்கைமே
லிந்திரவில்லென விலங்கச்சாத்தினாள். (௬௯)

பன்மணிகுயிற்றிய பசும்பொன்மேகலை
யின்னணிக்காஞ்சியோ டிடையெரித்திடத்
துன்னியபஃறலைச் சுடிகைப்பாந்தள்போன்
மன்னியகடிதட மருங்குவீக்கினாள். (௭௦)

ஆடமைத்தோளிணைக் கங்கதங்கள்போற்
சூடகமுன்கையிற்றுலங் த்தாங்கினாண்
மாடகமுறுக்கிய மணிவிரற்கண்மேற்
றேடருநவமணியாழி சேர்த்தினாள். (௭௧)

குழந்தைவெண்கதிர்மதிக் குருத்தின்வாலொளி
வழங்கியகொழுஞ்சிறை மடவனக்குழா
முழங்கியகுரலென முத்தின்சில்லரி
தழங்கியநூபுரந் தாளிற்சேர்த்தினாள் (௭௨)

இலங்கிழையிணையன தாங்கியின்றளிர்க்
குலங்கெழுபிண்டியங் குளிர்ப்பொதும்பரின்
விலங்கிவில்லுமிழ்தரு மின்னும்போலிள
நலங்கனிபுணர்முலை மாதுநண்ணினாள். (௭௩)

வேறு.

பிள்ளைவரிவண்டுமுரால் பிண்டிநிழலெய்தி
கிள்ளையொடுபூவைகுயில் கேளெனமனத்தி
னுள்ளியருகெய்தநற வூறுகனிவாயாள்
தெள்ளமுதெனத்தகைய தெள்விழிபயின்றாள் (எச)

தீந்தொடைநரம்பணிகொள் செங்கைகொடுதைவந்
தேந்துமணியாழ்கனியு மேழிசைமிழற்றிப்
பூந்துணரிளங்கொடி பொருந்துறையுமெல்லைக்
காந்துமுகசோபையெழில் காட்டுவதுகண்டார். (எரு)

வேறு.

வந்தோர்பொதும்பரின் மறைந்துமணநாறுஞ்
செந்தாமரைத்திருவ னுடிருவுருக்கண்
டந்தோவிவட்குநிக ராருலகிலென்னச்
சுந்தோபசுந்தர்விடு தூதர்விரைவுற்றார். (எசு)

விரைவினொடுசென்றவுணர் வேந்தர்தமையாளு
மரசரடிதாழ்ந்ததி சயத்தினொடுநிற்ப
வரவெனுரைமின்களென வந்துறவணங்கி
யுரைசெய்பொருளுள்ளதுணர் வீரெனவுரைத்தார். (எஎ)

தேனுலவுதாமரை யிருந்ததிருவேயோ
வானவர்குலந்தழைய வந்தமயிலேயோ
கானவர்வணங்கவரு தையலிவளேயோ
கானவிசைவிஞ்சைபயில் காமர்குயிலேயோ. (எஅ)

யாரெனவுணர்ந்திட வெமக்கரியளம்மா
காரின்வளர்மின்னனைய காமறுவனப்பாள்
பாரிலெவரின்னவளை யொப்பவர்பசும்பொ
னூரினும்விரிஞ்சனுல கத்துமிகருண்டோ. (எகூ)

கருமதையெனப்புகலு நன்னதிமருங்கின்
மருமுகையுடைத்துமக ரந்தமணநாறும்
விரிபொழிலிடத்திலொரு மெல்லியல்பசும்பொ
னுருவளர்மணிக்கொடியி னுற்றுறைதல்கண்டோம். (அ0)

வேறு.

இந்துக்கதிர்வந்துதிக்கவழ கிழக்குமுடுவின்குலமெனவு
முந்தித்திரைபாய்கங்கைவர வொளிபோமுலகினதியெனவுஞ் .

சந்தப்புளகவனமுலையா டார்வேந்தருக்கின்றெய்தினுங்க
ளந்தப்புரத்துமடமாத ரடங்கவடிவின்வீறழிவார். (௮௧)

பெண்ணுக்கரசைமணிவிளக்கைப் பேசுந்துவர்வாயிளங்கிளியைக்
கண்ணுக்கமையாவொளியிருக்குங் கதிர்மாமணியைக்களிமயிலை
யுண்ணத்தெவிட்டாவாரமுதை யுயிரோவியத்தைக்கண்டாரேல்
வண்ணக்கமலத்தயனாதி வானோரெவருமாலுழப்பார். (௮௨)

பொங்குந்தமரத்திரையாழிப் புடவியனைத்தும்பொதுநீக்கித்
திங்கட்கவிகைதனிநிழற்றுஞ் செல்வக்கிழமையரசாட்சி [ட
மங்கைப்பருவத்திளங்கொடிதன் வளர்பொன்னாகத்திடங்கொண்
கொங்கைத்துணையின்முகமழுந்தக் கூட்டுமின்பந்தரவற்றே. ()

சசியையமரர்க்கிறைபெற்றான் றாதார்கமலைத்திருமகளைப்
பசியநெடியமால்பெற்றான் பாமாதினைநான்முகன்பெற்றா
னிசையுமிமையத்திளங்கொடியை யிமையாமுக்கணிறைபெற்றா
னொசியுமருங்குலிவளையுநீர் பெற்றீரென்பதுயர்புகழே. (௮௪)

என்றுதூதரிவைகூறக் கேளாமுன்னமிகல்வேந்தர்
கன்றுகாமக்கனலுள்ளங்கவற்றக் கலங்கிநிறையழிந்து
வென்றிப்புயத்துநறுந்தெரியல் சருகாயுதிர்ந்துவெய்துயிர்த்துத்
துன்றுமகளீர்பண்ணையொடுந் தூய்நீராடல்துறந்திட்டார் (௮௫)

பார்த்தபார்த்தவிடந்தோறும் பராரையசோகினறுநிழலு
மார்த்தநெடுவாரிடைப்பசிய வடிக்கொண்டெழுந்தவனமுலையிற்
சேர்த்தமணிவீணையுமமுதுந்தேனுங்கனியுந்தெள்விளியு
நீர்த்தமேகக்குழற்காடு நகைவெண்ணிலவுநீங்காவே. (௮௬)

ஆன்றபுடவித்திசையனைத்து மந்தமாதினுருவெளியே
தோன்றத்தோன்றநிலையழிந்து தொடுத்தமாரன்கணைக்கிலக்காய்
மூன்றுபுவனத்தணங்களையார் முயங்குகலவிநலமுனிந்து
நான்றகுழையாடனிவைகு மசோகவனத்தைநாடுவார். (௮௭)

அமரிலடையார்நிணமருந்திக் குருதிமாந்திமணியார்த்துத்
திமிரவடிவமறலியடற்செங்கைக் கதைபோன்றமரரெனுந்
தமரவுததிகலக்குநெடுந் தண்டமேந்தியிருவோருங்
குமரிப்பிணவுவேட்டெழுந்த கொடுஞ்சீயத்தினெதிர்சென்றார். ()

வண்டுமலரிற்றாதருந்தமாவினறுந் தண்டளிர்கோதிக்
கொண்டாடவழும்பணைதோறுங் குயிலின்றொகுதிமுறைகூவ

[ணக்
விண்டதுவர்வாய்ப்பசுங்கிள்ளைக் குதலைமிளற் றுமிடைகாவிற்
பிண்டிநிழலின்வீணையபின் றிருந்தபெடைமானருகணைந்தார். ()

தள்ளற்கரியவினைதுரப்பச் சம்பராரிகணைதுரப்ப
வுள்ளத்துணர்வையுண்டமது வூக்கந்துரப்பச்செயலழிந்து [ணக்
தொள்ளைகாருத்தான்மலரெனப்போய்ச் சுடரில்வீழும்பதங்கமெ
கள்ளக்கருங்கட்டிலோத்தமையைக் கண்டார்புவனகண்டகரோ. ()

சோர்ந்தார்திகைத்தார்வெய்துயிர்த்தார் துளங்கித்துளங்கித்துயர்
கூர்ந்தார்மெலிந்தார்நிறையழிந்தார் கூடும்பரிசெப்பரிசெ[க்காதல்
நேர்ந்தார்பார்க்குந்தொறுமுருகி நின்றார்குன்றுநெடுநீர்மை [ன்ன
தீர்ந்தாரொருவர்க்கொருவர்முந்திச்சென்றார்வினையைத்திறம்பாதார்

முந்துகாதலிருவரினு முன்னோன்பின்னோன்முகநோக்கி
விந்தைபோலுமிவளெனக்கே விளங்குமுரிமையிவளைநீ
சிந்தையாலுந்தீண்டற்க வென்னத்தம்பிசினத்தெழுந்து
சந்தமுலையாளெனக்குரிய ணின்க்கேவிரும்பத்தகாதென்றான். ()

என்றுமுன்னமிருவோரு மிகலிப்பெருவஞ்சினங்கூறித்
தின்றுவெயிறுவிடநகைத்துத் திருகுஞ்சீற்றத்துடனெழுந்து
மன்றுமூங்கிலிரண்டுரிஞ்ச வளர்தீயென்னக்கதம்பெருகப் [ந்தார்.
பொன்னூர்மணிப்பூண்கதைவாங்கிப் புகுந்தாரெதிர்ந்தார்போர்புரி

வேறு.

மலைகளிடிந்தன திசைகளிருண்டன மகுடவனந்தனெடுந்
தலையுமசைந்தன வுடுநிரைசிந்தின தவழ்மதவெண்டிசைமா
நிலைகள்குலைந்தன வுலகமலைந்தன நிறையுநெடுங்கடலு
மலையநடுங்கின கதிருமொடுங்கின வமரருமஞ்சினரால். (கூச)

கொண்டறனித்தனி நின்றுருமுக்குரல் கொண்டுமலைந்தனபோற்
றண்டொடுதண்டு மிடைந்தெதிர்தாக்கு தழற்பொறிசிந்திடலால்
விண்டலமண்டல மெண்டிசைமுந்தை விரிஞ்சனகர்க்கணெலா
மண்டொளிமுற்ற விரிந்தெழுசெக்கர் மலிந்ததிமைப்பளவே. ()

நின்றதிசைக்கரி யெட்டிலிரண்டு நெருக்கிமலைந்தெனவுந்
கன்றுசினத்தொடு சீயமிரண்டு கனன்றமர்செய்தெனவுங்
குன்றொடுகுன்று கறுத்தெதிர்வந்து கொடுஞ்சமர்செய்தெனவும்
வென்றிநெடுங்கதை கொண்டிருவோரும்வெகுண்டமர்செய்தனரால்

அத்திரமெய்து மமர்க்கணனந்த மமர்த்தொழில்விஞ்சையெலாந்
தத்தமின்முந்து தருக்கொடுசெய்து சலத்தினொழிந்திலராய்ச்

சித்தமழிந்து நெடுங்கதைகொண்டு சிரங்கடகர்ந்திடலான்
மத்தர்மடிந்து நிலத்தின்விழுந்தனர் மால்வரைவீழ்வனபோல். ()

வேறு.

சுந்தோபசுந்தர் தொலைந்துவரைபோற்கிடபப
வந்தோவிதியோ யெனவவுணரெல்லோரும்
வந்தோலமிட்டு மறிகடல்போனின்றழுது
பைந்தோகைபோனின்ற பாவையைக்கண்டீதுரைத்தார். (கூகூ)

வென்றியமரேசன் விடுபடையாபசாபத்தா
லென்றுமுலவா விகல்வேந்தரின்னுயிரைக்
கொன்றுபசிதணிப்பான் கூற்றுவந்தகோலமோ
கன்றுகழிகாலமொரு காரிகையாய்த்தோன்றிற்றே. (கூகூ)

மன்னரொருவயிற்றின் வந்துதித்தோர்வாழ்நாளைக்
கன்னலிரண்டிற் களப்படுத்தக்கட்டழகி
மின்னின்மறையாது மெல்லியலேபோனின்று
ளின்னமுமாராவி முடிப்பாளிருந்தனளே. (க00)

தேவர்மறைமுனிவர் செய்தவத்தால்வந்தனளோ
பூவலயத்துள்ளோர் புணர்ப்பினான்மேயினளோ
வேவர்விடவந்தா ளெவரிவளையீன்றெடுத்தார்
பாவையிவண்மாயம் பகுத்தறியற்பாலதோ. (க0க)

பார்வென்றவைவேற் படைவேந்தரைமுடித்து
மார்கொன்றாரென்ன வறியாள்போனிற்கின்றாள்
சூர்வென்றநாமவேற் றோன்றற்குமிப்பரிசு
போர்வென்றுவீரம் புனையமுடியாதே. (க0உ)

கண்ணூனுயிர்கவருங் காலனிவளாமென்பார்
பண்ணாரும்வீணையன்று பற்றியதுபாசமென்பார்
மண்ணாளிறைவரைப்போன் மற்றுள்ளோராவியையு
முண்ணுமுனமகல வோடுவோமென்றுரைப்பார். (க0ங)

என்றவுணர்சேனை யனைத்துமிரிந்தோடத்
துன்றுமலர்க்குழலாள் சோதிநகைமுத்திலங்க
வென்றுபகைமுடித்தே மென்றுவிசும்பிடைபோ
யன்றுபணித்த வயனுலகத்தெய்தினாள். (க0ச)

ஆதிவிரிஞ்ச னடித்தாமரையிறைஞ்சி
மாதுதிலோத்தமையும் வந்துமயில்போனிற்பச்

சீதமதிவதன நோக்கிச்செழுங்கமலப்
போதினுறைபுத்தேண் முகமன்புகன்றனனால். (கOரு)

ஏழுலகினுள்ளோர்க்கு மின்பமிகத்தழையப்
பாழிநெடுந்திண்டோ ளவுணர்பகைசெற்றதனாற்
சூழுமணித்தேரிரவி தொல்லுலகஞ்சென்றடைந்து
வாழிகடிநலந்துய்த் தென்றும்வயங்கினியே. (கOசு)

இகல்வெகுளிகாமமிழி தொழில்கள்வெம்பாவம்
பகைகடிந்தநெஞ்சிற் பரர்க்குமுபகார
ரகமகிழ்ந்துகைமாற்றப் புரியுமேலோர்தாந்
திகழொளியவெங்கதிரோன் பொன்னுலகஞ்சேர்வாரால். ()

இத்தகையநல்லுதவி யாற்றியிலங்குகதிர்
மொய்த்தபருதி முழுப்பதத்தில்வாழ்ந்திருப்ப
மைத்தகுழனீபெறுதன் மாகந்தனின்மேனாட்
டத்துதிரைவார்புனலிற் றோய்ந்ததவப்பயனே. (கOஅ)

நல்லுணர்வான்மாகமதி தன்னினறுநீராட
வல்லவருக்கெய்தாத வண்மையுளவோவென்ன
வல்லிமலர்ப்பூங்கமலத் தண்ணறெரிந்துரைத்தான்
எல்லொளிவாழ்நற்பதத்தி லேந்திழையுமெய்தினாள். (கOகூ)

சுந்தோபசுந்தர் வதையுண்ட அத்தியாய முற்றிற்று.

ஆகூ அத்தியாயம் உச-க்குத் திருவிருத்தம் கூகூசு.

இருபத்தைந்தாவது,

## குண்டலவிகுண்டலர் காதையுரைத்த அத்தியாயம்.

உலகுளதருமமியாவு முயர்ந்தமாதவத்தின்பேறு
மலகிலாவேதன்றானே யருந்துலைத்தட்டில்வைக்கத்
தொலைவிலாமாகப்பேறே பாரமாய்த்தூங்கிற்றென்றான்
மலர்தலையுலகில்யாரோ மற்றதன்பெருமைசொல்வார். (க)

இப்பெருந்தருமந்தன்னு லியன்றதோர்காதைகேட்டி
செப்பியமுதலுகத்து நிடதேயத்திலாங்க

ணொப்பறுவணிகர்தங்கள் குலத்தினிலுதித்துவாழ்வோ
றப்பறுவாய்மையேம குண்டலனென்னுந்தக்கோன். (உ)

நீதியினெறிவழாம னிதிக்குவையீட்டிநின்றோன்
சாதியின்றகைமைகுன்றாத் தருமத்தைத்தழுவிநின்றோன்
வேதியர்க்களிக்குங்கையான் விருந்தினர்க்கூட்டியுண்போன்
மாதழல்வேள்வியாற்றித் தேவரைமகிழ்ச்சிசெய்வோன். (௩)

வேறு.

எண்டொகையகோடிபொன் னியற்கையினிலீட்டிக்
கொண்டொழுகுநாண்முதுமை கூடியதுகண்டே
யண்டர்முனிவோருமர ணத்தையகலார்மேற்
கண்டதறனேயென மனத்திடைகணித்தான் (ச)

ஆறிலொருகூறுநிதி யன்னதிலெடுத்தே
நீறொளிருமேனிநிம லக்கடவுளுக்கும்
பாறுபடிநேமிதொடு பச்சைமுகிலுக்கும்
வீறுபெறுமாலயம் விதித்திடவளித்தான் (ரு)

மன்பதைகணீர்நுகர வாவியகழ்வித்தா
னின்பழனருதபொழி லெண்ணில்பலவைத்தா
னன்பலமலர்த்தொகுதி நந்தவனம்வைத்தா
னன்பில்வறியோர்நுகர வட்டின்மனைவைத்தான். (சு)

பாதையினினீர்பருகு பந்தர்பலவைத்தான்
மாதவர்கள்வைகுபொது மண்டபமமைத்தான்
வேதியருவந்திட வெறுக்கைகளழித்தான்
றீதறநினைந்துதரு மங்கள்பலசெய்தான். (எ)

வண்டுலவுதார்வணிக னிப்பரிசுவாழ்நாட்
குண்டலவிகுண்டல ரெனுங்குமரர்தோன்றி
மண்டலமதிக்கமதி யாமெனவளர்ந்தே
கண்டவர்வியப்பமிகு கல்விகளைகண்டார். (அ)

மைந்தரவரின்னனம் வளர்ந்தொழுகுநாளிற்
றந்தைதவமுற்றடவி சார்வதுநினைந்தே
யந்தமனைவாழ்வுநிதி யாவையுமடங்க
வந்தபுதல்வர்க்குதவி மற்றவனகன்றான். (௯)

அவ்வனமடைந்தவ னகந்தெளிவுதோன்றிப்
பவ்வமிசைகண்டுயில்கொள் பச்சைநெடுமாலை

அத்தியாயம்.

யெவ்வமறநெஞ்சினி லிருத்தியுடல்விட்டே
திவ்வியவிரத்திபெறு சின்மயமடைந்தான். (கo)

மற்றவனளித்தருளு மக்களிருவோருஞ்
சிற்றியலிழைத்துலகி னன்னெறிதிறம்பிக்
குற்றமுறுதீயமது வுண்டுகுணநீங்கிப்
பெற்றபொருளான்மிகு பெருங்களியடைந்தார். (கக)

நல்லிளமையாலுமறி வற்றநவையாலும்
புல்லியமதங்கர்கள் புணர்த்தநெறியாலு
முல்லைமதவேள்பகழி முற்றுதலினாலு
மல்லல்கடிவாருரை கடிந்தறிவழிந்தார். (கஉ)

நானமுறுசந்தன நலம்பெறவணிந்தும்
பானுரையெனத்தகைய பட்டுடையசைத்து
மேனியொளிபொங்குகலன் வேண்டுவனபூண்டும்
போனகவளங்கள்சிறி யாரொடுபொசித்தும். (கங)

கைதவமியற்றுகவ ருடலதுசெய்துந்
துய்யசிறைசெங்குருதி சூட்டுடையசேவல்
வெய்யசினமூண்டுபொர விட்டுமகிழ்வுற்று
நொய்யதொழில்வேட்டையில் வனம்படலநுழைந்தும். (கச)

கற்றறிவிலாதவர் கருத்திலுணர்வற்றோர்
நற்றவமருந்தரும நாளுமறியாதார்
குற்றமுறுகள்வரிழி யுங்குலமுதித்தோர்
சுற்றவவரோடினிய தோழமைபுணர்ந்தும். (கரு)

நாடகமடந்தையர்க ணன்னலமுவந்துங்
கோடகமுகைத்துமறு கூடுகுலவுற்று
மோடைமதமாவிளைஞ ரோடினிதினூர்ந்தும்
பாடறெரியாழினர் புணர்ப்பொடுபயின்றும். (கசு)

பொற்பொதுமடந்தையர் புலைத்தலையொழிக்குங்
கற்புனைபயிற்றிவரு தூதர்களிகூர
நற்பொருளளித்து நடனத்தொழிலினோர்க்கு
வெற்பினைநிகர்த்திடு வெறுக்கைகளளித்தும். (கஎ)

குயிலுவர்தமக்குநிதி கோடிகளளித்து
மயர்வுலவுதூர்த்தர்க ளகங்கொளவளித்து

மயறருபொதுக்கணிகை மார்பெறவளித்து
மியலுறவருத்திய மதங்கர்கொளவீந்தும் (கஅ)

திருவிலிகளிப்பரிசு தேடுபொருடன்னி
னொருபொருளுமற்றிட வொழித்தபடியல்லா
லரியரனிடத்துமறை யந்தணரிடத்துந்
தருமமெனவெண்ணியிறை தானுமுதவாரால். (கசு)

ஆக்குபொருளியாவையு மவத்தினிலழித்துப்
பாக்கியமிலார்வறுமை யிற்படி யுநாளிற்
றேக்கியவிருனனி சிதைந்தவழிநில்லா
வீக்குலமெனத்துணைவர் யாவருமகன்றார் (உ0)

யாவருமகன்றொழிய வேட்டிகுலமைந்தா
பூவலயமீதுவறு மைத்துயர்பொருந்தி
மேவுபசிதீரும்வகை வேற்றுணவுமற்றுக்
காவலனகர்க்கணுழல் கள்வர்தொழில்பூண்டார். (உக)

சேமமுறுநற்கத வெடுத்துமனைசேரா
வேமமொடுநல்லணிகள் யாவையுமெடுத்தே
தாமுலவினூரது தராபதியறிந்தே
போமினெனவுந்தநக ரிற்புறமடைந்தார். (உஉ)

மன்னன்வெகுளிக்குவெரு வுற்றுவனமேவித்
தின்னவுணவின்றிவிடு திண்சிலைகுனித்துக்
கொன்னுனையவாளிபல விட்டிரலைகொன்றுந்
துன்னுமரைமான்முதல் விலங்குகடொலைத்தார். (உ௩)

அத்தசைவெதுப்பியவ ருண்டுறையுமன்னாண்
மத்தரிருவோர்களினு முன்னவன்வரைக்கே
தத்துபுலியான்மடிய வன்றிளவல்தானும்
பைத்தலையராவினில் வனத்திலுயிர்பட்டான். (உச)

வேறு.

பட்டபாதகரை யந்தகன்சினவி யேவவந்தபடர் பற்றியே, கட்டி யோருயிர் விசும்பினூடுபல காவதங்கழிய வேகியே, கிட்டியூடு தழல் கக்கவைகுமொரு தென்றிசாபதிமுன் விடுதலுங், துட்டர்தங் கள்செயல் யாதெனக்கடிது சித்திரகுத்தனொடு சொல்லினான். ()

அன்னபாதகர் திரத்தையங்கவன் விளம்பவந்தகனு மேவ லாய், மன்னுகிங்கிரரா வம்மினென்றருகு வந்துநின்றவிரு வோ

ரினு, முன்னவன்றனை யனர்தகும்பியிடை மூழ்குவித்திடுதி ரன்றி யிப், பின்னவன்றனை லமரர்பொன்னுலகில் விடுதிரென்றுபல பேசினான். (உசு)

ஏவுதூதுவரி லொருவன்முன்னவனை யெற்றிவ்ர்குவினை யிருகவே, பாவுபாசமத னிற்றளைந்துநிரை யத்தலத்திடை படர்ந்தபின், மேவுபின்னவனை யொருவனின்சொலொடு மிளிர்விமானமிடை கொண்டுபோய்த், தாவிவிண்ணினிடை போதும்வேலையின் விகுண்டலனினைய சாற்றுவான். (உஎ)

ஓர்வயிற்றினி லுதித்துளோம்நினைவி லொத்ததீவினை யியற்றினேம், பாரிடத்தரவி னாலும்வெம்புலியி னாலுமோர்பொழுது பட்டுளோங், கோரவேடயம தூதர்கொண்டுவர வொக்கவந்துசபை குறுகினேங், தீரயாமிருவர் செய்ததீமையினி லொத்ததேயலது செய்திலேம். (உஅ)

ஒத்ததன்மையிரு வோரில்முன்னவனை யுருகுகும்பியிடையிடுவதென், பத்திமானமிடை யென்னைவைத்தமரர் பதியின்வாழ்வு பெற விடுவதென், முத்துலாவுதட மாலைமார்பயம தூதரும்பரவு முதல்வவென், சித்தமின்றுகவ லாதவண்ணமிது செப்புகென்ன வவ னுரைசெய்தான். (உகூ)

வேறு.

ஈன்றோரொன்றுஞ்சுற்றமென்று மினியதுணைவரொன்றுமுண்டோ
வான்றகூட்டமவையெல்லா மரங்கிற்கூட்டமவைகண்டாய்
தான்முன்செய்ததவப்பயன்க டானேபுகுந்துதனிதுய்க்குந்
தோன்றுநீங்களிருவீரும் புரிந்தபடியேதுய்க்கின்றீர். (௩0)

என்றுகூறவிகுண்டலன்கேட் டென்னேயென்னேயெனவியந்து
நன்றிபுரியுந்தருமநிலை நானோவொருநாளியற்றியில்லேன்
தொன்றுபடுமெவ்வினைப்பயனாற் சுரர்நாட்டின்பந்துயப்பதெனக்
குன்றலில்லாய்கூறுகெனத் தேவதூதன்கூறுவான். (௩க)

அரிமித்திரனும்வேதியன்றன் னரியபுதல்வன்சுமித்திரனை
மருவித்தெண்ணீர்யமுனையின்கண் மாகமிரண்டுபுனலாடி
நிருமித்திடுமத்தவப்பயனாற் பாவநீங்கிநிகரில்லாத்
தருமொய்த்திடுதண்ணறுநிழல்வா ழமரர்பதியிற்சார்கின்றாய்.. ()

தூயமாகப்புண்ணியத்தாற் றேவர்போகந்துய்க்கின்றாய்
தீயபாவநின்முன்னோன் செய்தவதனானிரயத்திற்
காயுமிருப்புக்குடத்தடைத்துக் கருவியாலீர்ந்தறுத்திட்டும்
வாயின்முசலந்தனைமடுத்தும் வருத்தத்துயரின்மாழ்குற்றான். ()

தேவதூதனிவ்வாறு செப்பத்தம்பிசெயலழிந்து
தூவிவிழிநீராறலைப்பத் துயரங்கூர்ந்துநடுநடுங்கிப்
பாவவினையாலென்முன்னோ னரகிலுழக்கும்படரொழியக்
காவல்புரிந்தீங்கெமைப்புரக்கக் கருணையுதவென்றடிதொழுதான்.

நல்லதருமமிஃதென்றுஞ் செய்தார்துறக்கநண்ணுவது
மல்லற்பாவமிஃதென்றும் புரிந்தார்நரகத்தெய்துவதும்
வல்லையறியேன்றனைத்தெருட்டி வருத்துநரகிலுழலுமுன்னோன்
செல்லறவிர்க்கும்வினையமுநீ செப்பென்றிறந்தார்க்கவனுரைத்தா

எட்டிகுமரநன்குரைத்தா யியல்பாய்நயந்துகேட்டியெனில் [ன்.
விட்டமனத்தால்வாக்கினால் வினையாலீட்டுங்கருமத்தாற்
சிட்டர்தமக்குக்கொடுந்தீமை செய்யாதிருக்குந்திறத்தினோர்
கட்டநரகில்வீழாமற் ககனாலயத்தைக்கண்ணுறுவார். (௱௬)

ஏதிலாருக்கிடரிழைப்போ ரேழுகோடிமந்திரமும்
வேதநான்கும்பயின்றிடினும் வேள்விநூறுமுடித்தாலுங்
காதம்பலபோய்விரிதிரைநீர்க் கங்கைப்புனலிற்கலந்தாலுங்
கோதமானவழனிரயக் குழியில்வீழ்ந்துகுலைந்திடுவார். (௱௭)

எந்தநாளுந்தம்முயிர்போ லெல்லாவுயிர்க்குமிரங்கிடுவோர்
அந்தணாளர்க்கிடர்புரியா ராவின்குலத்தையோம்பிடுவோர்
பந்தனீர்பாதையினமைப்போர்பன்னாள்விருந்தினொடுமயில்வோர்
சிந்துகுருதிவைதரணித் தீவாய்நரகஞ்செல்லாரே. (௱௮)

விலங்குபறவைசெகுத்தருந்தி மேனிவளர்க்குமறிவில்லோர்
கலங்கிநிரயத்திடையழுந்திக் கற்பகாலந்தம்முடலை
மலங்கவறுத்திட்டிடவுண்டு வாயிற்புழுக்கான்றிடவலறிப்
பலங்களுதவாவறுமரமாய்ப் புழுவாய்ப்பாரிற்றோன்றுவரால். ()

பாரிலிவ்வாறவர்தோன்றிப் பின்னும்பாவசேடத்தாற்
றீர்வதில்லாப்பெருநோயாக் குருடாய்ச்செவிடாயெத்திறத்து
மூர்தலில்லாமூங்கையாய்ச் சிந்தாய்முடமாயுறுகூனாய்ச்
சீரொன்றில்லாநல்குரவா யிழியுங்குலத்திற்சென்றுதுய்ப்பார்.

## அத்தியாயம்.

ஆதலாலேயிகபரத்தி லரும்போகத்தைவிரும்பிடுவோர்
பீதியுறாத்திமன்னுயிர்க்குப் பீடையொன்றும்புரியாரே
லோதநீரிற்சென்றுவிழு முறுநீர்நதியின்குலமென்னத்
தீதில்லாததருமமெல்லா மம்மாண்புடையோர்ச்சேர்ந்திடுமால்.

அஞ்சியடைந்தமக்கடமை யன்பாலஞ்சலெனவுரைப்போர்
மஞ்சுதவழுமிமையமுதற் சேதுவீறும்வையகத்தில்
விஞ்சுகங்கைமுதலாய புனிதநீரில்வியந்தாடி
னெஞ்சுகளிக்கப்பலவேள்வி நிரப்பினோருமவர்தாமே. (௪௨)

வேறுதருமம்புரிந்தென்னை மேவுந்தனதுவருணத்தின்
கூறுபிழையாவழியொழுகிக் குறித்தநாலாச்சிரமத்தின்
பேறுதவறுதியற்றியிடும் பெற்றியோர்மற்றிவர்தாமே
நாறுமலர்ப்பூந்தருநிழலி னமரர்மாதர்நலந்துய்ப்பார். (௪௩)

தேக்குபுதுநீர்வாவிதொட்டோர் செழும்பூநந்தாவனங்கண்டோர்
வாக்கிலினியோரெவரிடத்து மகிழுங்கருணைமுகமலர்வோ
ரார்க்குமிறைவன்முன்னாக வமர்நின்றுடற்றியுயிரிழந்தோர்
காக்கும்பருதிமண்டலமே வழியாய்க்ககனவீடடைவார். (௪௪)

பாலர்தம்மைமுதியோரைப் பாப்பார்தம்மைப்பாற்பசுவைச்
சாலநோயால்வருந்தினரைத் தஞ்சம்பிறிதற்றடைந்தோரை
யேனும்வறுமைப்புலிதொடர விரங்கிநிலையற்றெய்தினரை
ஞாலத்தளியிற்புரந்திடுவார் நமனாருலகினண்ணாரே. (௪௫)

அரசுநிம்பமாலோரொன் றரும்புகூன்காய்ப்புளிப்பத்து
மருவில்வில்வம்விழாநெல்லி மும்மூன்றிளமாவோரைந்து
விரியுமடற்பூந்தெங்கைந்து வைத்துண்டாக்குமேலோர்கள்
நரகமென்னும்பேருமவர் நலங்கூர்செவியிற்கேளாரே. (௪௬)

வெம்பிப்பருதிவெயில்விரித்து வெதுப்பும்பாலைத்தனிநெறியிற்
பம்பிச்சுரும்பரிசைபாடப் பலபூக்களுலிப்பழங்கனிந்து [ழு
கொம்பிற்பசுந்தேன்மழைபிலிற் றுங் குளிர்பூம்பொதும்பரிருபா
மிம்பர்நிழற்செய்திடவமைத்தா ரும்பர்தருநீழலிலிருப்பார். ()

ஆராமத்தின்மனையிடத்தி லரியகடவுளாலயத்திற்
சீரார்பசும்பூந்துழாய்வைத்துத் தெண்ணீர்பெய்துவளர்க்குமவர்
பாரேழ்புகழப்புகழ்படைத்துப் பன்னாள்வாழ்ந்துபணிப்பாயல்
நாராயணன்பொன்னுலகத்து நழுவாதென்றும்வாழ்வாரால். ()

எந்தத்தலத்திற்பசுந்துளப மென்றுமினிதாயமர்ந்தோங்கு
மெந்தத்தலத்திற்பதுமவன மெந்நாளுமெழில்கூரு
மெந்தத்தலத்தில்வைணவத்தி னிசைந்தோரென்றுமினிதுறைவார்
அந்தத்தலத்திற்பரந்தாம னகலாதென்றுமிருந்திடுவான். (௪௯)

உரைத்தநீதிவ்வைணவத்தி னோருமன்புமிகப்பெருகி
நிரைத்தவருணாச்சிரமத்தி னெறியிற்பிழையாதினிதொழுகி [கும்
யருத்திவெறுப்போடிவைமாற்றி யடைந்தாரடைந்தாரனைவோர்க்
பரித்தகருணைபுரிந்துதன்மம் பற்றற்றியற்றும்பான்மையரே. (௫0)

பச்சைத்துழபம்வைப்போர்கள் பலகாற்றெண்ணீர்வார்ப்போர்க
ளிச்சையுடனேவலஞ்செய்வோ ரிதனிலுதிர்ந்தசருகையெடுத்
துச்சிமிசையேவைத்திடுவோ ருவப்போர்தேவருறுபூசை
நச்சித்தளிராலியற்றிடுவோர் நமனாலயத்தைநண்ணாரே. (௫௧)

நெடியோனோணம்விதிபாத நிறைந்தகதிரோன்புகர்செவ்வாய்
நொடியுமுவாக்கடுவாதசியே நுவலுமாதர்சங்கிரமங்
கடியுமுச்சிப்பின்மாலை கங்குற்பொழுதுவைகறையிற்
படியிற்றுளவமெடுப்போர்கள் பரமன்றலையிற்புடைப்போரே. ()

பக்கமிரண்டிற்றனியெய்து மரிவாரத்திற்பங்கயத்தோன்
மிக்கதேவரொடுமெய்தி வேதவிதியாய்ப்பூசிக்கத்
தக்கதுளவந்தனைவைத்து வளர்ப்போரதனிற்றான்விழைவுற்
றுக்கவினையினளவுகற்ப மும்பருலகமடைவாரே. (௫௩)

சொல்லத்தகுவதினியுண்டோ துளவம்வைத்துவளர்த்தோம்பு
மில்லுக்கிணையாய்ப்புனிதவிட மீரேழுலகத்தினுமில்லைக்
குல்லைப்பசியகொழுந்தளிரைக் கொண்டுமாலையருச்சித்தா
லெல்லிற்றிகழ்வைகுந்தமதிற் கருடனேறியினிதுசெல்வார். (௫௪)

இரைக்குந்திரைநீர்க்கங்கைமுத லெல்லாநதியிற்றோய்வதினு
முரைக்குந்துரகமேதமுத லுலவாத்தருமஞ்செய்வதினு
நிரைக்குநறும்பூந்துழாயிலையை நினைந்துசிரத்திற்றரிப்பாரேற்
குரைக்குந்திரையாழியிற்றுயிலுங் கோமானுலகிற்குடியிருப்பார். ()

மாயப்பிறவிக்கடல்வீழ்ந்து மருகியுழலுமானிடருக்
கேயப்புகலுமுறுதியொன்றுண் டெளிதிற்றுளவச்சருகெடுத்துந்
தோயத்தோடுமுட்கொள்ளிற் றொல்லைப்பாவத்தொடர்பறுத்துத்
தாயிற்புவனமீன்றெடுத்த சதுரானனத்தோன்பதமடைவார். ()

## அத்தியாயம்.

வெறியார்துளவமஞ்சரியால் வெயில்காறிகிரிநெடியோனை
மறியார்கரத்துச்சுடர்முக்கண் வானோன்றன்னையருச்சிப்போ
ரறியாநின்றபேதமையா லன்னைகருப்பைமலக்குழியிற்
செறியான்வினைவல்விலங்கறுத்து முத்திப்பதமேசேருமால். (௫௭)

செய்தற்கெளிதாய்ப்பலன்பெரிதாய்ச் செரிக்குந்தருமம்புகலக்கேண்
மையிற்பொலியுங்களத்திறையைப்பஞ்சாக்கரத்தின்மறைவிதியாற்
கையிற்புனிதமலர்தூவிக் கருத்தால்வணங்கிவழிபடுவான்
வையத்துழலும்பிறவியெனும் வாரிகடக்கும்புணைபெற்றான். (௫௮)

ஆதியாயவாணலிங்கம் படிகம்பசும்பொன்னவிர்வெள்ளி
சோதிநவமாமணியிவற்றாற் றிலங்குமிலிங்கமண்ணாற்செய்
பேதவிலிங்கஞ்சுயம்புலிங்கம் பெரியோர்தாபித்திடுமிலிங்கங்
கோதிலாதுவழிபடுவான் சிவலோகத்திற்குடிபுகுவான். (௫௯)

சொன்னவிலிங்கப்பேதத்து ளொன்றுதன்னைச்சோராம
லுன்னிமூன்றுகாலத்தி னொருபோதேனுமுறுமலராற்
பன்னுசிவமந்திரங்கொண்டு பரமசிவனென்றருச்சித்தான்
றன்னைக்கணங்களடிபரவச் சிவசாரூபஞ்சாருமால். (௬௦)

வன்பிலேனுங்கைதவத்தை மருவியேனுமனங்குழையு
மன்பினேனும்வினோதத்தி னேனுமரும்பொன்பெறவேனு
மின்பவுலகிற்புகழேற வெண்ணியேனுஞ்சிவனடியைத்
துன்பமறவேபூசித்தார் பிரமாதியராற்றொழவிருப்பார். (௬௧)

பரசுபாணிக்கடிமைபுகும் பாசுபதரோயாமென்றுங்
கரியமாயன்றனைப்பழிக்குங் கள்வர்தாமுங்கருங்கண்ணற்
குரியபாகவதர்யாமென் றுமையோர்பாகன்றனைப்பழிக்குந்
திருவிலாரும்வாய்புழுத்துத் தீவாய்நரகத்துறுவாரால். (௬௨)

செம்பொற்சிலைவெஞ்சிலையாளர் சிவசேடத்தையருந்தாமற்
பம்புபுனற்கூவலிலிடுவ தியல்பாம்பரமன்பொருட்டன்னி
னம்பியீக்காலளவுகொண்டோர் நளினாலயத்திலுறைவிரிஞ்ச
னும்பருலகந்தனில்வாழ்நா ளெல்லாநிரையத்துழல்வாரே. (௬௩)

புல்லின்மரத்திற்சுடுமண்ணிற் பொதியுந்தழையிற்பொருந்துகருங்
கல்லிற்பஞ்சலோகத்திற் கதிர்மாமணியிற்காசினியில்
வல்லேதமக்கங்கியன்றவற்றால் வரதன்கோவில்வகுப்பித்தார்
செல்லலறுத்துவினையொழித்துச் சிவசாலோகஞ்சேர்வாரே. (௬௪)

எந்தத்தேவராலயங்க ளியன்றதவத்தாலியற்றிவித்தா
ரந்தத்தேவர்தம்பதத்தை யடைவார்மடங்களாவினங்கள்
வந்துற்றுறையுஞ்சாலைபொது மறையோர்க்கில்லமிவைவகுத்தோ
ரிந்தவுலகிற்புகழுறைய விமையோருலகிற்றுமுறைவார். (சுரு)

விழைவினுலேல்கடவுளர்க்கு வியனுலயங்களெடுப்பதினும்
பழையதிருக்கோயிலைச்சிறப்பாய்ப் பரிந்துண்டாக்கன்மிகுபயனுங்
தழையும்பூசையொழிந்திறந்த கோயிற்பிடுங்கித்தான்பிறிதாய்க்
குழையுமனத்தாலியற்றிடினுங் கும்பிநரகங்குளித்திடுவார். (சுசு)

மாசிலாதமடத்தருமம் வைத்ததொழித்துப்பிறிதியற்ற
லீசர்கோவிற்றுவைபரித்த லிசைமாமறையோரியல்பழிந்து
கூசாததிகாரஞ்செலுத்தன்மேற்கொண்டொழுகுங்குணமுள்ளோர்
நீசரொன்னக்கிளையோடு நிரையத்தென்றுமழுந்திடுவார். (சுஎ)

திருந்துசிலமடபதியைத் தொட்டோருடுத்தசேலையொடு
பொருந்துபுனலின்மூழ்கியிடப் புனிதராவார்புகுந்தன்ன
மருந்தினுலோவம்மடத்தி லரியதவச்சாந்திராயனத்தைப்
பரிந்துசெய்தாலல்லாது பரமபுனிதராகாரோ. (சுஅ)

பாவிபுனிதநிலையழிந்தோன் பரமனணியிற்றுனின்றோன்
யாவரோனும்பசியின்மெலிந் தெய்தினுரோலவர்தம்மைத்
தேவரொன்னப்பாவித்துச் சிறப்போடன்னமினிதளித்தார்
நாவுக்கினியவமுதருந்தித் துறக்கவீடுநண்ணுவார். (சுகூ)

அனந்தகோடிதருமங்க ளரியதவங்கள்பெருவேள்வி
நினைந்துநாளுஞ்செய்தபல னிமிடப்பொழுதிலினிதளிக்கும்
புனைந்தமுன்னூலதிதியர்பாற் புரியுமன்னதானமென்றால்
வனைந்தவேணியரன்விரிஞ்சன் மாலென்றிவராற்றரவஃற்றே. (எ0)

நிலமால்வரைகளவற்றிலெல்லா நெடியமேருவரையென்னக்
குலமாநதிகளவற்றிலெல்லாங் கொழிக்குந்திரைசூழ்கங்கையெனப்
பொலனுர்விசும்பின்வானவர்க்குப் பொருவில்குலிசபதியென்னப்
பலவாந்தானதருமத்து ளன்னதானம்பலனுடைத்தே, (எக)

துறக்கநீங்கியாங்கிழிந்த வேந்தன்சிங்கத்துவசனுடன்
சிறக்குந்தண்டதரனிவர்கள் புவியிற்சென்றுதினந்தோறு
நிறக்கவன்னதானமிட்டு மீண்டுந்துறக்கநிலைபெற்றார் [றேன்.
மறக்கவேண்டாமெனவுரைத்தான் மனிதர்க்கெல்லாம்பொதுநின்

## அத்தியாயம்.

அன்னதானம்புரிவதுபோ லரியதருமமொன்றில்லை
யன்னதானஞ்செய்வதுபோ லரியதவமுமொன்றிலலை
யன்னதானங்கொடுபபதுபோ லரியவிரதமொனறிலலை
யன்னதானஞ்செய்வதுபோ லன்னைதானுஞ்செய்யாளே (எங)

என்றுமபுலரிநீ.படிநதோா வெகுளிதீாநதோரெவரிடதது
நன்றியுரைபபோாமகிழ்ந திருபபோா நாவிலிரண்டுமொழியாதோா
துன்றுமபொறையின்வைகிடுவோ ரிரசகமுடையோா தூய்மையிேனு
சென்றசென்றவுலகுதொறுந தேவாபோகந துய்த்துறைவாா [ா

பொயயுநகளவுமபொருந்திடுவோா பொதுவிலிருநதுசாிபொய்பபோா
வெய்யகுரளைபகாநதிடுவோா மேலோாதமககுபபழி புரைபபோா
வையமுரைககுங்கதையனைததும வாளாபபொயயென்றிடுநதீயோா
கொய்யுங்கருவிதனைக்கொண்டு நாவைககுமாரககருலைநதழுவாா ()

அண்டகடாகவைபபிடததி னளவிலபுனிதநதியிலலைலா
மண்டுபுனறகஙகையினிகராய் வழுததவுளதோமானிடவா
பண்டுபெருமபாதகமபுரிநதா ரேனுமொருநாடபடிவரெனிற
றுண்டமதிவானவனுலகிற புகுநதுபெருமபோகங்கடுய்பபார் ()

ஓடுபுனற்கஙகாநதியி னுவநதுதிருநீராடினரு
மாடவெழுநதுசென்றுரு மனறிசசெலவேனென்றுரும
பீடுபெறவேநினைநதாரு மாடிவநதபெரியோரை
நாடிததொழுதுபுகழ்நதாரு நற்றுயவயிறறினணுேரா (எஎ)

விரிஞ்சனுலககதிடைபிறநது விளஙகுமூனறுபதவியையும
பரிந்துபுனிதஞ்செயவல்ல பாகீரதிபுககாடியிடுந
திருநதுமுளததுமாணிடாதந தீயபிறவிவேருமறுத
தடுஞ்சின்மயவீடளிக்குமெனல்புகழவாாநாவுககதிசயமே (எஅ)

நீலகண்டன்றிருமுடிமே னிலவோடிசலியலைவிளங்கு
மோலநறுநீாக்கஙகையுடன் வேறோாநதியையொபபுரைக்குஞ்
சீலமில்லாப்பாதகர்தாஞ் சென்றசெனறநரகமெல்லாந
தாழுமூலமழுகிவிழ வாயிற்புழுககான்றிடததாழ்வாா (எகூ)

விளங்கும்பிராணுயாமததை விதியிலெவரோசெய்திடுவார்
துளஙகிமனததினழுக்ககறறித தொடாநதபாவததுரிசற்றுக்
களங்கமிலலாமதியமபோற் சிததியெட்டுங்கைசேர
வுளங்கொள்போதநிலையாய முததிபபததனைதயுறுவாரோ (அ0)

பிரதாரத்தைவிரும்பாதார் பிறர்தம்பொருளைப்பரியாதார்
குரவர்தம்மையின்றேரைத் தேவரென்னக்குறித்திடுவோர்
விரவுகற்பினிலேநின்று கணவற்பேணுமெல்லியலார்
நிரையராசிகாணுமை லமரர்பதத்தினிலேபெறுவார். (அக)

சுருதிநீதிவேதாந்தந் தூயமனுவேமுதலான
மிருதிபுராணந்தருமநிலை விளங்கச்சொல்லுஞ்சாஸ்திரங்க
ளரிதினுணைப்போர்கேட்போர்க ளவற்றையுலகினிறுத்துவிப்போர்
பருதியென்னவுலகத்தை யவரோபரிக்கும்பான்மையரே. (அஉ)

மறந்தேனின்னுமொன்றுளது கேட்டிவிரும்பிக்குலவணிக
சிறந்ததிருமாலடியார்பாற் செல்லாதொழிகவெனவெம்மோ
டறைந்துவிடுவன் கூற்றுவன்மற் றென்றாலந்தப்பாகவத
ருறைந்தவிடமேதேவரெல்லா முறையுமிடமென்றுணர்வாயால். ()

பொல்லாநிறையக்கடனீந்த விதுபோல்வேறுபுணையுண்டோ
வில்லாத்தீமைசெய்தொழுகி யிறக்குங்காலத்தசாமளன்று
னல்லாதரவற்றுடன்மகவை நாராயணவென்றழைத்திடலா
லொல்லைவினையையொருவிமுத்தி யுற்றானென்பதுறுபொருளே. ()

மற்றோர்தருமமெண்ணுவரோ மாயன்திருவாழ்மணிமார்ப
னுற்றதிருப்பேராயிரத்தி லொருபேரேனுமொருபொழுது
சற்றேயுரைக்கத்தவம்பெற்றோர் தழுவும்பாவவிலங்கறுத்துப்
பொற்றேரல்குலரம்பையரோ டமராபதியிற்போயுறைவார். (அரு)

உலகமெல்லாநிறைந்துறையு மொருவன்காட்டத்தொடுங்கழல்போ
லிலகுசாளக்கிராமத்தி லெக்காலமுமுற்றுறைந்திடுவ
னலகிலாதுகடையுமிடத் தரணியிடதோன்றவ்வழல்போ
னிலவுமனத்திற்பாவிக்க நெடுமாலாங்குவெளிப்படுமால். (அசு)

பொருவிலாவைகுந்தத்தும் பொற்றாமரையாடன்னிடத்தும்
விரவியுறையுமதுபோலச் சாளக்கிராமவியன்சிலையி
லுரகசாயியுறைவனென்ப துணர்வாலுணர்ந்துமலர்பெய்வார்
துரகமேதமொருகோடி புரிந்தார்போகந்துய்த்திடுவார். (அஎ)

கண்ணன்சாளக்கிராமத்தைக் கருதித்திருமஞ்சனமாட்டுந்
தண்ணென்புனலிலோர்துளியுஞ் சாத்துந்துளவிலோரிலையு
முண்ணும்பெரியதவமுடையோ ரூழின்முறையைக்கடந்தன்னை
வண்ண மூலைப்பாறனைவாயா லுண்ணாரொன்றுமறைசொல்லும். ()

# கரு அ குண்டலவிகுண்டலர் காதையுரைத்த அத்தியாயம்.

மாயன்சாளக்கிராமநிலை வைகுமிடத்துக்கணித்தாகி
மேயவொருகாவதத்தளவு விலங்குபுழுப்புள்விளிந்தவெலாந்
தூய்வைகுந்தஞ்சேருமென்றாற் சோராதேதானருச்சிப்போர்
தீயரறியாமால்பதவி சேர்வாரென்னலதிசயமோ. (அகூ)

சாளக்கிராமமொன்றேனுந் தானமளிக்குந்தன்மையோர்
வாளக்கிரிசூழ்நிலமுழுது மறையோர்க்களித்தபலன்பெறுவர்
நாளக்கமலநறும்பூவா லுமதனையருச்சிக்கில்
வேளைக்கடிந்தோன்சிவலிங்கங் கோடிபூசித்ததின்மேலாம். (கூ0)

அரிகேசவனேகாதசியை யொருநாளியற்றுமவர்க்குமறை
பரவுதுரகமேதத்தைப் பன்னாளியற்றும்பலமுண்டாந்
தரையின்மனிதராய்ப்பிறந்தோ ரொருநாளரிவாரஞ்சரிக்கில்
நிரையராகிதனைப்பாரார் நெடுமாலுலகினிறைந்திடுவார். (கூக)

தானமென்றுந்தவமென்றுந் தவத்தால்சமாதித்தவம்பழுத்த
மோனமென்றுமொழிந்திடுவார் முத்திக்கிவற்றாற்பயனுண்டோ
கானநறும்பூந்துழாயலங்கற் கண்ணனேகாதசியிலனன
பானமொழிந்தோர்முறையியற்றிப் பரமன்பதத்தைப்பெறலாமால்.

என்னாளவேகாதசியை யியற்றுதிருந்தார்மேதினியோ
ரன்னாளவும்பெரும்பாவ மவர்பானிற்குமவ்விரத
முன்னாமுன்னம்பாவவினை யொழியும்பருதிக்கொதுங்கிருள்போற்
பன்னாளதனையியற்றியிட்டோர் நெடுமாலுருவிற்படிந்திடுவார். ()

ஆதலாலேதருமநிலை யனைத்துமுரைத்தோமச்சுதனைப்
போதிலுறையுந்திருமருவும் புருடோத்தமனைப்புண்ணியனை
யோதிவினையையறுத்துலக முய்யவேண்டுமெனத்தேவ
தூதனுரைத்தான்விகுண்டலன்கேட் டினையபின்னுஞ்சொல்லுவான்.

வேறு.

நன்றுநன்றுநீ சொல்லியதருமத்தி னலத்தா
லின்றுநான்மகிழ்ந் தின்பத்தின்வைகினே னெம்மு
னோன்றலாதநீ நரகத்திலுறுவகை மீட்பான்
றன்றுதாரினாய் சொல்லெனயமபடன் சொல்வான். (கூரு)

முன்னையுள்ளதோர் பிறப்பினின்முற்றிய தரும
மன்னிநின்னுழை வைகியததனைநீ வழங்கி

வின்னனுற்றநின் முன்னவனிளையம்விட் டெழுவ
னன்னதன்மையான் கிளர்த்துவன்கேட்டியென் றறைந்தான். ()

நினதுமுற்பிறப் பெட்டினினெடுவளங் குன்றுப்
புனிதநன்மது வனத்தினிற்பொருவில்சா கவிய
னெனவுரைத்தபே ரிருடிநால்வேதத்தி னியல்பிற்
றணிகர்ப்பரி லாதவன்றோன் றினன்றவத்தால். (கூஎ)

அந்தமாமுனிக் கிரேவதியெனுமணங் கனுள்பால்
வந்தமைந்தரோன் பதின்மருமவளருநா ளவரி
லைந்துமைந்தரில் லறத்தினையடைந்தனர் மற்றைப்
பிந்துமைந்தர்க ளைல்வருந்துறவறம் பிடித்தார். (கூஅ)

ஆசையற்றவர் துறவறத்தொழுகிய வன்னுண்
மாசிலாமச்ச நாட்டிலோர்மறையவ னாகிப்
பூசுரற்குமே லாகவாழ்ந்தில்லறம் பூண்டு
போசனத்தின்மு னதிதிபார்த்திருந்தனை புறம்போய். (கூகூ)

அவ்விடத்தினி லதிதியராகநல் லருளா
லெவ்வமற்றவந் நால்வருமெய்தின ரெய்தத்
தெவ்வடர்த்தபொற றிகிரியானெனக்கொடு சென்று
பவ்வமுற்றநல் லமுதினின்னடி சில்பண் டளித்தாய். (க00)

விடையவல்வினை வேரறவெறிந்திடு ஞானப்
படையினார்தமக் கொருபகற்பரிந்துண வளித்த
வுடையநற்பல மதனைநீமுழுவது மளிக்கிற்
றடையிலாதுபோய்த் துறக்காடடைவனுன் றமையன். (க0க)

என்னவோதிய யமபடனின்னுரை கேளா
வன்னநற்றரு மத்தினையவன்பொருட் டளிப்பா
னுன்னிநீரொடு முதவினனுதவமற் றவனு
மின்னலாகிய நிரையந்தீர்ந்திளவலோ டுற்றான். (க0உ)

அரம்பைமாதர்தம் வளைக்கையாற்கவரிநின் றசைப்பப்
பரம்புசெங்கதிர் விமானத்திற்பண்பொடு மருவிச்
சுரும்புலாவுபைந் தருத்துணர்வானவர் சொரிய
விரும்புமன்பின விருவருந்துறக்கமெய் தினரால். (க0ங)

முகமலர்ந்துநன் முகமனோடினியவை மொழியா
வகமகிழ்ந்துமா மறலிதூதனைவிடுத் தனையோர்
புகலருந்தகைத் தாகியபொன்னுல கின்ப
முகமனந்தங்க ளுண்டனரெனமுனி யுரைத்தான். (க0ச)

துண்டலவிதுண்டலர் காதையுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆக அத்தியாயம் உ௯-க்குத் திருவிருத்தம் கஅ00.

இருபத்தாறவது,

## காஞ்சனமாலை காதையுரைத்த அத்தியாயம்.

ஆயிரந்தடக்கைவேந்த னருந்தவமுனியைநோக்கி
மாயிருநிலத்திற்றீய வணிகரைத்துறக்கத்துய்த்த
தூயநன்மாகமென்று யதனிடத்தூய்மையின்னுந்
தாயினுமினியாய்சொல்கென் றிரத்தலுந்தவத்தோன்சாற்றும்.

நீரதுதன்மைசொல்லிற் புனிதமாய்நிமலமாகிப்
பாரினினிலைமைபெற்றுப் பள்ளத்திலோடிவெண்மை
யாரவேயுடைத்தாய்நொய்தாய் மன்னுயிர்க்கமுதமாகிச்
சீர்பெறத்தன்மையெய்தும் மென்மையாஞ்செய்கையாலே. (உ)

ஆகையாற்புனல்கள்யாவு மச்சுதன்வடிவமாகு
மாகமாதத்தினுங்கண் வானவரொளிகளெல்லாஞ்
சேகறுபுனலில்வந்து சேர்ந்திடுமெதனின்மூழ்கி
நாகநாட்டின்பமொன்றாய் நண்ணுவர்வேந்தர்வேந்தே. (௩)

செங்கதிர்மகரராசி சேர்ந்தநற்காலந்தன்னிற்
பொங்குநீர்க்கங்கையாகுங் குளம்படிப்புனலுமென்றாற்
றிங்கள்வெண்கவிகைவேந்தே செப்பவேறுவமையுண்டோ
வங்கதிறடைப்பெற்றா ரமரர்நாடாளப்பெற்றார். (௪)

அனையதோர்மாகமாதத் தடைவுறுமாறைந்தாய
தினமெலாம்புனலிலாடத் திண்மையிலாதினோத்தோன்
வினையறவெழுநாண்மற்றை யைந்துநாள்விரிநீர்தோய்க
வினியவைமாட்டான்மூன்று நாட்படிந்திடினுநன்றே. (௫)

முராரியைமூன்றுபோதும் வழிபடன்முறையிற்செய்தும்
விராவியதீபமிட்டும் வேண்டியசிறப்புச்செய்தும்
புராரியைவிதியினேற்றிப் பூசித்துப்பூசுரர்க்குத்
தராதலமுதலாயுள்ள தானங்களனைத்துஞ்செய்தும். (௬)

மாகநீரிவ்வாறாடி மற்றதனிறுதிதன்னி
லோகையான்மறையோர்க்கன்ன முறுபுனலுதவிச்சாந்தம்
பாகுவெள்ளிலைபூணூரம் பாதுகைகவிகையாடை
யீகைபொற்சிவிகையாதி யியன்றவையீதல்செய்தே. (௭)

உரியமாமறையோர்தம்மை யுவப்பித்துமாகந்தன்னி
லரியேகாதசியைக்கூட்டும் வண்ணமேயதனைக்கூட்டும்
பெரியர்தாமிகத்திலுள்ள போகங்கள்பெரிதுதுய்த்துத்
திருமருமார்பன்வைகும் வைகுந்தஞ்சேர்வரன்றே. (அ)

உற்றிதற்காடுகின்ற வுயர்புனல்யாதென்றேறுதில்
வற்றியவெண்ணீர்கூவற் குடப்புனல்வாழுந்தம்மூர்
முற்றியபுறத்துவாவிக் குளநதிமுறையில்வேதஞ்
சொற்றதண்கடலினன்னீர் துகளறுதூயகங்கை. (கூ)

ஓதியபிரயாகைத்தெண்ணீ ரிவையிவையொன்றுக்கொன்று
மேதகுபலன்களைல்கும் பிரயாகையில்விரும்பியாடிப்
போதுவார்பேறுகஞ்சப் பொகுட்டினிற்புவனமீன்ற
வேதியன்றானுநாவால் விளம்பிடற்கரியதம்மா. (க0)

இந்திரன்சசிமால்செய்யா ளீசனம்பிகைவிரிஞ்சன்
சுந்தரவாணிதிக்கிற் சூழ்மற்றையெழுவரோடுஞ்
சந்திராதித்தர்விண்ணோர் தானவரியக்கர்சித்தர்
சிந்துரத்திலதக்கோலத் திருநுதலரம்பைமாதர். (கக)

இனையவர்முதலாயுள்ளோ ரியாவருமுகங்கடோறும்
வினையறப்பிரயாகைதன்னில் விரும்பிநீராடல்செய்வா
ரனையவர்கலியுகத்தி லவ்வுருக்கரந்துவந்து
மனிதராய்மாகந்தன்னின் மறிபுனலாடுவாரே. (கஉ)

உலகினின்மனிதராடி யுகுத்திடுபாவந்தன்னாற்
பலபலநதிகளெல்லாங் கருநிறம்படைத்தநீர
நிலவியபிரயாகையாடி நின்மலமாகுமென்று
லலகிலாப்பெருமையெம்மா லறைவதற்கெளியதன்றே. (கங)

வேறு.

பெருகுநீர்ப்பிர யாகையின்மூன்றுநாட்
சுருதிபோற்றிடு மாகத்திற்றோய்ந்துளோர்
புரவிமேதத்திற் கோடிபுரிந்தவர்க்
குரியநற்பலம் பெற்றிடலுண்மையே. (கச)

மன்றலங்குழற் காஞ்சனமாலைதா
னன்றுமுத்தின மாடுநலன்கொடா
வென்றிவாளரக் கன்றுயர்மீட்டிட்
நின்றகாதைகே ளென்றுநிகழ்த்தினான். (கரு)

கேட்டவேந்தன் கிளர்ந்தவுவகையால்
வாட்டடங்கணார் காஞ்சனமாலையா
ரீட்டுநல்வினை யாதவ்வரக்கன்யார்
கோட்டமில்லோ யுரையெனக்கூறினான். (கசு)

காத்தவீரிய னன்னகழறலுந்
தீர்த்தமாமுனி செப்புவன்யானெனும்
வார்த்தையென்னு மமுதினைமன்னர்கோன்
கூர்த்தநெஞ்சங் குழைந்திடக்கூறினான். (கஎ)

பண்டைநற்கதை தோறும்பகர்ந்துள
தண்டர்போற்று மருஞ்சிறப்பாவது
மண்டுவேள்விக ளூற்றின்வருபலங்
கொண்டகாதைகேட் டார்க்குங்கொடுப்பது. (கஅ)

வானுடுக்குலந் தன்னின்மதியெனக்
கானுலாவிய கற்பகநாடெனுந்
தானமேவு மரம்பையர்தம்முளும்
பூநறுங்குழற் பொற்பின்விளங்குவாள். (ககூ)

பஞ்சின்மெல்லெனப் பாரிற்படிந்துசெங்
கஞ்சமென்னக் கவின்பெறுசீரடி
யஞ்சமென்னப் பெயர்தரவாமையின்
விஞ்சுவெள்வயி றொத்துவிளங்குமால். (உ0)

கொம்பரன்னத் தொழுதிக்குரலென
வம்பொனூபுரத் தாணிமுத்தத்தரி
பம்புகோலப் பரட்டின்கொழுங்கவின்
செம்பொன்னுக்குத் தராசிற்சிறந்தவே. (உக)

அரத்தமென்பஞ் சணிமலர்த்தாளுகிர்
நிரைத்தமெல்லிதட் டாமரைநேரென
வுரைத்ததேதென வெள்ளியொளிவிடச்
சிரித்தமூரன் னிலாவிற்சிறந்தவே. (உஉ)

நாடின்மென்மயி ரின்றிநரம்பொழிந்
தாடன்மன்மத னம்புபெயர்வழு
மோடுநீரி லுகழுஞ்சினைவாராற்
சேடுமன்னத் திரள்கணைக்கால்களே. (உங)

வெங்கயப்புழைக் கையிணைவென்றல
ரைங்கணைச்செல்வ னந்தப்புரத்தின்வாய்த்
தங்குதோரண வாழையின்றண்டெனப்
பொங்குகோலக் குறங்குபொலியுமால். (உச)

ஆடுபாம்பி னகல்படவட்டமு
மோடுதேர்த்தட்டு மொத்துநவமணிப்
பாடலங்கு பசும்பொற்கலாபமேற்
சூடுமல்குல் துதிக்குந்தரத்ததே. (உரு)

மண்ணும்விண்ணு மலையுமலையுமுண்
டண்ணல்கண்வள ராலந்தளிரென
வண்ணநீல மயிரொழுங்கோடெழி
னண்ணுசிற்றுத ரம்நலமிக்கதே. (உசா)

கண்டுகூறிடக் காட்சிக்கரியது
பண்டைமால்வரை போலும்பணைமுலை
யண்டமீதுறு தென்னனுமானத்தா
லுண்டுகொல்லென் றுணருமருங்குலே. (உஎ)

மக்கண்மால்கொளு நெஞ்சம்வனப்பெனு
மிக்கமாகடல் வீழ்ந்துள்ளழுந்தியே
புக்கபோது புறம்பெழப்பொங்குநீர்
மொக்குளென்ன முகிழ்த்தமுலைகளே (உஅ)

கண்ணுடைப்பசுங் காம்பெனக்கண்கவர்
வண்ணநல்லெழில் வாய்ந்தமென்றோளிணை
தண்ணென்காந்தட் சரோருகம்போலுமாற்
றெண்ணிலாவுகிர் மெல்விரற்செங்கையே (உகூ)

துற்றுபூவிரி சூழ்பசும்பூகம்வேள்
கொற்றவெள்வளை போன்றகொழுங்கழுத்
தெற்றுதெண்டிரை யாரத்திசைகல
னுற்றமூன்று வரையோடொளிருமால் (௩0)

பைம்பொன்வள்ளை பதித்தனகாதினிற்
சம்பராரி விழைவிற்சமர்செயு
மம்புதீட்டு மணிமணிச்சாணைபோற்
செம்பொற்றோடு சிறந்துவிளங்குமால். (௩க)

தெண்டிரைப்பவ ளக்கொடிச்செவ்வியும்
விண்டகிஞ்சுக மென்மலர்ச்செம்மையுங்
கொண்டுவாசங் குலவுந்துவரிதழ்த்
தொண்டையங்கனி போலத்துலங்குமே. (௩௨)

குருந்தரரண்மல ரோகுளிர்முத்தமோ
முருந்தமோமுரு காரிளமுல்லையோ
விரிந்தவாண்மதி வெண்குருத்தோவெனத்
தெரிந்ததில்லைச் சிறுநகைத்தோற்றமே. (௩௩)

வேறு.

இருகடலிணைவிழி யெதிர்த்தொன்றொன்றினைப்
பொருதிடுமெனப்பசும் பொன்னினாலைய
னரிதினியற்றிய வணியவொத்ததால்
மருவிரிநாசியின் வண்ணமென்பவே. (௩௪)

நஞ்சினுமமிழ்தினு மூழ்கிகாமவேல்
வெஞ்சரமிவையென விளங்கிமேன்மைசா
லஞ்சனவரியணிந் தனங்கனெண்ணிய
வஞ்சினமுடிப்பதன் மதர்த்தகண்களே. (௩௫)

கருகியநீலத்தைக் குழைத்துக்கைவலா
னிருகடைகுனிதர வெழுதியேற்றிய
வரிசிலையாமென வளைந்துதோற்றிய
பொருவருந்தகையவாம் புருவமோகையே. (௩௬)

சந்திரரேகைதன் சவிமழுங்கிப்போ
யந்தரந்திரிதர வழகுபெற்றுலாய்ச்
சிந்துரவரிநெடுந் திலதஞ்சேர்த்ததான்
மைந்தர்தம்முளங்கவர் நுதலின்மாட்சியே. (௩௭)

மையிருண்முகிலிடை வயங்குதாரகை
யெய்தியவாமென விடையெரித்திடக்
கொய்யிணர்விடுமலர் குழுமித்தென்றுழி
பெய்யிருளோதியார் பேசவல்லரே. (௩௮)

இத்தகையானவ ளிருந்துவாழ்வுறுஞ்
சித்திரக்கயிலையிற் றீர்ந்துசென்றுதா
னுத்தமமாம்பிர யாகையுற்றுநீ
ரத்திரவிழியினு ளாடிமீளுவாள். (௩௯)

விண்ணகம்வழிக்கொடு விரைந்துசேறலு
மண்ணகம்போற்றிடு மிமையமால்வரைக்
கண்ணகன்முழையினிற் கண்ணுற்றனரோ
பெண்ணமுதினையொரு பிரமராக்கதன். (சo)

மடந்தைநீயாரைநின் வரவெனெவ்விடத்
தடைந்திடவேகுவா யந்தரஞ்செல
மிடைந்ததெத்தவத்தினன் மிக்கநல்லெழில்
கடைந்தவேற்கண்ணியெத் தவத்திற்கைக்கொண்டாய். (சக)

கூந்தலிலீரமுங் கொழித்தபானுவைப்
பூந்துகிலீரமும் புலர்த்திலாமையா
லேந்திளமுலையினா ளீர்த்ததண்டுளிப்
பாந்தளிற்கொடியவன் றலையிற்பட்டதே. (சஉ)

தண்டுளிபடுதலாற் றறுகட்சீற்றத்துப்
பண்டைவல்லரக்கனும் பான்மைநீங்கினே
னெண்டொடியென்மன முருகுமீதெலாம்
விண்டுநீயுரைத்தியென் றரக்கன்வேண்டினன். (சங)

வேண்டலுங்கிளியென மிழற்றுவாள்கவின்
மாண்டருகாஞ்சன மாலையென்பெயர்
தீண்டருமணங்கியான் செழும்பிரயாகையிற்
பூண்டதோர்மாகநீர் பொருந்தியாடினேன். (சச)

வடவரைசிலையென வளைத்தவானவன்
கடல்விடமமுதென வருந்துங்கண்ணுதற்
படவரவரையசைத் தாடும்பண்ணவன்
சுடரொளிமுச்சுடர் தோற்றுங்கண்ணினன். (சரு)

அயில்விழியரம்பைய ரமரர்போற்றிட
மயிலியலுமையொடு மணந்துவைகுறும்
வெயிலிளங்கதிருகு வியன்பொதும்பர்சூழ்
கயிலையங்கிரியினிற் போகின்றேன்கண்டாய். (சசு)

நிலைபெறுபிரயாகையின் னீரதாதலாற்
கலையினீர்த்தண்டுளிக் காரரக்கநின்
றலையினிற்படவுள முருக்கித்தாங்கிய
புலையுடல்முழுதையும் புனிதமாக்கிற்றே. (சஎ)

இந்தநீராடிய வினியபான்மையான்
முந்தியபிறப்பினின் முற்றுபாவந்தீர்த்
தந்தரத்தரம்பைய ரடைந்தவாறெல்லாம்
புந்தியுட்கொள்ளவே புகல்வன்கேட்டியால். (௪௮)

கழிந்தமுற்பவத்தினிற் கலிங்கதேயத்திற்
றழைந்தபேர்நிதியுடைத் தரணிகாவலன்
விழைந்திடுதிருநகர் வேசையாகியே
மொழிந்திடவருநல முற்றிவைகினேன். (௪௯)

இருநிலத்தியல்பினி லெழிலின்வண்மையிற்
றிருமகளிவளெனச் சிறக்கவைகினே
னரசிளங்குமரரு மமைச்சர்மைந்தரு
மருமலிமுன்றிலில் வந்துணங்குவார். (௫௦)

இன்னணங்காமுக ரிளையர்யாவரும்
பொன்னிதிமழைதினம் பொழிந்துபுல்லுவார்
கன்னவிரேளினூர் தம்மிற்காதியே
கொன்னெடும்படையினால் விளிவர்கோடிபேர். (௫௧)

காமுகரெனும்பல்களிவண்டின்னலத்
தேமுறுகளிமதுத் தினமருந்தலாற்
பூமலரெனவெழிற் பொலிவுகுன்றிடத்
தாமரைமுகமலர் சவிமழுங்கினேன். (௫௨)

என்னையேவிரும்பிய விளைஞர்யாவரும்
பின்னையான்விரும்பவும் பெயர்ந்தும்பார்த்திடா
துன்னிடாதொழியும்நா ளிளமையோய்ந்திடத்
துன்னியமூப்பினா லிரக்கந்தோன்றியே. (௫௩)

ஏதியாம்புரிந்தன மிற்றைநாள்வரை
யாதுலர்வறியவர்க் கன்னமிட்டிலே
மாதவர்க்கியன்றவை வழங்கல்செய்திலே
நாதனையனுதின நயந்துபோற்றிலேம். (௫௪)

தூயவைபுரிந்திலேம் பலருந்துஞ்சிட
மேயநல்வனப்பினால் வினையியற்றினே
மாயவைதீர்த்திடு மமைதியாதெனப்
போயினேன்புரோகித முனிவன்புக்கில்வாய். (௫௫)

பொருபடைமன்னவன் புரோகிதன்சரண்
சிரமுறவிறைஞ்சினேன் செய்தபாவத்தா
னரகிடைவிழாதுபொன் னுடுசேர்ந்திடக்
குரவனீயருளென விரங்கிக்கூறினேன். (ருசு)

கூறியவர்சகங் குரவன்கேட்டனு
மாறியநெஞ்சினு னஞ்சலஞ்சனீ
வீறுயர்ப்பிரயாகையின் மேவியாடியே
யீறுடற்கிழைத்து வானுலகத்தெய்துவாய். (ருஎ)

எல்லையிறவங்களால் யாககோடியா
லொல்லையிற்றீர்ந்திடா வுலப்பில்பாவங்கள்
வல்லைபோமாக நீர்மருவியாடினு
லெல்லொளிமுன்னிரு ளென்னவோடுமால் (ருஅ)

அன்றியுங்கேட்கு நீயமரர்நாயகன்
கன்றியகாமத்தாற் கவுதமன்றனி
மன்றல்சேரகலிகை தன்னைமற்றவன்
குன்றல்செய்காவிடைக் கூடிவைகுங்கால. (ருகூ)

மாமுனியெய்தினன் வடவைபோன்முனிந்
தாமிகுதல்ல வீதென்றறிந்திடாக்
காமுறுபுரந்தரன் காயமெங்கணுந்
தோமுறுயோனியாய்த் தோன்றுகென்னவே. (சுO)

ஒருத்திதனல்குலை யுவந்தபாவத்தான்
மருத்துவனுடலெலாம் வாவன்மொய்த்தென
வருத்தியிலாயிரம் யோனியாதலுங்
கருத்தழிந்திந்திரன் கரந்துபோயினன். (சுக)

பண்பலசெய்திடும் பாகசாதனன்
விண்புகுபெருவரம் வெற்பின்சாரலிற்
றண்புனலோடையிற் சலசமொட்டிடைப்
புண்படுமுளத்தினன் புகுந்துவைகினன். (சுஉ)

காமனேகெடுத்தன னென்றுங்கங்குலிற்
சோமனேயின்னணந் துணிவித்தானெனும்
பூமினேயனையவள் புணர்ப்புத்தானென
நோமனேகந்துயர் நுவலற்பாலதோ. (சுங)

## ௧௬௮ காஞ்சனமாலைகாதையுரைத்த அத்தியாயம்.

பஞ்சபாணப்பகைப் பாவிவஞ்சத்தா
னெஞ்சினையாவரே நிலைநிறுத்துவார்
கஞ்சநான்முகனுளங் கலக்கியன்னவ
னஞ்சினிலொருதலை யறுப்பித்தானரோ. (௬௪)

வருபிணியாவையு மருந்திற்றீர்ந்திடு
மரிவையர்காமநோ யதனிற்றீர்ந்திடா
தொருகணப்பொழுதினி லூக்கம்போக்கியே
நரகிடைப்படுத்திடு மென்றுநாணினன். (௬௫)

இந்திரனிவ்வண மிருக்குங்காலையி
லந்தரநாடெலா மரசிலாமையாற்
சந்திரனிலாதவான் றன்மையொத்தலும்
வந்திரைத்தீண்டின ரனந்தம்வானுளோர் (௬௬)

ஈண்டியவானவ ரியக்கர்கின்னர
ராண்டகையரசனை நாடியல்லலுற்
றூண்டுறந்தவரென வணங்கியொல்லைபோய்க்
காண்டகுகுருவினைக்கண்டு கூறுவார். (௬௭)

ஐயநீகேட்டி வானுளுநாயகன்
றையலிந்திராணியைத் தணந்திங்கெம்மைநீத்
தொய்யெனக்கரந்துளான் றேடியோய்ந்தனஞ்
செய்வதேதினியென வணங்கிச்செப்பினார். (௬௮)

தேவர்களுரைத்தசொற் கேட்டுத்தேசிகன்
காவலர்செல்வமாங் களிப்புக்கைமிகப்
பாவமுநோக்கிடார் பழிக்குமஞ்சிடா
ராவதுநினைக்கிலா ரறனுமோம்பலார். (௬௯)

புரந்தரன்காமத்தைப் பொருந்திப்புண்ணிய
வரந்தருகவுதமன் பன்னிமானமா
மரந்தைவெஞ் சாபத்தாலழுகுமாசுறக்
கரந்தனன்வாவியங் கமலத்துள்ளரோ. (௭௦)

அத்தலைசேருமென் றமரரோடெழா
வித்தகத்தேசிகன் விரைவினோடுபோய்த்
தத்துநீர்வாவியின் கரையிற்சார்ந்துநின்
றுத்தமவருதியென் றுரைசெய்தானரோ. (௭௧)

அழைத்திடுவாசக மமரர்கோன்செவிப்
புழைத்தலைப்புகுதலும் பொருமிவெய்துயிர்
திழைத்ததீவினையைநொந் திருந்தவாவியுட்
டழைத்ததாமரையொரீக் கரையிற்சார்ந்தனன். (எ௨)

நாணியவுள்த்தின னடுங்குமேனியன்
கோணியமுகத்தினன் குறைந்தநோக்கினன்
வாணியும்பாணியு மறந்தவாயினன்
பேணியகுரவனை யிறைஞ்சிப்பேசுவான. (எ௩)

பொன்னிகரகலிகை புருவச்சாபமு
மன்மதன்சாபமு மவுனிசாபமு
மென்னிறையறிவுட னெழில்கவர்ந்திட
மன்னியசுடலையின் மாலையாயினேன். (எ௪)

பேதைமற்றொருத்தியை விரும்பிப்பெய்வளைக்
கோதையர்குழாத்தையுங் கொளும்பொன்னாட்டையும்
போதலர்கறபகப் பொதும்பர்வாழ்வையு
மேதமுற்றிழந்திடு மென்னைக்காத்தியால். (எ௫)

எந்தையேயென்றவ னிரந்துகூறலு
மந்தணன்கூறுவா னஞ்சலஞ்சனீ
சிந்துநீர்ப்பிரயாகை சென்றுமூழ்கினால்
வந்ததீவினையெலாந் தீர்ந்துமாயுமே. (எ௬)

பெரிதுமாதவமருள் பிரயாகையாடுவான்
வருதியெம்மோடென மகிழ்ந்துவாசவன்
குரவனோடெழுந்துபோயக் குளிர்முத்தேக்கர்பா
யினைபுனற்றிருநதி யாடியேறினான். (எ௭)

அலைதவழ்பிரயாகை நீராடுதன்மையாற்
புலையுறுபாவம்போய்ப் புனிதனாகிய
நிலைதெரிகுருவவ னுடனிறைந்திடுங்
கலைபுனையோனிபோய்க் கண்களாகென்றான். (எ௮)

மந்திரிகூறிய கணத்தில்வாசவன்
சுந்தரமேனியிற் றோன்றும்யோனிபோய்க்
கந்தநாறியசெழுங் கஞ்சக்காடென
மைந்தூடன்முழுதினு மலர்க்கணாயவே. (எ௯)

துறைகெழுபிரயாகையின் றூய்மையீதென
மறைதெரிபுரோகிதன் கூறிமாதுநீ
யறைபுனற்றிருநதி யதனிலாடினு
னிறைவுறுபாவம்போ மெனநிகழ்த்தினன். (அ0)

கேட்டலுமுவகையுட் கெழுமயானவன்
றாட்டுணைதொழுதுபோய்த் தருமத்தன்றியே
யீட்டியபொருளெலா மிரவலர்க்களித்
தோட்டியவினையினே னுருதியெண்ணினேன். (அக)

யாக்கையுமிளமையு மினியசெல்வமு
நீக்கமில்கிளைகளு நிமிடப்போதினின்
மேக்குயர்மின்னென வீந்துபோமெனத்
தூக்கியவுளத்தினேன் றுறவுமேற்கொண்டேன். (அஉ)

ஓட்டியகிளைகளு முலப்பில்செல்வமுஞ்
சுட்டதுபோலநீத் தினியசோலையின்
மட்டவிழ்ப்பிரயாகையை மருவிமாகமொன்
றுட்டெளிவோடுநா னுவந்துமூழ்கினேன். (அங)

அங்கதின்மூன்றுநா ளாடுநற்பலத்
திங்குறுதீவினை யாவுநீக்கினேன்
றங்குமூவொன்பது தினத்தின்றன்மையாற்
பொங்கிளமுலையர மகளிர்போற்றவே. (அச)

சுருதியாழ்விஞ்சையர் தொழுதுபோற்றிட
வருசுவேதாவுக்கு வந்துதோன்றியே
யரிமதர்ச்செய்யகண் ணரம்பைமாதரிற்
பொருவரவழகுடைப் பூவையாயினேன். (அரு)

அரம்பையரிமையமால் வரையளித்ததீங்
கரும்பனமென்மொழி யுமைகருத்தினில்
விரும்புறுதோழியாய் மேவிவைகியே
பெரும்பகற்கயிலையில் வாழும்பேறுற்றேன். (அசா)

முன்புளவாசனை தோன்றிமுற்றலாற்
றன்பறப்பிரயாகையின் மாகந்தோறுமுற்
றின்புறவாடுவே னினையதென்றிரம்
வன்புறுமரக்கநின் வரவையோதென்றாள் (அஎ)

## வேறு.

அணங்குநீர்மைய என்னதுகூறலும்
வணங்கிநின்றந்த மாயவரக்கனு
மிணங்கியென்ன திசைக்குவனீங்கெனக்
குணங்களற்றவன் கொள்கையைக்கூறுவான். (அஅ)

சீசீயன்ன துரைக்குந்திரத்ததோ
மாசிலாமுற் பிறப்பினின்மற்றியான்
காசிமாநகர் தன்னிற்கலைபயில்
பூசுரர்க்கொரு புத்திரனாயினேன். (அகூ)

வேதமங்கம் விளங்கும்பலகலை
யோதினேனவற் றுண்மையறிந்திலேன்
மாதனம்பெறு வேட்கைமலிதலாற்
போதமற்றுநான் புன்மைவிழைத்துளேன். (கூ0)

புலையராதி பொருள்படைத்தோர்கையிற்
றலைமைகீழ்மை யெண்ணாதவர்தாந்தகு
நிலைமையற்ற நிதியொடுபாவமு
மலைவில்லாம லளித்திடவாங்கினேன். (கூக)

எண்ணில்பாவ மிழைத்துளதன்றியே
புண்ணியஞ்சிறி தேனும்புரிந்திலே
னண்ணல்காசியி லாற்றியபாவந்தா
னுண்ணிதேனு மலையினுநோன்மைத்தே. (கூஉ)

கங்கைசூழ்தரு காசியின்மாய்ந்துளோர
மங்கைபாகன் றிருவுருமன்னுவார்
பொங்குபாவ மிகுதியிற்புல்லியே
னங்குமாண்டு மழிபிறப்புற்றுளேன். (கூங)

எருவையாகி யிருபிறப்புற்றுளேன்
மருவுசீற்ற மறப்புலியாகியே
வெருவுதோற்றத்து மூன்றுருமேவினே
னரவத்தோற்ற மிருபிறப்பாகினேன். (கூச)

கூகையாயொரு தோற்றத்துக்கூடினேன்
பாகவார்பிறைப் பற்கொடும்பன்றியாய்
மோகமுற்றிரு தோற்றத்துமுத்தினே
னுகைப்பற்றின்மே லிப்பிறப்பாகினேன். (கூரு

மறந்தபாவ மனந்தமருவியு
மிறந்ததத்தல மாதலினேந்திளாய்
பிறந்ததன்றிப் பெருநரகத்தில்வீழ்ந்
துறைந்திலேனுனைக் காணவுமுற்றுளேன். (கூசா)

இந்தவாறிரண் டாயிரமாண்டியான்
சந்தவாரிமை யத்தடஞ்சாரலில்
வந்துவைகி வருந்தியதன்றியே
சிந்தையிற்றெளி வுற்றிலேன்றீமையேன். (கூஎ)

மடந்தைநின்றிரு வாண்முகங்காண்டலு
முடைந்துபாவங்க ளோடக்களிப்புற்றே
னிடைந்தவென்னைப் புரத்தியென்றேத்தினன்
கடைந்தவேற்கண்ணி யீதுகழறினள். (கூஅ)

துளபமாலைத் தொழுதுபிரயாகையி
லளவின்மாக மதியமர்ந்தாடினேற்
குளபலத்தினோர் மாகத்து றுபலன்
கொளவளிப்பனீ கோடியென்றோதியே. (கூகூ)

துகிலினீரம் பிழிந்திடுதோயத்தோ
டகமுவப்ப வரக்கபெறுகென
விகலும்வேற்கண்ணி யீய்ந்தனளேற்றிட்டா
னிகரின்மாகப் பலத்தைநிருதனே (க00)

வேறு.

அங்கைநன்னீ ரவனங்கையுறுமுன்
வெங்கணரக்கனவ் வேடமொழித்துத்
திங்கண்முடித்த சிவன்முடியாத
வைங்கணேவேளிவ னுமெனநின்றான். (க0க)

தேவருருக்கொடு நின்றருள்செம்ம
லேவனகண்ணியை யேத்திவணங்கிப்
பாவைநினைத்தொழு திப்பரிசுற்றே
னுவளசொல்லி யளித்தருளென்றான். (க0உ)

நன்னுதன்மாது நயந்ததுகேளா
மன்னினிலத்தில் வதிந்தவரெல்லாம்
பொன்னுலகுற்றிடு புந்தியுளாரே
யின்னனசெய்வ ரெனப்புகல்கின்றாள். (க0ங)

நற்றருமங்க ணலம்பெறுநீதி
யுற்றவுயிர்க்கொலை தீர்ந்திடலோதிக்
கற்றுணர்மேல வணக்கனிவித்தன்
மற்றுளகாம வசத்தினைமாற்றல். (க0ச)

ஏதிலர்தீமை யியம்புதறீர்த
லேதிலர்தார மிரும்பொருள்வெளவுங்
காதலொழித்திடல் கண்ணனையேத்தும்
போதமிகுத்திடன் மன்னுயிர்போற்றல். (க0ரு)

உடம்பினையானென வுன்னுதல்போக்க
லிடம்படுமாசை சுருக்கிலிருக்க
லிடம்படுநன்மை யியற்றுதல்செய்தல்
வடம்படுமார்ப விடார்மதிநூலோர். (க0சா)

யானுரைசெய்தன வித்துணையுந்தான்
மானவனெஞ்சின் மதித்துணர்வுற்றுக்
கானமர்பூவிரி கற்பகநாட்டிற்
ருனமமர்ந்துறை யென்றனடையல். (க0எ)

இன்னனவோதிய காலையினெல்லைத்
துன்னொளிமாமணி துற்றுவிமானம்
பொன்னகர்வானவர் கொண்டுபுகுந்தா
ரன்னவனைக்கொடு நாகமடைந்தார். (க0அ)

வார்முலைகாஞ்சன மாலையணங்குஞ்
சேருமரம்பைய ரோடுசிறந்து
கார்தவழுங்கயி லாயமடைந்தே
யாரியையேவ லியற்றியமர்ந்தாள். (க0கூ)

காஞ்சனமாலை காதையுரைத்த அத்தியாய முற்றிற்று.

ஆ அத்தியாயம் உசு-க்குத் திருவிருத்தம் கஉ0கூ.

## இருபத்தேழாவது,

# அக்கினீபன் காதையுரைத்த அத்தியாயம்.

இக்கதைமுன்னருச்சுனன்கேட் டுளமகிழுமாமுனிவ னிசைத்த
தாகுஞ், செக்கரொளிமணிமாலைத் தேர்வேந்தேமாகமதித்திரத்தை
யோது, மக்கதைவேறென் றுளதின் றுனக்கியானறைந்திடுவ னத
னைக்கேளென், றுக்கவினைமாதவத்து வசிட்டமுனிதிலீபனைப் பார்
த்துரைக்கலுற்றான். (௧)

துடங்கியபல்வேள்விகளாற் றானத்தாலுலவகையாஞ் சுருதித
ன்னால், லடங்கியுள்ளத்தைந்தடக்கி யைந்தழலிற்றவமியற்று மமைதி
தனால், விடங்குலவுகளனாதி விண்ணோரைப்பூசைசெயும் வினையந்
தன்னால், லிடம்படுநல்யோகத்தான் மாகமதிதரும்பலத்தை யெய்
தொணாதே. (௨)

முன்னையிதனானிகழ்ந்த தொருகதைகேள் கந்தருவர் முதல்வ
னான, பொன்னணியுங்கனைகழற்காற் சுமுகனருள்புதல்விபிரமோகி
யென்பா, ளின்னிசையாழ்விஞ்சைபயில் சீலனளித்திடுசுசிலை யாழி
னோர்க்குண், மன்னுசுரவேதிதர வந்தருள்சுற் சுணாயென்னு மட
நல்லாளே. (௩)

சந்திரகாந்தன்புதல்வி சுதாரையெனுந்தளிரியலத் தகையோர்
தம்மில், வந்தருளுஞ்சுப்பிரபன் மகளாயசுப்பிரபை யென்னவா
மூங், கந்திருவர்கன்னியர்க ளோரைவர்பருவத்தாற் கவினாற்பண்
பாற், றந்திரியாழ்விஞ்சையினாற் றோழமையாலனைவருமோர் தன்
மையாவார். (௪)

பங்கயமேற்றிருமகளைப் படைமதவேளிரதியென்னும் பாவை
தன்னைச்,செங்கயற்கட்டிலோத்தமையையரம்பையைமேனகைத்தி
ருவைச்சிவணுநீரார்,கொங்கையினாற்கண்மலராற் செவ்வாயாற்கூந்
தலாற் கோலவெற்பை, யங்கைவடிவேலைமல ராம்பலைநீர்முகிலை யழ
கழிக்குநீரார். (௫)

மடமயில்போ லைவருமொத் தழகேசன்மணிமாட மன்னுகோ
யிற், புடையிலொருபால்வைகி யிளவேனிற்பருவத்துப்போதுகொ
ய்தே, பெடையனம்போ னடைபெயர்ந்தே யச்சோதவாவியினிற்
பெருநீராடிப், படுமணற்கூலத்தேறிப் பார்வதியைவழிபாடு பண்ண
லுற்றார். (௬)

வெண்மணலிலுமையாடன் றிருவுருவையினிதமைத்து விரைப்போதாலுங், தண்மைபெறுநீராலும் பாளிதகுங்குமானஞ்சந்தத்தாலு, மூண்மதியில்விருப்பாலு முறுபூசை யியற்றியந்தவுமையாண்முன்னர்ப், பண்முறைதெரியல்பாடிப் பற்பலகானடம்புரிந்தார் பாவைநல்லார். (அ)

தெரிவையரத்திரம்புரியும வேலைக்கண்ணச்சோதச்செழுநீராடப்
புரியுமுன்னூல்வேதநிதி தருபுதல்வனக்கினிபன்புகுதலோடும் [ப்
வரிநெடுங்கண்மடவியர்கண் மன்மதனோமுருகனோவந்தானென்று
பரவசமுற்றவன்வடிவா மமுதத்தைவிழிநாவாற்பருகினாரே. (௯)

பெண்மணியையுமையவளை வழிபட்டபெருந்தவத்தின்பேறுதானே
கண்மணிகள்குளிர்ப்பேறக்காமனையாங்காணும்வகைகாட்டிற்றென்பார்
மண்வலையத்திவன்றனை மருவாமலுயிர்வாழமாட்டோமென்பார்
வெண்மணிபோற்றிருநகையாள் வேதியரின்மணம்புணராவிடலையென்பார். ()

வேறு.

காளையிவனைக் கலக்கும்வினயமெண்ணி
வாளைப்பொருதடங்கண் மாதர்புடைவந்திடலும்
வேளைப்பொருவும் விடலைமுனிமெல்லியலார்
கோளைக்கருத்துணர்ந்து நெஞ்சொடிதுகூறினான். (கo)

இலங்காரமாலை யிளமுலையாரின்ப
வலங்காரமைக்க ணயிலம்புதான்பாய
நிலங்காவல்பூண்ட படைநேமியாளுதி
கலங்காதுநின்ற கருத்துடையார்யாரே. (கக)

இந்தவுலகி லெவர்பொறுப்பார்காமநோ
யுந்துமதன்ம்பா லுடல்பாதியாய்க்கருகி
வெந்துவிரகத்தீத் தலைக்கொண்டுமேல்வெடித்துச்
சிந்துகனலீசன் றிருநுதற்கண்ணென்பாரே. (கஉ)

முன்னமொருத்திக்காய் முகநான்குதான்பெற்று
மன்னவளைக்கூடாம லாசைநோய்மீதூறப்
பொன்னவிரும்புண்டரிகப் பூந்தண்மடலேந்தி
யின்னமும்பாலன்ன மிரங்காதிருந்தானே. (கந)

செல்வமழிக்குஞ் சிறப்பழிக்குஞ்சீரழிக்கு
மல்குமறிவழிக்கு மானநிறையழிக்குங்

கல்வியழிக்குங் குலமழிக்குங்காமமெனப்
பல்வளையாராசை துறந்திடுவர்பற்றில்லோர். (௧௪)

ஆதலாற்காம மறத்தீதெனப்புகன்று
மாதரார்தன்பான் மருவிவளையாமுன்
றீதிலாயோகத் திரத்தான்முனிகுமரன்
போதுலாம்வாவி யிடைக்கரந்துபோயினான். (௧௫)

இரவினுழந்தா ரிருநிதியம்பெற்றுடனே
விரைவிலிழந்தாலென்ன மெல்லியலார்மாழ்கிக்
கரவினகன்றொழிந்த காளைதனைக்காணா
வெரியின்மெழுகொத் துருகியிவ்வாறிசைத்தாரோ. (௧௬)

நண்பநீயெம்மை நயவாதுநண்ணாது
விண்படுமின்னென்ன விரைவினகன்றொழிந்தாய்
பெண்பிறப்பில்வந்தோர் விரும்பப்பெயர்ந்தொழிதன்
மண்பிறப்பினீதி யிழையோர்க்குமாட்சிமையோ. (௧௭)

அஞ்சுவிடையத்தி லமர்ந்தபோகத்தமைதி
நெஞ்சுதனில்வைத்து நெடிதுய்க்குமாறதுபோல்
விஞ்சையரிற்றோன்றி விரும்பினோநன்னலத்தைக்
கஞ்சமலர்த்தாரினா யுண்டுகளியெய்தாயோ (௧௮)

மைக்கிளைத்தகண்ணாற்கு மைந்தற்குமண்ணுலகிற்
கைக்கிளையாகாதென்ப துன்னளவிற்கண்டோமே
யிக்கிளையலவருமின் றெத்தவறுதானிழைத்தே
மெய்க்கிளைநீத்துன்னை விரும்பவிரும்பாயோ. (௧௯)

மல்லார்புயத்தோய் வனப்பையடிமுடிமட்
டெல்லாம்பிழையா இனிதமைத்தும்யாமிரந்தும்
புல்லாயெனவும் புறக்கணித்துப்போகமனங்
கல்லாய்ப்படைத்தனனோ கற்றுணர்ந்தவேதாவே. (௨௦)

பொன்னங்கமலநறும் பொய்கைக்கரைமருங்கின்
மின்னும்புரிநூல் விளங்குமணிமார்பன்
றன்னந்தனியே தனியேறெனவருத
யின்னந்தனிகாண்ட லெத்தவத்தாலெய்திடுமோ. (௨௧)

வேளையேயன்னான் வனப்பைவிழிகுளிர
காளையாமிவ்விடத்து நண்ணியிடைக்காண்போமோ

தோளையேமுற்றுருகத் தோய்வோமோவென்றுரைத்து
வாளையேய்கண்ணார் மறுகிமனந்தளர்ந்தார். (௨௨)

மாலைவருமுன்ன மனையிடத்திற்சென்றிலமே
லாலமெனமுனிவ ரன்னைமாரென்றஞ்சி
வேலையனைய விழிமடவார்வெய்துயிர்த்துச்
சோலையகன்வாவி யகன்றுமனைதுன்னினரால். (௨௩)

அக்காலம்வெய்யோ னவிர்மண்டலஞ்சேப்பக்
கக்காவுமிழுங் கதிர்க்கற்றையுள்ளடக்கித்
தக்கார்பிரிந்தவர்போற் றாமரைகள்பொற்பழியப்
புக்கான்குடபுலத்துப் புன்மாலையோங்கியதே. (௨௪)

அடைந்தமடநல்லா ரனைவோருந்தத்தந்
தடங்கணம்புபாயமதன் றன்கையம்புமேபாய
மிடைந்தமலர்ப்பாயலெல்லாம் வெந்துசருகாக
விடைந்துருகிவெய்துயிர்த்தங் கிவ்வாறிசைக்கின்றார். (௨௫)

கங்குலோன்மாரன் கழைகுனிக்கக்கால்குனிக்குந்
திங்களோமன்றற் சிறியவிளந்தென்றலோ
பொங்குநீர்த்தெண்கடலோ போனானைப்புல்லாமன்
மங்குலேயின்னுயிரை மாய்ப்பான்றுடங்கியதே. (௨௬)

என்றினையபன்னி யிடைவார்மனங்குழைவார்
குன்றமுலையாரங் குளிர்சந்தனத்தேய்வை
நின்றுபொரிந்திடவே நெட்டுயிர்ப்பானீற்றுவா
ரின்றையிரவோவிரிஞ்சர்க் கிட்டவிரவென்றுரைப்பார். (௨௭)

பூவையையும்பாரார் புரிநரம்பின்யாழ்தடவார்
பாவையும்பாரார் பசுங்கிளிக்கும்பாலுதவார்
கோவையிதழ்மெல்லியலார் கொற்றச்சிலைவேட
னேவைவிடமாழ்கு மிளமானெனக்குழைந்தார். (௨௮)

வாடைதவழு மணிச்சாளரமுகப்பி
னீடுமிளநிலவு நீங்காதரமியத்துக்
கூடியிளங்குயில்கள் கூவுமலர்க்காவினென்றால்
வீடும்விரகமுற்றார் மேவிடமேதென்றயர்வார். (௨௯)

பைந்தண்குவளைப் பசியமலர்ப்பாயலுநீர்
சிந்துங்குளிரியுடன் றெங்கதலிமென்குருத்து

மிந்துசிலா தலமு மேய்ந்தகாமத்தழலால்
வெந்துகனல்போல வெதும்பத்தளர்ந்திடுவார். (௩௦)

பூசுநறுஞ்சாந்தம் புலராமற்றெண்பனிநீர்
வீசுதொறுங்கோலமுக மென்முளரிவாடிடுவார்
வாசமலர்வாடை வரும்வருந்தோறுந்தழைத்த
வாசையனன்மூழ்க வழன்மெழுகுபோற்குழைவார். (௩௧)

கொட்டுஞ்செழுங்கலவைக் குங்குமமேனமுத்துவடஞ்
சுட்டதெனச்சிந்தித் துணைநெடுங்கண்முத்தணிவார்
விட்டதுயிரென்ன வெதும்பித்தளர்ந்திடுவார்
பட்டதுயரென்னூற் பகருந்தரமன்றால். (௩௨)

ஏழைமடமாத ரிவ்வாறுருகுங்காற்
ருழிக்கொழுங்குவளை ரற்றேபிணிநெகிழ்ப்பக்
கோழிக்குலமிரைப்பக் கங்குல்குறைந்தகல
வாழித்திரைமுகட்டிற் றோன்றினானுதவனே. (௩௩)

வேறு.

இருள்கீறிய கதிர்கீழ்திசை யெழுபோதினின்மடவார்
விரகானல மதுதீர்தர விரிநீர்படிபவர்போன்
மருவாமலர் விரிவாவியின் மகிழ்வோடவர்புகுதா
முருகார்புனன் முட்கானறை முகிழ்நாண்மலர்கொய்தார். (௩௪)

புளினத்திடை மருவிச்சிறு புதுவெண்மணலதனு
லளிதுற்றிய குழலம்பிகை யணிபொன்னுருவமையா
நளினப்புது மலரானனி வழிபாடுநயந்தே
களிமுற்றிய மயில்போலவர் கைகொட்டிநடித்தார். (௩௫)

வான்முட்டிய சிகரக்கிரி யிமவான்மடமயிலே
கூனற்பிறை யணிவேணிய னொருபால்வளர்கொடியே
வேனிற்கிறை மதவேளென வருவேதியன்விடலை
தானித்தலை நெருநற்படி யடையப்பணிதாயே. (௩௬)

மாதேயரு ளுதியென்றவ ரடிவீழ்ந்தனர்வழுத்தும்
போதேமறை யிளையோனறும் பொய்கைத்தலைபுகுந்து
தாதேமலர் செறிநீரிடை சந்தித்தொழில்புரியக்
காதேறிய வரிவேலன கண்ணாதுகண்டார். (௩௭)

நன்றேயிது நன்றேமிக நமரோயுமையவளை
யின்றேபுரி பூசைப்பல னிவனைத்தரலென்னுக்

குன்றேயெனு முலையீரிணிக் குழுமிப்புடைவளைத்தே
யொன்றேமெனி லகல்வானென வுறவந்துவளைத்தார். (௩௮)

வேறு.

பற்றினர்வளைத்தனர் படுத்தினர்பிடித்தார்
சுற்றினர்வளைத்தனர் துணைக்கைமலர்தம்மான்
மற்றுணைவிடக்கடவ மல்லமருவாமன்
முற்றுகிலம்நின்களை வுணர்ந்தெனமொழிந்தார். (௩௯)

மாமுனியதற்குநகை யாடிமடநல்லீர்
நீமுனமருங்கடி மணஞ்செய்திலனின்னாட்
காமுறுகலப்புநல னன்றுகடிசெய்வான்
றோமில்குரவற்குநனி சொல்லியிவண்மீள்வேன். (௪௦)

அல்லதுகலந்திட லடாதெனமறுத்துச்
சொல்லியிடமூரலொடு தோகையர்கள்சொல்வார்
நல்லமணிபெற்றவர் நடுக்கடலுகுத்தே
யொல்லைநெடுநீர்முழுகி நாடியுழல்வாரோ. (௪௧)

என்புருகநற்றவ மியற்றியிடல்யாரு
மன்புருகுபோகமத ருந்தியிடவன்றோ
வின்பமுறயாமுனை யிரந்திடவுமந்தோ
வன்புபுரிவாயிதுவு மண்ணுலகிலுண்டோ. (௪௨)

தேவருமாக்கரு மியக்கரொடுதெய்வ
மூவருமிம்மாதர்நல முற்றினர்களன்றோ
யேவரினலத்தினை யிகழ்ந்தவரிழந்தார்
பாவவுருமுற்றிய பசுக்களைநிகர்ப்பார். (௪௩)

ஏடவிழ்மலர்க்குழலி னார்கலவியின்ப
மாடவர்மறுத்திட லடாதெனவுரைப்ப
வாடியமனத்தன்மறை நீதிபலவோதிக்
கூடுதல்செய்யேனென முனிந்துபலகூற. (௪௪)

இணங்குதல்செய்யானிவ னெனத்தெரிவைமாதர்
பிணங்கிவலிதிற்கொடு பிடித்துநிலன்வீழ்த்திக்
கணங்கொண்மயிலைந்தொரு கலாபமயிறன்னை
மணம்புணருமாறிதென வன்பினின்மணந்தார். (௪௫)

முலையினிலணைத்திடுவர் நீண்டுமுரிபுருவச்
சிலையிணையைமோந்திடுவர் வாயமுதுதேக்கி

நிலையழிவரங்கைகொடு நீவிகளிறுக்குங்
கலையினைநெகிழ்த்திடுவர் முறைமுறைகலப்பார். (சசு)

இங்கிவர்களின்னண மனைந்தினிதினமேவித்
தங்கடுயரத்தழுற ணித்தொழுகுபோழ்தின்
வெங்கனலெனத்தகைய வேதியன்வெகுண்டே
கொங்குடைமலர்க்குழலி ஞரொடிதுகூறும். (சஎ)

மேயவரையின்பமுற மேவியிடலல்லா
னேயமொருசற்றுமற நின்றவெனைநீவீர்
பேயெனவுழைத்திவ ணடர்ந்துபிழைசெய்தீ
ராயதிறனாலலகை யாகெனவறைந்தான். (சஅ)

இப்பரிசுசாபமிட வெல்வலோயினொருன்
மெய்ப்படியுமாசையில் விழைந்தவெமைவாளா
செப்பரியசாபவுரை செப்பியதினியு
மப்பரிசுபேயுருவ மாகெனநவின்றார். (சகூ)

மாறியிடுசாபமிரு பானுமருவாமுன்
றேறியமனத்தினினை வுஞ்செயலுநீங்கி
வேறுபடுபேயுருவ மேவியறவோரும்
பாறுபடுகானிடை பரந்தனர்திரிந்தார். (ரு௦)

ஓடுவர்மறித்திடுவ ரோரொருவர்தம்மிற்
கூடுவர்பிடிப்பர்வறி தேகுழறிவாயாற்
பாடுவர்களிப்பரழு வார்பலவிதத்தா
லாடுவர்சிரிப்பருழல் வார்வனமடங்க. (ருக)

மங்கையரைவேதியனை யீன்றவர்கண்மற்றோ
ரிங்கிவர்கள்பேயுருவ மெய்தியதுகேளா
வங்கைகொடுதம்வயி றலைத்தழுதுமாழ்கித்
தங்குதுயர்வாரியிடை தாழ்ந்தவசமுற்றார். (ருஉ)

பற்றறுவனத்திடை பசாசுருவமேவி
மற்றிவர்கடிக்குமுணை வென்பதுமறந்தே
யுற்றவர்வெறுக்கொள வுறுக்குவர்வெருட்டிச்
சிற்றியல்விலங்குகொலை செய்தொழுகுநாளின். (ருங)

வேறு.

துன்றுமகரரவித் தோமறுபூசத்தினத்தி
னின்றபுனலாடி நியமங்கழித்திடுவான்

மன்றல்செறியச்சோத வாவிக்கணமருங்கி
னென்றியடைந்தா னுரோமசனுமுத்தமனே. (ருச)

பேதையராயைந்து பிசாசுருவமேயினரு
மாதவத்தைநீத்த மறைமாணிப்பேயனுமாய்
மூதுணர்வாய்நின்ற முனியைச்செகுத்துண்பான்
கோதுபுரிமனத்தா ரோடிக்குறுகலுமே. (ருரு)

ஆய்ந்துமுனிசெய்த நெடுந்தவத்தினற்புதத்தாற்
பாய்ந்தணுகமாட்டாமற் றூரத்திடைப்பயந்து
காய்ந்தவனன்முடிக்கக் காட்சிபோனிற்றலுமே
வீய்ந்தவினைமறையோன் வேதநிதிவந்துற்றான். (ருசா)

வந்தானுரோமசனை வாழ்த்தினன்றுதொழுதா
னெந்தாயிவணடைய வெத்தவஞ்செய்தேனென்றான்
சிந்தாகுலவிருளைத் தீர்க்குந்தினகரனே
நொந்தேன்படுந்துயரங் கேட்பாய்நுவல்கின்றேன். (ருஎ)

தக்கதருமந் தவறுதவென்மகவை
யொக்கவுடன்வளைத்திவ் வொண்டொடியரோதவொண்ணு
மிக்கவிரகத்தா லணைந்தார்வெகுண்டிவனு
மக்கணத்திற்சாபமிட வன்னவருஞ்சாபமிட்டார். (ருஅ)

சாபவசத்தாற் பசாசுருவந்தாமருவிப்
பாவைமடமாதருமென் பாலனுமிக்கானடைந்தார்
கோபமறநோன்பியற்றுங் கோதிலாமாதவருட்
டீபமனையாயிதனைத் தீர்த்தருளவேணுமென்றான். (ருகூ)

தெள்ளுமறைவேதநிதி செப்புமொழிகேட்டுருகி
வள்ளற்பெருந்தகைய மாசிலாமாமுனிவ
னுள்ளந்தனைத்தெருட்டி யுன்மகனுமங்கையருங்
கொள்ளுமலகைக் குணந்தவிர்ப்பனஞ்சலென்றான். (சாo)

யானின்றுரைக்கு மருந்தருமநற்காதை
தானின்றுகேட்குந் தரமிவர்க்குண்டாகவெனக்
கானின்றபேயர்தம்மைக் கண்ணுற்கருணைசெய்து
மேனின்றரோமசனும் வேதநிதிக்கீதுரைத்தான். (சாக)

எம்மையடைந்தா ரிடரொழியாதின்றகலேம்
வெம்மையுறுசாப வினையகலவிப்பேயர்

## ௧௮௨ அக்கினீபன் காதையுரைத்த அத்தியாயம்.

தம்மைநெடுமோகநீ ராட்டிவிப்பன்றப்பாதென்
றிம்மைநலனூட்டுகதி மாகத்தியல்புரைத்தான் (௬௨)

முந்துபிறப்பேழு முயனறுதனிமூட்டியிடு
மைந்துபெரும்பாதகமு மல்லாமலெத்தவத்து
நந்தியொழியாய்ப்பாவ நள்ளிருளுமொல்லைவிடு
முந்துபுனலி லொருமாகங்தோய்நதிமேலே (௬௩)

வேறு

மருவிமானத வாவிவா
யசிதின்மாகம தாடினோ
பெரிதுதாமுறு பேறசீா
விரியுஞானமும் வீடுமே (௬௪)

உமையைத்தானற ரவோங்கிய
விமையச்சார விருமபுன
லமையததோய்வுற மன்பினோ
தமையெபபாவமுஞ் சாவுரு (௬௫)

அண்டாபோற்றுமச சோசநா
பண்டைமாகம படிநதுளோா
கொண்டலூர்தி குறிததுவாழ
விணடலததிடை மேவுவாா (௬௬)

சதுரமாகந தலைபபட
வெதிரிகானக மேவியே
யதிருமெனபுன லாடுவா
ருகரகும்பியு ருாகளே. (௬௭)

பிருகுபானு பிறஙகுநா
ணருமதைததலை நண்ணியே
முருகுசோபுனன் மூழ்கினோ
மருவுவார்சிவன் வாழ்பதம (௬௮)

போதுசேர்யமு னைபபுன
லாதிமாகம தாடினோ
தீதிலாத செழுஞ்சுடாச
சோதிவாழ்பதி துன்னுவாா. (௬௯)

சங்குலாஞ்சர சோதியிற்
பொங்குநீர்படி புண்ணியோா

பங்கயாசனன் வாழ்பதத்
தங்கணேயமர் வார்களே (எ0)

சானவிபபு னறன்னிடை
யானமாகம தாடுவார
தேனுலாவு செழுந்துழாய்
வானவன்பதி வைகுவார. (எக)

வேறு

சரையுகண்டகை கேசினிசந்திர பாகை
வரைகிழித்துவீழ் கெள்தமிதருதுங்க பத்திரை
யிரைபுனற்பொன்னி சிந்துவோடியல்தெரி வைகை
பொருநையிங்கிவை யாடுவார்வைகுந்தம் புகுவார். (எஉ)

நீலகண்டம்புட் கரநேபாளம்பிற் பாதங்
கோலமாங்குருக் கேத்திரந்தேவகூ டத்தோ
டேனுமற்புத மோங்கரமாகள மியன்ற
ஞாலமெண்ணும கேச்சுரநைமிசா ரணியம் (எஙு)

இன்னும்புண்ணிய தலம்பலவிவற்றினின் மாகந்
தன்னிற்றெண்புன லாடுவார்கடவுட்சா ரூபந்
துன்னுவாரிவற் றதிகமாய்ச்சொலும்பிர யாகை
மன்னியாடுவார் வயங்குசாயுட்சிய மடைவார். (எச)

மாயிரும்புவி யிடத்தினிற்றுரகமாம் வேள்வி
யாயதாதியாந் தருமங்களெவற்றினு மதிகந
தூயநற்பிர யாகையின்மாகநீர் தோய்த
னேயமாயிதி னிகழ்வதோர்கதைநிகழ்த் துவமால். (எரு)

அந்தணாளகே ளவந்திநாடாள்பவ னழகார்
மந்தரப்புயன் வீரசேனப்பெயர் மன்னன்
சிந்துநீர்ப்புன னருமதையகன்கரை சேர்ந்து
பந்தநீக்குறும் வேள்விகள்பற்பல செய்தான். (எசு)

உலகமேத்திடு மிராயசூயத்தினி லொன்று
மிலகுநீதிசேர் துரகமேதத்திலீ ரெட்டு
மலகிலாப்பெருந் தானங்களரியன வெவையு
மலைவிலாதுசெய் தளித்தனன்மாசிலாக் குணத்தோன். (எஎ)

தலம்புகழ்ந்திடு மவன்றிருநாட்டினிற் சார்ந்தோ
னலம்பிடித்துழு துழல்பவன்றீனனென் றறைவோ

னிலம்பொறுத்திடாப் பாவஞ்செய்மறையவ னெறியைக்
குலம்பொறுத்திடா திகழ்ந்திடவேகினன் கொடியோன். (எஅ)

கிளைகடிந்திடப் போனவன்கிலேசமுற் றிரங்கி
யுளையுழப்பின னகவிடமெங்கணு முழன்று
வளையுமாக்கையன் மாசிமாகத்தினின் மருவித்
துளையுநற்பிர யாகையினுனாட் டோய்ந்தான். (எகூ)

அன்னநாளினி லருமகமாற்றிய வரசு
மின்னபாவங்க ளியற்றியவேதிய னிவனும்
பின்னரோர்பக லெல்லையில்விழிந்துபோய்ப் பிறங்கும்
பொன்னிருட்டினிற் புரந்தரனவையிடைப் புகுந்தார். (அ0)

புகுந்துமற்றவ ரிருவரும்பொருவறு விமானந்
திகந்தபுட்பட மணங்கமழ்திவ்விய சாந்த
மிருந்தநற்கலன் றுகின்முதற்போகம்வே றின்றிப்
பகுந்துதுய்த்தல்யான் கண்டனன்வாசவன் பதியில். (அக)

அனையதாம்பிர யாகையின்மாகமா டினர்கள்
புனையுநூன்மணி மார்பவிப்புவியிடைப் பிறவார்
முனையில்வென்றட ஃபிராயசூயம்பல முடித்தா
ரெனையராயினும் பிறப்பர்களிரும்புவி யிடத்தே. (அஉ)

நன்றிமாகநீர் நலம்பெறவாடின ரோடு
நின்றவேள்விக ளிரப்பினர்நிகரென லாகா
ரன்றிமாகநீர்ப் பலத்தினுலலகைதீர் கதையீ
தொன்றுகேளென வுரோமசன்பின்னரு முரைப்பான். (அங)

வேறு.

பேசியவளம்பெறு பிலக்கமலைநின்றும்
வீசியசரச்சொதியின் மேல்கரையின்வைகு
மாசொருவுதேவதுதி யென்னுமறைவல்ல
பூசுரனல்வைணவ மெனுநிலைமைபூண்டோன். (அச)

இந்தமறையந்தண னிருந்தவமியற்றி
மைந்தனோர்சுமத்திரனை வாழ்வுடனளித்தே
சிந்தைவிடயங்களில் விடாதுநிலைசேமித்
தைந்தழலினின்றுதவ மன்புறவியற்று. (அரு)

நீரினிடைமூழ்கிநெடு நாளதுகழித்துஞ்
சாருலவையுண்டர வெனத்தவமிழைத்து

நாரணனையுள்ளுற விருத்திநவைநீங்கிப்
பாரினிடையாயிர மெனும்பருவநின்றான். (அசு)

உற்றிவனெடும்பக லுறுந்தவமியற்ற
முற்றுதலொழிந்தொரு முழைத்தலைபுகுந்தே
கொற்றவயவேங்கையொடு கூடவுறைவானேல்
மற்றிவனருந்தவ மதித்துணரவற்றோ. (அஎ)

இத்தகையனின்னண மமர்ந்தொழுகுமெல்லை
மெய்த்தகதிரேழிலுற மேவருதினத்திற்
பத்தியுடனல்விரத முற்றநுபரித்தே
யுத்தமன்வழுத்தியிசை யோதியிடுபோழ்தின். (அஅ)

சங்கினொடுசக்கர நெடுங்கதைநல்சார்ங்க
மங்கையொருநான்கினு மெடுத்தழகெரிப்பப்
பொங்குவரிவன்சிறைய புட்பிடரிலேறித்
திங்களெனவெண்கவிகை சேணினிழல்செய்ய. (அகூ)

வாசவனமாலிகைபொன் மார்பிடைவயங்கக்
காசின்மணிதுற்றிய கனங்குழைவில்வீச
வீசுமணிமாமவுலி வெண்கதிர்கொழிப்ப
வோசைநெடுவாருதி யுறங்குபொருளுற்றான். (கூ0)

ஒல்லைநெடுமாயனுற லுந்தவமுளந்தோன்
வல்லையிலெழுந்தனன் வணங்கினன்வழுத்தி
யெல்லையறுமின்பநிலை யெய்திமகிழ்வோங்கிச்
சொல்லமுடியாதுருகு தூயமுனிநின்றான். (கூக)

மாயவனருட்கண்மலர் வுற்றினிதுநோக்கித்
தூயவவிருப்பொடு துதித்திடுதிரத்தா
லேயமகிழ்வுற்றன மியைந்தவரம்வேண்டென்
றாயிரமறைப்பெயரி னுறையலோடும். (கூஉ)

நீதிமறையந்தண னிகழ்த்திடுவனய்யா
வாதிமறையோன்முதல வவ்வமரரெல்லா
மோதவரிதாயநின துண்மையையுணர்ந்துன்
பாதமலரைப்பரவு பத்தியமையாதோ. (கூங)

முன்பெறுபெருந்தவ முயன்றொழுகினேனோ
வன்புறுமனக்கொடிய வஞ்சகன்முன்னெய்தி

யன்பினில்வரந்தருவ மென்னுமருள்போதா
தென்பெறுவதையவனை யேத்துமடியேனே (௯௪)

அச்சுதவனைத்தொழு தடைந்தவடியார்க்கு
வச்சிரன்விரிஞ்சனிவர் வாழ்வுமொருவாழ்வோ
நச்சிலனவற்றினல னம்பனின தருளே
யிச்சையதுவேயமையு மென்றுரையிருந்தான். (௯௫)

உரைத்ததையுவர்துவண மூருமொருவள்ளல்
விரைத்துளபமாலைமுகில் வேதியனைநோக்கித்
தரைத்தலையெடுத்தெமை வழுத்தியதுதன்னாற்
பரித்திடுவைபற்றியெம தன்பதுபழுத்தே. (௯௬)

பண்பினிலெனைப்பர விடும்பனுவறன்னை
நண்பினினுரைத்தவெவ ரேனுநவைநீங்கி
யொண்புவியிடத்தினினை வுற்றபொருண்மேவி
விண்பெறுவர்நம்மடிய ருக்குளவர்மேலோர். (௯௭)

உரந்தருதவத்துமறை யோயெனவுரைத்துக்
கரந்தனன்விசும்பினிடை காரெழிலிவண்ண
னிரந்தரநல்வேதியனு நேமியனையேத்தி
யரந்தைகெடநோற்றுநெடு நாளவணிருந்தான். (௯௮)

இன்னணமுரோமச னெடுத்தினிதியம்ப
நன்னிலமைவேதநிதி நாரணனைநோக்கிப்
பன்னியவனேத்தியிடு பாடலெதுவென்னச்
சொன்னவுடனம்முனிவ னப்பனுவல்சொல்வான். (௯௯)

ஏத்தியிடுபாடலை யிரைப்பொழுதுதன் னிற்
சீர்த்திவனிதைக்குரிய சீர்த்திமுனிகற்றே
பார்த்தெனையழைத்தது பயிற்றவுமுணர்ந்தேன்
தோத்திரமிதற்குநிகர் சொல்வதெதுமாதோ. (க00)

வேறு.

வாசுதேவனை மலர்மகள்கொழுநனை மண்முழுதுண்டானை
நேசமுற்றிய வடியருக்கெளியனை நெடுநிலமளந்தானைப்
பேசுகின்றதும் பேசவேபடுவதும் பேச்சுமாய்நின்றானை
யோசைமாக்கடன்முகட்டினி லுறங்கியவொருவனைத்தொழுவாமே.

கஞ்சநாண்மலர் விதியொடுவேதமுங் காண்பதற்கரியானைப்
பஞ்சபூதமாய் மன்னுயிர்ப்பகுதியாய்ப் பறந்தவற்றுறைந்தானை

விஞ்சையாய்மற்றை விஞ்சையுமாகியே மேருவாயணுவாகி
யஞ்சுவெம்படை யங்கையிற்றாங்கிய வமலனைத்தொழுவாமே. ()

ஆதியாய்நடு வாயவற்றந்தமா யடிமுடியற்றானைப்
பேதியாநின்றசமையங்கடொறு நின்று பெரும்பதமளிப்பானைச்
சோதியாய்மன விகற்பமற்றருளத் துரியத்திற்றெழுவானை
யோதியாவருமறியொணாநிற்குணத்தொருவனைத்தொழுவாமே. ()

பொன்னிறைப்பணிமுடிகடகாதிபின் பொன்னெனப்படுமாபோற்
பின்னமாகியே காட்டுபல்லுயிரெலாம் பெயர்த்துந்தானவானைப்
பன்னுவாக்கொடு மனத்தினுக்கதிதனாய்ப் பற்றறுபற்றுள்ளார்
நன்னிலைக்குவே றற்றருளியாகிய நம்பனைத்தொழுவாமே. (க௦௪)

முத்தரென்றுதா னென்றுவேறறற்றருரு முழுமுதலானானைப்
பித்தரென்றுதா னென்றுவேறறற்றருரு பேரருளானானைத்
தத்துவங்களிற் புலப்படாக்கடவுளாய்த் தத்துவமானானைச்
சித்தர்சித்தத்துச் சின்மயமாகிய தேவனைத்தொழுவாமே. (க௦௫)

ஆனைமூலமே மூலமேயென்றெடுத் தழைத்திடவருவானை
வானிலைந்தரு மடவரல்வேண்டிட மண்ணிடைநடவானைத்
தானெனும்பொருண் மறந்துணர்வொடுங்கினாற் றானவனானானை
வானெனும்பதங் கடந்தருவுருவமாமாயனைத்தொழுவாமே. (க௦௬)

பற்றுநல்வினை யாளர்தங்கருமத்துப் பலன்களையளிப்பானை
மற்றயோகியர் தம்முறைப்பாவக மருவியவுருவானை
யுற்றஞானியர்க் கெங்கணுமகம்புற மாகிவேறற்றானைத்
துற்றுநீரொளியிருசுடர்க்கண்ணனைக் கண்ணனைத்தொழுவாமே.

கங்கைநீர்கொடு சதுமுகவிரிஞ்சனாற் கழுவியதாளானைப்
பொங்குமுக்குணத் தரியமுத்தொழில்களுந் தனித்தனிபுரிவானை
யெங்கும்வேறுவேறியாவுளரெனத்தொழு மியல்பினர்க்களியாம
லங்குவேறுவே றரும்பொருளாயரு ளனகனைத்தொழுவாமே.

வைதுளோர்கட்கும்வாழ்த்தினர்தங்கட்கும்வன்பினில்மறவெம்போர்
செய்துளோர்கட்குமன்புசெய்தோர்கட்குஞ் செழுந்துணர்மலர்மாரி
பெய்துளோர்கட்கும்வெறுப்பறவிருப்பினாற் பெறுகதியளிப்பானை
யெய்துமாதவர்பிறவியின்பகைஞனை யிறைவனைத்தொழுவாமே.

வேறு.

என்றுமாமுனிபுகழ்ந் தனனீதவன்பாட
னன்றிதென்னவே நயந்துடன்படிப்பவர்கேட்போர்

சென்றுபுன்மையாம் பிறவியிற்சேர்ந்திடார்சேர்வர்
குன்றநீள்குடைக் கவித்தவன்குரைகழற்றுணையே. (கக0)

**அக்கினியன் காதையுரைத்த அத்தியாய முற்றிற்று.**

ஆக அத்தியாயம் உஎ-க்குத் திருவிருத்தம் கஙககூ.

---

இருபத்தெட்டாவது,

## சித்திரசேனன் காதையுரைத்த அத்தியாயம்.

---

மீட்டும்ரோமசன் விளம்புவான்வேதியரேறே
நாட்டிற்றென்றிசை நரபதிநளிர்மதிமரபிற்
கோட்டமின்றியே யுதித்தவன்குலகிரிப்பிடரிற்
றீட்டுசெங்கயற் கொடியினான்சித்திரசேனன் (க)

நால்வகைப்படு கடற்பெருந்தானைக்குநாதன்
கோலொழுக்கினின் மனுநெறிநடாத்தியகுரிசில்
வேலெனத்தகு விழிச்சியர்மதனவேளென்று
மால்படைத்திடப் புயவரைபடைத்திடும்வனப்போன். (உ)

அறிவிலீகையிற் பொறையினினிகரிலாவரசன்
நெறியில்வைதிக நிலைமையினிலைபெறுமனத்தோன்
மறையிலாக்கிய வேள்விகள்வரம்பிலமுடித்தோ
னிறைவர்மூவரு மொருமையென்றபேதத்திலிசைந்தோன். (௩)

பொங்குதேரல்குற் புணர்முலையரம்பையர்போலு
மங்கைமாதர்நூ றாயிரர்வனமுலைமருவிக்
கொங்குலாவிய சோலையில்வாவியிற்குறுகிப்
பங்கயப்பெரு வனத்திடைப்பருதியிற்பொலிவோன். (௪)

முன்னையூழ்வினை யுறத்தலான்முயங்குதீநட்பான்
மன்னர்மன்னவன் வைதிகநிலையினைமறந்து
பின்னல்வேணியான் பாசண்டப்பிதற்றினர்பூசு
மன்னுவெண்பொடி மெய்யினர்வாழ்மனையடைந்தான். (௫)

ஆயதீய்மையி லரசனைப்புகுத்துவானெடுத்த
மாயவேடத்தர் வைதிகச்சைவம்போன்மருவித்
தூயவானதட் கஞ்சுகம்போர்த்தசெஞ்சுழல்கட்
காயும்வெம்புலிக் கைதவவேடத்தைக்கலந்தான். (௬)

பூச்சுவேறென்றும் புந்தியினீதியைப்புணர்க்கும்
பேச்சுவேறென்று மாயவர்மன்னவர்பிரானே
தீச்செயந்தணர் வேதத்தைத்திறம்புசித்தாந்த
நாச்சுகம்பெறுங் கூறிடக்கேளெனநவின்றான். (எ)

விண்டுவெண்பதென் வேதங்களென்பதென்வேதப்
பண்டையந்தண ரென்பதென்வேள்வியென்பதுவென்
றுண்டவெண்பிறை வேணியான்சமையத்தைத்தொடுத்துக்
கண்டவைதிக மிகழ்ந்திடன்முத்தியாங்கண்டாய். (அ)

பஞ்சபாதகஞ்செய்திடல் பண்பலசெய்த
லஞ்சலாதுகொ ளரியகாபாலியரடியை
நெஞ்சிறுற்றெழு திடுவையேனிமிடத்திற்பாவ
நஞ்சராமுன்னிற் றேனைபோனடுங்கியோடிடுமே. (கூ)

இந்தநற்சமை யத்தினிலடைந்தவரியல்பு
விந்தைநாயகன் சினகரம்வேதியரில்லஞ்
சிந்திமண்ணற மாய்த்திடலதுசெயாதொழியில்
வெந்ததீநரகத்தினில் வீழ்குவர்விரைந்தே. (க0)

என்றுபுன்மதக் கபாலியரியம்பிடக்கேட்டு
வென்றிவேந்தனும் வினைவழியொழுகியமனத்த
னன்றுநன்றெனப் புகழ்ந்திதுமனக்கொடுநயந்து
நின்றவைதிக நிலையினையறத்தொடுநீத்தான். (கக)

வல்லைமீண்டுதன் கோயிலத்தாணியைமருவிச்
சொல்வினைவல்செய் யுழையரைத்துண்ணெனக்கூவி
யொல்லைநாடெலாம் வைதிகமொழிகவென்றோதிக்
கல்லென்மாமுரசறைகுதிர் களிற்றின்மேலென்றான். (கஉ)

ஆன்றதன்னுழைக் கபாலியாமதத்தினையடைந்தார்க்
கேன்றநற்கலன் வெறுக்கைகளிவுளிதேர்யானை
நான்றதொங்கல்வெண் கவிகைபொற்சிவிகைகணல்கி
யூன்றிநானிலத் தனீதியைநீதிபோயொழிப்ப. (கங)

தருமகண்டக ராகியபுன்மதஞ்சார்ந்தோ
ரிருநிலத்துவா ழச்சுதன்கோயில்களிடித்துக்
கரியமாதிரு மேனியைக்கடலிடைக்கவிழ்த்தே
யுரியநன்னிலைவணவர்க் கலக்கணுங்குறுத்தார். (கச)

வேந்துதண்டிக்கச்சிலர்சிலர் வேறுநாடடைந்தா
ரோய்ந்தநெஞ்சினர் சிலர்சிலரம்மதத்துற்றார்
காய்ந்தநெஞ்சினர் சிலர்சிலராவியைக்கழித்தார்
பார்தனிற்றுயில்பரனடியார்பட்டதொன்றே. (கரு)

ஆதிவேதமு நீதியுந்தருமமுமகன்று
தீதுமேற்கொடி யாவருந்தீமையேபுரிந்தார்
காதுவேன்மன்னனியல்பு காசினிக்கியல்பென்ன
வோதுகின்றதைக் காட்டுவான்போன்றதவ்வுலகம். (கசு)

அறநெறித்தலை யகன்றிடப்பாரிடமகன்ற
மறநெறித்தலைவளர்தலான மன்னுயிர்மடியக்
கறைமுகிற்குலந் துளியறக்கரந்தனகரப்ப
வுறைபசும்புலு முதலறக்கருகினவொடுங்கி. (கஎ)

விளைவுதீர்ந்திட வுணவறப்பசியினால்வெதும்பி
யுளையுமாநில மனிதரைக்கரத்தினாலொறுத்துக்
களைகணாகிய மன்னவன்வருத்தலிற்கலங்கித்
தளைகளோடுழ னரகினராமெனத்தளர்ந்தார். (கஅ)

ஆயகாலையிலறநெறி யருக்கன்வந்துதிப்பத்
தீயபாவமாம்வல்லிருள் வளைந்ததுதீரத்
தூயநல்வினைதுறந்தவ னுருயிர்துறந்து
போயினானடுமறலிதன் னாலயம்புகுந்தான். (கக)

வேறு.

அந்தரநெறியினி லழன்றநெஞ்சினர்
சிந்துறுபொறிக்கன றெறிக்குங்கண்ணினர்
வெந்திறற்படையினர் வெருவுந்தோற்றத்தர்
வந்தனர்வளைந்தனர் மறலிதூதரே. (உ௦)

உருப்பமோடெதிர்ந்தன ருதிரஞ்சிந்திடத்
தருக்கினர்புடைத்தனர் தலையிலார்த்தனர்
வெருக்கொளமுசலத்தால் வெகுண்டுமோதினர்
நெருப்பெழுமூசியார் நெறிக்கொண்டேகுவார். (உக)

காருருக்கியன்றன துண்டக்கங்கமெய்ச்
சோரிகளொழுகிடத் தொடர்ந்துகோத்திட
வார்துனைவாட்களா லரிந்திட்டேகியே
சூரியன்காதல னவையிற்றுன்னினார். (உஉ)

கண்டனனடுவனுங் கனன்றிப்பாவியைத்
தண்டலினரகிடைத் தாணுய்ப்பீரென
மண்டுவெஞ்சினத்தொடு மறலிதூதுவர்
கொண்டுபோய்நரகினிற் குளிப்பித்தாரரோ. (உ௩)

வேறு.

கோரமானரௌரவங் கொடியதீயரௌரவ
மாரழற்கள்வீசியோ டழன்றகாலசூத்திரம்
பேருறும்பியானகம் பிறங்குதத்தகும்பம்வெஞ்
சோரியுண்டிசங்கடஞ் சுவானவுண்டிமுதலவாய் (உ௪)

எண்ணுதீயநரககோடி யாவினும்புகுத்தவே
நண்ணுபாவமலமகன்று நரகசேடமயிலுவான்
வண்ணமாமலைப்புறத்து முறையினென்றுமருவிவாழ்
கண்ணழற்கொளித்தசீற்றக் கழுதின்றோற்றமேவியே (உ௫)

ஓடுமீளுமழுநகு முறுத்துவெய்யதழலுயிர்த்
தாடுநின்றுபாடுமீட் டழுங்கியல்லலுற்றுமுட்
காடுதோறும்வெம்பசி கனற்றவெந்துதிரிதரும்
வாடுமேனிநாவறந்து வாய்புலர்ந்துமாழ்கியே. (உ௬)

ஆரெனைப்புரப்பரென்ன வழுதிளைத்திரங்கிடும்
பாரிலென்வயிற்றெழுந்த பசியையாரொழிப்பரென்
றோருமிபபிறபபுமென் றொடுங்குமென்றுதுயருறுங்
கார்நிறப்பசாசுழன்று கதறுகின்றநாளினே. (உ௭

அம்மலைப்புறத்திலான்ற வாச்ரமத்தடைந்துவாழ்
செம்மையானமுனிவனெஞ்ச மருவுதேவதுதிசெலா
வெம்மையானகரியநெட்டை விகடகோரவுருவொடே
சும்மையிட்டிளைத்தழுங்கு பேயைநோக்கிச்சொல்லுவான். (

வேறு.

ஏதுபுரிந்தோ யேதுநினைந்தோ யிப்போழ்தின்
மாதுயருற்றே நீயழுதந்தோ மறுகின்றாய்
தீதையொழிப்பே னீதுயர்விட்டே செப்பென்னப்
பாதகவேடப் பேயழுதுள்ள படிசொல்லும். (உ௯

நன்மைபயக்குங் காலமணித்தா நலினாலே
புன்மையுழந்தே னின்னையெதிர்க்கும் பொறிபெற்றேன்

றொன்மையினாவா னாரணனுமந் துதியாத
தன்மையிலிந்தப் பாவவசத்திற் றளர்கின்றேன். (௩௦)

மாயிருஞாலத் தென்றுநடக்கு மறைநீதித்
தேயவனீதிப் புன்மைநிறுத்தித் திருமாறன்
னாயிரநாமத் தோர்பெயரோனு மறையாத
பேயறிவாலிப் பேயுருவானேன் பிழைசெய்தேன். (௩௧)

மாமறைநூலோர் பாகவதற்குள் வரமிக்கோ
யேமுறுபாவப் பேயுருவானே னினியுய்யத்
தாமரையன்ன கண்ணருள்சற்றே தாவென்னக்
கோமுனிதானு மஞ்சலையென்னா விதுகூறும். (௩௨)

தங்கியபாவத் திந்தனமாய்க்கு நதழலென்னப
பொங்குதரங்கச் சேர்பிரயாகைப் புனறன்னிற்
செங்கதிர்கும்பஞ் சேர்வுறுகாலைச் சென்றாடிற்
கங்குனிறத்துப் பேயுருமாயுங் கண்டாயே. (௩௩)

பாவவிலங்கு வெட்டுகுடாரிப் படர்மாயை
யோவறுதோற்றப் பாந்தளொறுக்கு முவணப்புண்
மேவருபோகந் தந்தருள்விண்ணு மறைதாருந்
தேவர்வழுத்துந் தண்பிரயாகைத் தெண்ணீரே. (௩௪)

வேறு.

அந்நதிப்பெருமையா ரளவிட்டோதுவார்
முன்னொருகேரளப் பசுசமுற்றியே
நன்னதித்திவலையா னலம்பெற்றுய்ந்தமை
சொன்னதோர்காதைகே ளென்றுசொல்லினான். (௩௫)

சேரமான்மனுநெறி யரசுசெய்திடுங்
கேரளநாட்டின்வாழ் மறையின்கேள்வியன்
சோர்விலாவசுவெனச் சொல்லும்பேரினான்
பார்புகழ்நீதியிற் பண்பின்வைகுநாள். (௩௬)

அந்தமாமறையவ னரும்பொன்யாவையுந்
தந்தைதன்தாயத்தார் வலிதிற்றான்கொள
விந்தமாநிலமெலாந் திரிந்திளைத்தபின்
விந்தமால்வரையினிற் சென்றுவீந்திட்டான். (௩௭)

அப்பெருவரையினி லாவிதீர்ந்தவர்
துப்புறுமலகையாய்த் துயரின்மூழ்குவார்
தப்பறுமறிஞனு மன்னதன்மையா
லொப்பறுபேயுரு வொர்லேமேவினன். (௩௮)

கருநிறவலகையாய்க் காட்டுள்யாவர்க்கும்
பருவரலுறுத்தியே பசியினன்மெலிந்
தருவரைவிந்தியத் தடவிநீணெறி
வெருவரலுற்றமு தடைந்துவெம்பினன். (௩௯)

மாண்டகுதவங்களை வளருந்தானத்தைக்
காண்டகுவேள்வியைக் கடவுட்பூசையைச்
சேண்டருவிரதத்தைச் செய்துளோர்கலால்
வேண்டியபோகங்கண் மேவற்பாலதோ. (௪0)

நிலைபிழைத்தொழுகினர் நியமமற்றவர்
கொலைபுரிந்துண்டவர் கூரவர்க்காய்ந்துளோர்
கலைபுனையல்குலார் கற்புமாற்றினோ
ருலைவுறுபெருந்துய ருழந்துமாழ்குவார் (௪௧)

உற்றிடுதருமத்தை யுணர்ந்துசெய்திடார்
மற்றதன்பலன்பெற மகிழ்ந்துநிற்பராற்
றெற்றெனப்பாவமே செய்வர்செய்தபின்
குற்றமாமதன்பயன் குறுகவஞ்சுவார். (௪௨)

செய்திடுபாவத்தாற் செறிந்ததீவினை
வைதிகத்தருமத்தா லன்றிமாற்றுறா
தெய்தியகோரள வலகையீடழிந்
துய்திறமின்றியே யுழலுங்காலையே. (௪௩)

நாவினிறைரண ஞமமேத்துவான
றேவுதெண்கங்கைநீர் செறித்தகுண்டிகைக்
காவினனைசத்திடு காவிச்சேலைய
னேவெனவவ்விடை யெய்தினனரோ. (௪௪)

யடைநதவேதியன்றனை யலகைகண்ணுறீ
யிடைந்தெதிர்தடுத்துத்தன் வெய்யவேடத்தை
யுடைந்துநெஞ்சுட்கிட வொல்லகாட்டியே
குடங்கைகொண்டமைத்தஞ்ச லென்றுகூறிற்றே. (௪௫)

உத்தமவேதிய வுதகமீந்தெனக்
கித்தலையுயிரளித் திடுதியென்றலுஞ்
சுத்தமாமறையவன் றேறுமென்புமாய்ப்
பித்தர்போனின்றனை யாரைபேசென்றான் (சசு)

கேட்டலுமலகைமுற் பிறப்பிற்கேரள
நாட்டினின்மறையவ னான்முன்றீமையே
யீட்டியதவறினா லெடுத்ததிவ்வுருக்
கோட்டமில்குணத்தினா யென்றுகூறியே. (சஎ)

இரந்தவர்க்கன்னமிட் டினிதுதுய்த்திலேன்
விருந்தினர்வாடிட வேற்றிடம்புகுந்
தருந்தினன்பசியபுல் லாவுக்கிட்டிலேன்
புரிந்திலேன்கடவுளர் பூசையென்பதே (சஅ)

தாகமுற்றடைந்துளோர் தமக்குத்தீம்புன
லோகையோடளித்திலே னுண்ணுநீர்ப்பந்த
லேகும்வெம்பாலையி வினிதமைத்திலேன்
பாகொடுவெள்ளிலை பகவற்கிட்டிலேன். (சகூ)

இறந்தவர்கடன்கழித் தெள்ளொடுட்டிலேன்
றுறந்தவர்க்கரியசெந் தூசளித்திலே
னறந்தெரிபொதுமட மமைத்திலேன்மறை
சிறந்துளோர்க்கிடுகுடைச் செருப்புநல்கிலேன் (ருo)

வெள்ளநீர்நண்பகல் விரும்பியாடிலே
னெள்ளெரியதனிடை யோமஞ்செய்திலேன்
புள்ளுறைபழுமரப் பொங்கர்வைத்திலே
னுள்ளநொந்தடைந்தவர்க் குவகைசெய்திலேன். (ருக)

கார்த்திகைத்திங்களிற் கடவுளாலயத்
தேத்தருநெய்விளக் கனந்தமிட்டிலேன்
கூத்தனைமணிநிறக் கொண்டல்வண்ணனை
நாத்தழும்பேறிட நயந்துபோற்றிலேன். (ருஉ)

முத்தினத்தரிதின விரதமுற்றிலேன்
பத்தியாற்சிவநிசி பண்பிற்செய்திலே
னுத்தமமாகநீ ருவந்துமூழ்கிலே
னத்தவக்குறையினா லலகையாயினேன் (ருங)

உம்மையிற்றருமங்க ளொன்றுஞ்செய்திலா
ரிம்மையினற்பல னெய்திவாழ்வரோ
வம்முறைக்குணவற வழுங்கிவாடிய
வெம்மைநீகண்டுணை ரேதுவாகவே. (ருச)

மதியினின்முயற்சியால் வாழ்வுண்டாகுமோ
மதியினின்மடியினுல் வறுமையெய்துமோ
விதிவழிப்பண்டுசெய் வினையின்பேறல்லா
லதிகமோரணுவும்வர் தடைவதில்லையே (ருரு)

இட்டுணுத்தீமையால் யாதுண்டாயினுந்
தொட்டுணு புணவென் ஞேரணுந்துய்த்திலேன்
கட்டழற்கதிர்வந்துங் கூகைக்கண்ணிருள்
விட்டிலதெவரினி விதியைவெல்லுவார். (ருசு)

ஆயினுநினக்கிந்த வடவிவாழ்வுறு
பேயினம்பாறிட மிக்கபீதியாற்
றேயுநல்வழியெலாஞ் சேமமாகெனத்
தூயநன்முகமஞே டினையசொல்லுமால். (ருஎ)

பண்டொருகாலையான் படர்ந்ததேயத்தில்
விண்டலம்போழ்ந்துயர் வெற்பினின்றுவீழ்
தண்டுளித்தூசனை யாற்றின்ருள்துறைக்
கண்டயர்வுயிர்த்தனன் கரையின்வைகுங்கால். (ருஅ)

வேறு.

மணங்கமழ்மலர்சூழ் வனத்திடையிருந்து வரம்பில்பற்பறவை தற்சூழ, விணங்கியபெடையோ டெழில்கொள்வண்டான மிருநதியகன்கரையெய்திப், பிணங்குசைவலத்தைத் தாளினுனீக்கிப் பெரும்புனற் பெடையொடுமருந்திக், கணங்கொள்வெம்புளினத் திடைமணந்தயர்வாய்க் கண்டுயில்கொண்டிடுங்காலை. (ருகூ)

தண்பணைச்சாரறப் பழுமரத்திருந்தோர் தாவுவானரங்கடிதிழிந்து, கண்படைகொள்ளும் பறவையைப்பிடிப்பான் கருதியங்கவற்றயலெய்தும், பண்புணர்ந்தெழுந்து வெறீயயலகன்ற பறவைவானரமுகம்பார்த்துத், திண்புவியிடத்திற் பிழைசெய்யாவெம்மைச்செறுப்பவென்னடுத்ததென் றியம்பும். (சுo)

வாங்குநீருலகின் மன்னருந்தவமு வருத்தியேவதைத்தொழில் புரிவார், யாங்களோர்தவறு மிழைத்திலமெய்ம்மாட் டித்தவறிழைத் தவாறென்னோ, வாங்கதுகிடக்க நினதுமுற்பிறப்பை யறிந்துளே னுரைக்குவனென்னு, வோங்குவானரங்கேட் டறிவையாலுணர்த்தி யென்னவண்டானமீதுரைக்கும். (சுக)

முற்பிறப்பதனி லரசனீயாகி முறையிகழ்ந்தனீதியேயியற்றிக், கற்பனைகடந்து சிலபகலிருந்து கழிநதனைகழிநததற்பின்னர், வெற் புனதிரடோள் யமபடர்விடுப்ப வெய்யதீநரகெலாமழுந்திப், பிற் பிறப்பதனி லளவிலாக்கொடிய புன்மையாம் பிறப்பெலாம் பிறந் தாய் (சுஉ)

மீட்டுநீயிந்த வானரமான வினையமுமன்னவனுகி, நாட்டினில னீதி நடத்துநாண்மற்றோர் நான்மறை யந்தணன்கதலித், தோட்ட முட்புகுநது வன்பினிற்பலன்கள் பறித்துநீதுய்த்திடு பலத்தாற், காட்டியதிதுநின் றேற்றமென்றேற்றங் கழறுவன்கேட்டியென்றி சைக்கும். (சுங)

புண்ணியமிலாநீ யரசுசெய்காலை புரோகிதனுகியான் வந் தேன், வண்ணவான்பருதி யரவுதீண்டியநாண் மறையவர்க்கிருநிதி வழங்கென், றெண்ணறுநிதியமென் வயினளித்தாயவற்றிலோரெள் ளவேனு, மண்ணிடையநத நருமறைக்கரையின் மறையவர்க்களி த்திலேன் கவர்ந்தேன் (சுச)

மறையவர்க்களித்த பொருளைவஞ்சித்த மடமையான் மதியி லாநினைப்போன், முறைமுறைநரகின் முப்பதாயிரமாண்டுன்னொடு மூழ்கியபின்னர்ச், சிறையுடைப்பறவை யாகியவினையஞ் செப்பு வனப்பிறப்புதனின், னிறைவனைக்கரத்தா னென்னுடன்பிறந்தாளி ல்வயிற்கரந்தியான் புகுந்தேன். (சுரு)

தவளவெண்மதிபோல் விளங்கியதகட்டுத் தாலமேமுதலியக ஞ்ச. முவளகத்தொடுக்கிக்கரந்துகொண்டேகி யொருவனோடிடதிர் ந்துசூதாடித், துவளவேதோற்றுப் பொருளெலாமிழந்த தொடர் பினல்வினையினுற்கண்டாய், பவளவாய்க்குறுந்தாட் சேவல்வண்டா ன மாயினேனென்றுபின்பகரும். (சுசு)

அன்புறுதுணைவி யாகிமுன்வதிந்தா ளயலகந்தொறுந்தனிபுகு ந்தாங், கென்பரிசவளுங் கஞ்சமேகவர்ந்த வியல்பினலின்றுமிப்பி றப்பிற், புன்புறத்துவற் பேடையாயடைந்தாள் புகுந்ததிப்பரிசி

ளிமேலும், நன்பயனளிக்குங் காமரூபப்பேர் நாட்டினில்யாங்களு
நீயும் (சுஎ)

அன்னத்தின்பெடையு மனமுமாகி யத்தலே யவதரித்திடு
வோம், பின்னுமோர்பிறப்பி லானகுலமாகப்பிறந்துபின்மனிதராய்
ப்பிறப்போ, மின்னிலையார்க்குங்கடப்பதற்கரிதென் றெழில்கொள்
வண்டானமன்றியம்ப, நன்னதிக்கரையிற் கேட்டனனந்த நாண்மு
தலொருவனா நலியேன் (சுஅ)

கங்கையம்புனனீ யின்றெனக்களித்தாற் கருநிறப்பசாசுரு
நீங்கு, மங்கதன்பெருமை முன்னரேயுணர்ந்தே னன்னதுகேட்டி
யோர்நாட்டிற், பங்கயமார்பன்பாரியாத்திரன்றன் பாலகனுன்மறை
பயின்றோன், பொங்கழல்வேள்விக் குரியனல்லாத பூசுரன்றனை
வேட்பித்தான் (சுகூ)

அந்தவெம்பாவப் பலத்தினலந்தவநதண னந்தமுற்றிடலும்,
விந்தமால்வரையி லலகையாய்ப்பிறந்து மேவியெட்டாண்டென்
னேடுறைந்து, சிநதையிற்றுயரா லுழலுநாண்முன்னைப் பவத்தினிற்
சிறுவனற்றுதை, கொந்தழறசுடலைப் பட்டவேளென்பைக் குளிர்
புனற்கங்கையிலிட்டான். (எ0)

பகிரதிபபுனலி லென்பிடலோடும படுகுலைப்பசாசுருநீங்கித்,
துகிர்புரைக்கனிவா யரம்பையர்சூழத் துலங்குபொனவிமானமேற்
கொண்டு. பகருஞ்சோதி விண்ணவனுகிப பசுந்துணர்கற்பகநாட்
டிற், புகுவதுகண்டேனுதலாலிந்தப் புனிதநீர் நின்வயின் வேட்
டேன் (எக)

அலகையினுருவங் கொண்டியான்விந்தத் காண்டுமூவாயிரஞ்
சரித்தே, னுலகினினுலவை யுண்டெல்வருநதி யுழன்றிநிந்தயினைப்
புரத்த, லிலங்கியதவத்தோயுநிகமாந்தரும மென்பதையுணர்ந்துகா
விறக்கிச், சிலகரகததிற் கங்கைநீருதவித் தீமையின் றகற்றென
லோடும். * (எஉ)

வேதியன்தனைக கேட்டுநற்றரும விதியெலாம்வேறுவேறியம்
பித், தாதையுந்தாயும் பிருகுகச்சத்திற் றங்கினரவர்தம்மையாட்
டச், சீதவான்கங்கைநீர்கொடுபோந்து சென்னெறி வேட்டநின்ற
னக்கிப், போதுதானடித்த றருமமோவென்னுப்புந்தியிற்றெளிவுற
வுணர்ந்தேன் (எங)

## கக-அ சித்திரசேனன் காதையுணர்த்த அத்தியாயம்.

வேட்டவாதுலருக் கீதனன்றென்னுத் ததீசிமுன்விளம்பியவா ய்மை, கேட்டது தன்னே நினைந்துளங்தெளிந்தேனுதலாற்கடல்கிழித் தொழுகு, மோட்டுநீர்க்கங்கைப்புனல்பெறுகென்ன வளித்தனன் முறையினில்வாங்கிக், காட்டுறைகழுதுபருகியுந்தோய்ந்துங் கழித் ததுபழித்ததீயுருவே. (எச)

தீவினையலகை யுருவொழித்தமரர் திருவுருப்பெற்றமைநோக் கிப், பூவுறையயனுமெறிதிரைக்கங்கைப் புனலையுமுணர்ந்திடமா ட்டா, னுவதுகருதியாதிவானவனு மலர்சடைப்புனைந்தனனென்று, லேவரேயெனினுமதனிலோர்துளியைப் பருகிடிலிருமையுந் தொலை ப்பார். (எரு)

காவடியதனிற்கொணர்ந்ததெண்புனலைக்காதலானுகர்ந்துதோ ய்ந்ததனுற் பாவமாரலகையுருவொழித்தமரர் படிவமாய்ப்பெற்ற னனென்றுற். போவதுபுரிநதுகங்கைமாநதியிற் புனிதநீராடியதவ த்தோர், மேவருமுத்திபெறுவரெனவுரைத்தல் வியப்புறாயென் றுமெய்யாமால். (எசு)

எனவுணர்த்தன்னு னுய்ந்தனனென்னு விருபிறப்பாளனேயேத் திப், புனைமலர்ப்பசுந்தார் விண்ணவனுகிப் பொலிவுறுகேரள மறை யோ, னிமலரகத்து நறைமழைபிலிற்று நலந்திகழ்கற்பகநாட்டிற், றினகரனெளியின் மணிகுயின்றிமைக்குஞ் செழும்பொன்மானத் தொடுசேர்ந்தான் (எஎ)

மற்றவன்றேவ னுகியபின்னர் மறையவன்மறித்தும்வான் கங் கை, யுற்றுநீராடி யரும்புனன்மொண்ட கரகங்களூறியுறு காவிற், பற்றினனேற்றித் தோளினிற்சுமந்து பதியிடைப்புகுந்துதாய் தந் தை, சுற்றியகிளைஞ ராடுவொனுதவித் தொல்வினையறுத்தினிதிருந் தான் (எஅ)

### வேறு.

என்றுதேவத்துதி யியம்பக்கேட்டனு
நன்றெனவவனடி வணங்கிநல்வினை
யொன்றிடாக்கைதவ வலகையோகையான்
முன்பிரயாகையின் மாகமூழ்கிற்றால். (எகூ)

ஆடியகணத்தினி லமலனுய்மலர்
சூடியதுளபமா னுமஞ்சொல்லியே

மாடுயர்நவமணி மானமூர்ந்துபோய்த்
தேடருந்துறக்கத்துச் சேர்ந்ததென்பவே. (அ0)

ஆதலால்வேதிய வலகையாமைந்து
மாதராரோடுநின் மைந்தன்றன்னையுஞ்
சீதநீர்ப்ரயாகையிற் றிளைத்துத்தோய்விக்கப்
போதுவோமெனவவர்க் கொண்டுபோயினன். (அக)

விண்ணிடைவிசைகொடு செல்லும்வேலையிற்
கண்ணினிற்ப்ராயாகையைக் கண்டுகைதொழாத்
தண்ணளியுரோமசன் றன்னொடெய்திய
புண்ணியவேதியர்க் கிவைபுகன்றிட்டான். (அஉ)

கமலமாமலருறை கடவுள்வேதிய
னமலமாம்வேள்வியை யமைத்ததிவ்விட
முமையொடுமுக்கண னுறைந்ததிவ்விடம்
விமலமாமுகில்விழி துயின்றதிவ்விடம். (அங)

வானவர்யாவரு மவுனமாகியே
கானுறைமுனிவருங் கடவுண்மூவரு
மீனமில்பேறெல்லா முற்றதிவ்விட
நானொருநாவினு னவிலற்பாலதோ. (அச)

பேசியவந்நதிப் பெற்றியிற்றெனத்
தேசிகரோமசன் செப்பியொல்லையி
வீசுநீர்நதியினி லிறங்கிமேவிய
மாசிலார்தம்மொடு மாகமாடினர். (அரு)

வாங்குநீர்நதியினின் மாகமாடலுந்
தீங்குறுபேயுருத் தீர்ந்துமைந்தனும்
வீங்கிளமுலையைந்து மின்னனார்களுந்
தாங்கினர்பண்டையிற் றமதுசெவ்வியே. (அசு)

கணங்குழையைவருங் கலக்கமைந்தனுக்
கிணங்கியவதுவைபு மினிதியற்றியே
தணந்தனனுரோம சனவருமீண்டுதம்
மணங்கொளுமங்கர் வந்துவைகினர். (அஎ)

இனனணமாகநீ ரியல்புமீர்ம்புன
னன்னதிப்ரயாகையி னலமுமாமென

## ௨௮ சித்திரசேனன் காதையுரைத்த அத்தியாயம்.

மன்னவன் றிலீபனுணை மகிழ்ந்துகேட்டிடப்
பன்னினன்வசிட்டனென் றுரைக்கும்பண்ணவன். (௮௮)

என்றுதானைமிசா ரணியத்தெல்லைவா
யொன்றியமாதவ முவந்துசெய்திட
நின்றமாமுனிவரர்க் கியம்பிநீங்கினான்
துன்றியபலகலை யுணர்ந்தசூதனே (௮௯)

ஆற்றுநீராடிய வன்பற்கின்புறச்
சாற்றியபுராணநூற் சாற்றுந்தன்மையிற்
காற்றொடுகழல்தன கவிகைபார்துகை
மேற்றொடுந்துகிறந்து வினைகணீசுவார். (௯௦)

இக்கதைபடித்தவ ரினிதுவந்திடச்
செக்கர்வான்மணிக்கலன் பசும்பொன்செய்யது
சொக்கவான்குலநில முவந்துநல்கினோர்
சக்கரபாணிதன் னுலகஞ்சார்வரால். (௯௧)

மாகநீர்வளத்தினை வழுத்தும்பாடலு
ளோகையோடொருகவி யேனுமோதுவார்
போகமாமியாவையும் புவியிற்றுய்த்தபின்
னாகநாட்டின்பமு நயந்துதுய்ப்பரே (௯௨)

வாழிநான்மறை நெறிவாழியந்தணர்
வாழிநீணிலத்தினின் மாகமாடினோர்
வாழியிக்கதையினை வல்லமேலவர்
வாழிமாலடியவர் வாழிவையமே. (௯௩)

**சித்திரசேனன் காதையுரைத்த அத்தியாய முற்றிற்று.**

**ஆ அத்தியாயம் ௨௮-க்குத் திருவிருத்தம் ௧௪௧௨.**

**மாகபுராண முற்றிற்று.**